

பாத்திமாவுக்குத் திருயாத்திரிகளாகச் சென்ற

**அதி சங். லாரன்ஸ் பர்ணாந்திஸ் சுவாமிகளும்**

அவருடைய நேச சகோதரி

**ஸ்ரீமதி பிச்சைக்காரி அம்மாளும்.**

பாத்திமா ஜெபமாலைமாதா

# காக்ஷியும்

# அற்புதாதிசயங்களும்

*(The Apparitions and Miracles of Our Lady of Fatima)*

Printed by Rev. Br. F. M. Ponnuswamy, S.J., Superintendent,
St. Joseph's Industrial School Press,
TRICHINOPOLY.

—

1936

சில மாதத்துக்குமுன் பாத்திமா சரித்திரத்தை யெழுதி முடித்து கையெழுத்துப் பிரதியை நமக்கு அனுப்பி அதை நாம் பார்வையிட்டு அதற்கு ஓர் முன்னுரையெழுதி திருச்சினுப்பள்ளி அர்ச். சூசையப்பர் தொழிற்சாலை அச்சுக்கூடத்துக்கு அனுப்பி அச்சிடும்படி வெகு விநயமாய்க் கேட்டுக்கொண்டார். நாமும் அதற்கு மனமுவந்து ஒப்புக்கொண்டு புஸ்தகத்தை அச்சிடத் துவக்கினோம்.

ஆகஸ்டு மாதம் முதல் தேதி நமக்கு எழுதிய கடைசிக் கடிதத்தில் சொல்வார்: "புஸ்தகம் அச்சிட்டு முடிகிறது. இறுதியில் பாத்திமா ஜெபமாலை மாதாவின் பிரார்த்தனை சேர்த்திருக்கிறேன். அந்தப் பிரார்த்தனையில் எதை மாற்றவேணுமோ, எதை எடுக்கவேணுமோ, எதைச் சேர்க்கவேணுமோ அது உங்கள் பிரியம்; முற்றிலும் வேண்டாமென்றாலும் சம்மதம்."

இந்தப் பிரார்த்தனை சாமான்யமன்று. இதில் பாத்திமா சரித்திரம் முழுவதும் சுருங்கச்சொல்லி விளங்க வைத்திருக்கிறதுமல்லாமல் இந்நாட்களில் நடக்கும் அநாகரிகங்களையும் அட்டூழியங்களையும் வெட்டவெளியாக்கி அவைகளை அறவே ஒழிக்கவேண்டிய வழிகளையும் காண்பித்திருக்கிறார்.

நமது சுவாமிகள் இயற்றிய பிரார்த்தனையில் நாம் சேர்த்தது கடைசி உச்சாரணம் ஒன்றுதான். அதாவது: "நாங்கள் அனைவரும் அநுதினமும் பத்தியுடன் ஜெபமாலை ஜெபித்து பரிசுத்தமாய் ஜீவித்து பாக்கியமாய் மரித்துப் பரகதியில் முடிவில்லாப் பாக்கியம் பெறும்படி உமது திருக்குமாரனிடம் மனுப்பேச வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்."

ஆனால் அந்தோ! ஆகஸ்டு மாதம் 17-ம் தேதி திங்கட்கிழமை அதிகாலை மிகவும் சங். பெர்னந்திஸ் சுவாமிகள் பல்லாவரத்தில் இறந்துபோனாரென்கிற துக்க கரமான செய்தியானது மின்னுமல் கோடையிடி முழங்கினாற்போல யாவரையும் நடுக்குறச் செய்தது. நமது சுவாமி நோய்வாய்ப்பட்டு படுக்கையிலிருக்கவில்லை. தேவ மாதா மோக்ஷத்துக்குப்போன பெரியதிருநாளை வழக்கம் போல சிறப்பாய்க் கொண்டாடினார். மறுநாள் ஞாயிற்றுக்கிழமை திவ்விய நற்கருணை சுற்றுப்பிரகாரத்தை நடத்தியிருக்கிறார். திங்கட்கிழமை காலை இரண்டு மணிக்கு திடகூறாய் நெஞ்சடைக்கவே, கடைசி தேவதிரவிய அநுமானங்களைப்பெற்று தமது ஆத்துமத்தை சர்வேசுரன் கரத்தில் ஒப்படைத்து பரலோக பிராப்தியானார்.

மரிக்கும்போது வயது 73. குருப்பட்டம் பெற்று 42 வருஷம். பலவளங்களால் திகழும் புராதன நகர் மணவையம்பதியில் 1863-ம் ஹூ ஆகஸ்டு மாதம் 10-ம் உ அர்ச். லவுரேஞ்சியார் திருநாளன்று ஜனனமானவர். உள்ளூரில் ஆரம்பக்கல்வியை முடித்துவிட்டு இலங்கைக்குத் தமது தந்தையுடன் சென்று உயர்தரக்கல்வி பயின்றார். மகன் நியாய துரந்தரன் ஆகவேண்டுமென்பது தகப்பனார் கருத்து. ஆனால் கடவுள்சித்தம் அதல்ல. தாம் தேவ ஊழியத்திற்கு அழைக்கப்பட்ட குரல் சப்தத்தைக் கேட்டார். கேட்டதும் அதற்கு செவிசாய்த்துக் காரியம் சித்திபெற முயற்சித்தார். அவ்வமயம் அவருக்கு ஏற்பட்ட இக்கட்டு இடையூறுகள் பல.—ஆனால் மலைபோல் வந்த இந்த இன்னல்களெல்லாம் பரிதியைக் கண்ட பனிபோல மறைந்துபோக, நமது தேவதாயின் தாசன் 1888-ம் ஹூ அர்ச். கர்மேல்மாதா திருநாளன்று உலகத்தைத் துறந்து கொச்சி குருமடம் சேர்ந்தார். தத்துவசாஸ்திரம் தேவ

சாஸ்திரம் இவைகளை கோவைமாநகர் "ராஷோல்" குருமடத்தில் ஐயந்திரிபறக் கற்று 1894-ம் ஷு நவம்பர்-மீ 11-ம் தேதி சென்னை அர்ச். ஜெபமாலைமாதா தேவாலயத்தில் மைலாப்பூர் மேற்றிராணி ஆண்டவராகிய மேன்மைதங்கிய சில்வா ஆண்டகையவர்களால் குருத்துவாபிஷேகம் பெறப் பாக்கியம்பெற்றார்.

அப்பால் 37 வருஷகாலமாக மோக்ஷ இராக்கினிமாதா கோவில் பங்குக்குருவாயிருந்து பல்வேறு துறைகளில் திருத்தொண்டாற்றினார்.

இவர் திண்ணிய அறிவும் வைரம்போன்ற மனத்திடமும் உடையவர்; நல்ல தேகக்கட்டு, கெம்பீரமான பார்வை. உணவிலும் உடுப்பிலும் எளிமைத்தனத்தை நாடியவர். பன்மொழி பலகலை கசடறக் கற்றுணர்ந்த நிபுணர்; கடல்மடைதிறந்தாலன்ன தங்குதடையின்றி நாட்டீகமாய்ப் பேசும் பேர்போன பிரசங்கி. "சர்வேசுரனுக்காகவும் என் ஜென்மதேசத்துக்காகவும்" என்ற நாமகரணத்துடன் 55 புஸ்தகங்களைப் பிரசுரம் பண்ணின நூலாசிரியர்.

நம்மவர்களுக்குள் முதன்முதல் ஐரோப்பாவுக்குச் சென்று பரிசுத்த பாப்பரசருடைய பேட்டிபெறப் பாக்கியம்பெற்ற முதற் குருவானவர் இவரே. இங்கிலாந்து, அயர்லாந்து, போர்த்துக்கால், பிரான்ஸ், ஆஸ்திரியா, ஹங்காரியா இது முதலிய தேசங்களுக்குச் சென்று இராஜபிரபுக்களைத் தரிசித்து பற்பல இடங்களில் பல்வேறு பாஷைகளில் உபந்நியாசித்து இந்திய மக்களின் இடர்களை எடுத்தோதி பெருநிதி சேர்த்து, தஞ்சைமாநகரில் அர்ச். சவேரியார் அநாத மடமும் கைத்தொழிற்சாலையும் நிறுவுவதற்குக் காரண பூதராயிருந்தவர் இவரே.

அபார மதுவிலக்குப்பிரசாரம் அயராதுசெய்து குடியைத் தொலைக்கவும் மட்டுப்படுத்தவும் பிரயாசை யெடுத்தவர் இவரே.

வஸ்திரமில்லாதவர்களுக்கு வஸ்திரமும் சீதனமில்லாத ஏழைப் பெண்களுக்கு சீதனமும் படிக்க வகையில்லாத மாணவர் மாணவிகளுக்குப் பண உதவியும் செய்தவர் இவரே.

ஜெபமாலைமாதா பத்தி, அர்ச். சவேரியார்பேரில் பத்தி, உத்தரிக்கிற ஆத்துமாக்கள்பேரில் பத்தி, இம்மூன்று பத்திகளையும் ஊக்கத்துடன் எங்கும் பரவச்செய்தவர் இவரே.

**ஆகவே இவர் சர்வேசுரனுக்கும் மனிதருக்கும் பிரியப்பட்டவர், இவருடைய ஞாபகம் என்றும் கொண்டாடப்படும்.** (சர்வ. பிர. 45 : 1.)

இப்பேர்ப்பட்ட நற்குணங்கள் நற்செய்கைகள் ஒருங்கே அமைந்த பெரியாருடைய சடலத்தைப் பல்லாவரத்திலிருந்து அவர் பிறந்த ஊராகிய மணவையம்பதிக்குக் கொண்டுவந்து என்றுமில்லா ஆரவாரத்துடனும் ஆர்வத்துடனும் இரு பங்குக்கோவில்களிலும் மந்திரித்த பின்னர், பல்லாயிரம் ஜனங்களும் பலகுருக்களும் குழுமியிருக்க 1936-ம் ௵ ஆகஸ்ட்டு மாதம் 20-ம் தேதி வியாழக்கிழமை காலை நாமே நல்லடக்கம் செய்தோம்.

"நான் நல்ல யுத்தம் செய்தேன். என் அயனத்தை முடித்தேன். விசுவாசத்தைக் காத்தேன். கடைசியாய் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது. இதை நீதியுள்ள நடுவராகிய கர்த்தர் அந்த மகா நாளில் எனக்குக் கொடுப்பார்" என்று அர்ச். சின்னப்பர் சொன்னதுபோல் இவரும் சொல்லுவதற்கு உரித்தானவர்.

முத்துக்குளித்துறையின் முதற்குருவானவருடைய பூத உடம்பு அழிந்தாலும் அவருடைய புகழ் உடம்பு அழியாது. காலாகாலத்துக்கும் அவர் இயற்றிய அருமையான புஸ்தகங்களும் அவர் திட்டப்படுத்தியிருக்கிற சாஸ்வத தர்மஸ்தாபனங்களும் இவருடைய நாமத்தைப் பரிமளிக்கச் செய்யும் என்பது திண்ணம்.

**பாத்திமா ஜெபமாலை மாதாவின் மகத்துவத்தைப் பரிவுடன் வரைந்து பரம பதஞ்சேர்ந்த மிகவும் சங். லாரேன்ஸ் சவியேர் பர்னாந்திஸ் சுவாமிகளின் ஆத்துமம் நித்திய சமாதானத்தில் இளைப்பாறக் கடவது.**

TUTICORIN,
13—10—1936.

✠ FRANCISCUS TIBURTIUS ROCHE, S.J.,
*Ep. Tuticorin.*

# பொருள் அட்டவணை

---


முதல் அதிகாரம் பக்கம்

தேவதாயார் தெரிந்துகொண்ட ஸ்தலம் ... 1

இரண்டாம் அதிகாரம்

முதலாவது காக்ஷி ... ... ... 5

முதல் காக்ஷி 1917-ம்வூல மே-மீ 13-ம் உ ... 6

2-ம் காக்ஷி ஜூன்-மீ 13-ம் உ ... ... 11

3-ம் காக்ஷி ஜூலை-மீ 13-ம் உ ... ... 14

4-வது காக்ஷி ஆகஸ்டு-மீ 19-ம் உ ... ... 15

பிள்ளைகள் சிறையில் அடைபடுதல் ... ... 17

பிள்ளைகளை விசாரித்ததும்; பயமுறுத்தினதும் ... 19

5-வது காக்ஷி செப்டம்பர்-மீ 13-ம் உ ... 22

கண்ணால் கண்ட ஓர் சாக்ஷி ... ... 22

மூன்றாம் அதிகாரம்

பிள்ளைகளின் விசாரணையும் வாக்குமூலமும் ... 25

பிரான்சீஸ்குவின் விசாரணை ... ... 26

சிறிய ஜசிந்தா ... ... ... ... 29

லூசியா ... ... ... ... 30

லூசியாளின் தாய் ... ... ... 38

மறுபடியும் லூசியா ... ... ... 40

மறுபடியும் சிறு ஜசிந்தாள் ... ... 43

நான்காம் அதிகாரம் பக்கம்

6-வது காக்ஷி: இதுவே கடைசி காட்சி ... 45
தேவமாதா அறிவித்த சேதி ... ... 47
சூரியனின் அதிசயம் ... ... ... 48
ஓர் வியாதிக்காரியின் ஆச்சரியத்துக்குரிய ஆரோக்கியம் ... ... ... ... 50
சூரியனின் அதிசயத்துக்குப் பின்பு—லூசியா ... 52

ஐந்தாம் அதிகாரம்

இவ்வதிசய சம்பவங்களினால் போர்த்துக்கால் தேசத்தில் உண்டான மன ஊக்கமும், உற்சாகமும் ... 63
ஓர் பெரிய வாணவேடிக்கை ... ... ... 64
வேதவிரோதிகள் செய்த யுத்தம் ... ... 67

ஆறாம் அதிகாரம்

மூன்று பிள்ளைகளின் கதி: பிராஞ்சீஸ்குவின் மரணம் ... ... ... ... 72
ஜசீந்தாளின் மரணம் ... ... ... 75
லூசியா கன்னியாஸ்திரி ஆகுதல் ... ... 78

ஏழாம் அதிகாரம்

ஞான அதிகாரிகள் புகுந்து ஆராய்தல் ... 80
முதலாவது கட்டிடங்கள் ... ... ... 81
அற்புத ஜலம் ... ... ... ... 83
கானேன் சட்டமுறைப்படி நடந்த விசாரணை ... 84
மாதாவின் ஊழியர் சபை ... ... ... 84
சிலுவைப்பாதை ... ... ... ... 85

எட்டாம் அதிகாரம்

பக்கம்

பாத்திமா மாதாவின் பக்தி விர்த்தி: ஞானதிகாரி களின் அங்கிகாரம் ... ... ... 86
போர்த்துக்கேசிய ஜன சமூகத்தாரின் ஓர் திரு யாத்திரை ... ... ... ... 94
ஜொலித்துப் பிரகாசிக்கும் இரவு ... ... 97
தீ-வர்த்தி சுற்றுப்பிரகாரம் ... ... ... 98
சேசுநாதர் ஜனத்திரள் மத்தியில் நடக்கிறார் ... 101
மாசற்ற கன்னிகை மகா ஒட்டோலகமாய் அவர்கள் மத்தியில் எழுந்தருளுதல் ... ... 104
வியாதிக்காரரின் பூசை ... ... ... 108

ஒன்பதாம் அதிகாரம்

'வியாதிக்காரரின் ஆரோக்கியமே' எ. வே. ... 110

ஆரோக்கியங்கள் :

1. முதுகெலும்பு வியாதி ... ... 113
2. காசவியாதி ... ... ... 114
3. ஓர் மெய்யான புதுமை ... ... 115
4. மோட்டார்கார் விபத்து ... ... 117
5. அது தற்கொலையாகும்! ... ... 123
6. கட்டிகளும், புளவைகளும் ... ... 125
7. மூளையில் கட்டி—பாத்திமாவின் தண்ணீர் ... 126
8. அவள் மரித்துவிட்டாள்! ... ... 128
9. சிறு பிள்ளைகளின் சங்கீதம் ... ... 131
10. மூளையையும் முதுகெலும்பையும் சார்ந்த ரோகம் ஆரோக்கியமானது ... 132

பக்கம்

11. செத்துப் பிழைத்தது ... ... 134
12. தீராத வியாதி தேவசித்தத்துக்கமைதியினுல் திடீரெனத் தீர்ந்த மகா புதுமை ... 136
13. மனந்திரும்புதல் ... ... .. 142
14. வேறு இரண்டுபேர் மனந்திரும்பியது ... 145
15. முப்பது வருஷத்துக்குப்பின் பாவசங்கீர்த்தனம் ... ... ... 147
16 "எங்கள் மரணநேரத்திலும் வேண்டிக் கொள்ளும்" ... ... ... 149
மாதாவும், அஞ்ஞான இராச்சியங்களும் ... 153
புதுமையிலும் புதுமை, சகலத்திலும் பெரிய புதுமை இது! ... ... ... 154
பாத்திமா ஜெபமாலை மாதாவுக்கு நவநாள் ஜெபம். 159
மனவல்லயச் செபங்கள் ... ... ... 162
பாத்திமா ஜெபமாலை மாதா பிரார்த்தனை ... 166




பாத்திமா செபமாலைமாதா சுரூபம்.
இது அர்ச். பாப்பானவரால் மந்திரிக்கப்பட்டு,
ரோமாபுரி போர்த்துக்கேஸ் செமினேரிக்கு
கொடுக்கப்பட்டது.




# பாத்திமா ஜெபமாலை மாதா காக்ஷியும் அற்புதாதிசயங்களும்

## முதல் அதிகாரம்

### தேவதாயார் தெரிந்துகொண்ட ஸ்தலம்

போர்த்துக்கால் தேசத்தில் லெயிரியா மேற்றிராசனத்தில் (Fatima) பாத்திமாவென்னும் நாமமுடைய ஒரு சிறு ஊர் இருக்கின்றது. அந்த மேற்றிராசனத்தில் உள்ள பல பங்கு விசாரணைகளில் பாத்திமாவும் ஒரு சிறிய பங்கு விசாரணைக் கோவில். போர்த்துக்கால் இராச்சியத்தின் பிரதம நகராகிய (Lisbon) லிஸ்போன் நகருக்கு வடதிசையில் போர்த்துக்கால் இராச்சியத்தின் மத்திய பாகத்தில் உள்ள சியேற தெ ஆயிர் என்னும் மலையடியோரங்களின் இடையில் ஓர் புறத்தில் அமர்ந்திருக்கின்றது. இப்பகுதிகளில் உள்ள நூற்றுக்கணக்கான ஊர்களைப்போலவே, இவ்வூரின் பெயரும் மெய்யாகவே அராபிய சம்பந்தமுடையது. இந்த நாமதேயத்தைப் பற்றிய ஓர் சிறந்த பூர்வீக சரித்திரமும் உண்டு. இந்தச் சரித்திரம் முற்றும் உண்மையானதுதான் என்று நான் உறுதியாய் உரைக்கக்கூடாவிடினும், அது உண்மையானதல்லவென்று நான் மறுக்கவும் துணியேன். இச்சரித்திரத்தால் இந்நகரின் பூர்வீக வரலாறுகள் ஒருவாறு தெளிவாகின்றது.

பூர்வீக சரித்திரங்களில் காண்கிற பிரகாரம் 1158-ம் ஆண்டில், போர்த்துக்கால் இராச்சியம் தேஜா (Teju) என்னும் நதி தொடங்கி தென்பாகம் வரையும், இஸ்லாமித்தாரின் நிர்ப்பாக்கிய நுகத்துக்குட்பட்டுச் சிதைந்து கிடக்கும் போது, அராபிய யுத்த வீரரில் சிலரும், மிக்க அழகான ஆடையாபரணங்களை யணிந்த சில யௌவன ஸ்திரீகளுமாகக்கூடி தங்கள் வாகனங்களின் மேலேறி, ஜூன்-மீ 24-உ காலையில் 'அல்கசேர் தெசால்' என்னும் அரண்மனையை விட்டுப் புறப்பட்டு 'சாது' என்னும் நதியை நோக்கி நடந்து, அங்கே அர்ச். அருளப்பர் திருநாளைக் கொண்டாடப் போனார்கள்.

இவர்கள் மிக்க ஆனந்த உல்லாசத்தோடும், மனமகிழ்ச்சியோடும் வழி கடந்து போகும்போது, சம்பவித்த தென்னவென்றால் எதிர்பாராத விதமாய் திடீரென இவர்கள்மேல் இடிவந்து விழுந்தாப்போல போர்த்துகீஸ் இராணுவ யுத்த வீரரில் சிலர் "Traga Moiros" மகம்மதிய சங்கார சிங்கம் என்னும் மகுடம்பூண்ட தொன்கொன்சாலு ஹெர்மீங்கிஸ் (Hermingues) என்னும் தங்கள் இராணுவத் தலைவனுடன் அங்கே மறைந்து காத்திருந்து அவர்கள்மேல் விழுந்தார்கள். அராபிய வீரர் அதற்கு ஆயத்தமாய் வராததினால் சிதறுண்டு போனபோதிலும், மிக்க வீரியத்தோடு போர் செய்ததில் பெரும்பாலர் போர்க்களத்தில் மடிந்து விழுந்தார்கள். மிஞ்சிய சிலரும், சில பெண்மணிகளும், சிறையாக்கப்பட்டு 'சந்தரேம்' என்னும் நகருக்குக் கொண்டுபோகப்பட்டார்கள். அங்கே அத்தருணத்தில், தொன் அல்போன்ஸ் ஹென்ரீக்ஸ் அரசன் மகம்மதியருடன் யுத்தம் புரிந்துகொண்டு, தமது இராஜ பரிவாரத்தோடு வந்திறங்கியிருந்தார். இவரே போர்த்துக்கேஸ் இராசசிம்மாசனத்தை முதல் முதல் ஸ்தாபித்தவர்.

அரசன் அவர்களின் யுத்த வீரியத்தைப் புகழ்ந்து வாழ்த்தியதோடு, கப்பித்தானை நோக்கி இதற்கு என்ன சம்பாவனைவேண்டும்? என்று கேட்டான். "அரசே,

உமக்கூழியம் புரிவதே எனக்குப் போதுமான சம்பாவனே" என்று விடையுரைத்ததோடு, "ஆயினும், நீர் கிருபை கூர்ந்து நான் நாவெடுத்துப் பேச இடம் தந்தால் இத் தினத்தின் ஞாபகமாக 'பாத்திமா' என்னும் அந்த யௌவன ஸ்திரீயை நான் மணம் புரிந்துகொள்ள விடை தரவேண்டும்" என்ருன். இந்த பாத்திமா என்னும் பெண், அப்போதங்கிருந்த பெண்கள் சகலரிலும் உத்தமி; 'வாலி தெ அல்க்கசேர்' என்பவரின் புத்திரி. உன் விருப்பப்படியாகக்கடவது. ஆயினும், முந்த முந்த அவ் விளஞ்ஞை உன் விருப்பத்துக்கு இணங்கவேண்டும். நமது பரிசுத்த சத்திய மறைக்கவள் மனந்திரும்பவும், சம்மதிக்கவேண்டும்," என்று அரசன் பதிலுரைத்தான்.

பாத்திமா அப்படியே சகலத்துக்கும் சம்மதித்தாள். சத்திய வேத சத்தியங்களே முற்றும் நன்கு கற்றுணர்ந்த பின்பு ஞானஸ்நானத்தைப் பெற்று "ஓரேயாணுள்" என்னும் நாமத்தைத் தரித்துக்கொண்டாள். அவர்கள் விருப்பப்பிரகாரம் மெய்விவாகமும் நிறைவேறிற்று. அத் தினத்தின் ஞாபகமாக அரசன் அன்று, தோம் கொன் சாலுக்கு "அப்தேகாஸ்" என்னும் சிற்றூரை கல்யாண நன்கொடையாக அளித்தான். அன்றுமுதல் அந்நகர் ஓரேயாணு, வென்றழைக்கப்பட்டது. தற்காலத்தில் அது ஓரேம் என்னப்படுகின்றது. சுற்றியிருந்த மகம்மதிய ரோடு ஓயாத சண்டையும் யுத்தமும் ஓயாது நடந்து பல வருஷங்கள் கடந்து போயின. ஓரேயாணுள் தனது வாலிப பிராயத்திலேயே மரிக்க நேரிட்டமையால் தொம் கொன்சாலு, ஆரு துக்கசாகரத்தில் அமிழ்ந்திஞன். சத் திய வேத தவ சீவியமே அதற்கு ஏக ஔஷதமென உணர்ந்து, அப்போது அங்கிருந்து 18 மைல் தூரத்தில் அல்போன்ஸ் என்னும் அரசன் புதிதாய் கட்டிய அல்க் கொபாசா என்னப்படும் பெரிய மடத்தில் அர்ச். பெர் நார்துவின் சபையில் உட்பட்டு ஓர் சந்நியாசியாஞன்.

சில வருஷங்களுக்குப் பின் அம்மடத்தின் மடாதி பதியானவர் ஓரேயாணுளின் சரீரத்தை, ஓரேம் என்னும் ஊருக்கு நாலு மைல் தூரத்தில் உள்ள ஓர் சிறிய ஸ்தலத்

துக்குக் கொண்டுவந்து, தேவமாதாவுக்குத் தோத்திரமாக அங்கே ஒரு சிறு கோவிலேயும் மடத்தையும், அவ்வுத்தமி யின் ஞாபகமாகக் கட்டிவைத்தார். அதுமுதல் அந்த ஸ்தலம் Fatima, பாத்திமா என்றழைக்கப்பட்டது. இதுவே சரித்திர வரலாறு. இந்த மடம் 16-ம் நூற்றுண் டின் கடைசி பரியந்தம் இருந்து வந்தது. அச்சிறு கோவில் இதுவரையும் இருக்கின்றது. ஆயினும் பாத்திமா நகரின் விசேஷம் நாளுக்கு நாள் குறைந்து குன்றிப் போயிற்று. இவ்வாறு இருபது வருஷத்துக்குமுன் அதின் பெயரை அறிவாரெவருமில்லே யென்கலாம். ஆயினும் அதைச் சுற்றியிருக்கும் நாடு இபேரியா இராச் சியத்தின் சரிதையில் மிக்க கீர்த்திபெற்றவைகளிலொன் றென்பது மெய். அவிசுவாசிகளே யடக்கி செயிக்கும்படி 12-ம் நூற்றுண்டில் போர்த்துக்கால் இந்த ஸ்தலத்தில் புரிந்த, பாரயுத்த வீரச்செய்கையினுலேயே, கர்த்தரின் சத்தியமறை யுத்த வீரரென்னும் கீர்த்தியை போர்த்து கேஸியர் அடைந்தார்கள். இங்கேதான் 1385-ம் ஆண்டில் மோக்ஷ இராக்கினி மாதாவின் திருநாளுக்கு முந்தினநாள் முதலாம் அருளப்பர் என்னும் அரசரும், "The Holy Constable" திரு போலீஸ்காரன் என்னும் பிரதி நாம முடையவனுகிய முத்திப்பேறுபெற்ற தொம் நூனு ஆல்வரேஸ் பெரோா என்னும் கீர்த்திபெற்ற யுத்தவீர னும் ஒன்றுகூடி, தங்களுடனிருந்த மனுஷர் மிகவே சொற்ப பெயராயிருந்தும் அவர்கள் திவ்யதாயாரின் சகாயத்தில் முற்றும் திடமான நம்பிக்கை வைத்தவர்க ளாதலால், போர்த்துக்கால் ராஜ்யத்தைப் பிடிக்கும்படி இஸ்பாஞ்ஞா அரசன் திரட்டிக்கொண்டுவந்த மகா பலத்த சேனேயை முறியடித்து ஜெயமடைந்தார்கள். இந்த விசேஷ வெற்றியையும் ஜெய கெம்பீரத்தையும் எக்காலமும் ஞாபகப்படுத்தும்படியாயும் அன்றுமுதல் போர்த்துகேஸ் ஜாதியாரின் சுயாதீனம் ஸ்திரப்பட்டதினுலும், அதுமுதல் போர்த்துகீஸ் ராஜ்யம் விரிந்து விருத்தியடைய இட மானதினுலும், இந்த யுத்த வெற்றியின் விசேஷ ஞாபக மாக, அருளப்ப அரசன் ஜெயமாதாவின் சிறந்த

ஆலயத்தையும், அதன் பக்கத்தில் 'Batalha,' யுத்தம் என்றழைக்கப்படும் ஓர் மடத்தையும் கட்டிவைத்தார். இது மெய்யாகவே கோதிக் சித்திரவேலையினால் அமைந்த சிறந்த நவரத்னம் என்னலாம். அரசர் அந்த மடத்தை 'தோமினிக்கன்', சாமிநாதர் சபை சந்நியாசிமார் நடத்தி வரும்படியவர்களுக்கதை ஒப்புக்கொடுத்தார். இந்த சந்நி யாசிகள் அங்கே ஜனங்களின் மத்தியில் திவ்ய தாயாரின் ஜெபமாலைப் பத்தியை முக்கியமாய் எங்கும் பரப்பி வந்தார் கள். இந்த பக்தி இவர்களிருதயத்தில் ஆழமாய்ப் பதிந்து விட்டமையால் இன்னாள் வரையும், அது குன்றாமலும், குறையாமலும் நிலைத்து வந்திருக்கின்றது. எப்படி யெனில் எல்லாக் குடும்பங்களிலும், பெரியோரும், சிறி யோரும், அதை வழங்கி வருகின்றார்கள்.

தம்மை நேசித்தவர்களுக்கு திருத்தாயார் அளிக்கச் சித்தமான இணையற்ற சகாயத்துக்கு இது ஏற்ற ஆயத்த மாக விருந்தது.

---

## இரண்டாம் அதிகாரம்

### முதலாவது காக்ஷி

1917-ம் ஞு மே-மீ 13-ம் உ பாத்திமாவைச் சேர்ந்த அல்ஜாஸ்த்ரேல் என்னும் ஒரு சிறு கிராமத்தி லுள்ள மூன்று சிறு இடையர் தங்கள் மந்தையை மேய்த் துக்கொண்டிருந்தார்கள். இவர்களில் இருவர் பெண் பிள்ளைகள். பத்து வயதும், ஏழு வயதுமுள்ளவர்கள். மூன்றாவது பையனுக்கு வயது ஒன்பது. அவனுடைய பெயர் பிராஞ்சீஸ்கு. மேற்சொன்ன இரு சிறுமிகளின் இளையவளுடைய சகோதரன். அந்த சகோதரியின் பெயர் ஜசிந்தா. இவர்களிருவரும் லூசியா என்னும் மற்ற சிறுமியும் இரு சகோதர சகோதரியின் மக்கள். இம்மூன்று பிள்ளைகளில் ஒருவருக்கும் வாசிக்க எழுதத்

தெரியாது. லூசியா மாத்திரமே புதுநன்மை வாங்கியிருந்தாள். அன்றயைத்தினம் அவர்கள் தங்கள் வழக்கப்பிரகாரம் தங்கள் தங்கள் தந்தையரின் ஆடுகளை ஓட்டிக்கொண்டு வந்து லூசியாளின் குடும்பத்துக்கு சொந்தமான ஓர் சிறு நிலத்தில் மேய்க்க இட்டுக்கொண்டுபோனார்கள். அந்த இடத்துக்குப் பெயர் ('Cova de Iria') கோவா தெ இரியா. பாத்திமாவிலிருந்து இரண்டு மைல் தூரம்.

## முதல் காட்சி 1917-ம் ஆல மே-மீ 13-ம் உ

மத்தியான வேளையில் தங்கள் வழக்கப்பிரகாரம் புல்லின்மேல் முழங்காலிலிருந்து, தங்கள் ஜெபமாலையை செபித்தார்கள். அதன்பின், அவர்களின் மந்தை மேலே அடிக்கடி கண் பார்த்துக்கொண்டு தங்களுடைய வாடிக்கைப்படி, மலைச்சாரலில் தங்கள் கைக்கெட்டும் தூரத்தில் கிடக்கும் கற்களைச் சேர்த்து சிறு கற்குடிசையைக் கட்டி விளையாட ஆரம்பித்தார்கள். இப்போது மாதாவின் பசிலிக்கா (Basilica) என்னும் மகத்தான பெரிய ஆலயம் கட்ட ஆரம்பித்திருக்கும் அதே ஸ்தலத்திலேயே அவர்கள் அப்படி விளையாடிக்கொண்டிருந்தார்கள். இப்படி விளையாட ஆரம்பித்தக்ஷணமே ஓர் மின்னல் மின்னிய சோதிப் பிரகாசத்தைக் கண்டார்கள். இதனால் அச்சமுற்று, ஆகாசத்தை நோக்கிப் பார்த்தார்கள். அங்கே யாதொரு மேகமும் காணப்படவில்லை. சூரியனோ பூரண ஒளியோடு பிரகாசித்துக்கொண்டிருந்தது. "ஆ! மலைகளின் மறுபுறத்தில் ஏதோ புசல் அடிக்க ஆரம்பிக்கின்றதோ, என்னமோ? நாம் வீட்டுக்குப் போய்விடுவதே நலம்" என்றாள் லூசியா. அவளுடைய சகோதர சகோதரியாகிய மற்ற இருவரும் அதற்கு ஆம் என்று உடன்பட்டார்கள். ஏனெனில் அவர்களிருவருக்கும் இவளைப் பார்க்கிலும் அதிக பயம் உண்டாய் விட்டது. ஆதலால் மூவரும் தங்கள் முன் நின்ற ஆடுகளை மலைமேலிருந்து கீழ்ப் பக்கமாய் ஓட்டிக்கொண்டு கீழே இறங்கிப் போனார்கள். இவ்வாறு இவர்கள் பள்ளத்தாக்கினடியில் வந்து சேர்ந்த

வுடனே, அற்புத தண்ணீர் ஊற்று உண்டாகவிருந்த அதே ஸ்தலத்தில் இன்னம் ஓர் மின்னல், இதன்முன் கண்டதைப் பார்க்கிலும், அதிக சோதிப்பிரகாசமாய் மின்னினது. இதனால் இவர்கள் திடுக்கிட்டு, அதே ஸ்தலத்தில் ஸ்தம்பித்து நின்றார்கள். அப்போது தங்கள் அங்க முழுதிலும், ஓர்வித குளிரும், நடுக்கமும் உண்டாகவே ஒருவரையொருவர் உற்றுப்பார்க்க ஆரம்பித்தார்கள். அதே க்ஷணமே அவர்கள் மூவரும் ஓரே திசைக்கு இழுக்கப்பட்டாப்போல, தங்கள் வலது புறமாய் திரும்பிப் பார்த்தார்கள். அங்கே அழகான ஓர் அம்மணி பச்சை மயமான ஓர் (Oak tree) கருவாலி மரத்தின்மேல் தங்களுக்குச் சமீபமாகவே நிற்பதைக் கண்டார்கள். அவள் முற்றும் சோதிமயமாய்த் தோன்றினாள். சூரியனைப் பார்க்கிலும் அதிக பிரகாசமுடையவளாயிருந்தாள். இக்காக்ஷியினால் முன்னிலும் அதிக அச்சமுண்டாகி, அவர்கள் அங்கிருந்து ஓடிவிட எண்ணினார்கள். ஆனால் அந்த காக்ஷியானது பக்ஷத்தோடு அவர்களுக்கு சயிக்கினை காட்டி "பயப்படாதேயுங்கள். நான் உங்களுக்கு ஒரு தீமையும் செய்யமாட்டேன்" என்றது. அப்போது அந்தப் பிள்ளைகள் அங்கே நின்று, பிரம்மையோடு அவளை ஏறிட்டுப் பார்த்தார்கள். அந்த அம்மணி 15 முதல் 18 வயதுக்குள்ளானவள்போலவே தோன்றினாள். அவளணிந்திருந்த உடை, வெண்பனியைப்போலவே தூய வெண்மையாயிருந்தது. கழுத்திலே ஒரு பொன் கயிற்றினால் அது சேர்த்துக் கட்டப்பட்டு அவள் கால் பாதங்கள் வரையும் இறங்கி தொங்கி, கருவாலி மரத்தின் இலைகளின்மேல் பட்டும் படாததுபோலிருந்தது. ஓர் நீண்ட துப்பட்டி, நிறத்தில் அதுவும் வெண்மையாயும், ஓரத்தில் பொன் சரிகையுடையதாயும், அவள் தலையையும் சரீரம் முழுவதையுமே ஏறக்குறைய மூடிக்கொண்டிருந்தது. ஓர் ஜெபமாலை அவளுடைய கரங்களில் தொங்கினது. அதின் மணிகள் வெண் முத்தைப்போல் தோன்றினது. அதின் நுனியில் சுத்த சோதிமயமுடைய வெள்ளியினால் அமைக்கப்பட்ட ஓர் சிறு வெள்ளிச் சிலுவையும் தொங்கி

னது. அவளிருகரங்களும் அவள் நெஞ்சின் முன்பாக சேர்ந்து ஜெபம் செய்யும் தன்மையாய் காணப்பட்டது. சூரிய சோதிமயமான ஓர் வட்டம், மட்டற்ற தூய்மை பரிசுத்தம் அழகு சௌந்தரியமுடைய அவளுடைய முகத்தைச் சுற்றி வளைந்து சுடரிட்டது. ஆயினும் அவள் முக தரிசனம் ஒருவாறு துக்க சாகரத்திலமிழ்ந்தினதுபோலவும் தோன்றினது.

லூசியாவுக்குத் திடனும் தைரியமுமுண்டாகி அவளை நோக்கி "அம்மா! எங்கிருந்து வந்தீர்கள்? என்று எங்களுக்குச் சொல்ல கிருபை புரியும்" என்றாள்.

"நான் மோக்ஷத்திலிருந்து வருகிறேன்."

"என்னத்துக்காக வந்தீர்?"

"ஒவ்வொரு மாசமும் 13-ம் உ ஒன்றின்பின் ஒன்றாய் மாசம் மாசம் தவறாமல் இந்த நேரத்தில், நீங்கள் இங்கே வரும்படிக் கேட்கும்படியாகவே. ஒக்டோபர் மாசத்தில் நான் ஆர் என்றும் நீங்கள் என்னசெய்யவேண்டுமென்றும் உங்களுக்கறிவிப்பேன்."

"நீங்கள் மெய்யாகவே, மோக்ஷத்திலிருந்து வந்திருக்கின்றீர்களா? நானும் அங்கே போய்ச் சேர்வேனா?" என்றாள் லூசியா.

"ஆம்" என்று அந்த அம்மணி பதிலுரைத்தாள்.

"அம்மா! ஜசிந்தாவும் போவாளா? "ஆம்! அவளும் போய்ச் சேர்வாள்." "பிராஞ்சிஸ்குவின் விஷயம் எப்படி?"

அப்போது காக்ஷியானது நேரே கண்ணைத் திருப்பி அந்தச் சிறு பையனைப் பார்த்தது. அந்த பார்வையில் பக்ஷம் தோன்றினபோதிலும், அவனைக் கண்டிக்க விரும்பும் ஓர் தாயின் கண் போலத் தோன்றினது. "அவனுமே! போய்ச் சேர்வான். ஆனால், அதற்குமுன் அவன் ஜெபமாலையை அநேகவிசை ('muitos tercos') (தேர்சுஸ்) செபிக்கவேண்டும்" என்றாள்.

அப்போது லூசியாள் சில சொற்ப காலத்துக்குமுன் மரித்த இரு சிறு பையன்களுக்கு என்ன சம்பவித்தது என்று வினவினுள். அதற்கு அந்த அம்மணி, அவர்களில் ஒருவன் மோக்ஷத்தில் சேர்ந்ததாகவும், மற்றவன் உத்தரிப்பு ஸ்தலத்திலிருப்பதாயும் சொன்னுள். அதன்பின், அந்தப் பிள்ளைகள் சற்று நேரத்துக்குமுன் செய்தது போலவே ஜெபமாலையை எப்போதும் பத்தியோடு ஜெபிக்கும்படி கற்பித்தபின் கிழ்த்திசை பக்கமாய் மறைந்து போனுள். அவளுடைய காலடிகள் அசைவதாய்க் காணவில்லை. பிள்ளைகள் குறிப்பாய் வசனித்தபடி "அவள் நேரே போய்விட்டாள். போய் சூரிய ஒளியில் மறைந்து போனுள்."

பிள்ளைகள் தங்கள் பரவசம் தெளிந்தபின்பு மிக்க சந்தோஷத்துடன் ஒருவர் ஒருவரை உற்றுப்பார்த்து அவரவர் மனேபாகங்களையும், உணர்ச்சிகளையும்பற்றி, சம்பாஷிக்கத் தொடங்கினுர்கள். மூவரும், தரிசனத்தைப் பூரணமாய்க் கண்டார்கள். ஆனல் பிராஞ்சீஸ்கு லூசியாளின் சப்தத்தைக் கேட்டானே தவிர வேறொரு சப்தத்தையும் கேட்கவேயில்லை. தரிசனத்தின் உதடுகள் அசைவதையும் காணவில்லை. ஜசிந்தா சகலத்தையும் கண்டாள். சகலத்தையும் தெளிவாய்க் கேட்டாள். ஆயினும் சம்பாஷணையிற் சற்றேனும் கலக்கவேயில்லை. லூசியாள் மாத்திரமே தனிமையாய் சம்பாஷித்தவள். அது ஏறக்குறைய பத்து நிமிஷ நேரம்.

இதிப்படியிருக்க இவர்கள் ஆடுகளின் கதியென்ன? ஆடுகளைப்பற்றி அந்த பிள்ளைகள் முழுதும் மறந்து போனுர்கள். தங்களின் பரவசம் நீங்கியபின் அங்குமிங்கும் சுற்றிப் பார்க்கும்போது தாங்கள் கண்டது கஸ்திக்குரியதாயிருந்தது. எப்படியெனில் ஆடுகள் அதின் பக்கத்திலிருந்த ஓர் பாத்தியிலிருந்த சிறு செடிகள் மிகவும் பசுமையாயும், இளமையாயுமிருந்தமையால் அங்கே ஓடிப்போய் மேய்ந்துகொண்டிருந்தன. பிள்ளைகள் இதைக் கண்டவுடனே விரைந்தோடிப் போய் அவை

களை அங்கிருந்து விரட்டி ஓட்டிவிட்டார்கள். ஆயினும் அதனால் ஆடுகளுக்கும், தங்களுக்குமே உண்டாகக்கூடிய நஷ்டத்தையும் அவர்கள் கணக்கிட ஆரம்பித்தார்கள். அதன்பின் லூசியா நன்றாய் கவனித்து நோக்கியபோது அந்தச் செடிகளில் ஆடுகள் அற்பமேனும் தின்றிராத தைக் கண்டாள்.

எப்படியானாலும் தங்களை யாராவது கோபிப்பார்கள் என்று பயந்து, அன்று நடந்த சம்பவத்தைப்பற்றி ஒருவருக்கும் ஒரு வார்த்தை சொல்லக்கூடாதென்று லூசியா அவர்களுக்குரைத்தாள். இது கூடிய காரியமா? வாஸ்தவத்தில் இவள் கேட்டது மற்ற இரு சிறுவருக்கும் அளவுக்கு மிஞ்சியதுதான். பிராஞ்சிஸ்கும், ஜசிந்தாளும் நல்லது, நாங்கள் சொல்லமாட்டோம் என்று வாக்குக் கொடுத்தபோதிலும், வீட்டுக்குப் போய்ச் சேர்ந்த க்ஷணமே, தங்களுக்கன்று நேர்ந்தவைகளின் சரித்திரத் தைச் சரிவர கக்கிவிட்டார்கள். அவர்களின் பெற்றோர் போய் லூசியாளின் தாயாகிய மரியரோஸாவிடம் சொன்னார்கள். அப்போது அவள் தன் மகளிடம் கேட்கவே அவள் ஒன்றும் மறைக்காமல், தான் கண்டதையும், கேட்டதையும், சகலத்தையும், உள்ளபடியே அறிவித் தாள். இதனால் அவளுக்குத் துன்பம் நேரிட்டது. அப்போது தாயானவள் பயந்து தன் மகளை வெகுவாய்க் கோபித்ததுமன்றி பங்குச் சுவாமியாரிடம் ஓடிப்போய், எனக்கு இந்தப் பொல்லாப்பு நேரிட்டதே! எனக்கா இப்படி வரவேண்டும்! என்று சொல்லி அழுதாள். "பொல்லாப்பா? ஏன் அப்படி நினைக்கிறாய்?" என்றார் குருவானவர். "ஆ! ஊரெல்லாம் எங்களைப்பற்றி பிதற்றிக்கொண்டிருப்பதற்கு என் மகளே காரணமானாளே."

"சரி இருக்கட்டும். அவள் சொல்லும் சரித்திரம் மெய்யென்று வைத்துக்கொள்! அப்போது அது உனக்கு பெரிய ஆசீர்வாதமாயிருக்குமே! அப்போது எல்லோரும், நமக்கு இப்பாக்கியம் கிடைக்கவில்லையேயென்று காய்மகாரப்படவும் கூடும்." "ஆ! சுவாமி, அது மெய்யென்று

வைத்துக்கொள்வதா? அதெப்படி? அது மெய்யாயிருக்கக்கூடியதேயல்ல. நான் பொய்க்காரியென்று பெயரெடுக்க என் மகள் காரணமாகிறுளே! இப்படி அவள் எத்தனித்தது இது தான் முதல் தடவை ஆதலால் இனிமேல் அவள் பொய் சொல்லாதிருக்கும்படி நான் போய் நல்ல படிப்பினே அவளுக்குப் படிப்பிப்பேன்." அப்படியே அவள் வீடு போய் சேர்ந்தவுடனே, தன் பேச்சு தவருதபடிக்கு, மகளுக்கு மெய்யாகவே நல்ல படிப்பினே படிப்பித்தாள்.

காக்ஷியைப்பற்றிய கதை கலகலவென்று எங்கும் உடனே பரம்பிற்று. பாத்திமா ஊர் ஜனங்கள் எல்லோரும் அதைக் கேட்டு பாடம் படித்தாப்போல, பாராமல் படித்து சொல்லி வந்தபோதிலும், லூசியாளின் தாய் எண்ணியபடித்தான் ஆயிற்று. இதெல்லாம் சிறு பிள்ளைகளின் கனவு! என்று ஒருவருமே இதை நம்பவில்லை. இன்னும் சிலர் இதைக் கேட்டு சிரித்து நகைத்ததுமன்றி, அப்பிள்ளைகள் பெரிய மோசக்காரரென்றும், மாயக்காரரென்றும் சொல்லத் தொடங்கினுர்கள். இதெப்படியாளுலும், அந்தப் பிள்ளைகளோ, தாங்கள் சொன்ன சரித்திரத்தை மறுதலிக்கவுமில்லை மாற்றவுமில்லை. தங்களுக்கு உத்தரவு கிடைத்தால், தாங்கள் அந்த அம்மணிக்கு வாக்குக்கொடுத்த பிரகாரம் குறித்த தினத்தில் போக வேண்டுமென்றே தீர்மானித்திருந்தார்கள்.

## 2-ம் காக்ஷி ஜுன்-மீ 13-உ

ஜுன்-மீ 13-ம் உ கோவா தெ இரியாவுக்குப் போகாதபடிக்கு ஒருவரும் அவர்களைத் தடுக்கவில்லை. அன்றையத் தினத்திலேயே, பிராஞ்சீஸ்குவினுடையவும், ஜசிந்தாவினுடையவும் தாய் தகப்பன்மார் அதிகாலையில் எழும்பி '(Porto de Mos)' போர்த்து தெ மோஸில் அன்று நடக்கும் சந்தைக்குப் போய் மாலையில் வெகு நேரத்துக்குப்பின் தான் திரும்பி வந்தார்கள். இதனுல் இந்த நூதன சம்பவத்தையும் சரித்திரத்தையும், அவர்கள் எள்ளளவேனும் நம்பவில்லையென்பது தெளிவாகின்றது.

மேலும் அன்று பங்குவிசாரணைக் கோவிலின் பாது காவலாகிய அர்ச். அந்தோனியார் திருநாள். அது இப் பகுதிகளில் எங்கும் ஓர் முக்கிய மகோற்சவமானதினுலும், பாத்திமா ஜனங்கள் அந்த திருநாளைக்கொண்டாடும் வேலை யாயிருந்தார்கள். இதை விட்டுவிட்டு வேறெங்கும் போக வேண்டுமென்கிற எண்ணம் அணுவளவும் அவர்கள் தலை யிலேறவில்லை. ஆனுலும் சற்றேறக்குறைய அறுபது ஜனங் கள் வேடிக்கை விநோதத்தாலேவப்பட்டு அந்தப் பிள்ளை களைத் தொடர்ந்து குறிக்கப்பட்ட இடத்துக்கு அன்று போனுர்கள்.

அங்கு அன்று நடந்த சம்பவத்தைப்பற்றி அங்கு போனவர்களில் ஒருவர் விவரித்து சொல்வதாவது:

"குறிக்கப்பட்ட நேரத்தில் அந்த மூன்று பிள்ளை களும் வந்தார்கள். அங்கே அவர்கள், காக்ஷிகண்ட இடத் துக்கு உத்தேசம் 60 கெஜம் தூரத்தில் நின்ற ஓர் பெரிய கருவாலி மரத்தின் கீழே முழங்காலில் நின்று ஜெப மாலையின் ஐந்து இரகசியங்களையும் சொல்லி ஜெபித்தார் கள். அந்த ஐந்து இரகசியமும் சொல்லி முடித்தவுடனே, லூசியா எழுந்து நின்று தன் மேல் போர்வையையும், தன் தலையை மூடிக்கொண்டிருக்கும் வெள்ளை முக்காட்டையும் தடவி ஒழுங்குப்படுத்தி, கோவிலுக்குத் தான்போக முஸ்திப்பு செய்தாப்போல செய்தாள். அதன்பின் அவள் கீழ்த்திசைக்கு நேராய்த் திரும்பி காக்ஷிக்காகக் காத்திருந் தாள். அப்போது அங்கு நின்றவர்கள் அவளை நோக்கி இன்னும் வெகு நேரம் காத்திருக்க வேண்டுமோ என்ருர் கள். இல்லை என்று அவள் பதில் சொன்னுள். அப் போது அவளுடைய சகோதர சகோதரி இருவரும், நாம் திரும்பவும் ஓர் ஜெபமாலை ஜெபிக்க, நமக்கு இன்னம் நேரம் இருக்கிறது என்ருர்கள். லூசியா அதிசயத்தோடு ஓர் சயிக்கினை காட்டி, "ஆ! இதோ, இதோ மின்னல் எனக் குத் தெரியுது! இதோ அந்த அம்மணி வருகிருள்!" என்ருள். அப்படியே அவள் அந்த மற்ற சிறிய கருவாலி மரத்துக்கு நேரே ஓடிப்போனுள். அவளுடைய இரு சகோதர, சகோதரிகளும் கூடவே போனுர்கள்.

"லூசியாள் கேட்ட கேள்விகளெல்லாம் எனக்கும் கேட்டது. காக்ஷியோடு அவள் சம்பாஷித்தபோது, அவள் சொன்னதெல்லாம் எனக்குக் கேட்டது. ஆனால் நான் ஒருவரையும் காணவில்லை. காக்ஷி உரைத்த பதில்களும் எனக்குக் கேட்கவில்லை. ஆயினும் நூதனமான ஓர் காரியத்தை நான் கவனித்ததுண்டு. அது ஜூன்-மீ". அந்த கருவாலி மரம் முழுவதும் நீண்ட புதிய இலைகள் நிறைந்திருந்தது. காக்ஷி முடிவாகி, அந்த அம்மணி கீழ் திசை நோக்கி போய்விட்டதாக லூசியாள் அறிவித்தவுடனே அந்த மரத்தின் இலைகள் எல்லாம் அந்த கீழ் திசைக்கு நேராய் சாய்ந்து கவிழ்ந்திருப்பதையும், அந்த அம்மணி போகும்போது அவளணிந்திருந்த துப்பட்டியின் ஓரம் அதுகள் மேல் தட்டித் ததும்பிப்போனாப் போலும் தோன்றினது."

காக்ஷி ஏறக்குறைய பத்து நிமிஷம் இருந்தது. "என்னை என்ன செய்யச் சொல்லுகிறீர்கள்" என்று மறுபடியும் லூசியாள் கேட்டாள்.

அதற்குப் பதிலாக: அடிக்கடி ஜெபமாலை ஜெபிக்க வேண்டுமென்றும், ஒவ்வொரு இரகசியத்தின் கடைசியில் பிதாவுக்கும், சுதனுக்கும் என்னும் செபத்துக்குப்பின், ஓர் அற்புத சிறு ஜெபத்தைச் சேர்த்து செபிக்கும்படிக்கும் மறுபடியும் அவர்களுக்குப் போதித்தது. அதாவது :—

"ஓ! நேச சேசுவே! எங்கள் பாவங்களைப் பொறுத்தருளும். நரகாக்கினியினின்று எங்களை இரட்சியும். உத்தரிக்கிற ஸ்தலத்து ஆத்துமாக்களுக்கு, விசேஷமாய் யாரும் நினையாத ஆத்துமாக்களுக்கு ஆறுதலளித்தருளும்."

இதுவுமன்றி லூசியாளைப் பார்த்து, "நீ வாசிக்கப் படிக்கும்படி, நான் விரும்புகிறேன்" என்றாள். இது தவிர அவர்கள் மூவருக்கும் ஓர் இரகசியத்தை அறிவித்து, அதை அவர்கள் ஒருவருக்குமே வெளிப்படுத்தக் கூடாதென்று திட்டமாய் கட்டளையிட்டாள். பிராஞ்சீஸ்கு

வழக்கப் பிரகாரம், அந்த அம்மணியின் வார்த்தைகளைக் கேட்காததினுல் பிற்பாடு லூசியாள் அவனிடம் அவனுக்கு சம்பந்தமான இரகசியத்தை சொன்னுள். அது இன்ன தென்று இது பரியந்தம் ஒருவருமே அறியவில்லை. ஆயினும் கடைசியாய் அந்த பிள்ளைகள் இது விஷயமாய் சொன்னது இது மாத்திரம்தான்; அதாவது:—அது தங்கள் மூவருடைய நன்மையையும் பற்றியது என்ருர்கள். இவ்வளவு மாத்திரம்தான் அவர்கள் சொன்னது. அந்த இரகசியம் அவர்களுடைய நித்திய இரட்சண்ணியத்தைப் பற்றியல்லவென்று தோன்றுது. ஏனென்ருல், மே-மீ 13-உ இதைப்பற்றிய நிச்சயம் அவர்களுக்கறிவிக்கப்பட்டது. சிலவேளை ஜசிந்தாவுக்கும், பிராஞ்சிஸ்குவுக்கும், சமீபத்தில் அவர்களுக்கு வரப்போகும் மரணத்தைப்பற்றி அந்த அம்மணி அறிவித்திருக்கலாம். ஏனென்ருல் இதற்கு சற்றுபின் அவர்கள் சீக்கிரம் மரிப்பதாக நிச்சயமாயிருப்பதாக அவர்கள் தங்கள் நடபடியில் காண்பித்தார்கள். சிலவேளை அந்த அம்மணி லூசியாளை உலகத்தை வெறுக்கவும், துறவறத்தில் கடவுளுக்குத் தன்னை ஒப்புக்கொடும்படியாயும், அழைத்திருக்கக் கூடும். இதெல்லாம் உத்தேசமே யொழிய நிச்சயமல்ல. காக்ஷி மறைந்தவுடனே பிள்ளைகள் வீட்டுக்குத் திரும்பிப் போனுர்கள். வந்திருந்த ஜனங்கள் பாத்திமாவுக்குப் போய் அங்குமிங்கும், தாங்கள் கண்டதையும் கேட்டதையும் அறிவித்தார்கள்.

## 3-ம் காக்ஷி ஜூலை-மீ 13-ம் உ

இந்த பரலோக காக்ஷிகளைப்பற்றிய சரிதை, பாத்திமாவின் எல்லைகளைவிட்டு வெகுதூரம் பரவிற்று. ஜூலை-மீ 13-ம் உ ஏறக்குறைய 5000 ஜனங்களின் கூட்டம் வந்து அந்த பிள்ளைகளைச் சுற்றி கோவா தெ இரியாவில் நின்றது.

அன்று அந்த அம்மணி யுத்தம் விரைவில் முடிந்து போகவேண்டிய கருத்துக்காக ஜெபமாலையை ஜெபிக்கும்படி மூன்ரும் தடவை அவர்களுக்குக் கற்பித்தாள்.

ஏனெனில் திவ்விய தாயார் மாத்திரமே அவர்களுக்கு உதவிபுரியக்கூடியவள் என்று அவள் சொன்னாள். லூசியா அந்த அம்மாளை நோக்கி, அவளுடைய பெயர் என்னவென்றும், இந்தக் காக்ஷி மெய்யென்று காண்பிப்பதற்காக ஒரு புதுமை செய்தருளவேண்டுமென்றும் கெஞ்சி மன்றாடினாள். அந்த அம்மணி அதற்குப் பதிலாக, மறுபடியும் அவர்களை மாதந்தோறும் அங்கே வரவேண்டுமென்றும், அக்டோபர் மாதத்தில், தான் யார் என்றும், தன் விருப்பம் இன்னதென்றும், அவர்களுக்குச் சொல்லுவதாயும், எல்லோரும் விசுவசிக்கத்தக்கதாக அப்போது ஓர் பெரிய புதுமை செய்வதாயும் பதில் அளித்தாள்.

## 4-வது காக்ஷி ஆகஸ்டு மீ 19-ம் உ

திருச்சபை அதிகாரிகள் இதுவரையும் நடந்துவந்த சம்பவங்களைப்பற்றி சற்றும் கவனிக்காதிருந்தார்கள். அது ஞாயந்தான். கத்தோலிக்கு பத்திரிகைகளுமே மவுனம் சாதித்துவிட்டன. ஆயினும், இரண்டொரு விசை மாத்திரம் தொட்டும் தொடாததுமாய்ப்போல இதைப்பற்றி சற்றே குறிப்பிட்டு, பசாசின் மாய தந்திர வலைகளில் அல்லது (Freemason) தலைவெட்டி வேதக்காரருடைய சூக்ஷங்களுக்குள் சிலவேளை எச்சரிக்கையில்லாமல் உட்படாதபடிக்கு விசுவாசிகளை எச்சரித்தார்கள். இவ்வளவுதான்.

ஆனால் சுயாதீனப்பத்திரிகாசிரியர்கள் (Liberal press) சாதாரணமாய் இவ்விஷயங்களில் விரோதமாய் இருப்பதுவே வழக்கமாதலால், இதைப்பற்றி அளவுக்கு மிஞ்சி கத்திக் கதறினார்கள். நடந்தேறிய சம்பவங்களைப்பற்றி ஒரு அணுவும் தவறாமல், மகா நுணுநுணுக்கமாய் விவரித்து பரிகசித்து வாதித்தார்கள். இக் காக்ஷியின் சரிதையைக் கேட்பவர்களெல்லாம் சீ! என்று காறித்துப்பி புறக்கணிப்பதற்கேற்ற அபத்தங்களையும் சம்பவங்களையும் எல்லாம் அதோடு கலந்து, வேணுமென்றே கூட்டி அதிகரிப்பித்து ஒவ்வொன்றாய் விவரித்து பிரசுரித்தார்கள்.

இச் சம்பவத்துக்குக் காரணங்கள் உத்தேசங்களை சொல்லி, அடியோடு அதைத் தள்ளிவிடும்படியாக எத்தனித்தார்கள். சொல்லக்கூடிய காரணங்கள் சகலத்தையும், பற்றும் பற்றுய் எடுத்துக்காட்டுவது மாத்திரமல்ல, பரம செயல் என்று ஒன்று உண்டென்னும் உத்தேசத்தை முற்றும் நகைத்துப் பரிகசித்துத் தூர எறிந்தார்கள். இன்னம் சிலபேர் சியேறு தெ ஆயிர் என்னும் காட்டை, லூர்து மலையைப்போல புதுமைகளை உண்டாக்கும் யந்திரச்சாலையாக்கிப் பணம் சம்பாதிக்கும் நோக்கமுடைய வியாபாரிகளுடைய வேலையிதுவேயொழிய வேறல்ல என்ருர்கள். ஆயினும் அநேகருடைய அபிப்பிராயப்படி (Autosuggestion) பகற் கனவு அல்லது நினைவின் தோற்றமே இதற்கெல்லாம் ஏக காரணம் என்று தீர்மானித்துக்கொண்டார்கள்.

விரோதமாகவும், வேடிக்கையாகவும், துர்க்கருத்தோடும், எழுதவும், வரையவும்பட்ட இப்பிரசுரங்களினுல் விளைந்த நிச்சயமான பலன் யாதென்ருல், பாத்திமாவின் கீர்த்தியும், பெயரும், நாலா திசையும் பரவிற்று. இத்தால் ஆகஸ்ட்-மீ 13-உ மிக்க திரளான ஜனங்கள் கோவா தெ இரியாவுக்கு வந்து கூடியது ஆச்சரியமல்ல: கண் சாக்ஷியாய் கண்ட ஒருவரின் கடிதத்தில் நாம் வாசித்தறிந்தபடி “ஒவ்வொரு திசையினுமிருந்து, கணக்கிடக்கூடாத ஜனங்கள் திரண்டு வந்தார்கள். நாஞவித வாகனங்கள் சிறிதும் பெரிதுமாய், ஒன்றின்பின் ஒன்ருக ஓரே அணியாய் தொடார்ந்து வந்தன. திரளான ஜனங்கள் கால் நடையாயும், குதிரை மேலேறியும், இரு சக்கர வண்டியிலும், வந்தனர். அந்த மலைகளின் ஓரத்தில், குதிரை வண்டிகளும், மற்றும் சாதாரண வண்டிகளும், அங்குமிங்கும் வந்து அடுக்கியிருப்பதைக் காண்பது மகா இனிய காக்ஷியாயிருந்தது. மோட்டோர் இரதங்களும், இரு சக்கர வண்டிகளும் எண்ணுக்கடங்காத விதமாயும், அங்கே குவிந்து கிடந்தன. பகல் மத்தியான வேளையில் அநேகாயிரம் ஜனங்கள் அங்கே திரண்டிருந்தனர். பத்திரிகைகள் இச்சனத்தொகையை 15 அல்லது 18 ஆயிரமெனக்

கணக்கிட்டார்கள். இவர்கள் எல்லோரும் வெறும் வினோதத்தால் மாத்திரம் ஏவப்பட்டங்கே ஓடி வந்தவர்களல்ல! பெரும்பாலார் பத்தியுள்ள விசுவாசிகள். இவர்கள் அந்த கருவாலி மரத்தைச் சுற்றி நின்றூர்கள். அம்மரத்தின் இலைகளையும், கிளைகளையும், பத்தியுள்ள பலர் பறித்து உடைத்து எடுத்து கொண்டுபோய்விட்டார்கள். ஆயினும் அவர்கள் அங்கே நெடுநேரம் காத்திருந்தமையால், ஜெபமாலை செபிப்பதிலும், பாட்டுகளைப் பாடுவதிலும், நேரத்தைப் போக்கினூர்கள்.

## பிள்ளைகள் சிறையில் அடைபடுதல்

மத்தியான மாச்சுது. பிள்ளைகள் வரக்காணோம். ஜனங்கள் அங்குமிங்கும் பார்த்தார்கள். ஆயினும் இன்னும் கொஞ்ச நேரம் பொறுமையாயிருந்தார்கள். கடைசியாய் அந்தப் பிள்ளைகள் வரக்கூடியதல்லவென்றும், வில்லா நோவா தெ ஓரேம் என்னும் ஊரின் மேயர் என்னப்படும் ஊர் அதிகாரி (Mayor of Villa Nova de Ourem) அவர்களைப் பிடித்துக் காவலில் வைத்திருப்பதாயும் செய்தி எட்டியது. இதைக் கேட்டவுடனே, திரளான அந்த ஜனங்களுக்கு எவ்வளவு கோபம் உண்டாயிருக்குமென்று இலேசாய் நாம் உத்தேசித்துக்கொள்ளலாம். இதில் நல்ல புத்தியுடைய பலர், தாங்களே போய், அந்த ஊர் அதிகாரியிடம் அவர் அப்படி செய்வதற்கு என்ன காரணம் என்று கேட்க, ஆலோசனை செய்தார்கள். ஆனூல் தங்கள் ஆலோசனையை இவர்கள் நிறைவேற்றுமுன்னமே ஓர் நூதன காக்ஷியைக் கண்டதினூல் இவர்கள் மனசுக்கு அமைதியும், ஆறுதலும் உண்டாச்சுது. இதைப்பற்றி நாம் எடுத்தெழுதும் கடிதம் விவரித்துச் சொல்வதாவது :—

“என் சிநேகிதரில் சிலரும், நானும், வீட்டுக்குப் போவதற்காகப் புறப்பட்டோம். அப்போது சில மனுஷர் எங்களை வழியில் சந்தித்தார்கள். அவர்கள் மிக்க சந்தோஷத்தோடு அகமகிழ்ந்து அந்த அம்மணி காணப்பட்ட

தாகச் சொன்னார்கள். உடனே, நான் போன பாதையை விட்டுத் திரும்பி, கோவா தெ இரியா வழியாய்ப் போக ஆரம்பித்தேன். பாதை முழுதும் ஜனங்களின் ஏக கூட்டமாயிருந்தது. இவர்கள் அந்த அதிசய சம்பவத்தைப்பற்றியே பேசிக்கொண்டு போனார்கள். அவர்கள் எல்லோரும் ஒரே வாக்காய்த் தாங்கள் ஓர்வித இடி முழக்கத்தைக் கேட்டதாயும் அந்த கருவாலி மரத்தின் சமீபமாய் ஓர் மின்னலைக் கண்டதாயும், அதன்பின் உடனே ஓர் சிறந்த மேகம் அந்த மரத்தைச் சுற்றி வந்திறங்கினதாயும், சில நிமிஷங்களுக்குப்பின் அந்த மேகம் ஆகாயத்தில் எழும்பிப் போனதாயும், அத்தோடு காணாமல் மறைந்து போனதாயும் பேசிக்கொண்டார்கள். இதனால் எல்லோரும் மனத்திருப்தியடைந்தமையால் ஊர் அதிகாரி அன்று பெரிய ஆபத்தில் நின்று தப்பிக்கொண்டான்.

ஊரில் சம்பவித்ததென்ன? ஊர் அதிகாரி ஓர் வேத விரோதி; வேத சம்பந்தமான வெளிக் கொண்டாட்டங்கள் கோவிலுக்கு வெளியே செய்யக்கூடாதென்னும், சர்க்கார் சட்டத்தை இவன் ஸ்திரமாய் அனுசரிக்கச் செய்து வந்தவன். ஆதலால் இப்போது அங்கே வானமும், பூமியும், ஒன்றாய்க்கூடிச் செய்யும் அந்த தகாத வியாபாரத்தை நிறுத்திவிட காலமாச்சுது, தாமதிக்கலாகாது என்று தீர்மானித்துவிட்டான். இத்தீர்மானத்தோடு அவன் மேற்சொன்ன பிள்ளைகள் வசித்த வீட்டுக்குப் போய் தானே அந்தப் பிள்ளைகளை கோவா தெ இரியாவுக்குக் கூட்டிக்கொண்டு போவதாகச் சொல்லிக்கூப்பிட்டான். அவர்களின் பெற்றோர் அதற்குச் சம்மதித்தார்கள். அவன் கற்பித்தபடி அந்த பிள்ளைகள் அவனுடைய வண்டியில் குதித்தேறினார்கள். அவர்கள் உள்ளே ஏறினவுடனே அவன் (Villa Nova de Ourem) வில்லா நோவா தெ ஓரேம் என்னும் ஊருக்கு நேரே போய் ஏறக்குறைய மூன்றுநாள் பிள்ளைகளைத் தன் வீட்டிலேயே காவலில் வைத்துக்கொண்டிருந்தான்.

## பிள்ளைகளை விசாரித்ததும்; பயமுறுத்தினதும்

இந்த மூன்று நாளும் இவனுடைய பெண்சாதி அப்பிள்ளைகளைத் தாயைப்போல வெகு பட்சமாய் நடத்தினாள். ஆனால் அதிகாரி அவர்களிடம் பலவித தந்திரமான கேள்விகளை ஓயாமல் கேட்டு, அவர்கள் முன் சொன்னதைப் பின் மறுக்கச் செய்யும்படியாயும், அல்லது நாங்கள் சொன்னதெல்லாம், வெறும் விளையாட்டாகச் செய்தோமென்றும், ஒத்துக்கொள்ளும்படியாயும், அல்லது இதுவும் பலிக்காவிட்டால் அவர்களுடைய இரகசியத்தை எப்படியாவது பிடுங்கவேண்டுமென்றும், பிரயாசித்துக்கொண்டு வந்தான். அவன் பட்டபாடெல்லாம் விபர்த்தமாய்த் தீர்ந்தது. பிள்ளைகள் தாங்கள் சொன்னதை அணுவளவும் பிசகாமல் உறுதிப்படுத்திச் சொன்னார்கள். தங்களுடைய இரகசியத்தைப்பற்றி ஒரு வார்த்தையும் வெளியிடவில்லை. அப்போது அந்தப் பித்துப்பிடித்த மனிதன், அவர்களைப் பயமுறுத்த எத்தனித்தான். அவர்களையடைத்துவைத்திருந்த அறைக்குள் அவன் போய் கோபாவேசத்தோடு "உண்மையைச் சொல்லுங்கள். அல்லது நான் உங்களை எண்ணெயிலிட்டுப் பொரிப்பேன். அடுப்பிலே, எண்ணெய் கொதித்து பானை தயாராயிருக்கிறது" யென்று உரக்கக் கத்தினான்.

திகிலடைந்த பிள்ளைகள் பேசச் சக்தியற்று மெதுவாய்ச் சொன்னதாவது:

"நாங்கள் பொய் சொல்லவேயில்லை" என்றார்கள். அப்போது அவன் அம்மூவரினும் ஆகச் சிறுபிள்ளையாகிய ஜசிந்தாவைப் பார்த்து ஓ! சின்ன பிள்ளாய் இங்கே வா! (இவளுக்கு வயசு ஏழு மாத்திரம்) நீ சகலத்தையும் உள்ளபடியே என்னிடம் சொல்லாவிடில், நீதான் முதலாவது சாவாய் என்று கூவியவுடனே (லூசியா ஞான அதிகாரிகளின் விசாரணையில் பின்பு தெளிவாய் விவரித்த பிரகாரம்) ஜசிந்தா, அஞ்சி நடுங்கி கண்ணீர் தாரை தாரையாய் சிந்திக்கொண்டு, காக்ஷியின் கற்பனையை மீறக்கூடாதென்னும் தீர்மானத்துடன், ஓர் தாமதமுமின்றி, நான்

போய் வாரேன் அக்கா! என்று எங்களிடம் வந்து சொல்ல முதலாய் எண்ணுமல், அதிகாரியுடன் போய்விட்டாள்.

சில நிமிஷம் சென்றபின், அதிகாரி, இருபிள்ளைகளும் நின்ற அறையில் வந்து, பிராஞ்சீஸ்குவைப் பார்த்து, ஒருத்தியைப் பொரித்தாச்சுது. இப்போது நீ உன் இரகசியத்தை எனக்குச் சொல்லு?'' என்றுன்.

"நான் ஒருவருக்கும் சொல்லக்கூடாது."

"கூடாதா? கூடும்படி நான் செய்கிறேன் இதோ பார்" என்று சொல்லிக்கொண்டு அவன் கையைப் பிடித்துக்கொண்டு சிறு குழந்தையை இழுத்துக்கொண்டு போனுன். அவன் கதறி அழுதான். சில நிமிஷத்துக்குப்பின், இதே விதமாய் லூசியாளுக்கும் சம்பவித்தது.

"இத்தருணத்தில் உனக்கெப்படி இருந்த" தென்று பிற்பாடு இவளைக் கேட்டபோது அவள் சொன்னதாவது: "அவர் மெய்யாகவே எங்களைப் பொரிக்கக் கொண்டு போகிருர் என்றும், என் உயிர் போய்விடுமென்றும் நான் நினைத்தேன், நான் ஒன்றும் சொல்லக்கூடாமல் தேவமாதா கரங்களில் என்னை ஒப்புக்கொடுத்தேன்."

ஊர் அதிகாரி சும்மா வெறும் நாடகந்தான் ஆடினுன். ஆதலால் லூசியா சமையலறையில் தன் சகோதர, சகோதரிகளை, உயிரோடிருக்கக் கண்டு, சந்தோஷப்பட்டபோதிலும், அந்த சிறுவர்களுக்கும் அப்போது பிடித்த பயமும், திகிலும் இன்னும் மாருதிருப்பதாயறிந்தாள். அதுதான் கடைசி மல்யுத்தம். ஊர் அதிகாரி அத்தோடு களைத்து தடுமாறினுன். மறுநாள் 15-உ காலை அவன் அவர்களை மறுபடியும் பங்குச் சுவாமியாருடைய வீட்டுக்குக் கொண்டுபோய்ச் சேர்த்தான். அவர்களின் இனத்தார், குடும்பத்தார் அன்று கோவிலில் மோக்ஷ இராக்கினி மாதா திருநாள் ('Assumcao') பாட்டுப் பூசை முடிந்து வெளியே வந்தபோது தங்கள் பிள்ளைகளைக் கண்டு மார் போடரவணைத்து அநுபவித்த சந்தோஷம் இத்தன்மையென்று சொல்லத்தக்கதல்ல.

பிரான்சீஸ்கு, ஜசிந்தா இவர்களின் பெற்ருேர் தங்கள் பிள்ளைகளுக்கு என்ன நேரிட்டதென்று அறியும்படி அவர்களிருவரின் சகோதரன் ஒருவனை அங்கே அனுப்பியிருந்தார்கள். ஆனால் லூசியாவின் தாயாரோவெனில், தனக்கு வாடிக்கையாயுள்ள மனோதைரியத்தைக்கொண்டு, இது விஷயமாய் ஒரு விதத்திலும் தத்தளியாததுபோலும், தயங்காததுபோலுமிருந்தாள். யாரோ ஒருவர், அவளிடம் போய் உன் மகளை பிடித்துக்கொண்டுபோய் காவலில் வைத்திருப்பதாகச் சொல்லக்கேட்டபோது, "அவள் அங்கே இருக்கட்டும்; அவளுக்கப்படி நேரிட்டது ஞாயம்தான், மெத்தச் சரி" என்ருள். "என்ன அவளுக்கப்படி நேரிட்டது சரியா? என்ன சொல்லுகிருய்?" "ஆம் அப்படித்தான் எனக்குத் தோன்றுது. அவள் சொல்வது பொய்யானல் அந்த ஆக்கினை அவளுக்குத் தகுந்ததே. அவள் சொல்வது மெய்யானல் திவ்ய தாய் அவளைக் காப்பாற்றுவாள்."

நாம் மேலே சொன்னபடி அந்த பிள்ளைகள் தாங்கள் கொடுத்த வாக்கை அநுசரிப்பது அவர்களுக்குக் கூடாமையாய்ப் போனபடியால் அவர்கள் அந்த அழகு சௌந்தரியமுடைய அம்மணியை, அடுத்த மாசத்துக்குமுன் பார்க்கக் கூடுமென்று சற்றும் எதிர்பார்க்கவேயில்லை. அப்படி நினைத்தது பிசகு. ஆகஸ்ட் மீ 19-ம் உ அவர்கள் அற்பமும் எதிர்பாராத விதமாய் வலீஞ்ஞாஸ் (Valinhos) என்னும் இடத்தில் இவர்கள் தங்கள் ஆடுகளை மேய்க்கக் கொண்டுபோயிருந்தபோது, அவள் அவர்களுக்குக் காக்ஷி கொடுத்தாள். முதலாவது, அவள் குமித்த நாளில் அவர்கள் அங்கே போகாதபடி, ஊர் அதிகாரி தடுத்ததைப்பற்றி முறையிட்டாள். அவன் செய்த தகாத வேலையினிமித்தம் ஒக்டோபர்-மீ 13-உ தாம் செய்வதாக வாக்களித்த புதுமை மிகவும் சிறிதாகக் காணப்படும். கருவாலி மரத்தடியில்,* ஏலவே ஜனங்கள் அதிக காணிக்கையைப் போட்டுவிட்டுப் போயிருக்கிறபடியால், அதை என்ன செய்யவேண்டுமென்று லூசியா கேட்டாள். அதற்குக்

---

* Azinheira.

காக்ஷி, அளித்த பதிலாவது :—1-வது இரண்டு கட்டில் ('Andores') வாங்கவேண்டும். அதில் ஒன்றை லூசியாளும், ஐசிந்தாளும் வேறு இரு சிறு பெண் பிள்ளைகளும் வெள்ளை உடை அணிந்துகொண்டு சுமக்கவேண்டும். மற்றதை பிராஞ்சிஸ்குவும், அவனைப்போல மூன்று சிறு ஆண் பிள்ளைகளும் வெள்ளை* உடுப்பணிந்துகொண்டு சுமக்க வேண்டும். மீதியாயிருக்கும், காணிக்கைகளை ஜெபமாலை மாதா திருநாளுக்காகவும், ஒரு சிறு கோவிலை ('Capela') கட்டுவதுக்காகவும், செலவிடவேண்டும் என்றாள். காக்ஷி எப்போதும் வழக்கமாயிருக்கும் நேரமளவுமிருந்தது. அதன்பின் பிள்ளைகள் அடுத்த மாசம் வருவதாக விடை பெற்றுச் சென்றனர்.

## 5-வது காக்ஷி செப்டம்பர் 13-ம் உ

ஊர் அதிகாரியின் வைராக்கிய முயற்சி அவன் நினைத்ததுக்கு முழு விரோதமான பலனை விளைவித்தது. அந்த பிள்ளைகள் உண்மையையே பேசுகிறார்களென்பதைப்பற்றி ஒருவரும் இனிமேல் சந்தேகப்படவில்லை. சர்க்கார் அதிகாரிகள் செய்யும் மிதமிஞ்சிய இடையூறுகளைக் குறித்து மேலுங் கூக்குரல் மகாப் புசலைப்போல எழும்பியடித்ததுமன்றி, விசுவாசமும், பக்தியும், வெகுவாய் அதிகரிக்கவும் இடமாயிற்று. செப்டம்பர்-மீ 13-ம் உ மகா அதிசயத்துக்குரிய விதமாய், இது தெளிவாயிற்று.

### கண்ணால் கண்ட ஓர் சாட்சி

நாம் மேலே எடுத்தெழுதியிருக்கிறபிரகாரம், இதை தமது கண்ணால் கண்டெழுதிய ஒருவரின் கடித வரலாற்றையே எடுத்து வரைவோம் :—

"இந்த மாதம் நான் பாத்திமாவுக்குப் போக நினைக்கவில்லை. ஆனால், 12-உ மாலை என்னுடைய சிநேகிதராகிய (F.).. என்பவர், ஒரு பெரும் பஸ் வண்டியில் தம்முடன், இன்னும் 16 பேருமாக சேர்ந்து, மே-மீ முதல், மாசம் மாசம் 13 உ-யில் நடந்தேறும் சம்பவங்களைப் போய் பார்க்கவேணுமென்னும் கருத்தோடு வந்தார்கள். மறு

---

* 'Opas.'

நாளில் நானும் கூடப்போவதற்கிடம் இருப்பதாக என்னிடம் சொல்லவே, நானும் சந்தோஷத்தோடு அவர்களுடன் போனேன். இதற்கு முந்தின நாளில் கடல் ஓரத்துக் கிராமங்களிலிருந்து திரளான ஜனங்கள், கூட்டங் கூட்டமாய் எங்கள் வீட்டின் பக்கமாய் போனார்கள். இன்று நான் யாத்திரை செய்யும்போது வழியில் எனக்குண்டான உணர்ச்சிகளை நான் வாக்கால் ஒரு விதத்திலும் விவரிக்கக் கூடியதேயல்ல. ஆயிர ஆயிரக்கணக்கான இந்த திருயாத்திரிகளின் விசுவாசத்தையும், பக்தி வேகத்தையும், நான் கண்டபோது பலமுறை என் கண்ணினின்று கண்ணீர் வடிந்தது. பிரசித்த வீதிகளும், சிறு நடை பாதைகளும் ஜனங்கள் நிறைந்திருந்தன. ஆடுமாடுகளின் சிறு அடிப்பாதைகளில்முதலாய் ஆண்களும் பெண்களும் நடந்து பிரசித்த வீதிக்கு நேராய் போனார்கள். மெய்யாகவே அந்த காட்சி, திருயாத்திரையென்னும் பேருக்கு அத்தாட்சியாயிருந்தது. அதைப் பார்க்கும்போதெல்லாம் நான் கண்ணீர் சிந்தாதிருக்கக்கூடவில்லை. என் ஜீவிய காலத்தில் ஒருபோதும் அப்படிப்பட்ட விசுவாசத்தை பிரத்தியட்சமாய் நான் காணக்கிடைக்கவில்லை. ஏறக்குறைய 10 மணிக்கு நாங்கள் எங்கள் யாத்திரையின் கடைசி எல்லைக்கு வந்து சேர்ந்தோம். ஏலவே, இப்போதே கூட்டம் ஏராளமாகிவிட்டது. இவர்களில் ஒவ்வொருவரும் மகா பக்தியோடு காட்சி தோன்றிய இடத்துக்குப் போனார்கள். ஆண்பிள்ளைகள் தங்கள் தொப்பியைக் கழற்றிவிட்டனர். ஏறக்குறைய எல்லோரும் முழங்காலிலிருந்து பக்தியோடு ஜெபம் செய்தார்கள்.

“12 மணிக்கு சற்றுமுன்பு அங்கிருந்த ஜனங்களின் தொகை 25 ஆயிரம் அல்லது 30 ஆயிரமெனக் கணக்கிட்டார்கள். சரியாய் 12 மணிக்கு சூரியனின் சோதிப்பிரகாசம் குறைய ஆரம்பித்தது. ஆகாயம் (ஆரஞ்சு) கிச்சிலிப்பழ நிறமாய்த் தோன்றிற்று. எல்லோரும் இச்சம்பவத்தைக் கவனித்தார்கள். மே-மாச முதல் ஒவ்வொரு மாசமும் அதே நேரத்தில் இப்படி சம்பவித்திருக்கின்றது. மூன்று பிள்ளைகளும் சற்று முன்னமே வந்திருந்தார்கள்.

லூசியா தன்னைச் சுற்றியிருப்பவர்களைப் பார்த்து ஜெபமாலை செய்யும்படி சொன்னாள். அப்போது அங்கிருந்த ஆயிர ஆயிரக்கணக்கான விசுவாசிகள் முழங்காலிலிருந்து கண்ணீர் சிந்திக்கொண்டு உரத்த சத்தத்தோடு ஜெபம் செய்வதை நான் பார்த்தபோது என் மனதில் ஆழமாய்ப் பதிந்த உணர்ச்சியை நான் ஒருபோதும் மறக்கக்கூடியதேயல்ல. அவர்கள் இன்னும் ஜெபித்துக்கொண்டிருக்கும்போது, "இதோ அவள் வருகின்றாள்" என்று லூசியா கூவினாள். பாத்திமாவின் சிறு இடையருக்கு இந்த பரலோக இராக்கினி கொடுக்கக் கிருபைகூர்ந்ததில் இது 5-வது காட்சி. அவள் அந்தப் பிள்ளைகளைப் பார்த்து, யுத்தம் முடியும்படியாக ஜெபமாலையை விடாது ஊக்கத்தோடு தொடர்ந்து செய்யும்படி சொன்னதுமன்றி, அக்டோபர் மாதம், தாம் அர்ச். சூசையப்பரோடும் குழந்தை சேசுவோடும் காணப்படுவதாய்ச் சொன்னாள். மேலும் அடுத்த மாதம் 13-ம் உயும் அவர்கள் தப்பாமல் மறுபடியும் அங்கே வரும்படிக் கற்பித்தாள்.

லூசியா அந்த அம்மணியை நோக்கி வியாதிக்காரரைச் சொஸ்தப்படுத்தும்படி மன்றாடினாள். அதற்கு அவள் சிலரைச் சொஸ்தப்படுத்துவதாயும், மற்றவர்களைச் சொஸ்தப்படுத்தமாட்டாளென்றும், இவர்கள்மேல் கர்த்தருக்கு நம்பிக்கையில்லையென்றும் பதிலுரைத்தாள்.

பிள்ளைகளைச் சுற்றிப் பக்தியோடிருந்த ஜனங்கள் அதரிசனமான அந்தக் காட்சியின் சத்தத்தைக் கேட்கவில்லை. ஆயினும் லூசியா யாரோ அதரிசனமான ஓர் ஆளோடு சம்பாஷிப்பதைக் கண்டார்கள்.

கடைசியாய் லூசியா "இதோ அவள் போகிறாள்" என்றாள். அப்போது சூரியன் தனது வழக்கமான சுய சோதிப்பிரகாசத்தைத் திரும்பவும் அடைந்துகொண்டது. பிள்ளைகள் வீட்டுக்குப் போனார்கள். ஜனக்கூட்டம் கொஞ்சங்கொஞ்சமாய்க் கலைந்தது. அற்புதமான இந்த சம்பாஷணை நடக்கும் வேளையில் சூரிய மங்கலைத்தவிர வேறு சில அடையாளங்களும் முன்னும் பின்னும் உண்டாயின. வெண்மையான ஓர் பிரகாச வட்டம் அந்தக்

கருவாலி மரத்தையும் அந்தப் பிள்ளைகளையுமே சூழ்ந்து, சில தூரத்துக்குக் காணப்பட்டது. ஆகாயத்தினின்று ஓர்விதமான அல்லது பனி பெய்தாற்போல சிறு சிறு வெண்ணிறப் பூக்கள் அல்லது பனிக்கட்டிகள் பெய்து கொண்டிருந்தன. இவை பூமியினின்று சில அடி தூரத்திற்கு மேலேயே மறைந்துபோயின. இதையெல்லாம் ஓர் தடவை லெயிலியா மேற்றிராணி ஆண்டவர் தாமும் கண்ணால் கண்டார்.

---

## மூன்றும் அதிகாரம்

### பிள்ளைகளின் விசாரணையும் வாக்குமூலமும்

இவ்வாறு இந்த காட்சிகள் ஒன்றின்பின் ஒன்றாயும், தவறாமலும் பல முறையாயும் குறிக்கப்பட்டகாலத்தில் எப்போதும் நடந்துவந்தமையாலும், அந்த சிறு பிள்ளைகள் சொன்ன சரித்திரத்தை ஜனங்கள் நாளுக்குநாள் அதிகமாய் விசுவசித்தார்கள். ஆதலால் ஞான அதிகாரமுடைய சிலரும் கடைசியாய் அங்கே போய் இதைப்பற்றி பூரணமாய் ஆராய்ந்தறிவதவசியமாயிற்று. இவ்வினத்தவரில் ஒருவர் கல்வியில் சிறந்த ஓர் குருவானவர். இவர் லிஸ்போன் நகரில் பிதாப்பிதாவாகிய கர்தினால் மேற்றிராணியாண்டவரின் செமினெரி, அல்லது குரு மடத்தில் வேத சாஸ்திரம் கற்றுக்கொடுக்கும் உபாத்தியாயர். இவர் தான் பிற்பாடு, பாத்திமாவின் சரிதையை (Visconde de Montelo) "விஸ்கோன்தி தெ மோந்தேலு" என்னும் நாமகரணத்தின் கீழ் எழுதி பிரசுரித்தவர். செப்டம்பர்-மீ 27-ம் உ இவர், லூசியாவும், அவள் குடும்பமும் வசித்த வீட்டுக்கு, அந்த பிள்ளைகளை நன்றாய் விசாரிக்கும்படியாகப் போனார். லூசியா அப்போது வீட்டில் இருக்கவில்லை. ஒரு மைலுக்கப்புறம் தன் குடும்பத்தார்க்குச் சொந்தமான நிலத்தில் அவள் முந்திரிகைப் பழங்களைப் பொறுக்கிக்கொண்டிருந்தாள். அவள் தாய் ஒரு

ஆளை அனுப்பி அவளைக் கூப்பிடும்படிச் செய்தாள். இதற்குள் அக்கம்பக்கத்தார் இவளுடைய இரு சகோதர சகோதரிகளைக் கண்டு, ஒரு ஆள் அவர்களைக் காணும்படி வந்திருப்பதாகச் சொன்னார்கள். ஆதலால் இவர்கள் தோட்டத்திலிருந்து, லூசியா வீட்டுக்கு வந்தார்கள்.

சிறு ஜசிந்தா முதலாவது வந்து சேர்ந்தாள். இவள் மனுவேல் பேதுரு மார்த்து, ஒலிந்தா தெ ஜேசூஸ் இவர்களுடைய மகள். இவர்கள் ஊரில் சகலராலும் நன்கு மதிக்கப்பட்டவர்கள். அந்தப் பிள்ளைக்கு வயது ஏழு. ஆயினும், அந்தப் பிராயத்துக்குச் சற்றே அதிகமாய் வளர்ந்திருந்தாள். அவளுடைய அங்க உறுப்புகளெல்லாம் நன்ருயமைந்திருந்தன. தலைமயிர் சிவந்த நிறமாயும், உடை அடக்க ஒடுக்கமாயுமிருந்தது. அவளுடைய பாவாடை யங்கி உள்ளங்கால் வரையும் இறங்கி நீண்டிருந்தது. பொதுவாய் அவள் ஆத்தும சரீர இவ்விரண்டிலும் அழகில் சிறந்தவளாய்த் தோன்றினாள். தான் இதன் முன் ஒருபோதும் கண்டிராத ஜனங்களைக் காண்பது அவளுக்கு ஆச்சரியத்தை வருவித்தது. ஆரம்பத்தில் அவளுக்கு அச்சமுண்டானதுபோல, ஒற்றை ஒற்றைச் சொல்லாயும், விளங்கக் கூடாதவிதமாயும் பேசினாள். பின்பு அவளுடைய சகோதரன் வந்தவுடனே அவளுடைய கூச்சம் நீங்கிப்போய்விட்டது. அவன் வரும்போது, தலையில் தொப்பியோடு உள்ளே வந்தான். அவள் அதைப் பார்த்து தொப்பியை எடுத்துவிடும்படி சயிக்கினைக் காட்டினாள். அவனுக்கு அது விளங்கவில்லைபோலும், ஒன்றும் சட்டைபண்ணமலே உட்கார்ந்தான். பார்க்க வந்தவர் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் அச்சமும் தடையுமின்றி பதில் உரைத்தான்.

## பிராஞ்சீஸ்குவின் விசாரணை

"கடந்துபோன சில மாசங்களாக நீ கோவா தெ இரியாவில் என்ன கண்டாய்?"

"நான் தேவமாதாவைக் கண்டேன்."

"அவள் எங்கே காணப்பட்டாள்?"

"ஓர் சிறு கருவாலிமரத்தின்மேல்."

"அவள் திடீரென காணப்பட்டாளா? அல்லது ஓர் திசையிலிருந்து வருகிறதாய்க் காண்கிருயா?"

"அவள் சூரியன் எங்கே உதிக்கிறதோ அங்கிருந்து வருவதையும், வந்து சிறு கர்வாலிமரத்தின்மேல் நிற்பதையும் காண்கிறேன்."

"அவள் மெதுவாய் வருகிருளா? தீவிரமாய் வருகிருளா?"

"அவள் எப்போதும் விரைவாய் வருகிருள்."

"அவள் லூசியாவுக்கு சொல்லுகிறது உனக்குக் கேட்குதா?"

"இல்லே."

"நீ எப்போதாவது மாதாவிடம் பேசிஞயா? அல்லது அவள் எப்போதாவது உன்னிடம் பேசினதுண்டா?"

"இல்லே. நான் அவளிடம் ஒன்றும் கேட்டதில்லே; அவள் லூசியாவோடு மாத்திரம் பேசுவாள்."

"உங்கள் மூவரையும் நேரில் பார்க்கிருளா? அல்லது லூசியாவை மாத்திரமா?"

"அவள் எங்கள் மூவரையும் பார்க்கிருள். ஆனல் அதிகமாய் லூசியாளே."

"அவள் எப்போதாவது கண்ணீர் சிந்திஞளா? அல்லது சிரித்தாளா?"

"இல்லே. அவள் எப்போதும் ஒரே சீராகவே இருக்கிருள்." 'Seria'.

"அவள் அணிந்திருக்கிறதென்ன?"

"அவள் நீண்ட அங்கியைத் தரித்துக்கொண்டு அதன்மேல் ஒரு துப்பட்டியையும்* தரித்திருக்கிருள். இந்த துப்பட்டி அவள் அங்கியின் ஓரம் வரையில் இறங்கி தொங்கி நிற்கிறது."

---

* 'Manto'.

"அந்த உடுப்புகள் என்ன நிறம்?"

"வெள்ளை. உடுப்பின் ஓரத்தில் பொன்கரை விழுந்திருக்கிறது."

"அவள் எப்படி நிற்கிருள்?"

"அவள் ஜெபம் செய்யும் மேரையாய் நிற்கின்ருள். அவள் கைகள் அவள் நெஞ்சின்முன் ஒன்ருய்ச் சேர்ந்திருக்கின்றன."

"அவள் கையில் ஏதாவது வைத்திருக்கிருளா?"

"ஆம். ஒரு ஜெபமாலே. அது அவளுடைய வலது கரத்தின் பின்புறத்திலிருந்து அவள் உடுப்பின்மேல் நீண்டு தொங்குகின்றது."

"அவள் காதுகளில் ஏதாவது உண்டா?"

"நாங்கள் அவளுடைய காதுகளைக் காணக்கூடாது அவை அவளுடைய துப்பட்டியினுல் மூடப்பட்டிருக்கின்றன."

"ஜெபமாலையின் மணிகள் என்ன நிறம்?"

"அவைகளுமே வெள்ளை தான்."

"மாதா அழகானவளா?"

"ஓ! ஆம். எவ்வளவோ அழகுடையவள்."

"அதோ அங்கே இருக்கிற அந்த சிறு பெண்பிள்ளையைவிட அதிக அழகு உள்ளவளா?"

"ஆம்."

"சரி. ஆனுல் சில ஸ்திரீகள் அந்த பிள்ளையைப் பார்க்கிலும் அதிக அழகுடையவர்கள் என்பது உனக்குத் தெரியுமே!"

"நான் இதுவரையும் கண்ட எல்லோரையும்விட அவள் அதிக அழகு சௌந்தரியமுடையவள்."

விஸ்கோந்தி, பிராஞ்சீஸ்குவை விசாரிக்கும்போது ஜசிந்தா தெருவுக்குப் போய், தன்வயசுப் பிள்ளைகளோடு

விளையாடப் போயிருந்தாள். இப்போது அவளைக் கூப்பிட்டு ஒரு பெஞ்சில் உட்காரச்செய்தார்கள். இவள் சொன்ன பதில்கள் அவளுடைய சகோதரனுடைய பதிலை விட அதிக விபரமாயும் பூரணமாயுமிருந்தன.

## சிறிய ஜசீந்தா

"போன மே-மீ முதல் தேவமாதாவை ஒவ்வொரு மாசமும் 13-ம் உ நீ கண்டதுண்டா?"

"ஆம்."

"அவள் எங்கிருந்து வருகிறாள்?"

"அவள் ஆகாயத்திலிருந்து சூரியன் இருக்கும் அதேயிடத்திலிருந்து வருகிறாள்."

"அவள் உடை எப்படி இருக்கிறது?"

"அவள் பொன் கரையுள்ள ஓர் வெள்ளை அங்கியை அணிந்திருக்கிறாள். தலையிலிருந்து ஒரு துப்பட்டியும் போட்டிருக்கிறாள். அதுவும் வெள்ளை நிறமே."

"அவளுடைய தலை முடியின் நிறமென்ன?"

"நான் அதை ஒருபோதும் காணவில்லை. ஏனெனில் அவளுடைய முக்காடு, துப்பட்டி, அதை மூடிக்கொண்டிருக்கிறது."

"அவள் காதில் நகை அணிந்திருக்கிறாளா?"

"எனக்குத் தெரியாது. அவளுடைய காதுகளை நான் காணவில்லை."

"அவளுடைய கைகளை எப்படி வைத்துக்கொண்டிருப்பாள்?"

"தன் நெஞ்சின் முன்பாக அவை ஒன்றாய்ச் சேர்ந்திருக்கும். விரல்கள் நேரே உயர்ந்திருக்கும்."

"அவளுடைய ஜெபமாலை வலது கையிலா? இடது கையிலிருக்கிறதா?"

அந்த பிள்ளை முதலாவது அது வலது கையிலிருந்தது என்று சொல்லிற்று.

அப்போது அந்த விஸ்கோந்தி, என்பவர் அவளைத் தத்தளிக்கும்படி செய்யும் கருத்தோடு, நிச்சயந்தானா என்று மறுபடியும் கேட்டார்.

அப்போது அவள் தத்தளிக்க ஆரம்பித்து காக்ஷி, ஜெபமாலையைப் பிடித்திருந்த கை, தன்னுடைய இரு கைகளில் எந்த கைக்குச் சரியானது என்று திட்டமாய்ச் சொல்லக்கூடவில்லை.

"லூசியாள் எல்லாத்திலும் அதிகமாய் என்னத்தைச் செய்யும்படி அவள் கேட்டாள்?"

"தினந்தோறும் அவள் ஜெபமாலை செபிக்கும்படி சொன்னாள்."

"நீ அப்படி செய்கிறாயா?"

"ஆம் நாள்தோறும், நான், பிராஞ்சிஸ்கு, லூசியா இவர்களோடு சேர்ந்து ஜெபமாலை செய்கிறேன்."

## லூசியா

லூசியா வருமளவும் அரைமணிநேரம் காத்திருந்தார்கள். கடைசியாய் அவள் வந்தாள். அவளுடைய சகோதர சகோதரியைப்பார்க்கிலும் அதிக உயரமாயும், வளர்ந்த தேகமுடையவளாயுமிருந்தாள். ஆதலால் ஜசீந்தாவைப் போல அவள் அச்சப்படாமல் தைரியமாயிருந்தாள். அவளுடைய பேச்சிலும், வார்த்தையிலும் ஒரு அற்பமாவது வீண் சிலாக்கியம் இருக்கவில்லை. மார்ச் மாதம் 23-உ அவளுக்கு 10 வயது ஆரம்பித்திருந்தது. அவளுடைய தகப்பன் அந்தோனியு துஸ் சாந்துஸ். எதார்த்த புருஷன். ஆனால் அதிகப் பக்தியுடையவனல்ல. ஆயினும் அவளுடைய தாய் மரியரோசா கிறீஸ்துவ பெண்களுக்கு, மெய்யாகவே ஓர் முன்மாதிரிகையானவள். அவளுடைய

ஏக நோக்கமெல்லாம் தன் பிள்ளைகளைத் தேவ பயத்திலும், தங்கள் அந்தஸ்தின் கடமைகளில் முழு பற்றுதலுள்ளவர்களாயும் வளர்ப்பதே.

இந்த புண்ணியவதி தன் மகள் கண்ட காட்சிகளைப் பற்றி என்ன தீர்மானிப்பது என்று அவளுக்குத் தெரியாதிருந்தது. ஒரு புறத்தில் தேவமாதா தன் மகளுக்கு மெய்யாகவே காணப்பட்டாளென்று, நம்ப விரும்பினுள். ஆயினும் மறுபுறத்தில் ஏதோ மாய தந்திர காட்சிக்கும் தோற்றத்திற்கும், தன் மகள் உள்ளாயிருக்கலாமென்றும் அஞ்சினுள். ஆதலால் தன் வீட்டில் நாள் முழுதும் ஒவ்வொரு நேரத்திலும் ஆட்கள் அவளைக் காணும்படி வந்து கூடுவதைப்பற்றி ஒருவாறு கஸ்திப்பட்டாள்.

இந்தக் காக்ஷியைக் கண்டதின்பின் தன் மகளுடைய ஞான ஜீவியத்தில் யாதொரு மாற்றத்தையும் அவள் காணவில்லை என்று சொன்னுள். வாஸ்தவத்தில் இவளுடைய மகள் இதன்முன் எவ்வளவு பக்தியோடு ஜெபம்செய்து வந்தாளோ அதே பிரகாரமே இப்போதும் ஜெபம்செய்து கொண்டு வருகிறுள். அவளுடைய சகோதரிகளும் அவ்வாறே.

லூசியாளை எத்தனையோ கேள்வி கேட்டபோதிலும், அதனுல் அவளுக்குக் களைப்பும் ஆயாசமும் உண்டானபோதிலும் விஸ்கோந்தி தெ மொந்தேலு என்பவர் தன்னைத் தாராளமாய் கேள்வி கேட்கும்படி மகா மனத்தாராளத்தோடு சம்மதித்துக்கொண்டிருந்தாள்.

"கோவா தெ இரியா என்றழைக்கப்படும் இடத்தில், தேவமாதா உனக்குக் காணப்பட்டது மெய்யாகவே உண்மைதானு?"

"ஆம். அது முற்றும் உண்மைதான்."

"இதுவரையும் எத்தனை விசை அவள் உனக்குக் காணப்பட்டாள்."

"ஐந்து விசை, மாசத்தில் ஒரு விசை."

"மாசத்தில் என்ன தேதியில்?"

"எப்போதும் 13-ம் தேதி. ஆகஸ்ட் மீ தவிர. இந்த மாசத்தில் நகர் அதிகாரி என்னைப் பிடித்துப் பட்டணத்துக்குக் கொண்டுபோய்விட்டார். அந்த மாசத்திலும் சில நாளைக்குப் பின் வலிஞ்ஞாஸில் நான் அவளைக் கண்டேன்."

"தேவமாதா போன வருஷத்திலும் உனக்குக் காணப்பட்டாளென்று ஜனங்கள் சொல்லுகிறார்களே! இது மெய்தானா?"

"அது தவறு. நான் போன வருஷத்தில் அவளைக் காணவில்லை. இந்த வருஷத்திலும் மே மாசத்துக்கு முன்பு நான் அவளைக் கண்டதுமில்லை. அப்படி நான் சொல்ல என் கனவிலும் நினைக்கவில்லை. அது பொய்."

"வழக்கமாய் அவள் எங்கிருந்து வருகிறாள்? கீழ்த் திசையிலிருந்தா?"

"எனக்கு அது சுத்தமாய்த் தெரியாது. அவள் எங்கிருந்து வருகிறாள் என்பதை நான் ஒருபோதும் கவனிப்பதில்லை. ஆயினும் அவள் போகும்போது ஆகாயத்தில் சூரியன் எப்பக்கத்திலிருந்து உதிக்குமோ அப்பக்கத்துக்கே அவள் போகிறாள்."

"அவள் எவ்வளவு நேரம் நிற்கிறாள்? அதிக நேரமா? அல்லது அற்ப நேரமாத்திரமா?"

"அற்ப நேரமாத்திரம்."

"ஒரு பரமண்டலமந்திரம் அல்லது பிரியதத்த மந்திரம் சொல்லுவதுக்குப் போதுமான நேரமா? அல்லது அதுக்கதிகமா?"

"ஓ! அதுக்கதிகம். மிகவே அதிகம். ஆயினும் அவள் எப்போதும் ஒரே அளவான நேரம் தாமதிப்பதில்லை. சிலவேளை அந்த நேரத்துக்குள் ஓர் ஜெபமாலையை நாம் சொல்லி முடிக்கப் போதுமானதல்ல."

"முதல் தடவை அவளைக் கண்டவுடனே நீ பயப்படவில்லையா?"

"ஆம்! எவ்வளவோ பயப்பட்டேன். பிராஞ்சீஸ்குவையும் ஜசிந்தாளையும் அழைத்துக்கொண்டு ஓடிவிட நினைத்தேன். ஆனால் அவள் எங்களைப் பார்த்து பயப்பட வேண்டாம் என்றும், உங்களுக்கு ஒரு பொல்லாப்பும் செய்யமாட்டேன் என்றும் சொன்னாள்."

"அவள் உடை எப்படிப்பட்டது?"

"அவள் உடுப்பு வெள்ளை. அது அவளுடைய கால் அடிப்பாதங்கள் வரையும் இறங்கி தொங்குகின்றது. மேலும் அந்த உடுப்புக்கு மேலே ஓர் துப்பட்டியும் தரித்துக்கொண்டு இருக்கின்றாள். அதுவும் வெள்ளைதான். உடுப்பைப்போலவே அதுவும் நீண்டது. அது அவள் தலையை மூடி அதில்நின்று தொங்குகின்றது."

"உடுப்பின்மேலே ஏதாவது ஆபரணங்கள் உண்டா?"

"ஆம் முன்பக்கத்தில் இரண்டு பொற்கயிறுகள் தொங்குகின்றன. இவை கழுத்தில் நின்று கீழே தொங்கி அங்கத்தின் மத்திய பாகத்தில் ஓர் பொன் உருண்டையினால் ("Borla") இரண்டும் ஒன்றாய் சேர்க்கப்பட்டு இருக்கின்றன."

"அவள் இடுப்பில் ஏதாவது ஒரு கயிறு அல்லது கச்சை கட்டி இருக்கின்றாளா?"

"இல்லை"

"அவள் காதுகளில் கடுக்கன் உண்டா?"

"ஆம் இரண்டு சிறு வளையங்கள்."* ("Argolas")

---

* இந்த வாக்குமூலம் பிராஞ்சீஸ்கு, ஜசீந்தாவின் வாக்குமூலத்துக்கு ஒருவாறு விரோதமாகத் தோன்றக்கூடும். இதை நாம் கவனிக்கும்போது, முதலாவது இவர்கள் எல்லோரும் ஒன்றுகூடி மற்றவர்களை ஏமாற்ற வேண்டுமென்று கலந்துபேசிக் கொள்ளவில்லையென்பது, தெளிவாகின்றது. ஒன்றில் அந்த சிறுவர் இருவரும் நன்றாய்க் கவனித்து பார்க்கவில்லை அல்லது தேவமாதாவின் காதுகள் துப்பட்டியினால் ஏறக்குறைய முழுதும் மூடப்பட்டிருந்திருக்கும். இப்படியிருந்திருந்தால், தேவமாதாவுக்கு நேரே முன்னின்று அவளைப் பார்ப்பவர்கள் அவளுடைய காதின் அடித் தொங்கலையும், காதிலுள்ள வளையங்களையும், காணலாம். ஆனால் ஒரு

"அவள் எந்த கையில் ஜெபமாலையை வைத்துக் கொண்டிருந்தாள்?"

"வலது கையில்."

"அந்த ஜெபமாலை ஐந்து இரகசியமுடையதா? பதினைந்து இரகசியமுடையதா?"

"நான் கவனிக்கவில்லை."

"கடைசியில் ஒரு சிலுவையிருந்ததா?"

"ஆம் கடைசியில் ஒரு வெள்ளை சிலுவை இருந்தது. மணிகளும் அதே நிறம்தான். சங்கிலியும் அதே நிறமே."

"அவள் யார் என்று நீ எப்போதாவது கேட்டாயா?"

"ஆம். ஆனால் அதை ஒக்டோபர்-மீ 13-உ சொல்லுவதாய்ச் சொன்னாள்."

"அவள் எங்கிருந்து வந்தாள் என்று நீ கேட்டாயா?"

"ஆம். அவள் பரலோகத்தினின்று வந்ததாய்ச் சொன்னாள்."

"நீ இதை எப்போது கேட்டாய்?"

"இரண்டாவது தடவை ஜூன்-மீ 13-ம் உ."

"அவள் எப்போதாவது சிரித்தாளா? அல்லது கஸ்தியாய்க் காணப்பட்டாளா?"

"அவள் சிரிப்பதையாவது, துக்கமாயிருப்பதையாவது நான் ஒருபோதும் பார்த்ததில்லை. அவள் எப்போதும் ஒரே சீராயிருக்கிறாள்."

---

பக்கத்தில் நின்று பார்க்கிறவர்களுக்கு அது காணப்படமாட்டாது. தேவமாதா சாதாரணமாய் லூசியாளைப் பார்த்துதான் பேசினாள். ஆதலால் லூசியாள் மாதாவை எப்போதும் நேரே முன்னின்று பார்த்திருப்பாள். அப்படியானால் அவள் மற்றவர்களைப்பார்க்க அதிகமாய் கண்டிருக்கக் கூடுமென்பது நமக்கு விளங்குகின்றது. பாத்திமா மாதாவின் ஒரு சுரூபத்தை வெவ்வேறு பக்கங்களில் நின்று உற்றுப் பார்த்தால் இது தெளிவாகும்.



பாத்திமா தெரிசனை.

"அவள் ஏதாவது ஒரு விசேஷ ஜெபத்தை ஜெபிக்கும்படி உன்னிடம் சொன்னாளா?"

"உலகத்தின் சமாதானத்துக்காக தேவமாதாவுக்குத் தோத்திரமாக, ஜெபமாலை ஜெபிக்கும்படி சொன்னாள்."

"ஒவ்வொரு மாதமும் 13-ம் உ காக்ஷி கொடுக்கும்போது அநேக ஜனங்கள் அங்கே வந்திருக்க ஆசிப்பதாய் உனக்குத் தெரிந்ததா?"

"அப்படி ஒன்றும் சொல்லவில்லை."

"உனக்கு ஏதோ ஓர் இரகசியத்தை அறிவித்து அதை ஒருவருக்கும் சொல்லக்கூடாதென்று விளக்கினாளாமே மெய்தானா?"

"ஆம்."

"அது உனக்கு மாத்திரம் சம்பந்தப்பட்டதா? மற்ற இருவருக்கும்கூட சம்பந்தப்பட்டதா?"

"அது எங்கள் மூவருக்குமே."

"அதை நீ உன் ஆத்தும குருவானவரிடம் சொல்லக்கூடுமா?"

இதற்கு அந்த பிள்ளை ஒரு பதிலும் சொல்லவில்லை. இதைப்பற்றி அவள் தத்தளிப்பதாய் விஸ்கோந்தி என்பவர் அறிந்து அதைக் குறித்து ஊர்ச்சிதமாய் பதில் சொல்ல வேண்டும் என்றும் கேட்காமல் விட்டுவிட்டார்.

"நகர் அதிகாரியானவர் இந்த இரகசியத்தை உன்னிடமிருந்து அறிய பிரயாசைப்பட்டபோது அவர் கேள்விக்கு மேல் கேள்வி கேட்டு உன்னைத் தொந்தரவு செய்தமையால் நீ இதுக்குத் தப்பும்படியாய் ஏதோ ஒரு பொய்யைச் சொல்லி அவரை ஏமாற்றிவிட்டு நீ தப்பிக்கொண்டதாயும், பின்பு நீ வெளியே போய் நகர் அதிகாரியை இப்படி ஏமாற்றிவிட்டேன் என்று நீ பெருமையாய்ப் பேசினதாயும் ஜனங்கள் சொல்லுகிறார்களே இது மெய்தானா?"

"இல்லை. அந்த இரகசியத்தைச் சொல்லும்படி நகர் அதிகாரி கேட்டார். நான் அதைச் சொல்லக்கூடாமை யால் சொல்லமாட்டேன் என்றேன். ஆயினும் மாதா சொன்ன மற்றதெல்லாம் நான் அவரிடம் சொன்னேன். இதனால் சிலவேளை நகர் அதிகாரி நான் அதையும் சொல்லி விட்டதாக எண்ணியிருக்கலாம். எப்படியானாலும் நான் ஒருபோதும் அவரை ஏமாற்றவில்லை."

"மாதா நீ வாசிக்கப் படிக்கும்படி சொன்னாளா?"

"ஆம். இரண்டாம் தடவை காணப்பட்டபோது அப்படிச் சொன்னாள்."

"அடுத்த ஒக்டோபர்-மீ அவள் உன்னை மோக்ஷத் துக்குக் கொண்டுபோவதாகச் சொல்லியிருந்தால், நீ வாசிக்கப் படிப்பதில் என்ன பிரயோஜனம்?"

"அவள் அப்படியொன்றும் என்னிடம் சொல்லவு மில்லை. நான் அப்படி ஒருவரிடமும் சொன்னது மில்லை."

"ஜனங்கள் அந்த கருவாலி மரத்தடியில் போட்ட பணத்தை எடுத்தென்ன செய்யும்படி மாதா சொன் னாள்?"

"இரண்டு கட்டில்கள்மேல் ('dois andores') அதைப் போட்டுக்கொண்டு போகும்படி சொன்னாள். அதில் ஒன்றை ஜசிந்தாளும் வேறு இரு சிறு பெண்பிள்ளை களும் நானும் எடுத்துக்கொண்டு போகவேண்டுமென்றும், மற்றதை பிராஞ்சீஸ்கும் வேறு மூன்று சிறு பையன் களும் கொண்டுபோகவேண்டும் என்றும், அதை நாங்கள் பங்கு விசாரணைக் கோவிலுக்குக் கொண்டுபோகவேண்டும் என்றும், பணத்தில் ஒரு பாகம் மாதாவின் வணக்கத்துக் காகவும், திருநாளுக்காகவும் மற்றது புதிய ("Capella") சிறு கோவில் கட்டுவதுக்காகவும் செலவிடவேண்டும் என்றாள்."

"சிறு கோவிலை எங்கே கட்டவேணுமென்று விரும்புகிருள்? கோவா தெ இரியாவிலா?"

"எனக்குத் தெரியாது. அவள் அதைச் சொல்லவில்லை."

"உனக்குத் தேவமாதா காணப்பட்டாளே யென்று உனக்கு வெகு சந்தோஷந்தானு?"

"ஆம்."

"அக்டோபர்-மீ 13-ம் உ அவள் காக்ஷி கொடுக்கும்போது தனிமையாய் வருவாளோ?"

"இல்லை அவளோடு சூசையப்பரும் குழந்தை சேசுநாதரும் கூட வருவார்கள். இதுக்கு சற்றுப்பின் உலகத்தாருக்கு சமாதானம் அளிக்கப்படும்.*

"இது தவிர வேறெதுவும் உனக்கு அறிவித்தாளா?"

"எனக்குக் காக்ஷி தந்தது மெய்யென்று எல்லோரும் விசுவசிக்கும்படி ஒரு பெரிய புதுமை செய்வதாயும் சொன்னுள்."

"நீ மாதாவை பார்த்துக்கொண்டிருக்கும்போது சில வேளைகளில் அதை நிறுத்தி உன் கண்களை மூடிக்கொள்வது ஏன்?"

"அது ஏன் என்ருல், அவளைப் பார்க்கும்போது சில வேளைகளில் என் கண்கள் கூசுகின்றன."

"ஏதாவது விசேஷ ஜெபத்தை அவள் உனக்குப் படிப்பித்தாளா?"

"ஆம், படிப்பித்தாள். ஜெபமாலையின் ஒவ்வொரு இரகசியத்துக்கும் பிற்பாடு அதைச் செய்யவேண்டுமென்றும் அவள் கற்பித்தாள்."

---

* "e pouco tempo depois sera' concedida paz ao **mundo**" (Vide p. 48. N. S. de Fatima by Rev. Fr. L. Gonzaga da Fonseca, S.J.)

"இப்போது அந்த ஜெபத்தை மனப்பாடமாய் நீ சொல்லக்கூடுமா?"

"ஆம்."

"அதைச் சொல்லு."

"ஓ! சேசுவே! எங்கள் பாவங்களைப் பொறுத்தருளும். நரகாக்கினையினின்று எங்களை இரட்சித்தருளும், உத்தரிக்கிற ஸ்தலத்திலிருக்கும் ஆத்துமாக்களுக்கு, விசேஷமாய் யாரும் நினையாத ஆத்துமாக்களுக்கு ஆறுதல் அளித்தருளும்."

## லூசியாளின் தாய்

தேவமாதா மகா பெரிய ஓர் புதுமையைச் செய்வதாய் வாக்களித்திருந்த தினத்துக்கு இரண்டு நாளைக்கு முன் "வியகோந்தி தெ மொந்தேலு" என்பவர் அங்கே என்ன நடக்கின்றதென்பதை அறியும்படி, மறுபடியும் பாத்திமாவுக்குப் போனார். நேரே லூசியாவின் வீட்டுக்குப்போய் கதவைத் தட்டினார். அவளுடைய தாய் அவரைப் பட்சத்தோடு வரவேற்றுக்கொண்டு தன் மகளிடம் ஏதாவது கேட்க மனசானால் கேளுங்கள் என்றாள். அதுவுமல்லாமல் அவளுமே தன்னிடம் அவர் கேட்ட சில கேள்விகளுக்குத் தடையின்றி பதில் உரைத்தாள்.

"உன் மகள் லூசியா, பிராஞ்சீஸ்குவுக்கும் ஜசிந்தாவுக்கும் பந்துவா?"

"ஆம் என் புருஷன் அவர்களுடைய தாயின் சகோதரன். ஆதலால் பந்துதான்." (Primas)

"தேவமாதா உன் மகளுக்குக் காணப்பட்டாளென்று உனக்கு எப்படி தெரியவந்தது? அவளே வந்து உன்னிடம் சொன்னாளா?"

"நான் அதை மற்ற பிள்ளைகளின் பெற்றோர் வழியாய் அறிய நேரிட்டது. அவர்களிருவரையும் நீங்கள்

வீட்டில் போய் சொன்னால் கோபிப்பார்கள் என்று பயந்து சொல்லவேண்டாமென்று லூசியாள் அவர்களைத் தடுத்திருந்தாள். இதன் பின்பு நானும் அவளிடம் கேட்டேன். அவள் கண்டதெல்லாவற்றையும் என்னிடம் சொன்னாள்.''

"மாசம் மாசம் 13-ம் தேதி, கோவா தெ இரியாவுக்கு அவள் போகும்படி அவளைச் சுயாதீனமாய் விட்டுவிட்டாயா?"

"ஆம் நான் அவளை ஒருபோதும் தடுக்கவில்லை."

"பிள்ளைகள் அங்கு போகும்போது என்ன உடை உடுத்திக்கொண்டு போகிறார்கள்?"

"முதல் தடவை அந்தப் பிள்ளைகள் சாதாரணமாய் இடைப்பிள்ளைகள் உடுக்கிறபிரகாரம் ஏதோ ஏழை வஸ்திரங்களையணிந்துகொண்டு போயிருந்தார்கள்.

மற்ற சமயங்களிலும் மாதம் 13-ம் உ, கொஞ்ச நிறமுள்ள துணிகளை உடுத்திக்கொண்டு தலையில் வெள்ளை முக்காடு போட்டுக்கொண்டு போனார்கள்.''

"நகரின் அதிகாரி அவர்களைப் பிடித்து சிறையில் வைத்திருந்தபோது யாராவது அவர்களைத் தேடிப் போனார்களா?"

"பிரான்சீஸ்கு, ஜசிந்தாவின் ஓர் சகோதரன் அவர்கள் எங்கே இருக்கிறார்களென்று பார்க்கப் போனான். அவர்களைத் திருப்பிக் கூட்டிக்கொண்டு வரும் கருத்தோடு போகவில்லை. நகரின் அதிகாரியே அவர்களைக் கொண்டு வந்துவிட்டார்."

"உன் மகளைப் பார்க்கும்படி எத்தனை ஜனங்கள் இங்கே வருகிறார்கள்?"

"ஒவ்வொரு நாளும் எத்தனையோ பேர் அவர்களைப் பார்க்க இங்கே வருவதுண்டு."

## மறுபடியும் லூசியா

இதன்பின் லூசியாளும் சில கேள்விகளுக்குப் பதில் உரைத்தாள். "லூசியா, நான் சொல்லுவதை சற்றே கேள்" என்ருர் விஸ்கோந்தி என்பவர்.

"அன்றையத்தினம் நான் உன்னோடு சம்பாஷித்த போது ஜனங்கள் போடும் காணிக்கைகளை இரண்டு கட்டில்களில் வைத்து பங்குவிசாரணைக் கோவிலுக்குக்கொண்டு போகவேண்டுமென்று நீ சொன்னுயே? நாம் கட்டில்களை சம்பாதிப்பது எவ்விதம்? கோவிலுக்கு எப்போது கொண்டுபோகவேண்டும்?"

"பணத்தில் கொஞ்சம் எடுத்து கட்டில்கள் வாங்க வேண்டும். பின் ஜெபமாலைமாதா திருநாளில் நாம் அதைக் கோவிலுக்குக் கொண்டுபோகவேண்டும்."

"மாதா தமக்குத் தோத்திரமாக எந்த இடத்தில் கோவிலைக்கட்ட விரும்புகிருள் என்று உனக்கு நிச்சயமாகத் தெரியுமா?"

"அப்படி முழு நிச்சயமில்லை. ஆயினும் கோவா தெ இரியாவில் கட்டுவது அவள் விருப்பமென்றெண்ணுகிறேன்."

"உனக்கு மெய்யாகவே அவள் காணப்பட்டதாக ஜனங்கள் விசுவசிக்கும்படி அவள் என்ன செய்வதாக சொன்னுள்?"

"அவள் ஒரு புதுமை செய்வதாக சொன்னுள்."

"இதை எப்போது உன்னிடம் சொன்னுள்?"

"அநேகவிசை இதை என்னிடம் சொன்னுள்."

"அந்த நாளில் அப்படி ஒன்றும் சம்பவியாவிட்டால் ஜனங்கள் உன்னைப் பார்த்து நகைப்பார்களேயென்று உனக்கு பயமில்லையா?"

"இல்லை."

"ஒவ்வொரு மாசமும் 13-ம் தேதி நீ கோவா தெ இரியாவுக்கு போகும்படி உன்னை இழுப்பதாக நீ ஏதாவது உணருகிருயா?"

"நான் அங்கே போகவேண்டுமென்கிற பலத்த ஆசை எனக்கு உண்டாகின்றது. நான் அப்படி போகக் கூடாமற்போனல் எனக்கு மகா நிர்ப்பாக்கியமாயிருக்கும்."

"மாதா ஜெபம் செய்வதையாவது அல்லது தனது ஜெபமாலைக்கொட்டையை ஒன்றன்பின் ஒன்ருய் உருட்டு வதையாவது, அல்லது அர்ச். சிலுவை வரைவதையாவது நீ பார்த்தாயா?"

"அப்படி ஏதும் செய்ய நான் பார்க்கவில்லை."

"பாவிகள் மனம் திரும்புவதற்காக ஜெபம் செய்யும் படி அவள் சொன்னளா?"

"அப்படி அவள் சொல்லவில்லை, ஆனல்..."யுத்தம் முடியும்படி ஜெபமாலைமாதாவிடம் வேண்டிக்கொள்ளும் படி மாத்திரம் சொன்னள்."

"மாதாவின் உடுப்பிலிருந்து ஒரு நக்ஷத்திரமாவது, சில புஷ்பங்களாவது புறப்பட்டு வருவதைக் கண்டாயா? மற்ற ஜனங்கள் அப்படி தாங்கள் கண்டதாக சொல்லு கிருர்களே?"

"நான் அப்படி நக்ஷத்திரமாவது வேறு எவ்வித விசேஷமான யாதொன்றும் புறப்பட்டுவரக் காணவில்லை."

"ஏதாவது ஒரு சத்தம் உதாரணமாக, இடி முழக் கம், பூமியதிர்ச்சி இப்படி ஏதாவது கேட்டிருப்பாயா?"

"இல்லை."

"உனக்கு வாசிக்கத் தெரியுமா?"

"எனக்குத் தெரியாது."

"வாசிக்கப் படிக்கிருயா?"

"இல்லை."

"மாதாவின் வார்த்தைக்கு நீ செவி கொடுத்து கீழ்ப்படிவது இப்படித்தானு?"

"சிறுமி இதற்கு ஒரு பதிலும் சொல்லவில்லை."

"நீ ஜனங்களைப்பார்த்து முழங்காலிலிருந்து ஜெபம் செய்யும்படி சொல்லுகிருயே, மாதா அப்படி செய்யக் கற்பிப்பதினுலா நீ அப்படி செய்கிருய்?"

"மாதா நான் அப்படி செய்யும்படி ஒருபோதும் சொல்லுவதில்லை. அது என் சொந்த விருப்பம்."

"நீ அவளைக் காணும் ஒவ்வொரு தடவையும் முழங்காலிலிருக்கிருயா?"

"இல்லை. சில வேளைகளில் நான் நிற்பதும் உண்டு."

"அவள் பேசும்போது அவளுடைய சத்தம் மதுரமும், பட்சமும் நிறைந்ததாயிருக்கிறதா?"

"ஆம்."

"அவளுக்கு என்ன வயசிருக்குமென்று நினைக்கிருய்?"

"அவளுக்கு 15 அல்லது சிலவேளை கொஞ்சங்கூடவுமிருக்கலாம்."

"அவளுடைய முக்காடு அல்லது துப்பட்டி அவளது நெற்றியையும் மறைக்கிறதா?"

"இல்லை."

"அவளைச் சூழ்ந்திருக்கும் சோதிப்பிரகாசம் எப்படிப்பட்டது?"

"சூரிய வெளிச்சத்தைவிட அதிக சௌந்தரியமும் சோதியுமுடையது."

"உனக்கு மங்களம் சொல்வதுக்காக எப்போதாவது அவள் தன் தலையையாவது, கைகளையாவது அசைத்ததுண்டா?"

"ஒருபோதுமில்லை."

"உன்னைப்பார்த்து அவள் எப்போதாவது புன்னகை கொண்டாளா?"

"இல்லை."

"நீ மாதாவைப் பார்த்துக்கொண்டிருக்கையில், ஜனக் கூட்டத்தின் சப்தம், பேச்சு உரக்க கூவுவதும், உனக்குக் கேட்கிறதா?"

"எனக்கொன்றும் கேட்பதேயில்லை."

## மறுபடியும் சிறு ஜசீந்தாள்

இதன்பின் விஸ்கோந்தி தெ மொந்தேலு என்பவர் மற்ற இரண்டு பிள்ளைகளிடத்திலும், அவர்களுடைய தகப்பனர் முன்பாகவும், அவர்களுடைய சகோதரிகள் முன்பாகவும், சில கேள்விகள் கேட்கும்படியாக அவர்களிருக்கும் இடத்துக்குப் போனர்.

முதலாவது ஜசிந்தாளிடம் கேட்க ஆரம்பித்தார்:—

"நீ ஜெபமாலை (terco) ஜெபிக்கும்படி மாதா உன்னிடம் சொன்னளா?"

"ஆம்."

"எப்போது?"

"அவள் முதல்விசை காணப்பட்டபோது."

"அந்த இரகசியத்தை நீயும் கேட்டாயா? அல்லது லூசியா மாத்திரமா?"

"இல்லை. நானுமே கேட்டேன்."

"எப்போது கேட்டாய்?"

"இரண்டாவது தடவை. அந்தோனியார் திருநாள் அன்று."

"நீங்கள் பணக்காரர் ஆவீர்கள் என்பதாய் அந்த இரகசியத்தில் சொல்லி இருக்கிறதா?"

"இல்லை."

“நீங்கள் நல்லவர்களாயும் பாக்கியவதிகளாயும் ஆவீர்களென அதில் சொல்லி இருக்கிறதா ?”

“ஆம் ! அது எங்கள் மூவருடைய நன்மைக்காகவே.”

“நீங்கள் மோட்சத்துக்குப் போவீர்களென்று ?”

“இல்லே.”

“அதை நீ எனக்கு சொல்லக்கூடாதா ?”

“கூடாது.”

“ஏன் ?”

“ஏனென்றால் அதை ஒருவருக்கும் சொல்லக்கூடாதென்று மாதா சொன்னதினால்தான்.”

“ஜனங்கள் அது இன்னதென்று அறிந்தால் அவர்கள் கஸ்திப்படுவார்களா ?”

“ஆம்.”

“தேவமாதா கைகளை எப்படி பிடித்துக்கொண்டிருப்பாள் ?”

“மேலே, உயர்த்திக்கொண்டிருப்பாள்.”

“எப்போதுமா ?”

“உள்ளங்கைகளை சில வேளைகளில் (“as vexes”) பரலோகத்துக்கு நேரே உயர்த்துவாள்.”

“அவள் தலையைச் சுற்றி வட்டமான ஓர் பிரகாசமிருக்கிறதா ?”

“ஆம்.”

“நீ உன் கண்களைத் திறந்து அவளை உற்றுப்பார்த்துக் கொண்டிருக்கக்கூடுமா ?”

“கூடாது. கண்ணுக்கு வருத்தமுண்டாகும்.”

“அவள் பேசுவது முழுதும் உனக்கு எப்போதும் விளங்குகிறதா ?”

"கடைசி விசை அவள் சொன்னதில் கொஞ்சம் எனக்கு விளங்கவில்லை. ஜனக்கூட்டம் போட்ட சத்தம் அதற்குக் காரணம்."

பிராஞ்சீஸ்குவையும் இவ்வாறு கேள்வி கேட்டார். இங்கே எழுதுவதுக் கவசியமான விசேஷம் யாதொன்றும் அவன் சொல்லவில்லை.

---

## நான்காம் அதிகாரம்

### 6-வது காட்சி: இதுவே கடைசிக் காட்சி

**1917**-ம் ஹூ அக்டோபர்-மீ **13**-உ:—நாம் இப்போது விவரிப்பதுதான் கடைசிக் காட்சி. மற்றெல்லாவற்றிலும், மகத்துவமானது. அந்த ராஜ்யம் முழுதும் மகா ஆவலோடும், உற்சாகத்தோடும் அந்நாளை எதிர்பார்த்திருந்தது. இதற்கு ஒரு காரணம்: போய் வந்த திருயாத்திரிகள் அங்குமிங்கும் பரப்பிய சரிதைகள்; அதைப்பார்க்கிலும் மனம் போனபடி பலவாறு அச்சிட்டுப் பரப்பிய சுயாதீன சமாச்சாரப் பத்திரிகைகளே அதிமுக்கிய காரணம். இப்பத்திரிகைகள் தாங்கள் கேள்விப்பட்ட வெறும் சமாச்சாரங்களை மாத்திரம் சும்மா வரைந்துவிடாமல் அவிசுவாசத்தில் அமிழ்ந்தியிருந்த தங்கள் தலையில் தோன்றினபடியெல்லாம் அதைப்பற்றி பலவாறு தர்க்கித்தன. அக்டோபர் மாதம் 13-ந் தேதி நடக்கப்போவதாய் மேலே சொல்லப்பட்ட புதுமையைப் பலபேர் பலமுறை திரும்பத் திரும்ப தீட்டிக் கூட்டி பேசியதால் அது நாடெங்கும் மிகவே பிரசித்தமாகி, மனக்கிளர்ச்சியை மூட்டிவிட்டது.

அந்த தினத்துக்கு முந்தினநாள் பாத்திமாவுக்குப் போகும் பாதைகளிலெல்லாம் நானாவிதமான வண்டிகளும், வாகனங்களும் திரளான கால்நடை யாத்திரிகளும், நிரம்பி

யிருந்தனர். இதில் பெரும்பாலர் கால்நடையாகவே நடந்தார்கள். அவர்களில் பெரும்பாலர் ஜெபமாலை செய்துகொண்டு போனார்கள்.

குளிர்காலம் ஏலவே ஆரம்பித்திருந்தபோதிலும் மறுநாள் சகலத்தையும் நன்றாய்ப் பார்ப்பதற்கு நல்ல வசதியான இடம் கிடைப்பதுக்காக அன்று இரவு முழுதும் வெளியிலே மைதானத்தில் தங்கியிருக்க தீர்மானித்துக்கொண்டார்கள். மறுநாள் விடிந்தபோது அதிக குளிராயும், மழையாயும், கஷ்டமாயும் இருந்தது. அதை சற்றும் சட்டைப்பண்ணவில்லை. நேரம் போகப்போக இன்னும் அதிகமதிகமாய் ஜனங்கள் வந்துகொண்டேயிருந்தார்கள். சிலர் சுற்றுகிராமங்களிலிருந்தும், வேறு சிலர் வெகு தூரத்திலிருந்தும் திரளானபேர் அம்மாகாணத்தின் மறு எல்லைகளிலுள்ள பட்டணங்களிலிருந்தும், அநேகர் லிஸ்போனிலிருந்தும் வந்தனர். இங்குள்ள அநுதின பெரிய பத்திரிகைகள், தங்கள் லிகிதர்களையும், நிருபர்களையும் அன்று அனுப்பியிருந்தார்கள்.

ஓயாமல் பெய்துகொண்டிருந்த மழையினால் கோவா தெ இரியா எங்கும் சேறுள்ள குளம்போல மாறிவிட்டது. இதனால் ஒருவரும் பாக்கியில்லாமல் திருயாத்திரிகளும், வெறும் வேடிக்கை பார்க்கவந்தவர்களும், சகலருமே தங்கள் உடம்புவரையும், முழுதும் நனைந்து நின்றார்கள். அது அவர்களுக்குப் பெரிதாய் தோன்றவில்லை. $11\frac{1}{2}$ மணி அளவில் அங்கு கூடியிருந்தவர்கள் 50,000 பேர், பொறுமையோடு காத்திருந்தனர். வேறு சிலர் 70,000 என்றும் உத்தேசித்தார்கள். மூன்று சிறு இடைப்பிள்ளைகளும் வந்து சேர்ந்தார்கள். அவர்களின் பெற்றோர் அவர்களை அன்று அதிக கவனத்தோடு ஞாயிற்றுக்கிழமை கோவிலுக்குப் போவதுபோல அக்கறையோடு உடுத்தி அனுப்பினார்கள். கூடியிருந்த கூட்டம் சற்றே ஆசாரத்தோடு அவர்களுக்குப் போக வழிவிட்டார்கள். அவர்கள் நேரே சிறு கருவாலி மரத்தண்டையில் போய் நின்றார்கள். இம்மரத்தின் அடிமரத்தின் ஒரு சிறு துண்டு மாத்திரம்தான் மீதி

யாய் விடப்பட்டிருந்தது. லூசியா அவர்களைப் பார்த்து தாங்கள் பிடித்திருந்த குடைகளை மூடும்படி சொன்னாள். அவர்கள் அதற்குக் கீழ்ப்படிந்தார்கள். அவர்கள் ஜெப மாலையை ஜெபித்துக்கொண்டிருந்தார்கள்.

## Our Lady's Message

### தேவமாதா அறிவித்த சேதி

பகல் மத்தியானம் ஆனவுடனே பிள்ளைகள் வழக்க மாய் காணுமிடத்தில் காட்சியைக் கண்டார்கள். பார்த் துக்கொண்டிருந்த ஜனங்கள், தூபத்தைப்போன்ற ஓர் வெண்மேகம் அந்த மரத்தை சூழ்ந்துவந்து மூன்று விசை இறங்குவதையும், ஆகாயத்தில் எழும்புவதையும் கண்டார் கள். லூசியா மறுபடியும் "நீர் யார்? நான் என்ன செய்ய விரும்புகின்றீர்?" என்று கேட்டாள். கடைசியாய் காட்சி இதற்குப் பதில் உரைத்தது: தாம் ஜெபமாலைமாதா வென்றும், தாம் வந்ததுக்குக் காரணம் விசுவாசிகள் தங்கள் ஜீவியத்தை மாற்றும்படி எச்சரிக்க வந்ததாகவும், தங்கள் பாவ தோஷங்களினால் நமதாண்டவருக்கு இன்னும் மென் மேலும் துரோகம் செய்யாதிருக்கவேண்டும், ஏனெனில் ஏலவே மிதமிஞ்சினவிதமாய் அவருடைய இருதயத்தை மனநோகப்பண்ணியிருப்பதாயும் அறிவித்தாள். மேலும் அவர்கள் ஜெபமாலை செய்யவேண்டுமென்றும், தங்கள் பாவங்களுக்காக அவர்கள் தபசு செய்யவேண்டுமென்றும் சொன்னாள்.

இதுதவிர தமது தோத்திரத்துக்காக அவர்கள் அங்கே ஒரு சிறு கோவில் கட்ட விரும்புவதாயும் சொன் னாள். மேலும் மனுமக்கள் தங்கள் ஜீவியத்தை மாற்றினால் யுத்தம் சீக்கிரம் முடிந்துவிடும் என்றும், அவள் அவர்களு டைய ஜெபங்களுக்கு செவிகொடுப்பதாயும் வாக்களித்தாள். அவள் மறைந்துபோனபோது அதுதான் கடைசிக் காட்சி யென்று பிள்ளைகளின் மனதில் தோன்றிற்று. ஆனால் அவள் போகும்போது சூரியனைத் தூண்டிக் காண்பித்தாள்.

## சூரியனின் அதிசயம்

லூசியா அந்த அடையாளத்தைக் கண்டவுடனே, தன்னையறியாமலே, “சூரியனைக் கவனித்துப் பாருங்கள்” என்று உரக்க வாயால் கூவினாள். மழை நின்றுபோனது. மேகங்கள் மறைந்துபோயின. சூரியன் ஓர் வெள்ளித் தட்டம்போலத் தோன்றி அது உருண்டு, உருண்டு, ஓர் அக்கினி சக்கரம்போல சுழன்றது. அதினின்று மஞ்சள், பச்சை, சிவப்பு, நீலம், ஊதா நிறமுள்ள பிரகாசக் கதிர்கள் எரிந்து வீசிற்று.

இதனால் மேகங்களுக்கும், மரங்களுக்கும், மலைகளுக்கும், பூமிக்கும் நானாவித அழகிய நூதன நிறமுண்டாச்சுது. அதன்பின் இரண்டொரு நிமிஷம் சூரியன் சுழலாமல் நின்று, பின்பு மறுபடியும் மகிழ்ச்சியோடு சுழலவும், பிரகாசக் கதிர்களை முன்போல வீசவும் தொடங்கினது. மீண்டும் அது நின்று மறுபடியும் ஆரம்பித்து முன்னிலும் பார்க்க இன்னம் அதிகமாய் வெவ்வேறு வித விதமான நூதன நிறங்களுடைய கதிர்களை விஸ்தாரமாய் வீசி சொலித்தது.

கூடியிருந்த திரளான ஜனங்கள் ஆச்சரியத்தோடு ஏறெடுத்துப் பார்த்து ஸ்தம்பித்து பேச்சு மூச்சற்று நின்றார்கள். திடீரென சூரியன் ஆகாயத்தினின்று நிலை பெயர்ந்து உருண்டு தங்கள்மேல் விழப்போகிறதுபோல எல்லோருக்கும் தோன்றிற்று. அப்போது ஒவ்வொருவருடைய நெஞ்சமும் பிளந்து அச்சமும், பயமுமுண்டாகி ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் மனத் திகிலை அடக்கச் சக்தியற்றவர்களாகி எல்லோரும் ஏக சத்தமாய் உரக்கக் கூவினார்கள். “புதுமை, புதுமை” என்றார்கள். “ஆண்டவரை விசுவசிக்கிறேன்” “மரியே வாழ்க!” “ஆண்டவரே, என்மேல் இரக்கமாயிரும்” என்று இவ்வித பெரும் கூக்குரல் உண்டாயிற்று.

இவ்வாறு இவர்கள் உரக்கக் கூவினதுமன்றி கீழே அப்போது கிடந்த சேற்றின்மேலேயே முழங்காலிலிருந்து உரத்த சத்தமாய் உத்தம மனஸ்தாப மந்திரத்தைச் சொன்னார்கள்.

இந்தக் காக்ஷி மும்முறையாக நடந்தது, ஏறக்குறைய எல்லாம் 10 நிமிஷம் அல்லது கொஞ்சம் அதிகமாய் இருக்கலாம். அது நன்றாயும் தெளிவாயும் தோன்றினது. ஏறக்குறைய 50,000-த்துக்கதிக ஜனங்கள் அதைக் கண்டார்கள். விசுவாசிகளும், அவிசுவாசிகளும், சாதாரண கூலி வேலைசெய்யும் ஆட்களும், கல்வியில் தேர்ந்தவர்களும், தத்துவ சாஸ்திரிகள், பத்திரிகாசிரியர்களும் நிருபர்களும், Free thinkers என்னப்படும் நாஸ்திகர்கள் பலரும் இருந்தார்கள். இவர்களில் ஒருவராவது இச் சம்பவம் நடக்குமென்று சற்றும் எதிர்பார்த்திருந்தவர்களேயல்ல. அப்படியிருந்தும், வேறே யாருமல்ல ஒரு சாதாரண சிறுபிள்ளை தன் வாயைத் திறந்து "சூரியனைக் கவனித்துப் பாருங்கள்" என்று சொன்னதைமாத்திரம், கேட்டவுடனே, அவர்கள் எல்லோரும் அதே இடத்தில் அதே நேரத்தில் முறையே மூன்று காக்ஷிகளையும் அநேக மாசங்களுக்கு முன்னமே குறிப்பிட்டு வாக்களிக்கப்பட்ட அதே நாளிலும் அதே மணி நேரத்திலும் கண்டார்கள்.

இதுவுமன்றி ஞான அதிகாரிகள் இது விஷயமாய்ச் சேகரித்திருக்கும் தஸ்தாவேசுகள், பதிவுப் பத்திரங்களின்படி இவ்விடத்தினின்று மூன்று மைலுக்கதிமான தூரத்திலிருந்தவர்களும் இப் புதுமையைக் கண்டதாக விளங்குகிறது. எப்படியானாலும் வெகு தூரத்திலிருந்த இவர்கள் மட்டிலாவது எவ்வித மனக்கிளர்ச்சி, மனத்தோற்றம் என்று சொல்ல சற்றும் இடமில்லை.

இச்சம்பவம் நடக்கும்போதெல்லாம், இந்தப் பிள்ளைகள் என்ன செய்கிறார்கள், என்றறியத்தக்கதாக அவர்களின் மேலேயே தாங்கள் கண் வைத்துக்கொண்டு அவர்களின் இயக்கத்தையும், ஒவ்வொரு அசைவையும், தாங்கள் கவனமாய்ப் பார்த்துக்கொண்டிருந்ததாயும், சூரிய வெளிச்சத்தின் விதவிதமான மாறுதல்களும், நிறங்களும் அப்பிள்ளைகள்மேலும் அடித்து வீசியதைக் கண்டதாகவும் பலர் சொல்லுகிறார்கள். இவர்கள் வழியாய் அறிய நேரிட்ட இன்னமோர் பெரிய ஆச்சரியத்துக்குரிய சம்ப

வழும் உண்டு. எத்தனையோ பேர், வாஸ்தவத்தில் இதைப் பற்றி எத்தனையோ திரளான பேரிடம் கேட்கக்கூடியதாயிருந்ததோ அத்தனைபேரும், அப்படியே சொன்னார்கள். அதாவது: சூரியன் தனது சுய நிலைமைக்குத் திரும்பிய போது சற்று நேரத்துக்கு முன்பு சர்வாங்கமும் நனைந்து மழையினால் முற்றும் துவைந்திருந்த தங்கள் வஸ்திரங்கள் சகலமும், பூரணமாய் இப்போது உலர்ந்து காய்ந்திருந்ததையும் கண்டார்கள். இவ்வதிசயங்கள் எல்லாம், ஏன்? அந்தக் காக்ஷி மெய்யென்றும், மாதா நமக்கு அறிவித்த சேதி மிகவே முக்கியமானதென்றும் நமக்குறுதிப்படுத்துவதற்காகவே! ஆதலால் நாம் அதை யநுசரிப்பது நமது கடமை.

## ஓர் வியாதிக்காரியின் ஆச்சரியத்துக்குரிய ஆரோக்கியம்

இதே தினத்தில் பாத்திமாவில் அதிசயப்படத்தக்க விதமாய் ஓர் வியாதிக்காரி ஆரோக்கியமடைந்ததைப்பற்றி ஜனங்கள் பேசிக்கொண்டிருந்தார்கள். மரிய தெ கார்மு என்பவள், வயசு 47. லெயிரியா மேற்றிராசனம், மசேயிரா பங்கைச் சேர்ந்த அர்னல் என்னும் ஊரில் பிறந்தவள். சுவக்கீம் தெ சாந்தூஸ் என்பவனின் பெண்சாதி. இவள் ஐந்து வருஷமாக ஓர் மகா கடினமான வியாதியினால் மகா பாடுபட்டு வந்தாள். காச வியாதியின் (Tuberculosis) சகல அடையாளங்களும் உண்டாயிருந்தன. 1916-ஹு முதல் இது அதிகப்பட்டு தேகமுழுதும் ஒவ்வொரு பாகத்திலும் ஓயாத நோவும், வேதனையும் உண்டாகி இன்னும் பல வியாதிகளும் உற்பத்தியாகி தொந்தரவுகளை விளைவித்ததுமன்றி அவள் உதரத்தில் ஓர் கட்டியுண்டாகியிருப்பதாகச் சந்தேகிக்கவும் இடமாயிற்று.

இதனால் இவள் உண்ணவும் உறங்கவும் சக்தியற்றவளாயினாள். ஆதலால் 1917-ஹு ஜூலை-மீ மரணத்தறுவாயில் வந்து சேர்ந்தாள். இத்தருணத்தில், மசேயிராவுக்கு 22 மைல் தூரத்திலுள்ள கோவா தெ இரியாவில், நடந்துவரும் அதிசய சம்பவங்களைப்பற்றி கேள்விப்பட்

டாள். இதனால் இவளுடைய இருதயத்தில் ஓர்வித நம்பிக்கை யுற்பத்தியாகி தனக்கவசியமான ஆரோக்கியத்தை மர்தாவிடத்தினின்று அடையத்தக்கதாக 4 தடவை கால் நடையாக நடந்து பாத்திமாவுக்குப் போவதாகப் பொருத்தனை செய்தாள். ஆகஸ்ட்-மீ 13-உ இவள் திருயாத்திரையாய்ப் போக எத்தனித்தாள். இவளுடைய புருஷன் இதைத் தடுத்துவிட்டான். "நாமோ பரம ஏழைகள், வண்டிக்கு செலவு செய்ய நம்மால் கூடியதல்ல. முழுதும் சும்மா நடந்துபோவது உன்னால் ஆகும் காரியமேயல்ல. நீ வழியில் செத்துக்கிடப்பாய். உன்னை நான் அனுப்புவது கூடிய காரியமல்ல. தயவுசெய்து பொறுமையாயிரு" என்றான். ஆனால் அவளோ போவேன் என்று சாதித்து காலையில் ஒரு மணிக்குத் தன் புருஷனையும் துணையாகக் கூட்டிக்கொண்டு புறப்பட்டாள். அநேக மணி நேரம் அப்படி அவள் மகா கஷ்டத்தோடு நடந்து, இளைத்துக் களைத்து பாத்திமாவுக்குப்போய் சேர்ந்தபோது அவளே வாயினால் சொன்னதுபோல "உச்சிமுதல் உள்ளங்கால் பரியந்தம் ஒரே வேதனை" அவளுக்குண்டாயிருந்தது. ஆயினும் சில நிமிஷங்களுக்குப் பிற்பாடு தனக்கு அதிக சுகம் கிடைத்திருப்பதையறிந்து அவள் அதிசயப்பட்டாள். ஊருக்குத் திரும்பியபோது அவளுக்கு அவ்வளவு கடினமாய் தோன்றவில்லை. போசனம் ஏதாவது புசிக்கக் கூடியதாயிருந்தது.

செப்டம்பர்-மீ 13-உ அவள் தனது இரண்டாவது திருயாத்திரையையும், செய்தாள். அது முன்னிலும் எளிதாய் தோன்றினது. அவள் சுகமும் கொஞ்சம் கொஞ்சமாய்க் கூடிக்கொண்டு வந்தது.

ஒக்டோபர்-மீ 13-உ அவள் மூன்றாவது தடவையாக திரும்பவும் போனாள். அவள் வீட்டை விட்டு வெளியே புறப்பட்டவுடனே மழை மகா பிரளயமாய்ப் பெய்யத் துடங்கினது. அவள் பாத்திமாவில் காக்ஷிகாணப்பட்ட ஸ்தலத்துக்குப் போய்ச் சேருமளவும் ஓயாமல் பெய்து கொண்டேயிருந்தது. அவள் வஸ்திரங்களெல்லாம்

னைந்து அதினின்று தண்ணீர் வடிந்துகொண்டிருந்தது. அப்படியிருந்தாலும் அவள் அங்குவந்து சேர்ந்தவுடனே நல்ல சுகத்தோடு இருப்பதாய் அறிந்தாள். நோவெல்லாம் ஓடிவிட்டது, இருமலும் நின்று போச்சுது. தன் அவயவங்களின் வீக்கம் முதலிய அவளுடைய வியாதியின் மற்றும் சகல குறிகளும் எல்லாம் ஒழிந்துபோயின. நல்ல பசியும் பெலனும் உண்டாகிவிட்டது. ஆரோக்கியம் முற்றும் பூரணமாகிவிட்டது. அதற்கு ஒரு வருஷத்துக்குப் பின்பு அவளே தன் ஜீவியகாலத்தில் ஒருபோதும் தான் இவ்வளவு சுகத்தோடு இருக்கவில்லை என்றாள்.

## சூரியனின் அதிசயத்துக்குப் பின்பு

அதே தினத்தில்:—ஒக்டோபர்-மீ 13-உ விஸ்கோந்தி தெமொந்தேலு என்பவர் பிராஞ்சீஸ்குவும் ஜசீந்தாவும் வசித்த வீட்டுக்கு அவர்களிடம் சில கேள்விகள் கேட்கும்படியாகப் போனார்.

## லூசியா

“இன்று கோவா தெ இரியாவில் தேவமாதா உங்களுக்குக் காணப்பட்டது மெய்தானா” என்று லூசியாவைக் கேட்டார்.

“ஆம்.”

“அவள் எப்போதும்போலவே உடுத்தியிருந்தாளா?”

“அதே பிரகாரமே.”

“அர்ச். சூசையப்பரும், குழந்தை சேசுநாதரும் கூட காணப்பட்டது மெய்தானா?”

“ஆம்.”

“வேறெந்த காக்ஷியும் கண்டாயா?”

“நமதாண்டவர் ஜனங்களை ஆசீர்வதிப்பதுபோல காணப்பட்டார். மாதா இரண்டு விதமாய் காணப்பட்டாள்.”

"நீ இப்படி சொல்வதின் அர்த்தமென்ன?"

"முதலாவது அவள் வியாகுலமாதாவைப்போல உடை பணிந்திருந்தாள். ஆயினும் நெஞ்சில் வாள் காணப் படவில்லை. அதன்பின்—இதை நான் எப்படி சரியாய் விவரிப்பதென்பது எனக்கு நன்ருய்த் தெரியவில்லை— ஒருவாறு உத்தரியமாதாவைப்போல இருந்தது."

"இந்தக் காக்ஷிகளையெல்லாம் நீ ஒரே நேரத்தில் கண்டாயா?"

"இல்லை. முதலாவது நான் ஜெபமாலைமாதாவையும், அர்ச். சூசையப்பரையும், குழந்தை சேசுநாதரையும் கண் டேன். அதன்பின் நமது ஆண்டவரை மாத்திரம்; அதன்பின் வியாகுலமாதாவை. கடைசியாக எனக்குத் தோன்றியபிரகாரம் கார்மேல் மாதா."

"குழந்தை சேசு நின்றுகொண்டிருந்தாரா? அல்லது அர்ச். சூசையப்பர் கரங்களிலா?"

"அர்ச். சூசையப்பர் கரங்களில்."

"அவர் பெரிய பிள்ளையா?"

"இல்லை, மெத்த மெத்த சிறிய பிள்ளை."

"அவருக்கென்ன வயசு இருக்குமென்று நீ நினைக்கி ருய்?"

"ஏறக்குறைய ஒரு வயசு."

"அவர்கள் கருவாலி மாத்தண்டையில் காணப்பட் டார்களா?"

"இல்லை. சூரியன் கிட்டே. மாதா கருவாலி மாத் தண்டையிலிருந்து மறைந்துபோனதின் பின்."

"நமதாண்டவர் நின்றுகொண்டிருந்தாரா?"

"நான் அவருடைய இடுப்பிலிருந்து மேல்வரையும் மாத்திரம் கண்டேன்."

"கருவாலி மரத்தின் மேல் அந்த காக்ஷி எவ்வளவு நேரம் இருந்தது? ஒரு ஜெபமாலை (terco தேர்கு) ஜெபிக்கக்கூடிய நேரமிருக்குமா?"

"அவ்வளவு நேரமில்லையென்று நான் நினைக்கிறேன்."

"சூரியனின் கிட்டே நீ ஆட்களைக் கண்டாயே! அவர்கள் அங்கே அதிக நேரம் நின்றார்களா?"

"இல்லை. கொஞ்சம் நேரம் தான்."

"மாதா தான் யார் என்று உனக்குச் சொன்னாளா?"

"அவள், ஜெபமாலை மாதா என்று சொன்னாள்."

"அவளுக்கு என்ன தேவை யென்று கேட்டாயா?"

"ஆம்."

"அவள் என்ன பதில் சொன்னாள்?"

"நாம் எல்லோரும் நமது ஜீவியத்தை மாற்றவேண்டுமென்றும், ஆண்டவருக்கு மனவருத்த முண்டாக்கக்கூடாதென்றும், ஏனெனில் ஏலவே அவரை மிக்க மன வேதனைப்படுத்தியிருப்பதாயும், ஜெபமாலை செய்யவேண்டுமென்றும், நமது பாவங்களுக்காகப் பொறுத்தல் கேட்கவேண்டுமென்றும் சொன்னாள்."

"இன்னம் வேறெதுவும் சொன்னாளா?"

"கோவா தெ இரியாவில் ஜனங்கள் அவளுக்கு ஒரு சிறு கோவிலை (capela) கட்டவேண்டுமென்றும் சொன்னாள்."

"இதற்குப் பணம் எங்கிருந்து வரும்?"

"கோவா தெ இரியாவில் ஜனங்கள் போட்டுப் போகும் காணிக்கையிலிருந்து எடுக்கத்தகும் என்று எனக்குத் தோன்றுது."

"யுத்தத்தில் மடிந்த நமது பட்டாளக்காரரைப்பற்றி அவள் ஏதாவது சொன்னாளா?"

"ஒன்றுமில்லை."

"சூரியனைப் பார்க்கும்படி ஜனங்களுக்குச் சொல்லும் படி அவள் உனக்குச் சொன்னாளா?"

"இல்லை."

"ஜனங்கள் தபசு செய்யவேண்டுமென்று அவள் விரும்புகிறாளா?"

"ஆம்."

"தபசு என்னும் வார்த்தையை அவள் மெய்யாக உப யோகித்தாளா?"

"இல்லை.

"ஜெபமாலை செய்யவேண்டுமென்றும், நமது ஜீவியத்தை மாற்றவேண்டுமென்றும் ஆண்டவரிடத்தில் பொறுத்தலைக் கேட்கவேண்டுமென்றும் என்னிடம் சொன்னாள். தபசு என்னும் வார்த்தையை அவள் உபயோகிக்கவே இல்லை."

"சூரியனின் புதுமை நடந்தது எப்போது? மாதா மறைந்துபோனதின் பின்னா?"

"ஆம்."

"அவள் வருவதை நீ பார்த்தாயா?"

"ஆம்."

"எங்கிருந்து?"

"கிழக்கேயிருந்து."

"அவள் போவதை நீ பார்த்தாயா?"

"ஆம்."

"எங்கே?"

"கீழ்த் திசையாய்."

"அவள் போனபோது அவள் பின்னாலே போனாளா? ஜனங்களை விட்டு திரும்பி போய்விட்டாளா?"

"திரும்பிப் போனாள்."

"போக அதிக நேரம் பிடித்ததா?"

"இல்லை. மிகவும் சொற்ப நேரம்."

"அவளைச்சுற்றி ஏதாவது பிரகாசம் இருந்ததா?"

"அவளை எப்போதும் பிரகாசம் சூழ்ந்துகொண்டிருந்தது. இந்த தடவையும் அது என் கண்களைக் கூசப் பண்ணிற்று. இருந்திருந்து நான் என் கண்களை மூட வேண்டியதாயிருந்தது."

"அவள் திரும்பவும் காணப்படுவாளென்று எண்ணுகிறாயா?"

"நான் அவளைக் காண்பேன் என்று எதிர்பார்க்கவில்லை. அதைப்பற்றி அவள் ஒன்றும் என்னிடம் சொல்லவில்லை."

"அடுத்த மாசம் 13-உ நீ கோவா தெ இரியாவுக்குப் போவாயா?"

"இல்லை சுவாமி."

"மாதா இன்னும் வேறு புதுமைகளைச் செய்வாளா? வியாதிக்காரர்களுக்கு ஆரோக்யம் கொடுப்பாளா?"

"எனக்குத் தெரியாது."

"நீ அவளிடம் ஏதாவது கேட்கவில்லையா?"

"இன்று நான் அவளைப் பார்த்து சில விண்ணப்பங்களைக் கேட்க விரும்புகிறேன் என்றேன்.

"அவள் சிலதை அளிப்பதாயும், மற்றவைகளை அளிப்பதில்லை யென்றும் சொன்னாள்."

"இதுகளை எப்போது செய்வேனென்று சொன்னாளா?"

"இல்லை."

"கோவா தெ இரியாவில் கட்டும் கோவிலுக்கு என்ன பெயரிடவேண்டுமென்று சொன்னாள்?"

"ஜெபமாலைமாதா என்று இன்று அவள் சொன்னாள்."

"சகல திசையிலிருந்தும் திரளான ஜனங்கள் இங்கே வரவேண்டுமென்று அவள் விரும்புகிருளா?"

"அதைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை."

"நீ சூரியன் அசைவதைக் கண்டாயா?"

"ஆம். அது வட்டமாய் சுழன்றுவருவதை நான் கண்டேன்."

"கருவாலி மரத்தண்டையில் நீ வேறெதுவும் கண்டாயா?"

"இல்லை. ஒன்றுமில்லை."

"மாதா மிக்க சவுந்தரியத்தோடு தோன்றியது எப்போது? இந்த தடவையா? அல்லது இதற்கு முந்தின தடவைகளிலா?"

"அவள் எப்போதும் ஒரே விதமாகவே தோன்றினுள்."

"சூரியனின் கிட்டே அவள் காணப்பட்டபோது அவள் வஸ்திரங்கள் என்ன நிறமாய் இருந்தது?"

"அவள் முக்காடு நீலம்; அவள் உடை வெள்ளை."

"அர்ச். சூசையப்பரும் குழந்தை சேசுவும் எந்த நிற உடை அணிந்திருந்தார்கள்?"

"சிவப்பு."

"காட்சிகளை ஜனங்கள் விசுவசிக்கும்படி மாதா என்ன செய்வாளென்று அவளிடம் நீ எப்போது கேட்டாய்?"

"நான் முதல்விசை கேட்டது ஜூன் மாசம் என்று நினைக்கிறேன்.

"ஆனல் இந்தக் கேள்வி, நான் அவளிடம் பல தடவையாய் கேட்டிருக்கிறேன்."

"இரகசியத்தை உன்னிடம் சொன்னது எப்போது?"

"இரண்டாவது தடவையென்று எண்ணுகிறேன்."

இதன்பின்பு, **ஜசீந்தா, பிராஞ்சீஸ்கு** சொன்ன பதில்களும் லூசியா சொன்ன சகலத்தையும் உறுதிப்படுத்தியது. மேலும் மற்ற காட்சிகளில் நேரிட்டதுபோல இரண்டு பெண்கள் மாத்திரமே மாதாவின் சத்தத்தைக் கேட்டார்கள். **பிராஞ்சீஸ்கு** அவளைப் பார்த்தது மாத்திரமே. ஆயினும் அடிக்கடி அவன் தன் கண்களை மூடவேண்டியதாயிருந்தது.

"இந்த தடவையும் நீ மாதாவைக் கண்டாயா?"

"ஆம்."

"அவளுடைய பெயரென்னவென்று சொன்னாள்?"

"ஜெபமாலை மாதா."

"அவள் என்ன உடை உடுத்தியிருந்தாள்?"

"உடுப்பு வெள்ளை. கையில் ஜெபமாலை வைத்திருந்தாள்."

"அர்ச். சூசையப்பரையும், குழந்தை சேசுவையும் கண்டாயா?"

"ஆம்."

"எங்கே அவர்களைக் கண்டாய்?"

"சூரியனின் பக்கத்திலே."

"தேவ குழந்தை பெரிதா? சின்னதா?"

"மிகவே சிறியதாய் இருந்தார்."

"அதோ! அந்த தேயேலிந்தா-தெ ஜேசேதஸ் நேவிசைப்போலிருக்குமா?" (இந்தப் பிள்ளைக்கு இரண்டு வயது. பக்கத்து வீட்டுப் பிள்ளை.)

"அவளைப்போலிருக்கும்."

"மாதா கைகளை எப்படி வைத்துக்கொண்டிருந்தாள்?"

"அவைகளைச் சேர்த்துப் பிடித்துக்கொண்டிருந்தாள்."

“நீ அவளைக் கருவாலி மரத்தின்மேல் மாத்திரம் பார்த்தாயா? சூரியனின் பக்கத்திலுமா?”

“சூரியனின் பக்கத்திலும் பார்த்தேன்.”

“அதிகமாய் பிரகாசித்தது சூரியனா? தேவமாதாவின் முகமா?”

“மாதாவின் முகம் மிகவே அதிகமாய் பிரகாசித்தது.”

“அவள் சொன்னதை நீ கேட்டாயா?”

“இல்லை.”

“இரகசியத்தை உன்னிடம் சொன்னது யார்? மாதாவா?”

“இல்லை. லூசியா.”

“நீ அதை என்னிடம் சொல்லக்கூடுமா?”

“இல்லை. சொல்லக்கூடாது.”

“நீ அதை சொல்லாததுக்கு காரணம் லூசியாளுக்கு நீ பயப்படுவதினாலேதானே? அவள் உன்னை அடிப்பாளென்று நினைக்கிறாய், அப்படித்தானே?”

“ஓ! இல்லவேயில்லை.”

“அப்படியானால் ஏன் சொல்லக்கூடாது? அது பாவமாகுமென்றா?”

“ஆம். அப்படித்தான். நான் இப்படி நினைப்பது சரியோ என்னமோ?”

“இந்த இரகசியம் உங்கள் ஆத்தும நன்மையை சம்பந்தப்பட்டதா?”

“ஆம்.”

“உங்கள் பங்கு சுவாமியாரின் ஆத்தும நன்மைக்கும் சம்பந்தப்பட்டதா?”

“எனக்குத் தெரியாது.”

"ஜனங்கள் அதை அறிந்தால் கஸ்திப்படுவார்களா?"

"ஆம்."

"மாதா எப்பக்கத்திலிருந்து வந்தாள்?"

"கிழக்கேயிருந்து."

"அதே திசையாகவே மறைந்துபோனாளா?"

"ஆம்."

"அவள் பின்னுக்கு நடந்துபோனாளா?"

"இல்லை. திரும்பிப்போனாள்."

"அவள் மெதுவாயா? சீக்கிரமாய் போனாளா?"

"மெதுவாய்."

"நாம் நடப்பதுபோல அவள் நடந்து போனாளா?"

"இல்லை. அவள் பாதங்கள் அசையாமல் வழுவிப் போய்விட்டாள்."

"அவள் அதிக அழகாய் காணப்பட்டது, உன் கருத்துப்படி, எப்போது? இன்றைக்கா? மற்ற வேளைகளிலா?"

"அவள் எப்போதும் ஒரேவித அழகாகவே இருந்தாள்."

"சூரியனின் அதிசயங்களை நீ பார்த்தாயா?"

"ஆம். அது சுற்றிச் சுற்றி சுழலுவதை நான் பார்த்தேன். அது அக்கினிச் சக்கரம்போலத் தோன்றிற்று."

"அது சம்பவித்தது மாதா போவதற்கு முன்னா? பின்னா?"

"அவள் மறைந்துபோன உடனே அது சம்பவித்தது."

"சூரியனைக் கவனித்துப் பாருங்கள் என்று கூடியிருந்த ஜனங்களுக்குச் சொன்னது அந்த மாதாவா?"

"அவள் ஒன்றும் சொல்லவில்லை. ஆனால் அவள் மறைந்துபோகுமுன் சூரியனைத் தூண்டிக் காண்பித்தாள்."

"அப்போது அந்த அதிசயம் உடனே ஆரம்பித்ததா?"

"ஆம்."

"நீ என்னென்ன நிறங்களை சூரியனில் கண்டாய்?"

"சிறந்த நிறங்கள்! நீலமும், மஞ்சளும், இன்னம் மற்றும் அநேக நிறங்களும்."

மாதா தெரிந்துகொண்ட இந்த சிறு இடைப்பிள்ளைகளின் வாக்கு மூலங்கள் எல்லோருக்கும் தெளிவாயிருக்கின்றன. அங்கு சம்பவித்தவைகளையெல்லாம், நன்ருய் விளக்கிக் காண்பிக்கின்றன. இதிலுள்ள பல சம்பவங்களை, அமைதியாய் நீண்ட நேரம் நாம் ஆராயவேண்டும். அதாவது காக்ஷிகளின் ஒன்றின்பின்ஞென்ருக நடந்த விவரங்களின் ஒற்றுமையும், அவைகளின் ஏக நோக்கமும், முடிவுமாகிய மோக்ஷத்தினின்று உலகத்திற்கு அறிவிக்கப்பட்ட அறிவிப்பும். (Message) இந்தப் பரலோக அறிவிப்பே, அதற்கு முன்னடந்த சகல சம்பவத்துக்கும் முடியும், கிரீடமுமாமே. மேலும் இவைகளை எல்லோரும் நம்பத்தக்கவிதமான ஏராளமான அத்தாக்ஷிகளும் ஒவ்வொருவர்க்குமுன் திரண்டுகிடப்பதுமன்றி தேவமாதா கடைசியாய்த் தோன்றி பிள்ளைகளிடம் விடைபெற்றுப்போகும் முன் நாஞவிதமாய்க் காணப்பட்டதையும், நாம் கவனிக்கும்போது இன்னம் அதிகமாய் உறுதிப்படுகின்றது. இதில் ஓர் விஷயத்தைப்பற்றி மாத்திரம் நாம் இங்கே சற்றே விவரிப்போம். கடைசிக் காக்ஷிவரையும், மாதா எப்போதும் ஒரே விதமாகவே காணப்பட்டாள். ஆனால் கடைசிக் காக்ஷியில், முதலாவது திருக்குடும்பத்தோடும், பின்பு வியாகுலமாதாவைப்போலவும், அதன்பின் உத்தரியமாதாவைப்போலவும் காணப்பட்டாள். இப்படி அவள் செய்ததுக்கு முதல் காரணம் என்னவெனில், அவளை நாம் பல பேரிட்டழைத்தாலும், அவள் எப்போதும் அதே **இரக்கமுள்ள தாய்** என்று சகலமான விசுவாசிகள் எல்லோரும் அறியும்படியாகவே.

சிலவேளை இதைவிட ஆழ்ந்த காரணமுமிருந்திருக்கலாம். அதாவது:—நாம் ஜெபமாலை ஜெபிக்கும்படியாக நம்மைத் தூண்டவும் அதின் இரகசியங்களில் காணும் புண்ணியங்களை நாம் அநுசரிக்கும்படி நம்மை ஏவுவதற்காயுமிருக்கலாம். ஜெபமாலையானது, சந்தோஷ இரகசியத்தில் சேசுநாதரின் அந்தரங்க ஜீவியத்தை நாம் கண்டுபாவித்து நாமும் நமது ஜீவியத்தை ஒழுங்குபண்ணும்படி நம்மைத் தூண்டுகின்றது. துக்க தேவ இரகசியத்தில் நமது பாவங்களுக்காக நாம் மனஸ்தாபப்படவும், தபசு செய்யவும் நம்மை ஏவுகின்றது. இதுவே நமது மாதாவின் வியாகுலங்களில் நின்று நாம் படிக்கவேண்டிய முக்கிய பாடம். கடைசியாய் மகிமை தேவ இரகசியங்களில் சேசுநாதரும் தேவமாதாவும் பரலோகத்தில் அநுபவிக்கும் பாக்கியத்தின் பங்கு நமக்கும் உண்டு என்னும் நம்பிக்கையானது நாம் ஆண்டவரை சிநேகிக்கவும், நரகத்தை விலக்கவும் உத்தரிக்கிற ஸ்தலத்தில் நமது ஆக்கினையைக் குறைக்கவும் பண்ணும். மாதாவுக்குள்ள பல நாமங்களைப் பார்க்கிலும், **கார்மேல் மாதா** என்னும் நாமமே இந்த நமது நம்பிக்கையை, சனிக்கிழமைக்கு உத்தரிய சபையாருக்கு வாக்களிக்கப்பட்டிருக்கும் விசேஷ பலன்களின் வழியால் அதிக ஸ்திரப்படுத்துகின்றது.

ஆதலால் மாதா காண்பித்த மூன்று விதமான காக்ஷிகளும் "மிகவும் பரிசுத்த ஜெபமாலை இராக்கினியே" என்னும் பட்டத்தின் மகிமையை நமக்கு நன்றாயும் அதிக தெளிவாயும் விரிவாயும் எண்பித்துக் காண்பிக்கின்றது.

## ஐந்தாம் அதிகாரம்

### இவ்வதிசய சம்பவங்களினுல் போர்த்துக்கால் தேசத்தில் உண்டான மன ஊக்கமும், உற்சாகமும்.

இருபத்துநாலுமணி நேரத்துக்குள்ளாக, போர்த்துக்கால் தேசத்தின் எத்திசையிலும், எவ்விடங்களிலும், வெகு தூரத்தில் உள்ளவர்களுமே பாத்திமாவில் நடந்தேறிய சம்பவங்களையும், அவை கடைசியாய் அக்டோபர்-மீ 13-ந் தேதி மகுடமுடி சூடப்பட்டு முற்றுப் பெற்றதையும் அறிந்துகொண்டனர். எண்ணிறந்த பேர்கள் காட்சியைத் தாங்களே கண்டதை அவர்கள் போய் எங்கும் விவரித்துரைத்ததினுல் மாத்திரமல்ல, அதிலும் விசேஷமாய் தினசரி பிரசுரிக்கப்பட்ட மகாபெரிய பத்திரிகைகளின் மூலமாயுமே இவ்விஷயம் எங்கும் பரவ ஏதுவாயிற்று. இதனுல் விளைந்த பலன் இவ்வளவு அவ்வளவென்று கணக்கிடத்தக்கதல்ல. உடனே சம்பவித்ததென்ன?

காக்ஷி காணப்பட்ட ஸ்தலத்தைத் தாமதமின்றி குறிப்பிட்டார்கள். அதில் ஸ்தம்பங்களை நாட்டி, ஓர் சிகரத்தைப் பூட்டி நிறுத்தினுர்கள். அதன்பின் 1919-ம் ஆண்டில் அந்த கிராமவாசிகளே அதில் ஓர் சிறிய ஏழைக் கோவிலையும் கட்டினுர்கள். அன்று முதல் கோவா-தெ-இரியா அதிகமதிகமாய் ஓர் திரு ஸ்தலமாகவும், புதிய லூர்தெனவும் திருயாத்திரை ஸ்தலமாயும் விளங்க ஆரம்பித்தது.

வாரத்தின் சாதாரண நாட்களில் தனிமையாயும் பலர் ஒன்றுய்க் கூடியும் அங்கே போவார்கள். ஞாயிற்றுக் கிழமைகளிலும் திருநாட்கள் தினங்களிலும் கூட்டம் மிக்க அதிகமாயிருக்கும். ஆனுல் மாதத்தின் 13-ம் தேதி, அதிலும் மிக்க விசேஷமாய், மே மாதத்திலும், அக்டோபர் மாதத்திலும் வரும் திருயாத்திரிகளின் தொகை ஆயிரம், பத்தாயிரம்.

அங்கே போகும்படி ஒருவரும் அவர்களைப் பலவந்தம் செய்யவில்லை. ஒன்றில் அவர்கள் போக விரும்பியதினுல் அல்லது அங்கே போகும்படி அவர்கள் மனசு தூண்டினதினுல், அல்லது அங்கே ஆதிமுதல் அர்ச். ஜெபமாலை மாதா தமது தாசர்களுக்கு ஏராளமாய் அளித்து வந்த உபகார சகாயங்களில் தாங்களும் ஓர் பங்கடைய வேண்டுமென்னும் ஆவலினுல் அல்லது தங்களுக்கு ஏலவே மாதா அளித்தருளிய நன்மை உபகாரங்களுக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்யவும் அங்கே போனுர்கள். வேறு சிலர் ஜெபமாலை மாதாவின்மேல் வைத்த பத்தியினிமித்தம் அத்திரு ஸ்தலத்துக்குப்போய் அங்கே ஜெபமாலையை ஜெபிப்பதினுலும், கீர்த்தனைகளைப் பாடுவதினுலும் தங்கள் பத்தி சிரவணத்தை சமர்ப்பிக்கவும் போனுர்கள். சில வேளைகளில் ஏதோ சற்றேற விபரீதமாய் நடந்தபோதிலும், அவர்கள் எப்போதும் ஆசாரப் பூஜிதத்தோடும் உண்மையாயுமே நடப்பார்கள். 1917-ஆ அக்டோபர்-மீ 13-ம் தேதி நடந்த ஓர் சம்பவம் அப்படிப்பட்டது.

## ஓர் பெரிய வாண வேடிக்கை

புதிதாய்க் கட்டப்பட்ட சிறிய ஜெபக்கூடத்தைச் சுற்றி அன்று 600 பேருக்கதிகமான ஜனங்கள் அதிசயப்படத்தக்க பக்தி வணக்கத்தோடு ஜெபம் செய்துகொண்டிருந்தார்கள். அங்குமிங்கும் மலையோரத்தில் திரு யாத்திரைக்காரரின் பெருங்கூட்டம் இருந்தது. அவர்களில் சிலர் மரங்களினடியில் இளைப்பாறினுர்கள், மற்றவர்கள் போஜனம் அருந்தினுர்கள்.

திடீரென ஐம்பது கெஜம் தூரத்தில் ஓர் வாணம் விடப்பட்டது. அது ஆகாயத்திலெழும்பி ஓர் பெரிய குண்டு வெடித்தாற்போல வெடித்து அதிர்ந்த சத்தம் உண்டாச்சுது. அத்தோடு நின்றுபோகாமல் ஒன்றுக்குப் பின் ஒன்ருய் 2, 3, 4 இவ்வாறு முறையே இருபத்தொன்று வேட்டுகள் மகா பலத்தோடு வெடித்து அதிர்ந்தன. சட்ட முறைப்படி 21 குண்டு போட்டு சங்கை

செய்யும் வழக்கமுமுண்டு. விஸ்கோந்தி-தெ-மொந்தேனு என்பவர் தாமே, அன்று அங்கிருந்தவர், இதைப்பற்றி வரைந்திருக்கிறதாவது :—

"என்னைச்சுற்றி அங்கு நின்ற திருயாத்திரிகள் தேவ தாயார் காக்ஷி கொடுத்தருளிய அத்திரு ஸ்தலத்தில் இப்படி நடந்ததைக்கண்டு இது மகா அனுச்சாரமல்லவா! என்று சினந்து கஸ்திப்பட்டார்கள். இதன்றியே இத் திரு ஸ்தலத்தில் எப்போதும் ஜனங்கள் அநுசரித்துவரும் அமைதிக்கும் மௌனத்துக்கும், ஜெபத் தியானத்துக்கும் இச்சம்பவம் முற்றும் மாறாகத் தோன்றினது. இந்த இடத்தில் நடந்தேறும் விஷயங்களைப்பற்றி குருப்பிரசாதி கள் எள்ளளவும் சட்டைபண்ணுமலும், கவனியாமலும் 'நாங்கள் இதில் கலந்துகொள்ள மாட்டோம்' என்று விலகி நிற்பது மிக்க கஸ்திக்குரியதல்லவா? குருக்கள் இத்தலத்தைப் பாதுகாத்தால் இவ்வித அலங்கோலே நடக்குமா! என்றார்கள். அப்போது நான் ஒரு சிறு நோட் புத்தகமும், பென்சிலும் என் கையிலெடுத்துக் கொண்டு, அப்படி அந்த வெடி குண்டுகளை யிட்ட மனித னிடம் நேரே போய் :—

உம்முடைய பெயரென்ன? சொல்லும் ஐயா என் றேன். உடனே அந்த ஏழை மனிதன் மிக்க திகில டைந்து அவன் முகம் வெளுத்துப்போயிற்று. சற்று நேரத்துக்குப்பின் அவன் புத்தி தெளிந்த பின்பு சாந்த மாய் உரைத்த மறுமொழியாவது :

'நீர் சர்க்கார் உத்தியோகஸ்தரா? நான் லைசென்ஸ் பெருமல் இக்குண்டுகளைப் போட்டதினால் என்னைப் பிடிக்க வந்திருக்கிறீரா? நல்லது உமது இஷ்டப்படி செய் யும். நான் செய்த நேர்ச்சையை நிறைவேற்றியாச் சுது. சர்க்கார் சட்டத்தை நான் மீறியதுக்காக நான் காவலில் அடைபடவும் ஆயத்தமாயிருக்கிறேன். எனக்கு இனிமேல் என்ன நேர்ந்தாலும் பரவாயில்லை' என்ருன்.

உடனே நான் அவன் மனதைத் தேற்றி, நான் அப்படி சர்க்கார் மனுஷனல்ல. அந்த 21 குண்டும் மாதா

வுக்கு மங்களமாகவும், அவளுக்குச் செய்த பொருத்தனை யைச் செலுத்துவதற்காகவும் செய்யப்பட்டதா என்பதை மாத்திரம் நான் கேட்டு அறியவந்தேனேயொழிய வேறல்ல வென்று தெளிவாய்ச் சொன்னேன்.

அப்போது அந்த நல்ல மனுஷனுக்கு மனத்திடன் உண்டாகிவிட்டது. அவன் முகம் ஆனந்தமடைந்து மலர்ந்தது. அவன் நாவு துடித்து எழும்பிநின்றது. மிக்க வீரியத்தோடு தனது நல்ல சரிதையை அவன் விவரிக்க லானான். இவன் வாண வேடிக்கை செய்து விற்கும் வியாபாரி. இவனுடைய வர்த்தக ஷாப்பு அல்லது கடை போர்த்து தெமொஸ்வுக்கு சமீபமான நகரங்களில் ஒன்றி லிருந்தது. போன ஜூன் மாதம் இவனுக்கு வயிற்றிலும் உடலிலும் மிக்க பயங்கரமான ஓர் வியாதியுண்டாயிற்று.

செய்யக்கூடிய மருந்து சிகிச்சை யெல்லாம் செய்தும் சர்வ வியர்த்தமாகிவிட்டது. இரண்டு நல்ல வைத்தியர் கள் தங்களால் கூடியதெல்லாம் செய்து வியாதியைத் தீர்க்கக்கூடாது போய்விட்டது. ஔஷதங்களினாலும், மருந்துகளினாலும் ஆரோக்கியம் அடையக்கூடுமென்னும் நம்பிக்கை முற்றும் அற்றுப்போச்சுது. தன் மக்களை நிர்ப்பாக்கியராய் விட்டுவிட்டு, தான் மரிக்க நேரிடுவது தாங்கொணு மன அங்கலாய்ப்பை ஊட்டிற்று. அப் போது அவன் துன்பப்படுவோருக்கு அடைக்கலமும் ஆதரவுமாகிய மாதாவண்டையில் மிக்க விசுவாசத்தோடு ஓடிப்போய் புதிதாய்க் காக்ஷிகள் நடந்தேறிய பாத்திமா வுக்குப் போய், அங்கே 21 சுபமங்கள வாழ்த்துக் குண்டு களை யிடுவேனென்றும், அவைகளை அதற்கென்றே விசேஷவிதமாய் செய்துகொண்டு போவேனென்றும் நேர்ச்சை செய்துகொண்டான். அவன் இந்தப் பொருத் தனையைச் செய்துகொண்டக்ஷணமே, தனக்கு சவுக்கியம் தோன்றிற்று. விரைவில் முழு ஆரோக்கியமும் ஆகிவிட் டது. ஆதலால் அவன் தன் குடும்பத்தோடு, பாத்திமா வுக்கு வந்து தேவ தாயாருக்கு நன்றியறிதலாக தனது நேர்ச்சையை செலுத்தினான்.”

பாத்திமா ஜெபமாலே மாதாவின் பக்தி மிக்க அதிசயத்துக்குரிய விதமாய் திடீரென்று எங்கும் பரவுவதற்கு இப்போது மூன்று காரணங்கள் உண்டாயின. (1) நரகக் கூளிகள் இதற்கு விரோதமாய் எழும்பி செய்ய ஆரம்பித்த யுத்தம். (2) இதே காலத்தில் தேவாதீனத்தால் ஞான அதிகாரிகள் இதைக் கவனித்து இதில் தலையிட ஆரம்பித்தது. (3) சகலத்துக்கும் மேலாக தேவ அநுக்கிரகமும் சகாயமும் நாளுக்குநாள் அதிக தெளிவாய் அடிக்கடி வெளிப்படையாய்க் காண நேரிட்டது.

## வேத விரோதிகள் செய்த யுத்தம்

"பாத்திமாவில் ஓர் நவீன மூட பக்தி தோன்றி, நாளுக்குநாள் விர்த்தியடைந்து வருகின்றது", என்று ஓர் வீண் சாக்குபோக்கைச் சொல்லிக்கொண்டு வேத விரோதிகள் அதை முளையிலேயே கிள்ளி எறிந்துவிடவேணுமென்று துள்ளி எழும்பி கங்கணங்கட்டிக்கொண்டு வெளியேறினார்கள். முந்தமுந்த நாஸ்திகச் சம்மந்தமும், சார்புமான பிரசித்தப் பத்திரிகைகளில் இவர்கள் இதற்கு விரோதமாய் நானுவித அபத்தங்களையும், அவதூறுகளையும் அச்சிட்டுப் பரிகசித்து கொக்கரித்தார்கள்.

இதோடு நில்லாமல் அக்காலத்தில் சர்க்கார் அதிகாரம் பிரிமேசன்ஸ் என்னும் நாஸ்திகர்கள் கையில் சிக்கிக் கொண்டிருந்தமையால் இதைத் துர்ப்பிரயோகஞ் செய்யத் தீர்மானித்து பலவந்தம் செய்யவும் விசுவாசிகளைத் துன்பப்படுத்தவுமே ஆரம்பித்துவிட்டனர்.

இப்படி இச்சத்துராதிகள் செய்த பல யுத்தங்களில் மிக்கப்பலமானதும் விசேஷித்ததும் 1920-ம் ஆண்டு மே-மீ 13-உ நடந்தேறிய சம்பவமே. எப்படியெனில் அன்று இவர்கள் கூட்டி சேர்த்து யுத்தம் செய்த இராணுவத்தாரின் தொகை மிகவே பெரியதாயிருந்தது. ஆகையால் அன்று அவர்களடைந்த பிரதிகூலமும் மிகவே பெரிதாயிற்று. பாத்திமாவுக்குப் போகும் சகல வண்டிகளையும் வாகனங்களையும் அங்கே போகவிடாமல் தடுத்துவிடவேணு

மென்று அந்தச் சுற்றுப் பகுதிகளிலுள்ள சகல நகராதிகாரி களுக்கும் கண்டிப்பான கட்டளையைச் சர்க்கார் அனுப்பி யிருந்தார்கள்.

மே மாதம் 13-ம் தேதி விடியற்காலமானவுடனே நினைத்த தொழிலை முடித்துவிடவேணுமென்னும் கருத் தோடு குடியரசு செய்யும் சர்க்கார் அதிகாரிகள் பிரதிநிதி கள் ஏராளமான காலாட் படைகளையும், குதிரைப் பட்டா ளத்தாரையும், ஆங்காங்கு காவல் செய்யும்படி கட்டளை யிட்டு நாலாதிசைகளிலுமிருந்து வரும் திருயாத்திரிகள் ஒருவருமே பாத்திமாவுக்குப் போகாதபடி எவ்விதத்திலும் தக்க ஏற்பாடு செய்தனர்.

ஆயினும் யாத்திரைக்காரரின் பலத்த பக்தியும் பிடிவா தமும், சகலத்தையும் ஜெயங்கொண்டுவிட்டது. பட்டாளத் தார் வண்டிகளைத் தடுத்தவுடனே அவர்கள் வண்டியைவிட்டு கீழே இறங்கி கால்நடையாய் எல்லோரும் நடந்து, ஒரே வரிசையாய் நின்று தங்களைத் தடுத்த பட்டாளக்காரரின் தடையைப் பலவந்தமாய் அப்புறம் தள்ளிவிட்டுப் போனார் கள். இதுவுமன்றி இந்த நிர்ப்பாக்கிய வேலையைத் தங்கள் கடமையினிமித்தம் செய்த அந்த இராணுவத்தாரும் நல்ல ஜனங்களாயிருந்தமையால் தாங்கள் இப்படி அன்று பிரதி கூலம் அடைந்ததைப்பற்றி கஸ்திப்படாமல் சந்தோஷப் பட்டார்கள். அத்தனை ஜனங்களை எதிர்த்து மல்யுத்தம் செய்வது தங்களால் கூடியதல்லவென்றும் ஒத்துக்கொண் டார்கள். அதன்பின் இவர்களும் தங்கள் தங்கள் மேல் அதிகாரிகளின் அநுமதி பெற்றுக்கொண்டு யாத்திரைக்கார ரோடு பாத்திமாவுக்குப்போய் ஜெபம் செய்தார்கள்.

அன்றுதானே அதே இடத்தில் இவர்களில் ஒருவன் பாத்திமாவின் சரித்தையாசிரியராகிய விஸ்கோந்தி-தெ-மொந்தேலு என்பவருடன் கஸ்தியுடன் பின்வருமாறு உரைத்தான்:—

"இங்கே இந்த வேலையைச் செய்ததுக்காக நான் இங்கே நிற்க கடமைப்பட்டிருப்பதால் எனக்கு எவ்வ ளவோ வெறுப்பும், கசப்புமாயிருக்கிறதென்பதை நீங்கள்



வேத விரோதிகள் சிறு கோவிலை
அதிர்வெடி வைத்து அழித்தபின்
தோற்றம்.

அறியக்கூடியதேயல்ல. நீங்கள் அறிந்தால் எனக்கு மன ஆறுதலாயிருக்கும். என்ன செய்வேன்" என்ருன்.

"கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நிற்கின்றேன். ஆ! இது எனக்கு முற்றும் வெறுப்பாய் இருக்கின்றது. நான் ஒரு நல்ல கத்தோலிக்கன். இந்த ஏழை ஜனங்கள் அங்கேபோய் ஜெபம் பண்ணுவதைத் தடுப்பதினுல் என்ன நன்மை உண்டாகுமென்பதே எனக்கு விளங்கவில்லை. இந்தக் கண்காக்ஷியே ஒருவன் தாரைதாரையாய் கண்ணீர் சிந்தப்போதும்" கடைசியாய் இந்த நல்ல மனிதன் கண்ணீர் சிந்திக்கொண்டு சொல்லி முடித்ததாவது :—

"இந்த மாதா என் சகோதரி ஒருத்தியின் உயிரையும், காப்பாற்றக் கிருபை கூர்ந்தாள்" என்ருன்.

இன்று அநேகமாயிரம் திருயாத்திரிகள் கோவா தெ இரியாவுக்குப் போய்த்திரும்பி வீட்டுக்குப்போகும்போது சர்க்கார் செய்யும் இக்கொடிய செயலைக் கண்ணுற்று சும்மாயிராமல் எல்லோரும் ஒன்றுகூடி எப்படியும் இதற்கு எதிர்த்து வேலை செய்யவேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டுபோயினர்.

இது இப்படியாயினும் இன்று நடந்த இச்சம்பவத்தால் வேத விரோதிகள் வெறிகொண்டவர்களைப் போலானுர்கள். இதற்கென்ன செய்வோமென்று யோசித்து, கடைசியாய் 1922-ம் வருடம் மார்ச்-மீ 6-உ இரவில், (Dynamite) டைஞமையிற் என்னும் மிகப் பலமான அதிர்வெடி மருந்தை இரகசியமாய் புதைத்து வைத்து அந்தச் சிறு கோவில் வெடித்து இடிந்து விழப் பண்ணினுர்கள். இதிலுமே ஓர் விசேஷ சம்பவம் நேரிட்டது. அது மாதாவின் அநுக்கிரகத்தின் அடையாளமென்று எல்லோரும் உணர்ந்துகொண்டார்கள். அதாவது அவர்கள் வைத்திருந்த ஐந்து (bombs) வெடிகுண்டுகளில் நாலு வெடித்தன. ஒன்று வெடிக்கவேயில்லை. அது எதுவென்ருல் மாதா காக்ஷி கொடுத்த மரத்தின் வேர்களின் அடியில் புதைத்து வைக்கப்பட்டதுவே.

போர்த்துக்கால் ராஜ்ஜியம் எங்குமே இந்த அனாச்சார தேவ துரோகச் செய்கையின் சேதி உடனே பரவினது. பத்திரிகைகள் எல்லாம் இச் சமாச்சாரத்தைப் பிரசுரித்து வெளியிட்டதுமன்றி ஒரே வாக்காய் இது தகாத செய்கையென்று துவேஷித்துக் காண்பித்தது. நாடெங்கும் கூக்குரல் எழும்பினது. எல்லோரும் இது அடாத கிரியையென்று எதிர்த்துப் பேசினர். பார்லிமென்றிலுமே இதைப்பற்றி கூக்குரல் உண்டானது. அரசியல் மந்திரிகள் பிரதானிகள் முன்னிலும் அதிக கடினமாகவே இவ்விஷயத்தில் நடைபடி செய்ய முயன்றார்கள். ஆயினும் கடந்த அனாச்சாரத்துக்கும் தேவ துரோகத்துக்கும் தக்க பரிகாரம் செய்யும் கருத்தோடு பற்பல திருயாத்திரைக் கூட்டங்கள் திரண்டு போய்க்கொண்டிருந்தார்கள். ஒரு வாரத்திற்குள் அதே மாசத்தின் 13-ம் தேதி பாத்திமா பங்கு விசாரணைக் குருவானவர் செய்த ஒரு பிரசங்கத்துக்குப் பின்னர் 10000 ஜனங்கள் கூடிய ஒரு பரிகாரத் திருயாத்திரைக் கூட்டம் அங்கே சென்று இடிந்து கிடந்த அச்சிறு ஆலயத்தில் ஓர் மிக்க பிரசித்தப் பொதுப் பரிகாரத்தை பத்தியோடு செய்து முடித்தனர்.

இதுவும் போதுமானதாய் எண்ணப்படவில்லை. ஆதலால் போர்த்துகேஸிய தேசத்து ஜாதி ஜனங்கள் சகலர் பேராலும் ஓர் பொது நிந்தைப்பரிகாரம் செய்ய வேண்டியது அவசியமெனக் கருதினார்கள். இது அதற்கடுத்த மே-மாதம் 13-ந்தேதி நடைபெற்றது. இதையுமே சில விரோதிகள் தடுக்க முயன்றார்கள். இவ்வித கொண்டாட்டத்தைத் தடுப்பது அவசியமென்று அந்த மாகாணத்தின் சிவில் கவர்னர் அல்லது கலெக்டர் என்பவர் சுய புத்திக்குத் தோன்றினது. பாத்திமாவுக்கு சமீபமாயுள்ள சுற்றுக்கிராமங்களிலுள்ள குழப்பக்காரரின் குழப்படி இது என்று இவருக்கு மனதில்பட்டது. ஆயினும் பாத்திமா, வில்லாநோவா-தெ ஒரேம் என்னும் தாலுக்காவைச் சேர்ந்தது. ஆதலால் வில்லாநோவா-தெ ஒரேமின் அதிகாரி வேறுவிதமாய் நினைத்தார். சிவில் கவர்னர் தமக்கு நேரே மேலதிகாரியாயிருந்தபோதிலும்,

இந்த அவர் கட்டளையை அநுசரியாதிருப்பது நலமென்று இவருக்குப் புலப்பட்டது. கடைசியாய் அரசாங்கத்தின் தேசாதிபதியாகிய பிரஸிடென்ட்டுமே மேற்சொன்ன சிவில் கவர்னரின் செய்கையை அங்கீகரிக்காமல் தள்ளிவிட்டார். ஆகையால் இப்பொது ஜனசமூக பரிகார திருயாத்திரையில் 60000 பேர்கள் வந்ததாக உத்தேசமாய் எண்ணப்பட்டது. ஒவ்வொரு மாகாணத்தவரும் போர்த்துக்கால் ராஜ்யத்தின் நாநாவித உத்தியோகத்தில் உள்ள ஒவ்வொரு வகுப்பினரும் திரளானபோர்களைத் தங்கள் பிரதிநிதிகளாக அனுப்பினார்கள். இவர்கள் காண்பித்த பக்தியும் வணக்க ஆசாரமும் வியக்கத்தக்கதாயிருந்தது. ஆயினும் அர்ச். ஜெபமாலை மாதாவின் விருப்பப்பிரகாரம் கட்டப்பட்ட அந்த சிறு கோவில் இடிந்துகிடப்பதை அவர்கள் கண்டவுடனே அவர்களுடைய பக்தி வைராக்கியம் அக்கினியைப்போல அதிகமாய் பற்றியெழும்பி அதிகரித்தது. அன்றுதினத்தில் அவர்கள் மனத்தாராளமாய் தங்கள் காணிக்கைகளை கொடுத்ததினால் ஞான அதிகாரிகள் உத்தாரம் அளித்தவுடனே வேறொரு புதிய கோவில் உடனே கட்டப்பட்டது.

இவ்விதமாய் இத்தலத்தைக்குறித்து இதன்முன் உண்டாயிருந்த பகையும், விரோதமும், செய்த அனாசாரங்களும் அக்கிரமங்களும் பாத்திமாவின் பெயரையும், கீர்த்தியையும் மென்மேலும் அதிகப்படுத்த உதவியாயிருந்து, பத்திரிகைகள் தூற்றிய அவதூறுகளனைத்தும் அழிந்து மங்கிப்போயிற்று. இப்படிப்பட்ட கொடிய அவதூறுகளில் ஒன்று இது: காக்ஷி கண்டதாக சொல்லிய சிறு பிள்ளைகளுக்கு இந்தக் கட்டுக்கதையாகிய நாடகத்தை யாரோ சிலர் கற்றுக்கொடுத்து வைத்ததாகவும் இந்த ஆட்கள் அந்தரங்க கருத்தோடும், சூட்சத்தோடும், இதைக் கற்றுக்கொடுத்ததாயும், கடைசியாய் இந்த தந்திரக்காரர் தங்களுடைய சூட்சம் வெளியாகப்போகிறது, பிள்ளைகள் தங்களை இதுவரையும் ஏமாற்றி இப்படிப் படிப்பித்துவைத்தார்களென்று சொல்லிவிடும் ஆபத்து அடுத்துவரப் போகிறதென அஞ்சி அந்தப் பிள்ளைகளுமே மறைந்து போகும்படி செய்துவிட்டார்கள், என்னும் கதையும்

உண்டாயிற்று. இது சுத்த அபத்தம். வருஷம் மூன்று அல்லது நான்கு கடந்துபோகும் முன்னமே காக்ஷி காணப் பட்ட இடத்தில் நின்று இரண்டு பிள்ளைகள் மறைந்து போனது மெய்தான். ஆயினும் இது இரகசியமாயும் அந்தரங்கமான ஓர் மார்க்கமாயுமாயல்ல. அந்தப் பிள்ளை களைக் காணவும் பேசவும் காக்ஷிகளைப்பற்றிக் கேட்கவும் சகலத்தையும் விரிவாய் கேட்டறியவும் ஜனங்களுக்கு வேண்டிய காலம் எவ்வளவோ இருந்தது. இப்படி அப்பிள்ளைகளிடம் போனவர்கள் ஒவ்வொருவரும் அவர் களிடம் சம்பாஷித்தபின்பு, அவர்கள் எதார்த்தத்தைப் பேசுகிறார்கள் என்பதைப்பற்றி சந்தேகப்பட இடமே யில்லை, என ஒரே வாக்காய் உரைத்தார்கள்.

தேவமாதா அந்தப் பிள்ளைகளிடம் அவர்களும், அவர் களுடைய பந்துக்களுமே தீவிரமாய் மரணமடைவதாக அறிவித்திருந்ததாக அநேக ஜனங்கள் விசுவசித்தார்கள். இந்த விசுவாசத்துக்குப் போதுமான காரணம் இருந்ததோ இல்லையோ என்பதை நாம் ஆராயவேண்டியதில்லை. ஆயி னும் பிராஞ்சீஸ்குவும், அவன் சகோதரி ஜசிந்தாவும் அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த பலரும் காக்ஷி காணப் பட்ட மூன்றாவது வருட விழாவுக்கு முன்னமே மரண மடைந்தது வாஸ்தவமே.

---

## ஆறாம் அதிகாரம்

### மூன்று பிள்ளைகளின் கதி

#### பிராஞ்சீஸ்குவின் மரணம்

1918-ம் வருஷம் டிஸெம்பர் மாதம் 23-ந் தேதி பிராஞ்சீஸ்குவுக்கு இன்புளூயென்ஸா என்னும் விஷக் காய்ச்சல் கண்டு கடின வியாதியாயிருந்தான். ஐரோப்பா முழுதுமே அக்காலத்தில் இந்தக் கொடிய நோய் பெருங் கொள்ளைகொண்டது. இரண்டு வாரம் படுக்கையாய்க் கிடந்தபின் அவன் எழும்பியிருக்கக் கூடுமாயிருந்தபோதி

லும் நாளுக்குநாள் மிக்கப் பலவீனமடைந்தான். காக்ஷி காணப்பட்ட காலத்தில் லூசியா மாதாவைப் பார்த்து, பிராஞ்சீஸ்குவும் மோட்சத்துக்குப் போவானுயென்று கேட்டதும் அதற்குப் பதிலாக ஆம் அவனும் போவான். ஆயினும் அதற்கு முன் அவன் அநேகம்விசை ஜெபமாலை* ஜெபிக்கவேண்டுமென்று மாதா சொன்னதும் உங்களுக்கு நினைவிருக்குமே. அந்தக் காலமுதல் பிராஞ்சீஸ்கு பரலோக இராக்கினிக்கு இந்த வணக்கத்தை சமர்ப்பிக்க ஒருநாளும் தவறிப்போகவில்லை. ஆனால் இப்போது அவன் மிகவே பலவீனப்பட்டிருந்ததினால் ஒரு ஜெபமாலையை முழுதும் ஜெபிப்பதற்கு தனக்கு சக்தியில்லாதிருப்பதினிமித்தம் பாதி ஜெபமாலையையாகிலும் தன்னால் செய்யக்கூடுமாயில்லையே யென்பதை மிகக் கஸ்தியோடு தன் நேசத்தாய்க்கு அறிவித்தான். அவளை இதுவிஷயத்தில் ஆறுதல்படுத்தும்படி தன்னால் இயன்றதெல்லாம் செய்தாள். இப்புண்ணியவதி அவனைப்பார்த்து அவன் உரத்த சத்தமாய் வார்த்தைகளை உச்சரிக்கக்கூடாதிருந்தால், தன் மனதில் அதை ஜெபிக்கலாம், மாதாவுக்கு இதுவும் ஜெபத்தைப்போலவே திருப்தியை யுண்டாக்கும் என்றாள். இந்தப் பையன் பலமுறை தன் தாயைப்பார்த்து மாதா படிப்பித்த சிறு ஜெபத்தை விட்டுவிடவேண்டாமென்று சொல்லுவான். இவனுமே அந்த ஜெபத்தை எப்போதும் ஜெபிப்பான். அவன் தாய் தான் இதை அடிக்கடி மறந்துபோவதாய் சொன்னபோது, அவள் தன் தாய் வீட்டில் அங்குமிங்கும் போகும்போது அதை அவள் செய்யும்படி நினைப்பூட்டுவான். வேறு சில வேளைகளில் ஜெபமாலை ஜெபத்தை தன்னிலும் அதிக பாக்கியவான்களாகிய வேறு சிலர் செய்ததுபோல தக்க பக்தியோடு செய்யத் தனக்குக் கூடவில்லையேயென்று வெகுவாய் கஸ்திப்படுவதாகச் சொல்வான். இது அவனுக்கு மெய்யாகவே கவலையிலும் பெருங்கவலையாயிருந்தது.

அவனுடைய சரீர சுக நிலைமை குன்றியிருந்தபோதிலும் இருந்திருந்து கொஞ்சநேரம் உலாவும்படி போவான்.

---

* Terco = தேர்சு = மூன்றில் ஒரு பாகம்.

சிலவேளைகளில் கோவ-தெ-இரியா வரையிலும் பிரயாசைப்பட்டு நடந்தே போய்விடுவான். யாராவது சிலவேளை அவனைப்பார்த்து அவன் சுகமாய்ப் போவானென்று சொல்லக் கேட்டால் அதிசயத்துக்குரிய ஓர்விதப் பார்வையோடும், மிக ஊர்ச்சிதமான ஓர்வித சப்தத்தோடும் "இல்லை" என்பான். ஓர்நாள் இவனுடைய ஞானத்தாயார் இவனுக்கு முன்பாக அவன் கேட்கும்படியாகவே அவன் சொஸ்தமடைந்தால் அவனுடைய நிறை அளவு கோதுமையை, மாதாவுக்குக் காணிக்கை செலுத்துவதாக பொருத்தனை செய்தாள். இதை யவன் கேட்டு அந்த நேர்ச்சை முற்றும் வீண் என்றும், அவர்கள் விரும்பும் சகாயத்தை யடையமாட்டார்களென்றும் சொன்னான்.

அவனுடைய வயது கொஞ்சமாயும், அவன் படிப்பு அற்பமாய்மாத்திரம் இருந்தபோதிலும், அவன் மிகவும் நுட்பமான மனசாட்சியை விசேஷவிதமாய் உடையவனாயிருந்தான். அவன் ஆடுகள் மேய்க்கும் காலத்தில் ஒருநாள் அவனைப் பார்த்து "உன் ஞானத்தாயாரின் தோட்டத்தில் வேலியோரத்தில் நீ உன் ஆடுகளைக் கொண்டு போய் மேய்க்கலாமே. அவள் அதற்கு ஒருபோதும் ஆட்சேபனை செய்யமாட்டாள்" என்று சொன்னபோது அது திருட்டாயிருக்குமென்று பயந்து செய்ய மாட்டேன் என்றான். அவள் நேரே தெளிவாய் உத்தரவு கொடுத்த பின்புமாத்திரம் செய்தான்.

இதனிடையில் ஏப்ரல் மாதம் 2-ந் தேதி ஆனது. பையன் சுகப்படக் காணாததால் அவனைப் படுக்கவைத்து, பங்குசுவாமியாரைக் கூப்பிடவிட்டார்கள். அதுவரையும் அந்த பையன் புதுநன்மை வாங்கவில்லை யாதலால் சாகுமுன் தான் கர்த்தரைப் பெற வசதி கிடைக்குமோ என்று அஞ்சியிருந்தான். ஆதலால் மறுநாள் காலையில் அவஸ்தை நன்மை (Viaticum) கொண்டுவருவதாக குருவானவர் சொன்னவுடனே அவனுக்கு ஆனந்த சந்தோஷம் உண்டாயிற்று. அவன் நான் உபவாசமாய் இருப்பேனென்று சொல்லிக்கொண்டு கட்டாயமாய் உப

வாசமாயிருந்தான். குருவானவர் தேவநற்கருணையுடன் வந்தபோது இன்னும் அதிக பூஜித வணக்கத்தோடு நன்மை வாங்கத்தக்கதாக இன்னும் ஓர்முறை பாவசங்கீர்த்தனம் பண்ணுவதற்காக படுக்கையில் எழுந்து உட்கார விரும்பினான். அவன் மிகவும் பலவீனமாயிருந்தபடியால் அப்படி உட்கார இடம் கொடுக்கவில்லை. அவன் புது நன்மை வாங்கின பிற்பாடு அவனுடைய முகம் மகா சந்தோஷம் நிறைந்து ஜொலித்தது.

சாயுங்காலம் அவன் வியாதி அதிகப்படுவதாய் காணப்பட்டது. ஆயினும் அவன் தனக்கு அதிக வேதனை உண்டாயிருப்பதாக முறைப்படவில்லை. ஏப்ரல் மாதம் 5-ந் தேதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு மரண அவஸ்தைப் படாமலும், ஒருவித முறைப்பாடில்லாமலும் முகத்தில் மதுரமான புன்னகையுடனும் பிராஞ்சீஸ்கு மரித்தான். இன்னும் அவனுடைய வயசு 11 ஆகவில்லை. அவன் பிறந்தது ஜூன் மாதம் 9-ந் தேதி 1908-ம் வருஷம். கடைசியாய் அவன் பேசினது தன் ஞானத்தாயுடன். மரிக்கும் சில நிமிஷங்களுக்கு முன் அவள் அவன் கிட்டே போன போது அவன் தன்னை ஆசீர்வதிக்கும்படியும், அவன் எப்போதாவது அவளுக்குச் செய்திருக்கக்கூடிய சகல குற்றங்களைப் பொறுத்துக்கொள்ளும்படியும் மன்றாடினான். அவனுடைய சரீரம் பாத்திமா பங்கு கோவில் கல்லறையில் அடக்கம் பண்ணப்பட்டது.

### ஜசீந்தாளின் மரணம்

ஜசிந்தாளும், தன் தகப்பன் ஒருவர் நீங்கலாக தனது மற்றும் சகல பந்துக்களைப்போலவே இன்ப்ளூயென்ஸா என்னும் விஷக்காய்ச்சலுக் கிரையானாள். இந்த விஷசுரத்தோடு (Purulent pleuritis) என்னும் வேறு வியாதிகளின் தொந்தரவுகளும் உண்டாயிருந்து 1919-ம் வருஷம் இதற்காக வில்லாநோவா-தெ ஒரேம் என்னும் ஊர் ஆஸ்பத்திரியில் வைத்து மருந்து கொடுத்துப் பார்த்தார்கள். பிரயோசனப்படவில்லை. ஆதலால் அவளுடைய

வீட்டுக்குக் கொண்டுபோனார்கள். சிற்சில வியாதியில் மிக்க அநுபோக கீர்த்திபெற்ற ஓர் வைத்தியர் பாத்திமாவுக்கு வந்திருந்தபோது இவளைப் போய்ப் பார்த்து அவளை லிஸ்போன் நகரத்துக்கு கொண்டுபோய் அவளுக்குத் தான் ஓர் (ஆப்பரேஷன்) சிகிச்சை செய்வதால் அவளுடைய உயிரைக் காப்பாற்றக்கூடுமென்னும் நம்பிக்கையோடு அங்கே கொண்டுபோக ஏற்பாடும் செய்தார்.

அவளை ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோகுமுன் பக்தியுள்ள ஓர் புண்ணியவதி,—அதிகமில்லாவிடினும் கொஞ்சம் திரவியமுடையவள்—அவளைத் தன் வீட்டில் வைத்துப் பார்ப்பதாகச் சம்மதித்தாள். அந்தத் தேச வழக்கப் பிரகாரம் இந்தம்மாளை, ஜசிந்தாள் ஞானத்தாய் என அழைப்பாள். இந்த வீட்டிலிருக்கையில் இந்தப் பிள்ளை, தேவமாதா தனக்குக் காணப்பட்டதாகவும், தான் செத்துப்போவது நிச்சயமென்று மாதா உறுதியாய்ச் சொன்னதாகவும், ஆதலினால் அந்த ஆப்பரேஷன் தனக்குச் செய்வது அனுவசியமென்று தான் எண்ணுவதாயும் சொன்னாள். அப்படி அவளுக்கு அப்பிரியமாயிருந்தபோதிலும் ஆப்பரேஷன் செய்தார்கள். அது முற்றும் நன்மையானதுபோலவே தோன்றினது. ஆனால் அதன்பின் அதையொட்டி சில கேடுகள் உற்பத்தியாயின.

கொஞ்சநாளைக்குள் அவள் அதிக வியாதிப்பட்டு தன் வருத்தங்களைப்பற்றி சற்றே முறையிட்டாள். அப்போது அவளுடைய புதிய ஞானத்தாய் * அவளை நோக்கி, அந்த வருத்தங்களைப் பொறுமையோடு அநுபவித்தால் ஆண்டவருக்கு அதனால் மிக்க சந்தோஷமுண்டாகுமென்று அவளுக்குப் புத்தி சொன்னாள்.

அவள் மரிப்பதற்கு மூன்று நாளைக்கு முன் இந்தப் புண்ணியவதியைப் பார்த்து அந்தப்பிள்ளை சொன்னதாவது: "எனது ஞானத்தாயாரே! நான் சொல்லுவதைச் சற்றே கேளுங்கள். இனிமேல் நான் அழமாட்டேன்; தேவமாதா எனக்குக் காணப்பட்டு அவள் சீக்கிரம் வந்து

* Madrinha.

என்னைக் கொண்டுபோவதாயும் இதுமுதல் எனக்கு இந்த நோவு வருத்தம் உண்டாகாதபடி செய்வாளென்றும் எனக் கறிவித்தாள்" என்றாள். மெய்யாகவே அந்த மணி நேர முதல் அவள் யாதொரு முறைப்பாடும் செய்யவேயில்லை. அவள் முகத்திலும் கஸ்தி வருத்தத்தின் குறியொன்றும் காணப்படவில்லை. அவளுடைய ஞானத்தாயார் அவளு டைய படுக்கையண்டையில் உட்காரும்போது அல்லது அவள் ஜசிந்தா தேவமாதாவைக் கண்டதாகச் சொல்லும் இடத்திற்குச் சமீபமாய்ப் போகும்போது ஜசிந்தா கூச்ச லிட்டு, "ஞானத்தாயாரே, நீங்கள் தயவுசெய்து அந்த இடத்தில் நின்று விலகுங்கள்! அங்கேதான் மாதா வந்து நின்றாள்" என்பாள். இப்படியே நர்ஸ் முதலிய யாரா வது அந்த இடத்தின் கிட்டே போனால் அப்படியே ஜசிந்தா சொல்லுவாள்.

தன்னைபாவது வேறே வியாதிக்காரரையாவது பார்க்க வந்த சிலர் அடக்க ஒடுக்கமின்றி வஸ்திரங்களை யணிந் திருப்பதைக் கண்டு கஸ்திப்படுவாள். அப்படியே அங் குள்ள சில நர்ஸ்களின் உடையில் மிதமிஞ்சிய வீண் சிலாக் கியத்தையும் கண்டு கவலைப்பட்டாள். இவர்கள் அடக்க ஒடுக்கத்துக்கு குறைவான வஸ்திரங்களை யணிந்துகொண்டு திரிவதைப்பார்த்து "இதனால் இவர்களுக்கு என்ன பிரயோ ஜனம்? நித்யம் என்பது இன்னதென்று இவர்கள் அறிந் தால் எவ்வளவோ நலம்" என்பாள். சில டாக்டர்கள் (வைத்தியர்கள்) அவிசுவாசிகளாயிருப்பதை யறிந்து அவள் அவர்களைப்பற்றி மகா கவலைப்பட்டுச் சொன்னதாவது: "ஆ! அற்ப, நிர்ப்பாக்கிய மனிதர்! தங்களுக்கென்ன சம்பவிக்கப்போகிறதென்பதை இவர்கள் அறியார்கள்" என்பாள்.

இது தவிர அநேக ஆத்துமாக்களை நரகத்துக்குக் கொண்டுபோய்சேர்ப்பது மோகபாவமென்று தேவமாதா தனக்கு அறிவித்ததாயும் ஜனங்கள் செல்வத்திலும் டம் பாச்சாரித்தனத்திலும் ஜீவிப்பதை நீக்கவேண்டும் என் றும், இதுவரையும் அவர்கள் செய்துவந்த பிரகாரம் பிடி வாதமாய் பாவத்தைச் செய்துகொண்டு வரக்கூடாதென்

றும், தீவிரம் இவர்கள் தபசுபண்ணவேண்டுமென்றும் சொல்வாள். இவைகளை மாதா அறிவிக்கும்போது மகா கஸ்தியோடு அறிவித்ததாயும் சொன்னாள். "ஐயோ! தேவமாதாவைப்பற்றி நான் மிகக் கஸ்திப்படுகிறேன். நான் அவளை நினைக்கும்பொழுது மகா கஸ்தி எனக்குண்டாகிறது," என்று இந்தப் பிள்ளை சொல்லிற்று.

இந்த ஞானத்தாய் வீட்டில் வேறொரு சிறுபிள்ளையும் இருந்தது. ஜசிந்தா அவளைப்பார்த்து, கீழ்ப்படிந்து நடக்கவும் கஷ்டப்பட்டு வேலைசெய்யவும், உண்மையாய் நடக்கவும் புத்தி சொன்னாள். இவள் சாகிறதற்கு கொஞ்சத்துக்குமுன் தன் தாயை அவள் திரும்பவும் பார்க்க விரும்புகிறாளா என்று கேட்டபோது, தன் குடும்பத்தார் தனக்குப் பின் அதிக காலம் உயிரோடிருக்கமாட்டார்களென்றும், சீக்கிரம் அவர்களெல்லோரும் மோக்ஷராஜ்யத்தில் சந்திப்பதாயும் பதிலுரைத்தாள். மேலும் தேவமாதா திரும்பவும் காணப்படுவாள் என்றும், ஆனால் தான் அவளைக் காண்பதில்லையென்றும், மாதா கற்பித்தபிரகாரம் அதற்குமுன் தான் மரிப்பதாயும் சொன்னாள். அவள் ஆஸ்பத்திரிக்குப் போகுமுன், தேவத்திரவிய அநுமானங்களைப் பெறுதிருந்தபோதிலும், பாவசங்கீர்த்தனம் செய்ய விரும்புவதாய் கேட்டாள். அப்படியே பாவசங்கீர்த்தனம் செய்தாள். மறுபடியும் தேவநற்கருணை வாங்குமுன் மரணத்தையடைந்தாள். அன்று பெப்ரவரி மாதம் 20-உ 1920. ஜசிந்தாளுக்கு வயது பத்து.

சில புண்ணிய புருஷர்கள் ஓர் தர்மத் தண்டல் செய்து அதைக்கொண்டு அவளுடைய சரீரத்தைப் பாத்திமாவுக்குக் கொண்டுபோய், அவளுடைய சகோதரன் பக்கத்தில் அவளை யடக்கியிருக்கிறது.

### லூசியா கன்னியாஸ்திரி ஆகுதல்

1917-ம் வூ மே-மீ 13-ம் தேதி கோவா தெ இரியாவில் ஆடு மேய்த்துக்கொண்டிருந்த மூன்று சிறுவரில் மாதாவின் இரகசியங்களை விசேஷமாய் அறியப்பெற்றவள்

மாத்திரமே 1929-ம் ஆடு மே-மீ இன்னும் உயிரோடிருந்தாள். இவளை சில காலமாக காட்சி கண்ட அதே ஸ்தலத்திலேயே காணக்கூடுமாயிருந்தது. எப்போதும் சாதாரண உடையுடனும், அடக்க ஒடுக்கத்தோடும் காணப்படுவாள். கூட்டத்தோடு சேர்ந்து ஜெபமாலையைச் சந்தோஷத்தோடு ஜெபிப்பாள்.

ஓர் நாள் அவளுமே தான் பிறந்த ஊரிலிருந்து காணமற்போனுள். இது மகா ஆச்சரியத்தை உண்டாக்கினது. இஷ்டர்கள் துஷ்டர்கள் எல்லோரும் இதைப்பற்றி பேச ஆரம்பித்தார்கள். இச்சந்தர்ப்பத்தில் முன் சொல்லப்பட்ட வில்லாநொவா-தெ ஒரேம் என்னும் நகரின் தலைவரே ஊக்கத்தோடு வெளிவந்து, அவளுடைய தாயாரைக் கூப்பிட்டு அதைப்பற்றி விசாரித்தார். அவள் தாய் வழக்கம்போல திட சித்தத்தோடு "என் மகள், அவளும் நானும் விரும்புகிற இடத்தில் இருக்கிருள்" என்ருள். நகர் அதிகாரி வேறொரு கேள்வியும் கேட்க விரும்பாமல் அவளைச் சமாதானத்தோடு போகும்படி விடையளித்தான். வாஸ்தவத்தில் அப்பெண் ஒப்போர்த்தோவில் விலார் மடம் என்னும் கத்தோலிக்க கலாசாலையில் உட்பட்டிருந்தாள். அங்கிருக்கையில்தான் துறவற அந்தஸ்துக்கழைக்கப்படும் தேவ சித்தத்தை அறிந்து, தான் இவ்வழைப்பிற்கு கீழ்ப்படியும்படி அப்போது அவள் தன் சுயதேசத்தை விட்டுப்போவது அவசியமாயிருந்தது. ஏனெனில் 1910-க்குப்பின், சந்நியாசிகள் கன்னியாஸ்திரிகள் போர்த்துக்கால் ராஜ்ஜியத்தின் சொந்த குடிவாசிகளாய் வசிக்கும் சுதந்தரமற்றுப்போனுர்கள்.

அவள் துயி (Tui) என்னும் ஊருக்குப் போனுள். இது ஓர் பூர்வீக இஸ்பாஞ்ஞ நகர். மீஞ்ஞு (Minho) என்னும் நதியின் வலது புறத்தின் ஓரத்தில் இருக்கிறது. இந்த ஆறு போர்த்துக்கால் ராஜ்ஜியத்தின் வட எல்லை ஓரமாய் ஓடி அதை இஸ்பாஞ்ஞாவில் நின்று பிரித்துவிடுகிறது. அந்த துயி என்னும் நகரில் அர்ச். தொரெத்தெ அம்மாள் சபையைச் சேர்ந்த சில போர்த்துக்கேசிய கன்

னியர்கள் தாங்கள் போர்த்துக்காலில் நின்று துரத்தப் பட்ட பின்பு அந்த ஊரில் ஸ்தாபித்த நவகன்னியாஸ்திரிக ளின் ஆயத்த மடத்தில் லூசியா சேர்ந்தாள். சேர்ந்து மரிய லூசியா தஸ்தோரிஸ் (வியாகுலமாதாவின் லூசியாள்) என்னும் பெயரைத் தரித்துக்கொண்டாள். அந்த மடத் தில் அவள் சாதாரண வீட்டு வேலை செய்யும்படி நியமிக்கப் பட்டாள். அங்கே ஆரம்பமுதல் ஆழ்ந்த தாழ்மையிலும், தன் சபை ஒழுங்குகளைப் பிரமாணிக்கமாய் அநுசரிப்பதி லும் மற்றும் கன்னியர்களுக்கு முன்மாதிரிகையாயிருந் தாள். அந்த மடத்திலும் தேவமாதா இவளுக்கு பல விசேஷ வரங்களையளித்தாள் என்று ஜனங்கள் சொல்லு கிறார்கள். 1928-ம் ௵ ஒக்டோபர்-மீ 3-ந உ அவள் அச்சபையில் உட்பட்டு தற்கால வார்த்தைப்பாடு கொடுத் தாள். துறவற அந்தஸ்தில் அந்தரங்க ஜீவிய பாக்கியத் தின் சமாதானத்திலும், அமைதியிலும், ஜீவித்துக்கொண்டு இன்னம் துயி பட்டணத்திலேயே ஜீவித்துவருகிறாள்.

---

## ஏழாம் அதிகாரம்

## ஞான அதிகாரிகள் புகுந்து ஆராய்தல்

கோவா தெ இரியாவில் தானாக ஆரம்பிக்கப்பட்ட வேத வணக்கம் நாளுக்குநாள் அதிகரிப்பதையும், நல்ல பலனை விளைவிப்பதையும் ஞான அதிகாரிகள் கண்டார்கள். ஆதலால் தாங்கள் இதில் கலக்காமல் விலகிநிற்பதை நீக்கி விட்டு பிரசித்தமாய்க் கலக்கவேண்டிய காலம் வந்துவிட்ட தென்று எண்ணினார்கள். அவர்கள் செய்த நடபடிகளை பொதுவாய் நாம் இங்கே விவரிப்போம். 1917-ம் ௵, லெயிரியா மேற்றிராசனமானது லிஸ்போன் நகரத்தி லிருந்த கர்தினால் பிதாப்பிதாவாகிய தொம் அந்தோனியு மெந்திஸ் மெல்லு என்பவரின் ஞான அதிகாரத்துக்குட் பட்டிருந்தது.

இவர் 1929-ம் ஹு ஆகஸ்ட்-மீ 4-ம் உ மரணமடைந்தார். இவர் ஆதியில் இவ்வதிசய சம்பவங்களைப்பற்றி கேள்விப்பட்ட உடனே தமது ஆளுகைக்குட்பட்ட சகல குருக்களும், இதில் ஒருவிதத்திலும் கலந்துகொள்ளக் கூடாதென்று கண்டிப்பான கட்டளையிட்டார். இந்தக் கட்டளையை அவர்கள் பூரணமாய் அநுசரித்ததினாலே, பாத்திமாவின் பங்குவிசாரணைக் குருக்களும் அதைச் சுற்றியிருந்தவர்களும் ஜனங்களுடைய பட்சத்தையும், நன்மதிப்பையும் இழந்தது மாத்திரமல்ல, வேதத்துக்கும் திருச்சபைக்கும் விரோதிகளாயிருந்த சர்க்கார் உத்தியோகஸ்தர் முதலியவர்களுடன் இவர்கள் சேர்ந்து உதவி செய்கிறார்களென்றும், ஜனங்கள் குறை கூறினார்கள்.

இதன் மத்தியில் அதே வருஷம் நவம்பர்-மீ 3-ம் உ தமது ஆசனத்தில் நின்று சர்க்காரால் புறதேசத்துக்கு அனுப்பப்பட்ட அந்த கர்தினாலுக்குப் பதிலாகவிருந்த லிஸ்போன் நகரத்து விக்கர் ஜெனரலாகிய மித்தெலேன் அதிமேற்றிராணியார் என்னப்படும் மோன்சிஞ்ஞோர் லீமா விதால் என்பவர் இச்சம்பவங்களைப்பற்றி ஓர் விசாரணை செய்யும்படி கற்பித்தார். விசாரணையும் உடனே நடந்தது. அதின் ரிப்போர்ட்டு 1919-ம் ஹு ஆகஸ்ட்-மீ 29-ம் உ தான் வெளியாச்சுது.

## முதலாவது கட்டிடங்கள்

அடுத்த வருஷம் லெயிரியா மேற்றிராசனம் மறுபடியும் ஸ்தாபிக்கப்பட்டது. 1920-ஹு ஆகஸ்ட்-மீ 5-உ தொம் ஜோசே கொரேயா தெசில்வா மேற்றிராணியார் மிக்கக் கொண்டாட்டத்தோடு தமதாசனத்தை ஒப்புக்கொண்டார். பாத்திமாவில் நடந்த விஷயங்களைப்பற்றி இவருமே ஆரம்பத்தில் மகா எச்சரிக்கையாய் நடந்துவந்தார்.

அவைகளைப்பற்றி தாமே சிலகாலம் நெருங்கி நுணுக்கமாய் சகலத்தையும் கவனித் தாராய விரும்பினார். நாளுக்குநாள் மிக கவனத்தோடு ஆராய்ந்ததில் ஆண்டவருடைய கரம் அதில் இருந்ததென்பது அவருக்குத் தெளிவாயிற்று. ஆதலால் அவர் தமது தீர்மானத்தைப் பிரசித்

தமாய் அறிவிக்காதிருந்தபோதிலும், அங்கே புதிதாய்க் கட்டப்போகிற ஆலயத்தில் நடக்கும் ஆராதனை வணக்கம் முதலியவைகளைத் தாமே போய் நடத்துவதாய்த் தீர்மானித்துவிட்டார். இக்கருத்தோடு கோவா தெ இரியாவை, விலை கொடுத்து வாங்கினார். வாங்கி பிரமாண்டமான அந்த வெளி நிலத்தை—(முப்பது ஏக்கருக்கதிகம் விஸ்தீரணமுடையது—ரோமாபுரியில் பியாஸ்ஸா தெசம் பீற்றர் என்னும் அர்ச். இராயப்பர் ஆலய முற்ற வெளியைவிட இருபங்கு)—சீர்ப்படுத்தி சமப்படுத்த உத்தரவு செய்தார்.

கிறீஸ்தீனு—கொரோடி என்னும் கட்டிட என்ஜினியர்களால் பிளான்கள் வரையப்பட்டது. நிலத்தைச் சமப்படுத்தும் வேலை தவிர, அங்கே வியாதிக்காரருக்கு ஓர் ஆஸ்பத்திரியும், பூசை, பாவசங்கீர்த்தனம் நடைபெற ஒரு சிறு கோவிலும், பெரிய பசிலிக்காவென்னும் பிரமாண்டமான ஆலயத்தின் பெரும்பாகமும் கட்டி முடிவாயிருக்கின்றது. 150 பேருக்கதிகமான ஆண்பிள்ளைகள் எப்போதும் அங்கே வேலை செய்துகொண்டுவருகிறார்கள். இப்படிப்பட்ட செலவெல்லாம் ஒருவரும் கேளாமல் ஜனங்கள் தாங்களே வலியக் கொடுக்கும் தர்மப் பணத்தைக் கொண்டே நடக்கின்றது.

1921-ம் ஆு திருயாத்திரைக்காரருக்காக திறந்த வெளி மைதானத்தில் திவ்விய பூசை செய்யும்படி மேற்றிராணியார் உத்தரவு கொடுத்தார். அதுவரையும் அவர்கள் தூரத்திலிருந்த பாத்திமாவின் பங்கு விசாரணைக் கோவிலில் பூசைகண்டு நன்மைவாங்கி அதன்பின், கோவா தெ இரியாவுக்குச் சுற்றுப்பிரகாரமாய்ப் போவார்கள்.

இந்த மகா விசேஷ உத்தரவுக்காக, தேவமாதா ஏதோ பெரிய சம்பாவனையளித்தாப்போலும், தாம் அந்த உத்தரவை தர்ராளமாய் அங்கீகரித்ததுபோலும், ஓர் விசேஷ அடையாளத்தைக் காண்பிக்க விரும்பியதுபோலத் தோன்றுது. எப்படியெனில், முதலாவது காக்ஷி காணப்பட்டபோது அந்தப் பிள்ளைகள் நின்ற பள்ளத்தின் அடியில் தண்ணீர் பிடித்துவைத்துக் காப்பாற்றும்படி ஓர் தொட்டியைக் கட்டும்படியாக மேற்றிராணியார் கட்டளை



அற்புதமாய் உண்டான ஜல ஊற்றின் தொட்டிகளமைந்த மண்டபம்
சேசுவின் திரு இருதய அடைக்கலத்திலிருக்கிறது.

யிட்டார். மேற்றிராணியாண்டவரின் கருத்து ஏதெனில் அந்த மலையில், மழைத்தண்ணீரை அங்கே அதில் பிடித்து வைக்கலாம் என்பதே. ஆனால் மேலே சில கல்லுகளை உடைத்தெடுக்குமுன்னமே மெதுவாய் சில தண்ணீர் துளிகள் மெல்லிய ஊற்றுப்போல் சொரிந்து வடிவதைப் பார்த்தார்கள். சற்றுப்பின் அதில் நின்று சில கெஜ தூரத்தில், பூமியினின்று உதித்த வேறு சில ஊற்றுகளும் வந்து வடிந்து ஒன்றாய்ச் சேர்ந்தது. இந்த நிலத்தின் நிலைமையை நன்றாய் அறிந்தவர்கள், இது சுண்ணும்பு நிலமென்றும், ஆதலால் அதில் தண்ணீர் கட்டி நிற்பது கூடாத காரியமென்றும் அறிந்திருந்தமையால் இச்சம்பவத்தைக் கண்டு அதிசயப்பட்டார்கள். அதைச்சுற்றி ஒருமைலுக்கதிகமான தூரத்தில் முதலாய் ஓர் அற்ப சிறு ஊற்றையும் ஒருவரும் ஒருபோதும் கண்டறிந்ததேயில்லை. ஆதலால் இது மாதாவின் அற்புதம், அல்லது மேற்றிராணியாண்டவரின் புதுமை என்று அந்த ஊரார் நிச்சயிக்கிறார்கள்.

## அற்புத ஜலம்

இவ்விதமாக பாத்திமாவுக்கு, உயிரைப்போல அத்தியாவசியமான ஒரு விஷயத்தை மாதா இவ்விதமாக ஒழுங்குபடுத்திவிட்டாள். விசேஷமாய்க் கோடைகாலத்தில் நடைபெறும் பெரும் திரு யாத்திரை ஜனங்களுக்கு அங்கே குடிக்கத தண்ணீர் கிடைக்காவிடில் அவர்கள் திரண்டுவருவது கூடிய காரியமல்ல. அன்றுமுதல் அங்கே தண்ணீர்வற்றிப்போகவில்லை. அந்த ஜலமெல்லாம் ஒரு மகா பெரிய தண்ணீர் தொட்டியில் வந்து விழுகின்றது. அந்த தொட்டியே சேசுவின் திரு இருதயக் கோபுரத்துக்கஸ்திவாரமாயும், ஆதாரமாயுமிருக்கின்றது. இந்தத் தொட்டியில் முப்பது தண்ணீர் குழாய்கள் வைத்திருக்கின்றன. இவ்வழியாய் திருயாத்திரிகள் ஜலத்தைக் குடிப்பதுபோலவே, தங்கள் சாதாரண உபயோகங்களுக்கு உபயோகிப்பதுமன்றி, அற்புத ஆரோக்கியங்களை யடைவதுக்குப் பரம எத்தனமாயும் அந்த ஜலத்தை உபயோகிக்கின்றார்கள்.

## கானேன் சட்ட முறைப்படி நடந்த விசாரணை

1922-ம் ஸு மே-மீ 3-ம் உ யனுப்பப்பட்ட கட்டளையின்பிரகாரம் பாத்திமாவின் சம்பவங்களைப்பற்றிய விசாரணை ஆரம்பித்தது. புண்ணியத்திலும் கல்வியிலும் கீர்த்தியுடைய 7 பேருள்ள ஓர் சங்கத்தை நேமித்தார்கள். அதே வருஷம் ஒக்டோபர்-மீ 13-ம் உ ஞானதிகாரிகளின் அநுமதியுடன் "Voz de Fatima" "பாத்திமாவின் குரலோலி" என்னும் ஓர் பத்திரிகை வெளியாயிற்று. மாதாவின் பக்தி எங்கும் பரவுவதற்கு இது மிக்க உதவியாயிற்று. அதிவிரைவில் 50,000-ம் பிரதிகள் வெளியாயிற்று. மே மாசமும், ஒக்டோபர் மாசமும் இன்னம் இதற்கு அதிகமான பிரதிகளை யச்சிடுவார்கள். 100000-த்துக்கும் மேலாகும்.

1924—26-ம் ஆகிய இரு வருஷங்களிலும், முறையே ஆண், பெண் இருதரத்தவர்களின் சபைகள் அதாவது பாத்திமாவுக்கு வரும் வியாதிக்காரருக்குதவிபுரிவதற்கென்று உற்பத்தியாயின. இப்போது இவ்விரு சபைகளும் ஒன்ருகி, "பாத்திமா மாதாவின் தாசர்களின் ஐக்ய சங்கம்" என்னும் நாமமுடையதாய் நாலு வகுப்பாக வகுக்கப்பட்டிருக்கின்ருர்கள்.

(1) வியாதிக்காரரையும், மற்றவர்களையும் கவனித்து, விசேஷமாய்ப் பாவசங்கீர்த்தனம் கொடுக்கிறவர்களுமாகிய குருக்கள்.

### மாதாவின் ஊழியர்சபை

(2) வியாதிக்காரர்களுக்காக சிரமப்படும் டாக்டர்கள் வைத்தியர்கள்.

(3) மாதாவின் ஊழிய புருஷர்: இவர்கள் வியாதிக்காரரைக் கொண்டுபோவதுமல்லாமல், ஆலயத்துக்குள் ஒழுங்கையும், கிரமத்தையும் கவனித்து காப்பாற்றி வருபவர்கள்.

(4) மாதாவின் ஊழிய ஸ்திரீகள்: இவர்களும் நோயாளிகளின் நர்ஸ்களைப்போலும், மற்றும் தங்களுக்குக்



சிலுவைப்பாதை.
பாத்திமா பங்கு விசாரணைக் கோவிலிலிருந்து
காட்சி கண்ட திருஸ்தலத்துக்குப் போகும் வழியில்
கட்டப்பட்டிருக்கும் 14 ஸ்தலங்கள்.

குறிக்கப்படும் வேலைகளையும், செய்வார்கள். இவர்கள் எல்லோரும் மாதாவின் நேசத்துக்காகவும், சம்பளமில்லாமலும், சுயபரித்தியாகத்தோடும், நன்மாதிரிகையோடும், தங்கள் தங்கள் வேலையைச் செய்துவருகிறார்கள். 1931-ம் வருஷம் மார்ச்சு-மீ 31-ம் வ அர்ச். பாப்பானவர் இச்சங்கத்தை அங்கீகரித்து அநேக பலன்களை அளிக்கச் சித்தமானார்.

இது தவிர 1926-ம் ஆண்டில் மேற்றிராணியாண்டவரின் கட்டளையுடனும், அங்கீகாரத்துடனும் "பாத்திமா திரு யாத்திரிகளின் கைத்துணைப் புத்தகம்" என்னும் சிறிய ஓர் புத்தகம் முதல்தடவையாக 10,000 பிரதிகளுடன் வெளியாயிற்று. அதன்பின் இரு தடவையாக இன்னும் அதிக பிரதிகளாக அது பிரசுரிக்கப்பட்டது.

## சிலுவைப்பாதை

ஆயினும் இதற்கு பத்து வருஷத்துக்குப்பின்தான், மோன்சிஞ்ஞோர் கொரேயா தெ சில்வா என்னும் மேற்றிராணியாண்டவர், தமது ஞான ஆளுகைக்குச் சம்பந்தமான ஓர் அநுஷ்டானத்தைப் பிரசித்தமாக வந்து செய்தார். அதேதெனில் சிலுவைப்பாதை ஸ்தலங்களை தாமே மந்திரித்து அவரே ஸ்தாபித்தார். திருயாத்திரையாய் வரும் திரளான ஜனங்களுள் கால் நடையாய் நடந்து வருகிறவர்களே அதிகப்பேர். இத்திருயாத்திரிகளுக்கு அதிக பக்தியை உண்டாக்கும் நோக்கத்தோடு இதன் சுற்றுக்கிராமங்களிலுள்ள பங்கு விசாரணைக் கிறீஸ்துவர்கள், அவரவர் தங்கள் சொந்தச் செலவிலே பெரிய கல் சிலுவைகள் பிரசித்த ரோட்டின் ஓரத்தில் ஆங்காங்கு கட்டி நாட்ட உடன்பட்டார்கள். திருஸ்தல ஆலயத்தினின்று முதலாவது ஸ்தலம் வரையும் உள்ள எட்டு மைல் தூரத்தினிடையில் இந்த 14 ஸ்தலங்களின் சிலுவைகளும் நடப்பட்டிருக்கின்றன. 1927-ம் ஹூ ஜூன்-மீ 26-ம் வ முதல் முதல் இந்த ஸ்தலங்கள் மந்திரித்து ஸ்தாபிக்கப்பட்டபோது ஒரு பெரிய திருயாத்திரைக் கூட்டம் சேர்ந்து

வந்தது. மேற்றிராணியாண்டவரும் அப்போது இவர்களுடன் கூடி முன்னின்று நடத்தினர். ஒவ்வொரு ஸ்தலத்திலும் அவர் பிரசங்கம் பண்ணினர். அவர் முதலாவது ஸ்தலத்தில் காலை 8 மணிக்கு ஆரம்பித்து கடைசி ஸ்தலத்துக்கு மாலை 2 மணிக்கு வந்துசேர்ந்தார். அதன்பின் அவர் திவ்யபூசை செய்தார்; அதில் 400-பேருக்கதிகமாக திவ்யநன்மை வாங்கினர்கள். பாத்திமாவில் நாள்தோறும் நாம் கண்டு அதிசயப்படக் கிடைக்கும் அநேக அநேக பக்தி தவக்கிரியைகளில் இது ஒன்று. 1928-ம் ஹு ஜனவரி-மீ 15-ந் உ பாத்திமா மாதாவின் பக்திக்குரிய ஐக்கிய சபை காஞேன் சட்டப்பிரகாரம் முறையே ஸ்தாபிக்கப்பட்டது. அந்த மே-மாதம் 13-ந் தேதி (போர்த்துக்காலில் அதுவரையும் உண்டானதைவிட) மகா பெரிய ஒரு திருயாத்திரை நடைபெற்றபோது ஏவொரா நகரத்து அதி மேற்றிராணியாராகிய எம்மானுவேல் மெந்திஸ் தெ கொன்சேஸம் சாந்துஸ் என்னும் ஆண்டவர் புது பசிலிக்கா கோவிலுக்கு அஸ்திவாரமிட்டார். அது முடிவானபின் போர்த்துக்காலிலுள்ள சகல தேவாலயங்களையும்விட இதுவே அதிக பெரிதாயிருக்கும்.

---

## எட்டாம் அதிகாரம்

### பாத்திமா மாதாவின் பக்தி விர்த்தி:

#### ஞானாதிகாரிகளின் அங்கீகாரம்:

காஞேன் சட்டப்பிரகாரம் பாத்திமா காக்ஷி விஷயத்தை ஆராய்ந்து வேலைகளைச் செய்யும்படி நியமிக்கப்பட்ட சங்கத்தார் மனசாட்சியோடு தங்கள் வேலைகளை நடத்தினர்கள். ஆனல் அது மிகவும் மெதுவாய் நடந்தது. 1930-ம் ஹு மே-மீ 12-ம் உ தான் இந்த சங்கத்தார் தங்கள் மேற்றிராசன ஞான அதிகாரிகளுக்கு அனுப்ப

வேண்டியதாயிருந்த பெரிய ரிப்போர்ட்டின் 31 அதிகாரங்களையும், இன்னும் ஓர் முறை கடைசியாய்க் கவனித்து வாசித்து முடிக்கும்படிக் கூடினார்கள். இதன்பின் கொரேயா-தெ-சில்வா மேற்றிராணியார் இந்த ரிப்போர்ட்டை 6 மாசக் காலமாக தீர்க்கமாய் ஆராய்ந்து தமது தீர்மானத்தை வெளியிட ஆயத்தம் செய்தார். கடைசியாய் பாத்திமா மாதாவின் பிரசித்தப் பொது வணக்கத்தைப்பற்றி அவருடைய நிருபம் வெளியாயிற்று. இதனால் மே-மீ 13-ம் உ முதல் அக்டோபர்-மீ 13-ம் உ வரையிலும் 1917-ம் ஆ கோவா தெ இரியாவில் காணப்பட்ட காக்ஷிகளை விசுவசிக்கலாம் என்றும் பாத்திமா மாதாவைப் பிரசித்தமாய் வணங்கலாமென்றும், தெளிவாகவும், உறுதியாயும் அறிவிக்கப்பட்டது.

இந்த அருமையான பத்திரம் 1930-ம் ஆ ஒக்டோபர்-மீ 13-ம் உ கோவா தெ இரியாவில் திரண்டு கூடியிருந்த 100,000 ஜனங்களுக்கு வாசிக்கப்பட்டது. அதாவது கடைசிக்காக்ஷி காணப்பட்டு 13 வருஷத்துக்குப்பின் தான்.

பாத்திமா மாதாவை நேசிக்கும் கோடிக்கணக்கான பக்தர்களுக்கு இத்தால் உண்டான பேரானந்தம் அளவிடக்கூடியதல்ல. உடனே போர்த்துகேஸ் ஜாதியாரின் ஜன சமூகத்தின்பேரால் நன்றியறிந்த தோத்திரமாக ஒரு திருயாத்திரை நடைபெறவேண்டுமென்று தீர்மானித்தார்கள். அவ்வாறே அது 1931-ம் ஆ மே-மீ 13-ம் உ நடந்தது. அதில் முதன்மையாக கர்தினால் பிதாப்பிதாவானவரும், அவருடன் போர்த்துக்கால் இராச்சியத்திலுள்ள சகல மேற்றிராணிமாரும், போர்த்துக்கால் முழுவதிலுமுள்ளவர்களில் 300,000 கிறீஸ்துவர்களும் கூடியிருந்தார்கள். பாத்திமாவில் இன்னும் நடைபெறும் திருயாத்திரைகள் எப்போதாவது இதற்கதிகப்படும் என்பது சந்தேகம்.

மேலே சொன்ன பிரகாரம் பாத்திமா விஷயத்தில் குருக்கள் கலக்கக்கூடாதென்று, ஆரம்பத்தில் தடுத்திருந்

தது. இந்தத் தடையை நீக்கிவிட்டது முதல் கோவா தெ இரியாவுக்குப் போய்க்கொண்டிருந்த ஜனத்திரள்கள் ஏராளமாகிவிட்டது. மாரி காலத்தில்மாத்திரம் ஜனங்கள் குறைவதுண்டு. 2000 அல்லது 3000, 5000-ம் இருக்க லாம். மேலும், இதுவரையும் பாத்திமாவுக்குப் போவது மிகவும் கஷ்டமாகவே யிருந்துவருகிறது. ரயில் கிடை யாது. ஆகக் கிட்டிய ரயில் ஸ்டேஷன், சமபூமியில் 9 மைல் தூரம். மலைப்பகுதிகளிலோ இரவில் தங்க முதலாய் இட வசதியுமில்லை.

பாத்திமாவுக்குப் போகிறவர்கள், அங்கே ஜெபம் பண்ணவும், தபசு பண்ணவும் மாதாவிடத்தில், தங்கள் ஆத்தும, சரீர சௌக்கியமெனும் நன்மைகளைக் கேட் டடையவுமே போகிறார்கள். இப்படியே பாத்திமாவின் திரு யாத்திரைக்காரரின் சிறு புத்தகத்தில் முதலாவது ஒழுங்கிலும் சொல்லப்பட்டிருக்கிறது. சும்மா வெறும் விநோதக் காக்ஷி காணவும், ஊர் சுற்றிப்பார்க்கும் நோக் கத்தோடு அங்கே போக நினைக்கிறவர்களின் நோக்கம், முற்றும் வியர்த்தமானதே.

கோடைகாலத்தில் திருயாத்திரிகளின் தொகை 100,000, 150,000-மாயும், மே-மீ ஒக்டோபர் மாசங் களில் போர்த்துக்கேஸில் ஜனசமூகத்தாரினது திருயாத் திரிகள் 200,000-மும் ஆவதுண்டு.

சிறந்த கல்விமானாகிய லூதுவிக் பிஷர் Dr. Ludwig Fisher பம்பேர்க் Bamberg சர்வகலாசாலையில் ஓர் உபாத்தியாயர், 1929-ம் ஷூ மே-மீ 13-ம் வ இங்கு வந்திருந்த கூட்டத்தைத் தாமே தமது கண்ணால் கண்டு, மிகவும் ஆச்சரியத்தோடு எழுதியிருப்பதாவது: “இந்த காக்ஷி உலகத்தில் வேறொரு இடத்திலும் காணாத காக்ஷி. நான் ரோமாபுரியில், குழந்தை தெரேசம்மாளின் அர்ச். பட்ட சடங்குக்குப் போயிருந்தேன். அர்ச். இராயப்பர் ஆலயத்தில் நிறைந்திருந்த 80,000 ஜனத்திரளையும், பிர மாண்டமான அர்ச். இராயப்பரின் முற்ற வெளியில் கொள் ளக்கூடாத விதமாய் கூடியிருந்த ஜனத்தொகையையும்,

நான் பார்த்தேன். ஆனால், மாதாவின் மேலும் திவ்விய நற்கருணையின் மேலும் நிறைந்த பத்தியோடும், தப ஒறுத்தலோடும் இங்கே திரண்டு கூடியிருந்த, மெய் யாகவே கணக்கிடக்கூடா திரளோடு ஒப்பிட்டுப் பார்த் தால் அது ஒன்றுமில்லாததுபோலத் தோன்றும்."*

எல்லோராலும் மிக்க நன்மதிக்கப்படும் வேறொரு குருவானவர், இதைப்பற்றிக் கூறியிருப்பதாவது:—இவர் சேசுசபையைச் சேர்ந்த லூயிஸ் கொன்சாகா கப்ரால் சுவாமியார், இதன் முன் புரோவின்சியல் அதாவது அதி சிரேஷ்டராயிருந்து, இப்போது, பிராசீலில் (Brasil) பஹி யாவிலுள்ள 'அந்தோனியு வியெரா' கலாசாலையில் ரெக்டராயிருப்பவர்: 1930-ம் ௵ மே-மீ 13-ம் உ நடந் தேறிய திருயாத்திரை யன்று அங்கே திருநாள் பிரசங்கத் தைச் செய்தவர். இவர் கூறுவதாவது:—

"அங்கே நான் காண நேரிட்ட அந்தக் காக்ஷியைப் பற்றி நான் முன்னமே ஒரு விதத்திலும் உத்தேசித்திருக் கக்கூடியதே யல்ல. ஒவ்வொருவரும் அதைக் கண்டு தான் விசுவசிக்க வேண்டும். வாயினால் விவரிப்பது அசாத்தியம்.

"சற்று நேரத்துக்குமுன் டாக்டர் பிஷர் எழுதிய 'பாத்திமா போர்த்துக்கேசியரின் லூர்து' என்னும் புத்த கத்தை நான் வாசித்தேன். அது அதிசயப்படத்தக்க புத்தகம்! இதுவிஷயத்தில் இதுவரையும் பாத்திமாவைப் பற்றி பிரசுரிக்கப்பட்டவைகளில் இதுவே மிக்க விசே ஷித்தது என்றே நான் சொல்லவேண்டும். ஆனால் நான் பாத்திமாவுக்குப் போனபின் அங்கே நான் கண்ணால் கண்டவை எப்படிப்பட்டதென்றால், நான் இதன்முன் அந்தப் புத்தகத்தை வாசித்ததினால் என் மன தில் தோன்றினதெல்லாம் மிகவே சொற்பமென்றுதான் நான் சொல்லவேண்டும். லூர்துக்கும் பாத்திமாவுக்கு முள்ள ஏராளமான வித்தியாசம் எவ்வளவென்றால்,

---

* Vide Fatima das Portuguieshe Lourdes by Dr. Ludwig Fisher.

1-வது அப்புத்தகத்தின் பெயரிலிருந்தே ஆரம்பிப்பதாய் தோன்றுகிறது. 'பாத்திமா போர்த்துக்கேசியரின் லூர்து' என்பது அப்புத்தகத்தின் பெயர். அப்படியானல் இதைப்போல் அதுவும் ஒன்று என்பதுதான் எல்லோரும் எண்ணக்கூடிய அர்த்தம். ஆனல் நான் அநேகமுறை லூர்துவுக்குப் போயிருக்கிறேன். மிகவே திரளான கூட்டச் சனங்கள் வந்து சேர்ந்திருந்த ஓர் தினத்திலும் முதலாய் நான் ரோமைக்குப் போயிருந்தேன். ஆனல் நான் இப்போது எல்லோருக்கும் பிரசித்தமாய் அறிவிக்க வேண்டியதென்னவென்றல் நான் பாத்திமாவில் கண் டதை ஒருவிதத்திலும் லூர்திலாவது ரோமாபுரியிலாவது காணக் கிடைக்கவேயில்லை.

"2-வது, ஜனக்கூட்டத்தைப்பற்றிக் கவனிப்போம். லூர்தில் காணப்படும் கூட்டம் பாத்திமாவிலுள்ளதோடு ஒப்பிட்டுப்பார்த்தால் அது ஒன்றுமில்லையென்றே சொல்ல வேண்டும். மேலும் பாத்திமாவில் திருயாத்திரை நடப் பது மாசம் மாசம் 13-ம் உ. மேலும் மே-மாசத்திலும், ஒக்டோபர் மாசத்திலும் ஒவ்வொரு வருஷமும், இதே காக்ஷியையே காணலாம். இதில், குறைவு ஏதுமேயில்லை. எப்போதும் கூடுவதும் அதிகரிப்பதுமே வழக்கம்.

"நான் போன அன்று என் முன்னே திரண்டு நின்றது 200,000. சில வேளை 300,000 என்றும் சொல்லக் கூடும்."

இது தவிர இன்னும் அதிக சங்கைக்கும், நன்மதிப் புக்குமுரிய மூன்றுவது சாக்ஷி:—போர்த்துக்காலில் உள்ள அர்ச். பாப்பானவரின் ஸ்தானுபதியாகிய கர்தினல் பேதா என்னும் ஆண்டவர், 1932-ம் ௵ மே-மீ 13-ம் உ பாத் திமாவைத் தரிசித்தபின்பு எழுதுவதாவது:—

"இந்த மீ 13-உ பாத்திமாவில் என் கண்கள் கண்ட காக்ஷியைப்போலெதுவும் இதன்முன் ஒருபோதும் கண்ட தேயில்லை யென்பதை நான் மெய்யாகவே ஒத்துக்கொள்ள வேண்டும்."

"எண்ணுக்கடங்காத இத்திரளான ஜனங்கள் தேவ மாதாவை அணைகடந்த விசுவாசப் பெருக்க உருக்கத்தோடும் நேசபாசத்தோடும் வாழ்த்தி வணங்கினார்கள். பரமநாயகி முன்பாக, தங்கள் தங்கள் அந்தஸ்துக்குரிய உயர்வு தாழ்வு எல்லாவற்றையும் மறந்துபோகிறார்கள். எல்லோரும் அங்கே மரியாயின் மக்களாகவும், எல்லாரும் மாதாவை வணங்கவும், பிரார்த்தித்து வேண்டிக்கொள்வதுக்காகமாத்திரம் அங்கே வந்து கூடினவர்கள்போல காணப்படுகிறார்கள். இதெல்லாம் கண்டவுடனே கண்ணீர் தானாய்க் கண்ணிலிருந்து வடிந்தோடுகிறதுமன்றி இதனால் இருதயத்தில் ஆழ்ந்து பதியும், உணர்ச்சிகள் ஒருபோதும் அழிந்துபோகக் கூடாதவைபோலாகின்றது.

சாதாரணமாய் நாம் சொல்லவேண்டுமானால் பாத்திமாவில் மனிதர் காண விரும்பத்தக்க காக்ஷி யெதுவும் அங்கே காணேம். அங்கே திருயாத்திரையாய்ப் போவது மெய்யாகவே கஷ்டமும் வருத்தமும் பிரயாசையுமானது தான். அப்படியிருந்தும், வருஷந்தோறும் அதிகமதிகமாய் திருயாத்திரைக்காரர் அங்கே போய்க்கொண்டிருக்கிறார்கள். மாதா தமது வரப்பிரசாதங்களைப் பகிர்ந்தளிக்கும் இத்தலத்துக்கு ஜனங்களைத் திரட்டிக்கொண்டு போகும் ஏதோ அந்தரங்கமான சக்தி அவரவருக்குள்ளே யிருக்கவேண்டும். அங்கே போகிறவர்களில் கணக்கற்ற ஆத்துமாக்கள் மனந்திரும்பி கர்த்தரிடம் சேருகிறார்கள்! சன்மார்க்க பாதையில் தங்கள் தங்கள் தத்துவங்களில் ஸ்திரமடையும்படியான பெலனையும் சக்தியையும் அடையவும், கிறீஸ்துவ புண்ணிய சாங்கோபாங்க ஜீவியத்தின் நிலைமையென்னும் வரத்தைப் பெறத்தக்க மனத்திடனைப் பெறவும் அங்கே எல்லோரும் போகும்படி செய்வதாய்த் தோன்றுகிறது.

"பாத்திமா போர்த்துக்காலுக்கு மகா பெரிய ஆசீர்வாதம். சரித்திரத்தில் காணப்படுகிறபடி ஆயிர வருஷக் காலமாக சத்தியமறை கிறீஸ்துவ புண்ணியச் செயல்களில் சிறந்து ஜொலித்த போர்த்துக்கேசிய ஜாதியாரை மாதா

எப்போதும் காப்பாற்றுவாளென்று நம்புகிறேன். ஜன சமூகமனைத்தையுமே சிதைக்கத்தக்க ஆபத்தான இக் காலத்தில் மாதா அவர்களை இரட்சிப்பாளென்றும் விசுவசிக்கிறேன்.

✠ ஜு-பியேவானி பேதா,

கர்திளுல்,

நுன்சியுஸ் அப்போஸ்தொலிக்.

ஒரேயொரு வருஷத்தில் மாத்திரம் அதாவது 1928-ல் வந்த திருயாத்திரிகளின் கணக்கை, மிகவும் குறைந்த உத்தேசமாய் பத்திரிகைகளில் கணக்கிட்டு வெளியாக்கின பிரகாரம், ஏறக்குறைய 10 லக்ஷம். இவர்களில் எல்லோருமே போர்த்துக்காலிலிருந்து வந்தவர்கள் என்று சொல்லத் தகும். அதே வருஷத்தில் ஊர்துக்கு உலக மெங்குமிருந்துபோன ஜனத்தொகை 6,54,000 என்று கணக்கிடப் பட்டிருந்தது.

1929-ல் பாத்திமாவுக்குப் போகும் வண்டி முதலிய வாகனங்களைச் சரியாய்க் கணக்கெடுத்து வரும்படி அனுப் பப்பட்ட சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் 12-ம் உ மாத்திரம் 11,000 என்று எண்ணிக் கணக்கெடுத்தார்கள்.

1931-ம் ௵ மே-மீ 12-ம் உயும், 13-ம் உயிலும் வந்த வண்டிகள் 15,000; இவை 150,000 ஜனங்களைக் கொண்டு போகக்கூடியவை. ஆயினும் யாத்திரைக்காரர்கள் பெரும்பாலர் கால்நடையாய்ப் போகிறவர்கள் என்பதை நாம் கவனிக்கும்போது "250,000 த்துக்கதிகம்" அல்லது உத்தேசம் "300,000" யாத்திரிகள் என்று கண்ணால் கண்டவர்கள் போய் எழுதியது, மிதம் தப்பி எழுதி விட்டார்களென்று நாம் சொல்லத்தக்கதல்ல.

ஆயினும் வெறும் ஜனத்தொகைகளின் கணக்கைவிட நன்மதிப்புக்குரியது இங்கு வரும் யாத்திரிகள் எல்லோரிலும் வெளியே காணப்படும் பக்தி, ஒழுக்க அடக்கம். இதற்கு முக்கிய காரணம் லெயிராயா மேற்றிராணியாண்ட

வரால் பிரசுரிக்கப்பட்டிருக்கும் மேற்சொன்ன சிறு புத்தகத்தில் அவர் போதித்திருக்கும் நிபந்தனைகளே.*

(1) "பாத்திமா ஜெபமாலைமாதா வாலயத்துக்குத் திருயாத்திரையாக வருவோர் தங்கள் பக்தியையும், தபசையும் பிறசிநேகத்தையும், எப்போதும் காண்பிக்கவேண்டும். பாத்திமாவுக்குப் போகிறது, ஜெபம் செய்யவும், தபசு செய்வதற்காகவும், ஆத்துமத்திலும், சரீரத்திலும், வியாதியுடையவர்களுக்கு ஞான ஔஷதத்தை யளிக்கும்படி மாதாவை வேண்டிக்கொள்வதுக்காகவுமே. வியாதிக்காரரின் ஆரோக்கியமே யென்று அழைக்கப்படும் அந்த மாதாவைக் கெஞ்சி மன்றாடும்படி அங்கே ஆயிரம் ஆயிரமாய் ஜனங்கள் அதிகமாய்த் திரண்டு வருகிறார்கள்.

(2) எப்போதும், விசேஷமாய் கோவா தெ இரியாவிலும் யாத்திரிகள் ஒருவருக்கொருவர் உதவிபுரியவேண்டும். ஒவ்வொருவரும் மற்றவர்களுக்காக வேண்டிக்கொள்ளவேண்டும். பொது ஜெப ஆராதனைகள் நடக்கும் நேரத்தில் மகா பக்தி வணக்கத்தோடிருக்கவும்வேண்டும்.

(3) வியாதிக்காரர் அவர்கள் ஐஸ்வரியவான்களாயிருந்தாலும் சரி, தரித்திரராயிருந்தாலும் சரி, இவர்களுக்கு முதலாவது இடம் கொடுக்கவேண்டும். எப்போதும் இவர்கள் போக வழியில் இடம் கொடுக்கவும் அவர்களுக்குத் தேவையான உதவிபுரியவும்வேண்டும்.

(4) அவர்களுக்காக பிரித்து கட்டிவைத்திருக்கும் மண்டபத்தை, யாத்திரை காலங்களில் கோவிலைப்போல் எண்ணிப்பாவிக்கவும்வேண்டும், யாத்திரிகள் அவ்விடத்திலிருந்துகொண்டு பேசி சம்பாஷித்துக்கொண்டிருக்கக்கூடாது. பேசுவது அவசியமாய் நேரிடும்போது மெதுவாய்ப் பேசத்தகும்.

(5) பிச்சை வாங்குவதே தொழிலாய்த் திரியும் பிச்சைக்காரரையும், வியாபாரச் சாமான்கள் விற்றுக்கொண்டு திரிகிறவர்களையும் அங்கே சட்டைபண்ணவே

* Vide 'Manual do peregrino de Fatima.'

கூடாது. அவர்களை யங்கே கண்டால் "மாதாவின் தாசர்க" ளிடம் சொல்லி அவர்களை வெளியே அனுப்பும் படி செய்யவேண்டும்.

(6) இந்த மாதாவின் தாசர்கள் அங்கே கற்பிக்கிறதை திருயாத்திரிகள் அனுசரிக்கவேண்டும். அப்போதுதான் சகலமும், கிரமமாயும், ஒழுங்காயும் நடக்கும். ஒழுங்கீனம் ஆண்டவருக்குப் பொருந்தாது. ஒழுங்கிருக்கும் போது, அநேகம் பேரைக் கவனிக்கவேண்டியதிருந்தாலும் ஒவ்வொருவருக்கும் தேவையானது கிடைக்கக்கூடும். ஒவ்வொருவருக்கும் கொஞ்சங் கொஞ்சம் கிடைப்பதும் போதுமாயிருக்கும். ஆனால் ஒழுங்கீனமுள்ள இடத்தில் அதிகமிருந்தும் போதுமாயிராது. பக்தி, தபசு, பிறர் சிநேகம், இவைகளோடு ஒழுங்கையும் யாத்திரிகள் எப்போதும் அநுசரிக்கவேண்டுமென்பதே என் ஆவலும், விருப்பமுமாம்.

(7) யாத்திரிகள் திருச்சபையின் அவசரங்களுக்காகவும், நமது சொந்த தேசத்துக்காகவும், பாத்திமாவின் தாசருக்காகவும், திருயாத்திரிகள் தங்கள் ஜெப தபக் கிரியைகளை ஒப்புக்கொடுக்கும்படியாகவும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இவ்விடத்தில் யாத்திரிகளுக்காக இந்த மாதாவின் தாசர் படும் கஷ்டங்களுக்காகவும், சுய நய ஒறுத்தல்களுக்காகவும் நான் அவர்களுக்கு மிக்க நன்றி செலுத்துகிறேன்.

லெயிரியா, ஜூன் 13, 1925.

✠ ஜோஸே
மேற்றிராணியார்.

## போர்த்துக்கேசிய ஜன சமூகத்தாரின் ஓர் திருயாத்திரை

இதை வாசிப்பவர்கள், மேலே சொல்லப்பட்டிருக்கும் நிபந்தனைகளையும், ஒழுங்குகளையும் திருயாத்திரிகள் எப்படி இங்கே அநுசரிக்கிறார்கள் என்பதைக் காணத்

தக்கதாயும், யாத்திரிகளின் பக்தியையும் சிரவணத்தை யும் அறியத்தக்கதாயும், அதிசயப்படத்தக்கதாயும் அப்ப டிப்பட்ட பெரிய திருயாத்திரைகளில் அங்கே வராதவர் கள் அதை ஞான விதமாயாவது செய்யும்படி நாம் விரும்பு கிறோம். இதோ கவனித்து கேளுங்கள் :

மே-மீ, பாத்திமாவில் நடக்கும் திருயாத்திரை காக்ஷியோடு ஒப்பிட்டுப் பார்க்கக்கூடிய வேறெந்தக் காக்ஷி யும் உலகத்தின் எந்தப் பக்கத்திலும் ஒரு கத்தோலிக்குக் கிறீஸ்துவனுக்கு கிடைக்கவே கிடைக்காது! முந்தின நாள் முதல் சகல தெருக்களும், மலை மேலுள்ள கல்படிகளும் பாறைகளும், ஆறு நதிகளைப் போலவும், இவ்வாற்றின் அலை களாகிய ஜனத்திரள்களை நாலா திக்குகளிலுமிருந்து கொண்டுவந்து கோவா தெ இரியாவைச் சுற்றி தள்ளி விடுவது போலக் காணப்படும்

அப்போது அங்கெழும்பும் தூசி மேகம் போலடர்ந்து உயரும்போது அதன் மத்தியில் நின்று பார்த்தால் அங்கு திருயாத்திரிகளின் பெரிய சுற்றுப்பிரகாரம் கடந்து போவ தாயும், அதுக்கு அந்தமும் முடிவும் இல்லாததுபோலவும் தோன்றும். ஏனெனில், அந்த ஜனங்களின் பக்தி ஒழுக் கமும், அவர்கள் கூட்டமாய்க் கூடி நடந்து போகும்போது ஜெபமாலையைச் செபித்துக்கொண்டு போவதும், சங்கீதங் களைப் பாடிக்கொண்டு நடப்பதும், அப்படி தோன்றச்செய் யும். இதுவும் தவிர அந்த யாத்திரிகள் கணக்கற்ற வித மான வெவ்வேறு நடையுடைகளை யுடுத்தியிருப்பதாலும், தற்கால, முற்கால, எக்கால சம்பந்தமான யாத்திரை வாகன எத்தனங்களுடன் கடந்து போவதைக்காண்பதால், ஏதோ பூர்வீக தற்கால சரித்திர சம்பந்தமான காக்ஷி சாலைகளி னுள் நாம் புகுந்திருப்பது போலும் தோன்றும். சகல வயசு, பிராயம், குலம், அந்தஸ்துடையவர்களின் கணக்கும் முடிவுமற்ற வரிசைகளையும் அங்கு காணலாம். இதில்பெரும் பாலர் கால் நடையாட்கள். 24, 48 மணி நேரம் நடந்து வந்தவர்கள். 1931 ம் ஆண்டு ஒரு சிறு கூட்டத்தார் 180, மைல் தூரம் 9 நாள் நடந்து வந்தார்கள். அநேகர்

குதிரைச் சவாரி செய்வோரும், மற்றவர்கள் வண்டிகள் மோட்டோர்கார்கள், பஸ்கள் முதலிய பற்பல வாகனங்களிலும் மெதுவாயும் விரைவாயும் நகர்ந்துபோகும் கொழுத்த மாட்டு வண்டிகளையும், பல பெரிய தீபங்களின் மத்தியில் காணலாம்.

திருஸ்தலமாகிய இந்தக் கம்பவுண்டுக்குள்ளே வந்து சேர்ந்தவுடனே இந்த பெரும் கூட்டம் நதியைப்போல் வடிந்து வடிந்து முந்த முந்தக் காக்ஷி காணப்பட்ட சிறு கோவில் ஸ்தலத்துக்குப் போவார்கள். அங்கே மாதாவை வணங்கி ஸ்துதித்தபின் தங்கள் பொருத்தனைகளைச் செலுத்துவார்கள். மாதாவோவெனில், அங்கே அந்தச் சிறு கோவிலினுள் ஒரு மூலையில் இருந்துகொண்டு ஒரு தாய் தன் பிள்ளைகளை அன்போடு அரவணைத்தேற்றுக்கொள்வதுபோல செய்கிறாள். எல்லோரும் அவளுக்குத் தெரியும். அவர்களுக்காகவே அங்கு காத்துக்கொண்டிருக்கிறாள். பிள்ளைகளாகிய அவர்களும் தங்கள் தாயை அறிவார்கள். அணைகடந்த விசுவாசத்தோடும், சந்தோஷக் கண்ணீர் சிந்திக்கொண்டும் அவர்கள் அவளை வாழ்த்தி போற்றினபின், அவளுடன் அகமகிழ்ச்சியோடு பேசி, தங்களுக்கு வேண்டியதைக் கேட்பார்கள். பிள்ளைகள் செய்வதுபோல பலவந்தமாயும் பல உபகாரங்களை அவளிடமிருந்து பெற்றும் கொள்ளுவார்கள். தாய் தகப்பன்மார் தங்கள் சிறு பிள்ளைகளைக் கரங்களில் பிடித்துத் தூக்கி தங்கள் சிறு கையால் அந்த மாதாவைத் தொடவும், வாயால் முத்தமிடவும் செய்வார்கள். ஒவ்வொருவரும் தங்கள் ஜெபமாலையைக்கொண்டு, அந்த மாதாவைத் தொடவும், தொட்டபின்பு அது அங்கிருந்து ஏதோ விசேஷ பரலோக சக்தியை அடைந்தாப்போல் அதை ஞாபகமாகத் தங்கள் வீட்டுக்குக் கொண்டுபோவார்கள்.

அநேக ஜனங்கள் ஆண்களும் பெண்களும், அடிக்கடி அந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் அனைவரும், தங்கள் நேர்ச்சையை நிறைவேற்றுவதற்காகவும், மாதாவிடத்தினின்று புது உபகாரங்களைப் பெறுவதற்காகவும் அல்லது



சிறு கோவிலினுள் ஜனங்களால் பூஜிதமாய்
வணங்கப்படும் புதுமையுள்ள சுரூபமும் பீடமும்.

பெற்றவைகளுக்காக நன்றியறிந்த தோத்திரம் செய்யவும் அச்சிறு கோவிலைச் சுற்றி முழங்காலிலேயே போவார்கள். ஈக்களின் திரண்ட கூட்டத்தைப் பார்க்கிலும் அதிகமாய் நெருங்கிய ஜனக் கூட்டத்தினிடையில் அவர்கள் அங்கே செய்யும் இவ்வித தப பரித்தியாகம் மிகப் பெரிதே. பல முறை அவர்களை மற்றவர்கள் நெருக்கித் தள்ளுவார்கள், கீழே விழுவார்கள், மிதிக்கப்படுவார்கள், பல தடவைகளில் அங்குள்ள கல்லுகளினால் இவர்கள் முழங்காலில் பட்ட காயத்தினின்று புறப்பட்ட இரத்தத் துளிகள் அந்தப் பாதைகளில் பட்டிருப்பதையும் காண நேரிடுவதுண்டு.

## ஜோலித்துப் பிரகாசிக்கும் இரவு

இப்படியாக பொழுதுபோய் இரவு வந்துவிடும். இந்த ஜனங்கள் எல்லோரும், எங்கே போவார்கள்? ஒருவரும் இதைப்பற்றி சற்றும் கவலைப்படுவதே இல்லை. அவர்கள் இருந்த இடத்தில் தங்கள் ஜெபதபங்களைச் செய்துகொண்டிருப்பார்கள். ஒவ்வொருவருக்கும் தேவ தாயாருடன் செய்து முடிக்கவேண்டிய சொந்த வேலையும் இருக்கும். ஒவ்வொருவரும் மற்ற அநேகருடைய மந்திரி பிரதிநிதியாக, அவரவர்களுடைய பற்பல பொருத்தனைகளை மாதாவுக்குச் செலுத்தவேண்டியதும் இருக்கும்.

மணி 10 அடிக்கிறது. அப்போது நடப்பதை மேலே சொல்லப்பட்ட டாக்டர் fபிஷர் இதைப்பற்றி எழுதியிருப்பதையே நாமும் இங்கே எடுத்து வரைகிறோம். "பசிலிக்கா" என்னும் மகா ஆலயம் கட்டப்படும் இடத்தில் நான் போய் நின்றேன். அதில் நின்றால் திருஸ்தலத்தின் கம்பவுண்டு முழுவதையும் காண்பது மாத்திரமல்ல அங்கே நாலா திசைகள் சுற்றிலுமுள்ள ஊர்களையுமே காணலாம். அந்தக் காட்சி (Amphitheatre) என்னும் மகா காட்சிசாலையைப்போல்தான் தோன்றும். திடீரென இருளடைந்திருந்த அந்த இடத்தில் அங்குமிங்குமிருந்து இரண்டொரு துளி வெளிச்சம் மின்னுவதுக்கு ஆரம்பிக்கும். அப்புறம் சற்று நேரத்துக்குள் 100, 1000, 10,000

ஆகிவிடும். சில நிமிஷங்களுக்குமுன் பாழாய் தோற்றப் பட்ட அந்த பள்ளத்தாக்கை பிரகாசமுடைய ஓர் பெரும் சமுத்திரம் வந்து மூடிக்கொண்டதுபோல தோன்றும். இந்தக் காட்சி நிகரற்றது. இப்படிப்பட்ட இதைப் போல ஓர் காட்சி உலகில் வேறெங்கும் காணக்கிடைப்ப தில்லை. நான் Kevelaer கேவலேரிலும், (Enisieden) எனிஸிடெனிலும், (Altotting) அல்தோட்டிங்கிலும், தீப வெளிச்சங்களைப் பார்த்திருக்கிறேன். லூர்தியேயுமே கண்டிருக்கிறேன். இங்கு காணும், தீப சமுத்திரத்தோடு அவைகளை ஒப்பிட்டுப்பார்த்தால் அவை ஒன்றுமில்லை யென்றே சொல்லவேண்டும். மே மாதத்தில் கோவா தெ இரியாவில் காணும் தீப ஜோதியானது மனிதனுடைய சகலவித உத்தேசத்துக்கும் மேலானது. பாவ அந்தகாரத் தில் அமிழ்ந்திக் கிடக்கும் உலக மத்தியில் உதித்து தோன்றும், ஜோதி பிரகாசமுடைய ஓர் மெய்யான பரிசுத்த இரவு அது.

## தீ-வர்த்தி சுற்றுப்பிரகாரம்

லெயிரியா மேற்றிராணி ஆண்டவர் இதோ வருகிறார்! அவர் வருகைதான் சுற்றுப்பிரகார ஆரம்பத்தின் அடையா ளம். (Procession) சுற்றுப்பிரகாரம் என்னும் மொழி இதை முற்றும் விளக்கிச் சொல்லக்கூடிய மொழியே யல்ல. ஆயினும் நாம் தெரிந்தெடுத்து ஏறக்குறைய விவரிக்க கூடியதாயிருக்கும் மொழி அதுவே. எப்படியெனில், முறையே சுற்றுப்பிரகாரம் செய்யவேண்டுமானால் அநேகா நேக விஸ்தீரணமுடைய வீதிகளும், பாதைகளும் தேவை யாகும். ஆயினும் ஏகமாய் நெருங்கித் திரண்டிருக்கும் இந்தக் கூட்டத்தார் தங்களுக்கு இடம் கிடைக்கும் வசதிப்படி அசைந்து நடந்து ஜெபிப்பார்கள்; பாடுவார் கள்; தேவதாயாருக்கு ஓசன்னா என்று உரத்த குரலால் கூவுவார்கள்.

வியாதிக்காரருக்காக கட்டப்பட்டிருக்கும் கூடாரத் தின் ஓர் மேல்கூட்டில் குருவானவர் microphone, என்னும் சப்தத்தை உட்கொள்ளும் கருவியண்டையில்

நின்று ஜெபமாலையைத் தொடங்கி ஜெபிப்பதுடன் (Ave Maria de Fatima) "பாத்திமாவின் மரியே வாழ்க" என்றும் இடைக்கிடையே சொல்லுவார். அவருடைய சப்தமானது அங்கு சுற்றி அமைக்கப்பட்டிருக்கும் ஆறு (Loud speakers) என்னும் உரத்த சப்த கருவிகளின் மூலமாய் எப்பக்கத்திலும் கேட்கும். இதற்கு அங்குள்ள 100,000 கணக்கான ஜனங்கள் வாய் திறந்து பதிலுரைப்பார்கள். இப்படி அவர்கள் செய்யும் செபமானது ஒழுங்காயும் கிரமமாயும் நடக்கின்றது.

இரவு, நடுச்சாமம், Credo என்னும் விசுவாச மந்திரத்தை பக்தியோடு பாடி முடிப்பதோடு சுற்றுப்பிரகாரம் முடிவு பெறுகின்றது. ஆயிர ஆயிரக்கணக்கான தீப வெளிச்சத்தினிடையில் அதிக வல்லபமுள்ள பல பலத்த சப்தமுடையவர்களாய் தெரிந்தெடுக்கப்பட்ட பாட்டுக்காரர் ஒன்றுகூடிப் பாடும் இச் சங்கீதமானது மிகச் சிரேஷ்டமுடையதாகின்றது. முன்காலத்தில் கத்தக்கோம் என்னப்படும் சுரங்கங்களில் விளங்கிய உயிருள்ள விசுவாசம் இப்போது நமது மத்தியிலும் உதித்ததுபோல் காணப்படுகிறது. உலகத்தின் அக்கிரமங்களுக்கும், அறிவீனத் தவறுகளுக்கும் பரிகாரமாக சப்திக்கும் நித்திய தூய விசுவாசத்தின் குரலும், பேரொலியும் இதுவே.

1927-ம் ஆண்டில் ஓர் கீர்த்திபெற்ற (Professor) உபாத்தியாயர் இவ்வித விசுவாசப் பிரத்தியட்ச காக்ஷியை முதல் விசையாக கண்டு கண்ணீர் சிந்திக் கொண்டு சொன்னதாவது: "இந்நேரத்தில் தேவ தாயார் தாமே மெய்யாக இவர்கள் கண்முன் காணப்பட்டு காக்ஷி கொடுத்தாலும், இவர்களப்போது அவளை ஆர்ப்பரித்து வணங்குவதற்கு இதிலும் அதிகமாய் ஏதும் செய்யக்கூடியதல்ல" என்றார்.

இரவில் போர்த்துக்கேசிய ஜனசமூக பொது ஆராதனையும், இங்கே நடக்கும். வழக்கமாய், அபராத முயற்சியுடைய லெயிரியா மேற்றிராணி ஆண்டவரும் இதற்கு வந்திருந்து முன் நடத்துவார். உரத்த சப்த கருவியின்

பக்கமாய் அவர் நின்று முதலாவது மகா பக்தி வைராக்கியத்தோடு ஓர் பிரசங்கம் செய்வார். அதன்பின் ஜெபமாலையின் இரகசியங்களை ஜெபிப்பார். இதை இடைக்கிடை ஆறு விசை நிறுத்தி, பாப்பானவருக்காகவும், மேற்றிராணிமார்களுக்காகவும், ஜன சமூகத்திற்காகவும், பாத்திமா யாத்திரைக்காரரிடம் மற்றவர்களும் விரும்பி கேட்டுக்கொண்ட சகல கருத்துகளுக்காகவும் வேண்டிக் கொள்ளும்படி நினைப்பூட்டுவார். அப்போது அங்கு கூடியிருக்கும் ஆயிர ஆயிரக்கணக்கான இருதயங்களெல்லாம் ஏகோபித்து ஒன்றாய் ஐக்கியப்பட்டு கிறீஸ்துவ பிறர் ஸ்நேகத்தோடும், தங்களின சொந்த அவசரங்களுக்காக வேண்டிக்கொள்ளுமாப்போல மகா பக்தி வைராக்கியத்தோடும் வேண்டிக்கொள்வார்கள். இதுவே நாம் விசுவாச மந்திரத்தில் சொல்லும் அவரவர்களின் சமூகீதப்பிரயோசனம். இதன்பின் மேற்றிராசனத்திலுள்ள திருயாத்திரைக்காரர் முறையே ஆராதனை செய்ய ஆரம்பிப்பார்கள். அவரவர்களுக்குக் குறிக்கப்பட்ட ஆராதனை மணி நேரத்தில் அவரவர்கள் ஆராதனை செய்வார்கள். அப்போது மற்றும் யாத்திரைக்காரர்கள் சற்றே இளைப்பாறுவார்கள். அங்கங்கே தரையில் கிடப்பார்கள். வேறு சிலர் நல்லதிஷ்டமாய் மோட்டோர் காரில் வந்திருந்தால் அதிலேயே கிடப்பார்கள்.

பாவசங்கீர்த்தனம் பண்ண விரும்பும் ஆண்பிள்ளைகள் அங்குள்ள இருபது பாவசங்கீர்த்தன தொட்டிக்குச் சமீபமாய் போய் வரிசையாய் ஒழுங்காய் நின்று தங்கள் முறை வருமட்டும் மூன்று நாலு மணி நேரம் காத்திருப்பார்கள். இரவில் பாவசங்கீர்த்தனம் இவர்களுக்கு மாத்திரமே குறிக்கப்பட்டிருக்கிறது.

ஒருநாள் சூரியன் அஸ்தமித்தபின் லெயிரியா மேற்றிராணியாண்டவர் பாவசங்கீர்த்தன தொட்டியில் அநேக மணி நேரமிருந்து பாவசங்கீர்த்தனம் கொடுத்ததின் பின்பு, எழும்பி வெளியே வந்தார். அப்போது ஓர் பெண்பிள்ளை, அங்கு காத்திருந்த அநேக பெண்பிள்ளைகளில் இவளுமொருத்தி, வந்து, அவரைத் தடுத்து:

"ஆண்டவரே! ஆண்டவரைக் குறித்து எனக்குப் பாவசங்கீர்த்தனம் தாரும்" என்றாள்.

"அஸ்தகாலமணி அடித்தபின்பு ஆண்பிள்ளைகள் தான் இப்போது பாவசங்கீர்த்தனம் பண்ணவேண்டும்."

"ஆண்டவரே, இன்று காலை முதல் என் முறை வருமென்று நான் இங்கே பாவசங்கீர்த்தனத்துக்காக காத்திருக்கிறேன். அதன்பின் நன்மை வாங்கவும் ஆயத்தமாயிருக்கிறேன். இப்போது ஒன்றுமில்லாமல் நான் இப்படி என் வீட்டுக்குத் திரும்பிப் போகவேண்டுமா!"

"நீ இன்னும் உபவாசமாயிருக்கிறாயா?"

"ஆம், ஆண்டவரே!"

"இவ்விஷயத்திலும் கானோன் சட்டத்தைப்பற்றிக் கவனிப்பதவசியமா" என்று மேற்றிராணியாண்டவர் மகா ஆழ்ந்த பக்தி உருக்கத்தோடு உரைத்துக்கொண்டு, மறுபடியும் போய் பாவசங்கீர்த்தனத் தொட்டியில் உட்கார்ந்து, அவளுக்குப் பாவசங்கீர்த்தனம் கொடுத்தார். அவள் அன்று எத்தனை மைல் தூரம் நடந்து வந்தாளென ஆண்டவர்தான் அறிவார். அதன்பின், அவளுக்கு திவ்விய நன்மையும் கொடுத்தார்.

இதைப்போன்ற வேறுபல சரித்திரங்களுமுண்டு.

## சேசுநாதர் ஜனத்திரள் மத்தியில் நடக்கிறார்

பொழுது விடியும்போது, அதிகாலையில் 'மாதாவின் தாசருக்காக' திவ்யபூசை ஒப்புக்கொடுக்கப்படும். அதன்பின் அவர்கள் பொது ஆராதனை அனுஷ்டானங்களுக்கும், வியாதிக்காரருக்கும் உதவிபுரிய ஆஜராயிருப்பார்கள். திருயாத்திரைக்காரருடன் சேர்ந்து அங்கு வந்திருக்கும் இருநூறு அல்லது அதற்கதிகமான குருக்கள் முறையே அங்குள்ள பலபீடங்களில் பூசைபலி ஒப்புக்கொடுக்க ஆரம்பிப்பார்கள். ஏழுமணி ஆனவுடனே இனிமேல் கட்டப்போகும் பசிலிக்கா ஆலயத்தின் முகப்புக்குமுன் ஆயத்தம் பண்

ணப்பட்டிருக்கும் பிரதான பீடத்தில் ஜனங்களுக்குப் பொதுநன்மை கொடுப்பதற்காக அங்கே எழுந்தருளியிருக்கும் மேற்றிராணிமாரில் ஒருவர் திவ்ய பூசை பலியை ஆரம்பிப்பார். சிபோரியம் என்னும் தேவநற்கருணைப் பாத்திரங்களில் மிகப்பெரிது இரண்டில், ஒவ்வொன்றின் நடுமத்திய அளவு, $10\frac{1}{2}$ அங்குல விஸ்தீரணமுடையது. இதுகளில் முதலாவது திவ்ய நன்மை அபிஷேகம் செய்யப்படும். குறித்த நேரத்தில் இருபத்தைந்து சுவாமிமார் இதினின்று வேறு பாத்திரங்களில் எடுத்து வைத்துக்கொண்டு, நாலாதிசைகளிலும் போய் சம்மனசுக்களின் திவ்விய அப்பத்தைப் பகிர்ந்து கொடுப்பார்கள். இத்தருணத்தில் கோவா தெ இரியா முழுதுமே பிரமாண்டமான ஒரே கோவிலைப்போலாகிவிடும்.

அப்போது பாட்டுக்காரர் கூட்டத்தார் மைக்ரோபோன், என்னும் சிறுசப்தக்கருவியின் பக்கத்தில் எழும்பி நின்று, திவ்யநற்கருணையின் இணையற்ற பாட்டு சங்கிதத்தைப்பாட ஆரம்பிப்பார்கள். பாத்திமாவின் இனிய சங்கீத பேரானந்தத்தை ஒருவன் ஒருவிசை சுகித்தவுடனே தன் ஆயுள் முழுதும் அதை மறக்கக்கூடியதேயல்ல

"தூதர் அதிதூதராகிய சகல சம்மனசுக்களே! நாங்கள் பாடித்துதிக்க ஆரம்பிக்கும்போது எங்களைச்சுற்றி வந்து நின்று கூடி, நாங்கள் தேவநற்கருணை ஆண்டவரைத் துதிக்க உதவிபுரிவீர்களாக!"

திரளான அந்த ஜனக்கூட்டம் அணைகடந்த பக்தி உருக்கத்தோடு, அக்கொண்டாட்டத்தின் அதிஉன்னதமும் உத்தமமுமான நேரத்தில், ஆழ்ந்த பக்தி சாகரத்தில் அமிழ்ந்தி இருக்கும்போது ஆயிரக்கணக்கான சம்மனசுக்களின் சேனைகள் அங்கே மெய்யாகவே அவர்களைச் சுற்றிச் சுற்றிப் பறந்துகொண்டிருப்பதுபோலவே தோன்றும்.

ஆதலால் அந்த திரளான ஜனங்களும் இதற்குப்பதில் சொல்லும்போது அவர்களுக்குள்ளே உண்டாயிருக்கும் பக்தி அவ்வளவு இவ்வளவென்று அளவிடத்தக்கதேயல்ல.



திருயாத்திரையின்போது இலட்சக்கணக்கான
ஜனங்களுக்கு அநேக குருக்கள்கூடி
நன்மை கொடுக்கும் பாத்திரங்கள்.

"தேவநற்கருணையில் எழுந்தருளியிருக்கும் சேசுநாதர் சகலராலும் ஸ்துதிக்கப்படுவாராக!"

"நமதாண்டவராகிய சேசுநாதர் எல்லாராலும் ஸ்துதிக்கப்படுவாராக!"

"வணக்கத்துக்குரிய பிதாவாகிய சேசுநாதர் எல்லாராலும் ஸ்துதிக்கப்படுவாராக!"

"நமதாண்டவராகிய சேசுநாதர் எல்லாராலும் ஸ்துதிக்கப்படுவாராக!"

இக்கூட்டத்தினிடையில் தேவநற்கருணை வாங்க விரும்புவோர் பக்தி ஆசாரத்தோடும், ஜெபத்தோடும் எழும்பி நின்று தங்கள் முறை வருமளவும் பொறுமையோடு காத்திருப்பார்கள்.

Professor Ludwig Fisher.—புரோபெஸர் லுத்விக் பிஷர், இவ்விஷயத்தைப் பற்றி எழுதியிருப்பதாவது, ஜனங்களில் திரளானபேர் அகோர வெயில் நேரத்தில் இரண்டு மணிநேரமாக காத்துக்கொண்டிருந்தபின்பு அவர்கள் என்னிடம் வந்து, நானும் போய் அவர்களுக்கு திவ்ய நன்மை கொடுக்கும்படியாக கேட்டார்கள். ஆறும் பட்டத்தை மாத்திரம் பெற்றிருந்த இளம் பிராயமுள்ள ஒருவர் முதல் முதல் திரு பலிபீடத்தண்டை போய் தேவநற்கருணையை தனது கையால் கொடுக்கும் பாக்கியமான சமயம் நேரிடும்போது கிடைத்த மகா பாக்கியத்தையும், அதிஷ்டத்தையும் மனதில் எண்ணிக்கொண்டு நான் பீடத்தையணுகிப் போனேன். ஆ! எனக்கு இப்படிப்பட்ட அதிஷ்டம் கிடைத்ததெப்படி? ஆ! மெய்யாகவே பாத்திமா பரம வரப்பிரசாதங்களை ஏராளமாய் பொழியும் பாக்கியமான ஸ்தலம். அங்கே சம்பவிக்கும் சம்பவங்களெல்லாம் வேறெங்கும் அநுதினம் நேரிடும் சம்பவங்களைப்போலல்ல!

"திருப் பாத்திரமாகிய சிபோரியத்தைக் கையிலெடுத்துக்கொண்டு புறப்பட்டேன். வழியிலிருந்த ஜனங்கள் விலகி எனக்கு வழிவிட்டார்கள். அப்போது ஒவ்வொருவரும் ஆண் பெண் சிறுபிள்ளைகள், பட்டணத்தார், பட்டிக்காட்டார், அங்கிருந்த தரையிலும், மண்ணிலும், சேற்றிலும்,

முழங்காலிலிருந்தார்கள். எப்பக்கத்திலுமிருந்து எல்லோருக்கும் கிடைக்க சிலவேளை இப்போது நன்மை கிடைக்காமல் தட்டுப்பட்டு போகும், என்னும் அச்சத்தால், அவரவர் ஆவலோடு சுவாமி, சுவாமி யென்கிற அமைதியான இரைச்சல் உண்டாயிற்று.

"அவர்களுடைய விசுவாசம் எனக்கு மகா அதிசயத்தை உண்டாக்குகிறது. சேசுவை யுட்கொள்ள எவ்வளவோ பசியும், தாகமும்! ஒருவருக்கொருவர் எவ்வளவோ பிறசிநேகம்! தங்களில் யாருக்காவது அன்று நன்மை கிடைக்க தவறிப்போகாதபடி எவ்வளவோ அக்கரையும் கவலையும்.

"பாத்திமா மலைமேல் அன்று 25,000 ஜனங்களுக்கதிகம் திவ்ய நன்மை யுட்கொண்டார்கள். அதுக்கடுத்த வருஷம் அக்டோபர்-மீ இதிலும் அதிகம், 30,000-ம். 1931-ஹு மே-மீ 13-உ, $3\frac{1}{2}$ மணி நேரத்துக்குள்ளாக 33,000 பேர் நன்மை வாங்கினார்கள். இதுபரியந்தம் இந்தத் தொகைக்கு அதிகப்படவில்லை. இவ்வாலயத்தில் 1928 முதல், 1931 வரையும் திருயாத்திரைகாலங்களில் (மாசமாசம் 13-உ)உட்கொள்ளப்பட்ட திவ்ய நன்மை 365,000-த்துக்கதிகம் சாதாரண காலங்களில் மாசந்தோறும் சராசரி 1000-ம் 1200.

"பாத்திமாவில் நான் அதிகமாய் ஆச்சரியப்பட்டதென்னத்தைப்பற்றி யென்றால் விசுவாசமுள்ள தமது ஜனங்களின் திரளான கூட்டத்தின் மத்தியிலும் தமது வியாதிக்காரர் நோயாளிகளின் இடையிலும் ஆண்டவர் நடந்து போவதும் அவர்கள் அவர்மேற் கொண்ட நேசத்தால் அவர்களுக்குண்டாயிருக்கும் அவாவும் பசியும், தாகமும், திவ்யநற்கருணையில் அவரை உட்கொள்ளும்படி அவர்களிடம் பற்றியெரியும் ஆவலும் நேசமும்" என்று டாக்டர் fபிஷர் வரைந்திருப்பது உண்மையிலும் உண்மை.

## மாசற்ற கன்னிகை மகா ஓட்டோலகமாய் அவர்கள் மத்தியில் எழுந்தருளுதல்

மத்தியான நேரமாகிறது. மாதா காக்ஷி கொடுத்த திருமணி நேரம் அது! ஆதலால் பூலோகத்தில் நாம் கண்

ணுல் காணக்கிடைக்கக்கூடிய விசுவாசிகளின் பக்தி விசுவாச உருக்கக் கொண்டாட்ட மகோற்சவம் நடைபெறும் தருணமிது!

சுற்றுப்பிரகாரம் (Procissao=புரோசிஸம்) இதோ ஆரம்பிக்கின்றது. எப்படி? எங்கே? காக்ஷி கண்ட ஸ்தலத்தின் சிறு கோவிலில் நின்று புதுமையுள்ள சுரூபத்தை வியாதிக்காரரின் பூசை நடக்கப்போகும் மண்டபத்தின் பலிப்பீடம் வரையும் சுற்றுப்பிரகாரமாய் கொண்டுபோவார்கள். மேற்சொன்ன கோவிலில் மாதாவின் தாசர் நாலுபேர் சிறு தேரின்மேல் வைக்கப்பட்ட அச் சுரூபத்தை தங்கள் தோள்கள் மேல் சுமந்தவுடன் சுற்றுப்பிரகாரம் ஆரம்பிக்கும். "Scouts" ஸ்கவுட்ஸ் என்னும் தூதர்கள் முதலாவது போவார்கள். இன்னம் ஓர் விசை மாதா தங்களிடையில் எழுந்தருளி வருமாப்போல ஜனத்திரளில் ஒவ்வொருவரும் அந்த பரம நாயகி பக்கத்தில் எப்படியும் கிட்டே நெருங்கி நின்று பார்ப்போம் என்று ஒவ்வொருவரும் வரும்போது இவர்களினிடையில் மாதாவின் தேரைக் கொண்டுபோக ஒரு சிறு பாதையை விலக்கிவிட அந்த ஸ்கவுட்ஸ் சேனையார் படும் பாடு கொஞ்சமல்ல. யாத்திரை ஜனங்கள் அவரவரின் விருதுக் கொடிகளை விரித்து பிடித்துக்கொண்டும் காற்றிலசைத்துக்கொண்டும் ஆனந்த மகிழ்ச்சியோடு பின்தொடர்ந்து போவார்கள். இவர்களின் பிறகு குருப்பிரசாதிகள் கடைசியில் புதுமையுள்ள மாதாவின் சுரூபம். இது மிக்க மெதுவாய்ப் போகும். டாக்டர் பிஷர் வரைந்திருக்கும் வண்ணம்:—

"கண் கூசும்படி வீசியடிக்கும் சூரிய பிரகாசத்தில் மாதா வெளிவந்தவுடனே, ரோசாமலர்மாரி நமது மேல் பெய்ய ஆரம்பிக்கின்றது. என் ஜீவியகாலத்தில் ஒருபோதும் இதைப்போன்ற ஒன்று நான் எங்கும் கண்டதே இல்லை. சில நிமிஷத்துக்குள் திருச்சுரூபமும், அதைச் சுற்றி நிற்கும் ஜனங்களும் ரோசா மலர் இதழ்களால் மூடப்பட்டிருப்பதைக் காணலாம். அந்தக் காட்டிலே உரோசா செடிகள் வளருவதில்லையென்பது மெய்யே. பக்திக்குரிய

இத்தருணத்தில் உபயோகிப்பதற்காகவே திருபாத்திரிகள் தங்களுடன் கொண்டுவருகிறார்கள். அன்பு நிறைந்த அந்த அன்னையின் இருதயத்துக்கு இது அத்தியந்த சந்தோஷத்தை விளைவிக்குமென்பதற் கையமில்லை.

"ரோசா மலர் மாரி பெய்ததை நினைத்து நான் இன்னும் ஆழ்ந்து சிந்தித்துக்கொண்டிருக்கையில் என் சிநேகிதரில் ஒருவர் என் காதில் மெதுவாய் 'பின்னே திரும்பிப் பாரும்' என்றார். திரும்பிப் பார்த்தேன். என்னத்தைக் கண்டேன். பனிக்கட்டி நிறைந்த வனத்துக்குள்ளே நாம் வந்திறங்கியதுபோல தோன்றியது. அந்த கணவாயின் ஒரு ஓரத்திலிருந்து சுற்றுப்பிரகாரந் தேர் எழுந்தருளி வந்திருந்ததுவரையும், கண்ணை மங்கடிக்கும் அந்த மத்தியான வெயில் நேரத்தில் ஆயிர ஆயிரம் பதினாயிரக்கணக்கான ஜனங்கள் தங்கள் வெண்ணிறக் கைக்குட்டை அல்லது Lencos லேன்சுகளை உயர்த்தி மாதாவுக்கு மங்கள வாழ்த்துதல் சொல்லும் மேரையாய் ஆயிர ஆயிர அநேகாயிரம்பேர் அசைப்பதினால் ஒரே வெண்மயமேகம்போல் காணப்பட்டது.

"இதுவும் கோவா தெ இரியாவில் மாத்திரம் காணக்கூடிய காக்ஷி! 'பாவிகளுக்கடைக்கலமே வியாதிக்காரரின் ஆரோக்கியமே! இரக்கத்தின் தாயாரே! பாத்திமா மாதாவே!' என்னும் ஜனங்களின் கூச்சல் நாளா திசையினின்றும் எழும்பிற்று.

"எல்லோரும் புதுமையுள்ள மாதாவின் சமீபத்தில் போகக்கூடியதல்ல. ஆனால் அவர்களின் மங்கள வாழ்த்துதல் ஆகாயத்தின்மேல் பறந்து, சம்மனசுக்களின் சேனைக் கூட்டம்போல் அவளைச்சுற்றி பறந்துகொண்டு போகும்.

"ஓ! கோவா தெ இரியா! நீ ஏலவே உண்டாகியிராவிடில் நாங்கள் உன்னை எப்படியும் உண்டாக்கவேண்டியதாக நேரிடும்.

"பூர்வீக அஞ்ஞானிகள் தங்கள் நீச அனாசார செய்கைகள் கொண்டாடும்படி 'அம்பிதெயாத்தர்' என்னும் நாடகசாலைகளைக் கண்டுபிடித்து ஸ்தாபித்தார்கள். இக்

காலத்துப் புதிய அஞ்ஞானிகளும் அவர்களைப்போலவே புதிய நாடகசாலைகளையும், வேடிக்கை சாலைகளையும், முன்போலவே புதுப்பித்திருக்கிறார்கள். பசாசானது எப்போதும் ஒரே விதமாகவேயிருக்கிறது. சாதாரணமாய் ஜனத்திரளையே எப்படியும் தாக்கி ஜெயிக்க முயலுகிறது. தேவதாயார் இப்போது தமது ஜெய வீரச்செயல்களை விளக்கிக் காண்பிப்பதுக்காக தெரிந்துகொண்ட இடம் கோவா தெ இரியாவில் இயற்கையாய் அமைந்திருக்கும் இந்த மகா விநோத மண்டபமே. இத்தலத்திலே, வேறெவ்விடத்தைப் பார்க்கிலும் பாவாக்கிரமத்தையும், நரகத்தையும், வென்று ஜெயித்தவள் இவளென்றும், திருக்கன்னிமை குன்றாத மாசற்ற லீலிமலர் என்றும், பரலோக பூலோகராக்கினியென்றும் சகலவித பதித போதனைகளை நசுக்கியழிப்பவளென்றும் சகலரும் கூறியறிக்கையிடுகிறார்கள். மாதா புறப்படுகிற மகா நிகரற்ற இப்பரம காக்ஷி நகர்ந்து போகின்றது. சுற்றுப்பிரகாரம் மெதுவாய் நடந்துபோகின்றது. வெண்பனிபோன்ற கைக்குட்டைச் சோமள விசிறிகளும் அவளை விடாது தொடர்ந்து செல்லுகின்றன. அத்தருணத்தில் அந்த சிநேகிதனின் சப்தம் அன்னியனாகிய என்னைப் பார்த்து: ‘இதோ பாரும். எல்லோரும் அழுவதைப் பாரும்’ என்றது. மெய்யாகவே அக்கூட்டத்தாரனைவரும் புதுமையுள்ள சுரூபத்தினின்று புறப்பட்ட ஏதோ கண்ணுக்குத்தோன்றாத ஒருவித பரம மின்சார ஓட்டத்தால் பிடிக்கப்பட்டவர்களைப்போல் தங்கள் இருதயத்தில் உதித்த ஏதோ தெய்வீக உணர்ச்சியில் பிடிபட்டு இதை வெளியிட வேறு வகையொன்றும் அறியாமல், விம்மியழுகிறார்கள்.

“நான் என் கண் எட்டுந்தூரம் வரையும் நாலா திசையிலும் என் கண்ணையுயர்த்தி, சமீபத்திலும், தூரத்திலுமுள்ள ஜனங்களை உற்றுநோக்கினேன். ஒவ்வொருவர் கண்ணிலும் கண்ணீர் ததும்பி வடிவதைக் காண்கிறேன். பெண்கள் ஆண்கள், குருக்களும், மேற்படிகள்மேல் ஏறி இப்பரம நாயகிக்காக காத்துக்கொண்டு நிற்கும் மேற்றிராணிமார்களுமே கண்ணீர் சொரிவதைக் கண்டேன்.

"இந்தக் கண்ணீர்களுக்குக் காரணம் இன்னதென்று யாராவது உரைக்கக்கூடுமோ! ஸ்திரீகள் மாத்திரம், அப்படி செய்திருந்தால் அதற்கு எளிதாய்க் காரணம் சொல்லி விடலாம். ஆனால் கண்ணீர் சொரியும் ஆண்கள் எத்தனையோ ஆயிரம்பேர் அங்கே காண்கிறோமே! இது மிகவே அதிசயத்துக்குரியதல்லவா! இப்படி நான் கண்டது ஒரேயொருவிசை மாத்திரம்! அது 1929 ஷு கோவா தெ இரியாவில்! மே-மீ 13-ம் உ! இப்படிப் பட்ட திரு ஸ்தலம் ஒன்றே! உலக முழுவதிலுமுள்ள பாத்திமாவும் ஒன்றே."

## வியாதிக்காரரின் பூசை

மிக்க ஆடம்பரத்தோடு தேவதாயார் வியாதிக்காரரிருக்கும் மண்டபத்துக்குள்ளே வந்து சேர்ந்தார்கள். தங்கள் மடக்குக் கட்டில்களில் படுத்துக்கொண்டோ, அல்லது தங்கள் பெஞ்சுகளில் உட்கார்ந்துகொண்டோ, பிச்சைக்காரரைப்போல இந்த வியாதிக்காரர் அவளையேறெடுத்துப் பார்க்கின்றார்கள். அவளுடைய சுரூபம் ஓர் உயர்ந்த ஆசனத்தில் பீடத்தின் பக்கமாய் ஸ்தாபிக்கப் பட்டிருக்கின்றது. பூசை ஆரம்பத்தில் சகலரும் ஏகோபித்து விசுவாச மந்திரத்தை செபிப்பார்கள். அதன்பின் அங்குள்ள விசுவாசிகள் தங்கள் ஜெபத்தை, அப்போது திவ்விய பூசைப்பலியை ஒப்புக்கொடுக்கும் மேற்றிராணியாருடைய ஜெபத்தோடு ஒன்றித்து பாவிகள் மனந்திரும்பத்தக்கதாகவும், அங்கு வந்திருக்கும் வியாதிக்காரர் கருத்துகளுக்காகவும், இங்கே வரக்கூடாமல் தங்களுக்காக பாததிமாவில் வேண்டிக்கொள்ளும்படியாய்க் கேட்டுக் கொண்ட பல வியாதிக்காரர் கருத்துகளுக்காகவும் வேண்டிக்கொள்ளும்படி எல்லோரும் எச்சரிக்கப்படுவார்கள். இதே கருத்துக்காகவே அப்போது ஜெபமாலையும் செபிக்கப்படும்.

பூசைக்குப்பின் வியாதிக்காரருடைய மண்டபத்துக் குள் சேர்க்கப்பட்டிருப்பவர்களுக்குமாத்திரம் தனித்தனி



இப்போது (1930) லிஸ்போனிலிருக்கும் கர்தினல் அதிமேற்றிராணியாண்டவர் வியாதிக்காரர் ஒவ்வொருவரையும் தேவநற்கருணையினால் ஆசீர்வதிக்கிறார்.

யாய் தேவநற்கருணை ஆசிர்வாதம் கொடுக்கப்படும். கடினமான வியாதிக்காரர் மாத்திரமே இங்கிருப்பார்கள். 1931-ஹு மே-மீ இப்படிப்பட்டவர்கள் 269 பேர் இருந்தார்கள். 1928-ல் வந்தவர்கள் 400 பேருக்கதிகம். இவர்களில் 285 பேருடைய வியாதிகள் சொஸ்தப்படக் கூடியதில்லையென்று டாக்டர்கள் நிச்சயித்திருந்தார்கள். பலதடவைகளில் இவ்வாலயத்து ஆஸ்பத்திரி டாக்டர் நூற்றுக்கணக்கான பேருக்கு அந்த வியாதிக்காரரின் வட்டத்துக்குள்ளே சேர்க்கும் சீட்டுக் கொடாமல் நீக்கிவிடுவதுமுண்டு.

நமது கர்த்தர் மேற்றிராணியார் கரங்களால் தூக்கப்பட்டு வியாதிக்காரரின் இரு வரிசைகளின் மத்தியில் கடந்து போவார். வியாதிக்காரர், மாதாவின் தாசர், தாசிகளாகிய ஊழியரால் அன்போடு ஆதரிக்கப்பட்டு அங்கிருப்பார்கள். அவர்கள் கண்கள் பத்தி வேகமுடையதாயும், அவர்களுடைய ஜெபமும், மன்றாட்டும் அப்படியே உருக்கமுடையதாயுமிருக்கும். சுற்றியிருக்கும் ஜனங்கள் சகலரும் அவர்களுக்காக செபம் செய்துகொண்டிருப்பார்கள். அங்கே உயரமான ஓர் மேடையில் நின்று ஓர் குருவானவர் சாதாரணமாய் டாக்டர் மார்க்குஸ்துஸ் சாந்துஸ், மேற்றிராசனத்து செமினேரியின் வயிஸ் ரெக்ற்றர், லெயிரியா மேற்றிராணியார் கண்டிப்பாய்க் குறிப்பிட்டிருக்கும் சில மனவல்லய ஜெபங்களை மைக்ரோபோன் என்னும் சிறு சப்த பெட்டியின் மூலமாய் தெளிவாய் உச்சரிப்பார்.

"ஆண்டவரே, நாங்கள் உம்மை நேசிக்கிறோம்." உடனே ஓர் பலத்த இடி இடித்து முழங்குமாப்போல 300,000 பேர் ஒன்றுசேர்ந்து அதைக் கூவி உரைப்பார்கள்.

"ஆண்டவரே, நாங்கள் உம்மை நேசிக்கிறோம்." இப்படி இரண்டாம், மூன்றும் முறையாக ஒவ்வொரு தடவையும் அதிக அதிக உரத்த சப்தத்தோடும், அதிக அதிக பக்தி பற்றுதலோடும், இதை உரைப்பார்கள். இத்

தருணத்தில் இதன் தன்மை இப்படி என்று வாக்காலும், எழுத்தாலும் விவரிக்கத்தக்கதேயல்ல. இவ்வாறே மற்றும் மனவல்லயச் செபங்களும் செபிக்கப்படும். கடைசியாய் தேவநற்கருணை ஆசீர்வாதம் ஜனங்கள் எல்லோருக்கும் கொடுத்தபின் ஆராதனை முடிவாகும்.

இதன்பின் ஓர் பிரசங்கம் நடக்கும். இது ஜனங்களுக்கு ஆசீர் கூறி விடை பெறுவதாயுமிருக்கும். அத்தோடு அங்குள்ள ஆராதனை முடிவாகும். அப்போது அற்புத தாயின் சுரூபம் சிறு ஆலயத்துக்குத் திரும்பக் கொண்டுபோகப்படும். இந்தத் தடவை மாதாவின் ஊழியக்காரிகளே தூக்கிக்கொண்டுபோகும் பாக்கியம் அவர்களுக்குக் கிடைக்கும். முதலாவது சுற்றுப்பிரகாரத்தில் மாதாவைக் கொண்டுவந்தபோது ஜனங்களுக்கிருந்ததுபோல அல்லது அதுக்கதிகமாயும், இப்போது அவர்கள் ஆனந்த சந்தோஷப்படுவார்கள்.

ஆனால் இத்தருணங்களில் யாதொரு புதுமை நடந்ததாக சேதி பரம்பிவிட்டால் அப்போது அவர்கள் காண்பிக்கும் மன மகிழ்ச்சி மட்டுதிட்டத்துக்கடங்காது.

---

## ஒன்பதாம் அதிகாரம்

### 'வியாதிக்காரரின் ஆரோக்கியமே,' எ. வே.

இத்தலத்தில் ஆரம்பத்தில் உண்டான பத்தி பற்றுதலும், உற்சாகமும் மேன்மேலும் அதிகரித்து வளர்ந்து கொண்டிருப்பதுக்குக் காரணம், ஏதென்று ஏலவே நாம் முன் சற்றே சுட்டிக்காட்டிக் காண்பித்திருக்கின்றோம்.

அதாவது கடவுளுடைய அயரா உதவி : இது நாளுக்கு நாள் இன்னம் அதிகமாயும், தெளிவாயும், விளங்கி வருகின்றது. ஜெபமாலை மாதா நமது ஜெபங்களைக் கேட்ப




வியாதிக்காரரை வண்டியினின்று இறக்கி பெரிய வாசல் வழியாய் உள்ளே தூக்கிக்கொண்டு போகிறார்கள்.

தாயும், வியாதிக்காரரை சொஸ்தப்படுத்துவதாயும் வாக்களித்தாள். அவள் தன் வாக்கை நிறைவேற்றிவருகிறுள். புதுமைகள் பாத்திமாவில் அனுதின சம்பவம். சிலது சரீர சம்பந்தமானவை. சிலது ஆத்தும சம்பந்தமானவை. இந்த இரண்டாம் வகை புதுமைகள் அவ்வளவாய் நமது கண்ணுக்கு புலப்படுவதில்லை. ஆயினும் இவை அதிக அதிசயத்துக்குரியவை.

1918 முதல், போர்த்துக்காலின் சகல பக்கங்களிலுமிருந்து வியாதிக்காரர் பாத்திமாவுக்கு திரளாய் வந்து கூடியிருக்கின்றூர்கள். சென்ற ஏழு வருஷத்துக்குள் இவ்வாலயத்தின் ஆஸ்பத்திரி கணக்குப் பதிவுப் பிரகாரம் எண்ணுயிரத்துக்கதிகமான பேர் வந்திருக்கின்றூர்கள். இன்னம் வேறு அநேகம் பேர் வந்து போனதுமுண்டு. அவர்கள் பேர் ஆஸ்பத்திரி கணக்கில் பதியப்படவில்லை. இன்னும் வேறு அநேகர் பாத்திமா மாதா வண்டைக்கு வரக்கூடாதபடியால் அவளுடைய சகாயத்தைக் கேட்பவர்களுமுண்டு.

திருஸ்தலத்தில் இப்போது ஒரு நல்ல ஆஸ்பத்திரி கட்டப்பட்டிருக்கின்றது. இங்கே வியாதிக்காரராகிய யாத்திரைக்காரரை உள்ளே சேர்த்து பாத்திமா மாதாவின் தாசராகிய ஆண், பெண்கள் அதிக பக்ஷத்தோடு பராமரித்து நடத்துவார்கள்.* உள்ளே வரும்போது பிரவேச ஆபீசுக்குப் போவார்கள். அதற்கு பெரிய தலைமையானவர் டாக்டர் பெரேராஜென்ஸ். இந்த டாக்டரும் இன்னும் மாதாவின் ஐக்கிய சங்கத்தைச் சேர்ந்த டாக்டர்கள், அல்லது அந்நேரத்தில் அங்கு வந்திருக்கும் வேறு டாக்டர்களும் கூடி வியாதிக்காரர் தங்களுடன் கொண்டு வந்திருக்கும் ரிப்போட்டுகளைக் கவனமாய் ஆராய்ந்து பரிசோதிப்பார்கள். இவர்களில் மிக கடினமான வியாதியஸ்தராக எண்ணப்படுகிறவர்களுக்கு ஒரு சீட்டுக் கொடுப்

---

* இது மெய். இந்த வரிகளைத் தமிழில் எழுதும் நான் 1934-ல் என் சகோதரியுடன, இந்த ஆஸ்பத்திரிக்குப் போனபோது இந்த மாதாவின் உத்தம ஊழியக்காரிகள் அதிசயத்துக்குரிய அநுதாபத்தோடும் பட்சத்தோடும் என் சகோதரியை நடத்தினூகள்.—L. X. F.

பார்கள். அதனுல் இவர்கள் ஆலயத்தின் முன்பக்கத்தில் வியாதிக்காரருக்குக் குறிக்கப்பட்ட வட்டத்திற்குள் பிரவேசிக்கவும், அங்கிருந்து மத்தியான வேளையில் திவ்விய பூசை காணவும், வியாதிக்காரர் ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்படும். தேவநற்கருணை ஆசீர்வாதத்தைப் பெறவும் கூடும்.

லெயிரியா மேற்றிராணியாண்டவரால் ஏற்படுத்தப்பட்டு, சிறு ஒழுங்கு புத்தகத்தில் அச்சிட்டுக் காணப்படும் ஒழுங்குகள், பிரமாணிக்கமாய் அநுசரிக்கப்படும். அவையாவன :—

வியாதிக்காரர்மட்டில் விசேஷவித பிறசிநேகம் காண்பிக்கும்படி விரும்புகிறோம்.

I. நடக்கக்கூடாத வியாதிக்காரரை மாதாவின் தாசராகிய ஆண்பிள்ளைகள் மடக்குக் கட்டிலிலாவது, உருளும் நாற்காலிகளிலாவது, வைத்துக்கொண்டு போகவேண்டும்.

II. வியாதிக்காரர் வைத்தியர்—ஆபீசுக்குப்போகத் தகும். அங்கே டாக்டர்கள் அவர்களை பரிசோதிப்பார்கள். வரும்போது தங்கள் டாக்டருடைய சாட்சிப் பத்திரம் கையில் கொண்டுவந்தவர்களை முதலாவது புத்தகத்தில் பதிவார்கள்.

III. இவர்களுடைய வியாதி இன்னதென்று நிச்சயித்தபின் மாதாவின் ஊழியராகிய ஆண்பிள்ளைகளிடம் கையளிக்கப்படுவார்கள். இவர்கள் அவர்களுக்குத் தங்களாலான உதவியெல்லாம் செய்வார்கள்.

IV. மாதாவின் தாசராகிய ஆண்களும், நர்சஸ்களும், டாக்டர்களும் ஸ்கவுட்ஸ்களும், யாதொரு சம்பளமின்றி மாதாவின் நேசத்துக்காக ஊழியம் புரியத்தகும்.

லெயிரியா,
1928 மே-மீ 31-உ.

✠ ஜாஸே,
மேற்றிராணியார்.

* P. 34. Manual do Peregrino de Fatima.

பாத்திமாவில் வியாதிக்காரரைப் பராமரிக்கும் இந்த ஒன்றே தவிர வேறெவ்வித நன்மையும் இராவிட்டாலும் இந்த ஒன்றே அதாவது அந்தந்த வியாதியஸ்தரின் உதவியற்ற ஸ்திதிக்கும் நிலைமைக்கும், வியாதியின் கடினத்துக்கும் ஏற்றபிரகாரம் அதிக ஊக்கத்தோடும் சுய பட்சமற்ற பரித்தியாகத்தோடும், இங்கே மாதாவுக்கு புரியும் ஊழியம். இந்த ஒன்றே 'மெய்யாகவே இங்கே கர்த்தருடைய கரம் இருக்கின்றது' யென்று உரைக்கப்போதுமானது. (டாக்டர் L. Fisher)

## ஆரோக்கியங்கள்

எல்லோரும் ஆரோக்கியமாகிவிடுவார்கள் என்பது உண்மையல்ல.

அப்படி எல்லோருமடைந்துவிடலாமென்றெண்ணுவது மதியீனம். ஆயினும் எல்லோரும் அல்லது ஏறக்குறைய எல்லோரும் கடவுள் தங்களுக்குக் கட்டளையிட்ட சிலுவையை அமைதியோடு சுமக்கவும் அத்தால் புண்ணியத்தைச் சம்பாதிக்கவும் வேண்டிய வரப்பிரசாதத்தையும், ஆத்தும சக்தியையும் ஆறுதலையும் அடைவதுண்டு. அநேகர் தங்கள் துன்பத்தில் ஆறுதல் பெறுவதுண்டு. வேறு பலர் முழு சொஸ்தமுமடைகிறார்கள். 'Voz do Fatima' என்னும் பத்திரிகையினால் சொஸ்தப்பட்ட வியாதியஸ்தர்கள் 400-க் கதிகமென்று விளங்குகிறது. இப்படி சொஸ்தப்பட்ட வியாதிகளுக்குள் காச வியாதி, கண் குருடு, மூளை வியாதி, சுவாசப்பை ரோகம், பக்கவாதம், கட்டி புளவைகள் முதலிய வியாதிகளை நாம் கவனித்தோம். டாக்டர்கள் இவைகளையெல்லாம் சொஸ்தப்படுத்தக்கூடியதல்லவென்றும் எண்ணினார்கள். சிலது மிகவே அதிசயத்துக்குரியவை: நாம் இதுகளில் சிலவற்றை மாத்திரமிங்கே யெடுத்துரைப்போம்.

### 1. Pott's disease: முதுகெலும்பு வியாதி

ஜுசே தெ ஒலிவேயிரா கருவாலி வயது 27, பிறந்த ஊர் அதோப்பே, (Braga); வியாபாரி. போர்த்து

(Porto)-வில் வசித்து வந்தவன். இரண்டு வருஷகால மாக (Potts) போட்ஸ் வியாதியினுல் பிடிபட்டு இடுப்புப் பக்கத்தில் நடு எலும்புகளில் வருத்தப்பட்டு வந்தான். இதற்காக எத்தனையோ வித ஔஷதங்களை உபயோகித் தான். பிரயோசனம் எதுவும் அடையாதது மாத்திரமல்ல, தீமைக்கே ஏதுவாயிற்று: இதனுல் மகா ஆபத்தான கடின நிலைமையையடைந்தான். இந்த நிலைமையில் இவனைப் பரிசோதித்த ஒரு டாக்டர் எழுதிக்கொடுத்த சாட்சிப் பத்திரமாவது: "இவன் இன்னும் எட்டு நாளுக்கதிகம் ஜீவிப்பதரிது என்று இவன் குடும்பத்தாருக்கறிவித்தார். ஆயினும் சில நாளைக்குப் பின்பு இவன் தனக்கு ஏதோ ஓர் விசேஷ குணம் கிடைப்பதாய் தோன்றியது. திடீ ரென காய்ச்சல் நின்றுபோனது, (Fistula) பவுத்திரம் மூடிப்போச்சுது. தன் கால்களை உபயோகிக்கக்கூடியதா யிருந்தது. இடுப்பைச் சுற்றியிருந்த உபத்திரவம் நீங்கிப் போச்சுது. எழும்பி நிற்கவும் கூடியதாயிற்று. ஒரு மாசத்துக்குப்பின் பூரண ஆரோக்கியத்தின் இலக்ஷணங் களெல்லாம் அவன் அங்கத்தில் தோன்றியது. ஒரு வருத்த உபத்திரவம், கஷ்டமும் அவன் அநுபவிக்கவில்லை." இப்படி டாக்டர் சுவாரேஸ் ஜூனியர் 1925 ஜனவரி-மீ 20-உ எழுதியிருக்கிறுர். இந்த சாட்சி பத்திரத்தில் இவர் எழுதாமல் விட்டிருப்பது ஒன்று மாத்திரம் அதா வது: அந்த சடுதியான மாற்றம் காணப்பட்டது, அவன் தன் குடும்பத்தாரோடு பாத்திமா மாதாவை வேண்டிக் கொண்டு **பாத்திமாவின் ஜலத்தை உபயோகிக்கத் துடங்கினதின் பின்தான், என்பதே.**

## 2. **Consumption** காச வியாதி

தெரேசா தெ ஜெசூஸ் மர்த்தீன்ஸ், வயசு 19, ஆதுஸ் குஞ்ஞாதுஸ் என்னும் ஊரில் பிறந்தவள். (தோரிஸ் நோவஸ்) கல்யாணம்செய்து லிஸ்போன் நகரில் வசிக்கை யில் கல்யாணம்செய்து 3 மாசத்துக்குப்பின் வியாதிப் பட்டு மிகவே அதிகமாய் இரத்தம் கக்க ஆரம்பித்தாள். பற்பல சிகிச்சை செய்தபின்பு ஆஸ்பத்திரிக்குப் போனுள்.

ஆனால் அங்குள்ளவர்களில் ஒருவர் சற்றும் கவனியாமல் அவளைப் பார்த்து அவள் காச வியாதியின் கடைசி நிலைமைக்கு வந்தெட்டியிருப்பதாக அவளுக்கு அறிவித்தமையால், அவள் தான் இனிமேல் ஆஸ்பத்திரியில் அரை நிமிஷம் இருக்கமாட்டேன்; என் பெற்றோர் பந்து ஜனங்களிருக்கும் தன் பிறந்த ஊரிலேயே போய் நான் அங்கே மரிக்கும்படி என்னை அங்கே கொண்டுபோய்விடுங்கள் என்று சொல்லி, அப்படியே அங்கு போய்ச்சேர்ந்தாள். அவள் பாத்திமா, மாதாவை வேண்டிக்கொண்டாள். தினந்தோறும் அவள் ஜெபமாலையைச் செபித்து பாத்திமாவின் தண்ணீர் கொஞ்சம் குடிப்பாள். முதல் நாளிலிருந்து, தான் கொஞ்சம் சுகமாயிருப்பதாய்ச் சொன்னாள். அவள் செபம் செய்து முடிந்தபின்பு அநேக மணி நேரம் அவளுடைய நோவு, வருத்தம் குறைவதைக் கண்டாள். மேலும் அவள் கக்கும் இரத்தமும் குறைவாயிருந்தது. இப்படி மூன்று வாரத்துக்குப்பின்பு, தன்வசமிருந்த கொஞ்சம் தண்ணீர் முடிவாகிவிட்டது. அத்தோடு நோவு வருத்தமும் ஒழிந்துபோச்சுது. அப்படியே அவளுடைய கொடிய ரோகத்தின் சகல குறிகளும் மறைந்து போயின.

### 3. ஓர் மெய்யான புதுமை

செசிலியா அகுஸ்தா கொவேயா பிரேஸ்திஸ், வயசு 22. தோரிஸ் நோவஸ் என்னும் ஊரில் பிறந்தவள். சுவாஸப் பைகளின் காச வியாதியினாலும், Tubercular Peritonitis அடிவயற்றில் க்ஷயரோகத்தினாலும், Dropsy மகோதர வியாதியினாலும் பீடிக்கப்பட்டாள். மூன்று வருஷங்களுக்கு முன்னமே இதன் ஆதி அடையாளங்கள் ஆரம்பமாகத் தோன்றியிருந்தன. டாக்டர் ஆலோசனைப்படி கடைசித் தேவத்திரவிய அநுமானங்களையும் பெற்றுக்கொண்டாள். ஆயினும் தன்னை எப்படியாயினும், என்ன செலவானாலும் பாத்திமாவுக்குக் கொண்டுபோக வேண்டுமென்று விரும்பினாள். இதைப்பற்றி அகுஸ்துஸ் மெந்திஸ் என்னும் பெயருடைய நல்ல கத்தோலிக்காகிய ஒரு டாக்டரிடம்

ஆலோசித்தார்கள். அவருடைய பதில்: "நான் டாக்டர் ஆதலால் இப்படிப்பட்ட யாத்திரையை விலக்கி தடுப்பதே என் கடமை. ஏனெனில் அது மிக்க ஆபத்துக்குள்ளாகி விடும். ஆனால் மாதாவின்மேல் உங்களுக்கு மிக்க விசுவாசமிருந்தால், நானும் நல்ல கத்தோலிக்கனானதால் அதைத் தடுக்கத் துணியமாட்டேன். நல்லதல்லவென்று மாத்திரம் புத்தி சொல்வேன்" என்றார்.

வியாதிக்காரி தன் எண்ணத்தை விடவில்லை. 1923 ஜூலை-மீ 13-உ அத்தியந்த ஜாக்கிரதையோடு அவளைக் கோவா தெ இரியாவுக்குக் கொண்டுபோனார்கள். அந்த யாத்திரை அவளுக்கும் அவளுடன் போன பந்துக்களுக்குமே ஓர் கல்வாரி மலைக்குப் போவதுபோலிருந்தது. ஏனெனில் ஒவ்வொரு நிமிஷமும் அவள், உயிர் பிரிந்து செத்துபோவாள் என்று தோன்றினது.

திருஸ்தலத்திலும் அவளுக்குக் குணம் உண்டாகவில்லை. வாஸ்தவத்தில் வியாதிக்காரருக்கு திவ்வியநற்கருணை ஆசீர்வாதம் கொடுக்கும் அதே நேரத்திலேயே அவள் மறுபடியும் ஸ்மரணை தப்பி சோர்ந்து விழுந்தாள்.

வீட்டுக்குத் திரும்பிப்போகும் வழியில் சற்று இளைப்பாறும்படி ஓரிடத்தில் தங்கினார்கள். திடீரென வியாதிக்காரிக்குத் தாங்கக்கூடாத கொடிய பசி உண்டாயிற்று. தன் தோழர் தங்களோடு கொண்டுவந்திருந்த போஜனத்தில் மீதிப்பட்டிருந்ததை அவள் சாப்பிட்டாள். ஆரம்பத்தில் அவர்கள் அதற்குத் தடைசெய்யவில்லை. ஆயினும் பிற்பாடு அவளுடைய பசி குறைவதாய்க் காணாமையினால் அவளுக்கு ஏதோ தீமையுண்டாகுமென்றஞ்சி அவள் சமீபத்திலிருந்த சாப்பாட்டையெடுத்துக்கொண்டு போய்விட்டார்கள். சம்பவித்ததென்னவெனில் அவள் ஆச்சரியத்துக்குரிய விதமாய்ப் பேசத் தொடங்கினாள். அவள் பேசவும், சிரிக்கவும், பாடவும் தொடங்கினாள். அவள் முழுதும் ஆரோக்கியத்தையடைந்தாள். வைத்தியருடைய உத்தேசத்துக்கும், அபிப்பிராயத்துக்கும் முற்றும் மாறாக சகலமும் சம்பவித்தது. இவளுடைய டாக்

டர் இவள் இறந்துபோனுள் என்று எண்ணியிருக்கையில், ஓர்நாள் இவளே, அங்கே தான் செலுத்தவேண்டிய கொஞ்சம் பணத்தை செலுத்துவதுக்காக வந்து பணம் செலுத்துமிடத்தில் நிற்பதைக் கண்டார். "இது மெய்யாகவே புதுமை" யென்றூர்.

"நீர் மெய்யாகவே புதுமைகளை இன்னம் விசுவசிக்கிறீரா யென்றுள்." "ஆம் மெய்யாகவே நான் விசுவசிக்கிறேன்! இப்போது என் கண் முன்பாக காண்பதுமே மெய்யாகவே ஓர் புதுமை" யென்றூர்.

## 4. A Motor Accident

### மோட்டர்கார் விபத்து

பின்வரும் சரித்திரம் மிக்க அருமையானது. ஏனெனில் இச்சம்பவத்தில் அதி முக்கியமான ஆள் ஒரு டாக்டர். அக்காசியு தெ சில்வா ரிபெயிரு. ஆதலால் இச்சம்பவத்தின் அற்புத தன்மையை முறையாய் நிச்சயித்துத் தீர்மானிக்கவும் கூடியவர். 'Voz de Fatima' யென்னும் பத்திரிகைக்கு இவரே மிக்க விரிவாய் எழுதியனுப்பிய நிருபத்தினின்று சுருக்கமாய் நாம் இங்கே யெடுத்து விவரிப்போம்.

"1926-ஸு மார்ச்-மீ 9-உ மாலே $6\frac{1}{2}$ மணியளவில் நான் பிரசித்த வீதியில் காஞஸ் தெ சிஞ்ஞோரிய என்னப்படும் ஸ்டேஷனின் பக்கத்தில் (Beira Alta) நான் ஒரு மோட்டோர் சயிக்கிலே அதிவிரைவாய் ஓட்டிக் கொண்டு போனேன். ஒரு வண்டியில் போய் மோதாத படிக்குச் சற்றே நான் விலகும்போது ஒரு பெரிய வெடிச் சத்தத்தைக் கேட்டேன், அத்தோடு நானே ஆகாயத்தில் எடுத்தெறியப்படுவதாய் உணர்ந்தேன். இவ்விஷயத்தின் காரணம் யாதெனில் ஒரு (Tyre) ற்றயர், அதின் சக்கரத்தினின்று வெளியாகிவிட்டதிஞலும், (Air chamber) காற்றறையொன்று வெடித்துவிட்டதிஞலுமிருக்கலாம். நான் செத்துப் பிணமாகிவிடாதது ஒருபெரும் புதுமையே!

அது மகா மகா பயங்கரத்துக்குரிய தருணமாயிருந்தது. என் ஆவி பிரிந்துபோகும் கடைசித் தருணம் அடுத்து வருவதை நன்றாய் உணர்ந்தேன். நான் டாக்டராயிருந்ததினால், நான் மகா பயங்கரமான விதமாய்க் கீழே விழுந்ததும், இரத்த பிரளயம் பிரமாண்டமாய் ஓடுவதையும், அதை நான் ஒருவிதத்திலும் தடுத்து நிறுத்த சக்தியற்றவனாயும் இருப்பதைக் கண்டபோது இன்னம் சில நிமிஷ நேரத்துக்கதிகம் நான் உயிரோடிருப்பது கூடாத காரியமென்பதாகயெண்ணினேன்.'

அப்போது என் பெண்சாதியும், என் பிள்ளைகளும் அங்கிருந்து கால் மைல் தூரத்திலேயே என்னை எதிர் பார்த்துக்கொண்டிருப்பதால் அவர்களை நினைத்துக் கொண்டு பாத்திமா செபமாலை மாதாவைக் கெஞ்சி மன்றாடிக்கொண்டு "தேவ சித்தம் இது" என்று என் மனதில் சிந்தித்துக்கொண்டு சாவுக்காயத்தமாயிருந்தேன். அநேக நிமிஷமாக என் மனதில் பயங்கரமான அங்கலாய்ப்பும், ஆயாசமுமுண்டாயிருந்தது. ஆயினும் என் புத்தி இன்னும் குன்றாமல் தெளிவாயிருப்பதை நான் உணர்ந்த உடனே, நான் என் குடும்பத்தைக் காணுமட்டாக எனக்குயிர் இருக்கக் கூடுமென்றெண்ணினேன். அப்போது நான் ஒரு விதத்திலும் விவரிக்கக் கூடாத அத்தியந்த பத்தியோடும், அதி ஆசாரத்தோடும் பாத்திமாவின் மாதாவை நோக்கி பிரார்த்தித்துக்கொண்டு என் உயிரைக் காப்பற்றவும், உதவி புரியவும் வேண்டிக்கொண்டேன். அவளுக்கு ஓர் பொருத்தனையும் செய்தேன்.

இதே நேரத்தில் சம்பவித்த மறு சம்பவமாவது. இவ்விபத்து நேரிட்ட சில நிமிஷத்துக்குப்பின் இதைப் பற்றி என் பெண்சாதி கேள்விப்பட்டவுடனே, அவள் பிரசித்த தெருவிலேயே, என்னைப் பார்க்க ஓடிவருமுன் முழங்காலிலிருந்து கரங்களைக் குவித்து, பரலோகத்தை நோக்கித் தன் கண்களையுயர்த்தி, அவள் என்னை வந்து காணுமட்டும் என் உயிர் போகாது என்னைக் காப்பாற்றும் படி மாதாவைக் கெஞ்சி மன்றாடினதுமன்றி அவளும் ஒரு பொருத்தனை செய்துகொண்டாள்.

எனது நிலைமையைப்பற்றி நான் விரைவில் என் வைத்திய அறிவைக்கொண்டு, ஓர்வித ஆராய்ச்சி செய்துகொண்டேன். அதாவது:—என் வலது கால் இரண்டு இடத்தில் உடைந்திருந்தது. எலும்பு நொறுங்கிப் போயிற்று. அதின் ஓர் கடைசி முனை, தசைகளையும், தோலையும் என் உள் வஸ்திரங்களையும், என் கால் சட்டையையும், என் மோட்டார் வண்டியின் சாக்கையும் (Over-all) பீறிட்டு வந்து வெளியே நன்ருய்த் தெரிந்தது. வடிந்தோடும் இரத்தம் வெகு பிரளயமாயிருந்தது. என் புத்தி எனக்கப்போது மயங்கிப்போய் விட்டால் நான் மரிப்பதுக்கதுவே போதும். என் எலும்புகள் பல இடங்களில் உடைந்திருப்பதை நான் கண்டேன். ஏனெனில் என் வலது கை வீங்கிப்போய் அற்ப அசைவுண்டாகும் போதுண்டாகும் நோவும் வருத்தமும், மிகவே கடினமாயிருந்தது. என் கையும் கழுத்தைச்சுற்றிய எலும்பும், நான் அசைக்கும்படி அற்ப பிரயத்தனமாவது செய்தால் சகிக்கக்கூடாத உபத்திரவத்தை யுண்டாக்கின. என் வலது கண்ணிலிருந்து இரத்தம் பீரிட்டோடுவதையும் உணர்ந்தேன். அது முற்றும் கெட்டு குருடாய்ப் போயிற்றென்றும் எண்ணினேன்.

அப்போது சில வாலிப பெண்கள் அழுதுகொண்டு என் பக்கமாய் ஓடி வந்தார்கள். அவர்களில் ஒருத்தி ஒரு சிறு தொட்டியில் தண்ணீர் வைத்துக்கொண்டிருந்தமையால், என் வலது கண்ணை என் இடக்கையால் கழுவினேன். அங்கிருந்துதான் இரத்தம் ஊற்றுவதாய் நினைத்தேன். ஆயினும் அந்த கண்ணில், இன்னும் எனக்குப் பார்வையிருந்தது. அப்போது நான் அவர்களைப் பார்த்து என் தலையைச்சுற்றி ஓர் கைக்குட்டையைக் கட்டும்படி சொன்னேன். அவ்வாறு அதின் வலது சுவர்ப் புறத்திலுண்டான ஓர் காயத்தில் நின்று பீறிட்டோடும் இரத்தத்தைத் தடுக்க எண்ணினேன். அந்தக் காயம் மூன்று அங்குலம் நீளமாயிருந்ததுமன்றி அங்குள்ள தசைகளையும், எலும்புவரையும் கிழிகிழித்துக்கொண்டு போயிருந்ததாயறிந்தேன். இதுவு

மன்றி என் உடைந்த காலை நேராய் வைத்து ஒரு வெள்ளை வஸ்திரத்தைக் கீற்றுக் கீற்ருய்க் கிழித்து அந்தக் காலைச் சேர்த்துக் கட்டும்படியாயும் கேட்டேன். இரத்த ஓட்டத்தை இவ்வாறு தடுப்பதற்காக இதைச் செய்தேன். அதே நேரத்தில் என் வலது கையால், பெரும் இரத்தத் தாரையை நசுக்கிப் பிடிப்பதால் இரத்த ஓட்டத்தை நிறுத்தவும் பிரயாசைப்பட்டேன்.

இத்தருணத்தில் என் பெண்சாதியும், இரண்டு சிநேகிதரும் வந்தார்கள். அவர்கள் என்னைத் தூக்கி ஒரு மோட்டோர் காரில் வைத்தார்கள். அது எனக்கு உயிர் பிரியும் வேதனையாயிருந்தது. அவர்கள் என்னை என்னுடைய டிஸ்பென்செரிக்கே கொண்டுபோனார்கள். அங்கே எனது தோழர்களாகிய டாக்டர் அவுரேலியு கொன்சால்விசும், டாக்டர் ஜஸ்ஸ்தீனு லோப்விசும் என்னைப் பார்க்க வந்தார்கள். அப்போது மெய்யாகவே எனக்கிந்த விபத்து நேரிட்டு பூரணமாய் அரை மணி நேரம், கடந்து போயிருந்தது. அவர்கள் என் காயங்களுக்கு மருந்திட்டு அவசரமான ஆயத்தக் கட்டுகளை கட்டினார்கள். நடுச்சாமத்துக்குப் பின்பு, நான் என் பெண்சாதியை அழைத்து, ஒலிவேயிரா து கோந்தி என்னும் ஊர் பங்கு சுவாமியார் வந்து எனக்குப் பாவசங்கீர்த்தனமும், அவஸ்தை நன்மையும் தரும்படியாக அழைக்கும்படிச் சொன்னேன். அவர் வந்தபின் "சுவாமி இன்னம் அரை மணி நேரத்துக்குப்பின் நான் உயிரோடிருப்பேனே இல்லையோ தெரியாது" என்று சொல்லிக்கொண்டு நான் பாவசங்கீர்த்தனத்தை ஆரம்பித்தேன், என்று எனக்கு நல்ல நினைவிருக்கின்றது. அந்த நாள் முழுதும், நான் உயிரோடிருக்கமாட்டேன் என்பது எனக்கு நிச்சயமாய்த் தோன்றிற்று.

காலை 7 மணிக்கு ஓர் மடக்குக் கட்டிலில் என்னைக் கிடத்தி கொயிம்பிரா சர்வ கலாசாலையின் ஆஸ்பத்திரிக்கு ரெயில் வழியாய் என்னைக் கொண்டுபோனார்கள். அங்கே சாயுங்காலம் 1 மணிக்கு டாக்டர் பிசாயா பரேத்து

என்பவர் என்னை வைத்து எக்ஸ்ரேப் படமெடுத்து, என்னை ஒரே கட்டாய் கட்டிவிட்டார்.

என் தோலில் உண்டான காயத்தில் ஆரம்பத்தில் சுற்றப்பட்ட அந்த அழுக்குத் துணி இன்னம் ஒட்டிப் பிடித்துக்கொண்டிருந்தது.

என் தலையில் பட்ட காயத்திலிருந்து சில கல் துண்டுகளும், ரோட்டிலுள்ள சிறு கல் மணிகளும், வெளியே எடுத்தார்கள்.

இதெல்லாம் இப்படியிருந்தும், என்னுடைய காயங்களெல்லாம் இரணமாகி விஷமேறி யிருக்கவேண்டிய பற்பல காரணங்களிருந்தும், எங்களுடைய சகல உத்தேசத்துக்கும் முற்றும் விரோதமாயும், இதைவிட ஆயிரமுறை சிறிய காயங்களில் இயல்பாய் மிக்க சாதாரணமாய்ச் சம்பவிக்க வேண்டிய கெடுதியும் ஆபத்தும் ஒன்றும் சம்பவியாமலும், எனக்கும் என்னைப்போன்ற மற்றும் என் உத்தியோக சகோதரராகிய அநேக டாக்டர்களின் உத்தேசத்துக்கும், அபிப்பிராயத்துக்கும் முழுது மாறுயும் அதிசயப்படத்தக்க விதமாயும் என் காயங்களில் ஒருவித அற்ப வீக்கம் பெருக்கம் உண்டாகாமலுமிருந்ததுமன்றி எனக்கு ஒருவிதக் காய்ச்சலும் உண்டாகவில்லை. என் தலைமேலிருந்த மிகப் பெரியதும், அசுத்தமுமான காயத்தில் முதலாய் விஷம் ஏறவில்லை (Sceptic).

மேலும் ஓர் வீக்கம் பெருக்கம் உண்டானுல் அதில் சீழ்பிடித்து நாறியும் போகும். உடைபட்ட ஸ்தலங்களிலிருந்து திரளான இரத்தம் புறப்பட்டு வெளியாகி விட்டமையாலும் டாக்டர் பரேத்து அது $1\frac{1}{2}$ அல்லது $1\frac{3}{4}$ பயின்ற் மட்டுமிருக்கும் என்று கணக்கிட்டிருந்தபடியாலும்,—என் காலை வெட்டிவிடவேண்டியது அத்தியாவசியமாகவே யிருந்தது.

இதை, உண்மையாயும், பட்சபாதமில்லாமலும், நன்ருய் சீர்தூக்கி, வைதீக சாஸ்திர சம்பந்தமாய் ஆராயும் போது, இதெல்லாம் எப்படியாயிருக்கும் என்று அறியவுங்

கூடாது. காரணம் சொல்லவும் கூடியதல்ல. எப்படியோ மறைத்தும், குறைத்தும் வாயை மூடிமூடி பேசினுலுமே, இது ஏதோ மகா விசேஷித்ததும் சாதாரணமாய்ச் சம்ப விக்கக் கூடாததுமாயிருப்பதால், தேவாதீனமாயும், மிக அபூர்வமாயும், நேரிட்டிருக்கும் இச்சம்பவத்தை ‘இது **புதுமை**’ என்று சொல்லாதிருக்கக் கூடியதல்ல, வேறு எப்படித்தான் சொல்லுவதென்றும் எனக்குத் தெரிய வில்லை. நான் மேலே விவரமாய் சொல்லிக் காண்பித்தி ருக்கிற பிரகாரம், நான் பட்ட பாடுகளையும், அந்த நிலைமை யையும், ஆச்சரியத்தையும், தெளிவிக்கத்தக்க வார்த்தை இந்த ஒன்றே. **புதுமை!** இப்படி நான் உரைப்பதுக்கு மேற்சொன்ன காரணங்கள்தவிர இன்னமோர் காரணமு முண்டு. மற்றவைகளைவிட அது அதிக பலமானது. இதை இன்னும் அதிகமாய் ஊர்ச்சிதப்படுத்தி மனதில் ஸ்திரமாய் பதிப்பிக்கத்தக்கது. இதை நான் பிரசித்தமாய் அறிவிக்கத்தக்கதல்ல. அது இரகசியமானது.

நானே, டாக்டர் பிசாய்யாவுக்கு சொன்னதுபோல, என் காலை மாத்திரம் வெட்டிய பின்னுவது, நான் உயி ரோடு ஜீவிக்கக் கிடைக்குமானுல் அது எனக்கு பெரிய அதிஷ்டம் என்றெண்ணினேன்.

ஆயினும் இப்போது நான் என் காலையும் இழக்க வில்லை. முழுதும் பூரண சுகத்தோடும் இருக்கிறேன். மற்றப்படி நான் நொண்டி நொண்டி நடப்பதுமில்லை. எவ்வித தடையுமில்லை. எல்லோரையும்போல் நான் நன்ருய் ஜீவித்து என் குழந்தைகளைக் காப்பாற்றி வளர்க் கவும் கூடியவனுயிருக்கிறேன்.

இந்த **மகா பெரிய புதுமையின்** ஞாபகம் என் இரு தயத்தில் ஆழமாய்ப் பதிந்திருக்கும்படி கடவுள் கிருபை செய்வாராக.

இதற்குச் சம்பந்தமான இன்னமோர் விஷயத்தை நான் எழுத மறந்து போனேன். எனது சிநேகிதரும் டாக்டருமாகிய ஒருவர் பாத்திமா மாதாவின் தண்ணீர்

புட்டி ஒன்று ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வந்து என்னிடம் தந்தார். நான் அதில் கொஞ்சம் குடித்து வந்ததுமல்லாமல் எனது காயக் கட்டுகள் மேலும் தெளித்துக் கொண்டு வந்ததுமுண்டு.

**அக்காசியு தே சில்வா ரிபேயிரு.**

லிஸ்போன்,
அகுஸ்தா வீதி—271—iii.
13, செப்டெம்பர் 1927.

## 5. அது தற்கொலையாகும்!

தோணு எமிலியா தெ ஜெசூஸ் மார்க்கிஸ், லொஸாதா ஊரில் (போர்த்து) பிறந்தவள். வயசு 32. தன் 15-ம் பிராயமுதல் வியாதியாயிருந்தாள், கடைசி ஆறு மாசமாக தன் படுக்கையை விட்டு இறங்காமலும், அசையவுமே கூடாமலும் கிடந்தாள். இவளுடைய வைத்தியர் ஜுவக்கீம் ஹெர்மானு மெந்திஸ் தெ கார்வால்யு, வைத்திய சாஸ்திரத்தாலானதெல்லாம் செய்தும் சகலமும் வியர்த்தமாய்ப் போயிற்று. நாளுக்கு நாள் அவள் நிலைமை அதிக மோசமாயிற்று. அவளுடைய நோவு உபத்திரவம் ஓயாமல் அதிகப்பட்டுக்கொண்டிருந்தது. பசியென்பது அவளுக்குக் கிடையாது. அவள் ஏதாவது சாப்பிடுவது மிக்க அரிதாயிற்று. அதுவும் டாக்டர் இருந்து கட்டாயப் படுத்தும்போது மாத்திரமே. இவ்வாறு இவள் செத்த பிணம் போலவே காணப்பட்டாள்.

இப்படிக் கிடக்கையில் இந்த மாகாணத்தில் உள்ள வேறொரு ஸ்திரீ பாத்திமாவுக்குப் போய் ஆரோக்கியம் அடைந்ததாகக் கேட்டு தானுமே அங்கே போகவேண்டுமெனத் தீர்மானித்தாள். ஆனல் டாக்டரோ, ஒரே தீர்மானமாய் அதைத் தடுத்ததுமல்லாமல் அப்படிச் செய்வது திட்டமாக **ஓர் தற்கொலையாகுமென்றார்.** அப்படியிருந்தும் அவள் 1929 மே-மீ 11-ம் உ புறப்பட்டாள். அந்த யாத்திரை மெய்யாகவே வேதசாட்சிகளின் வேதனைக்குச் சமமாயிருந்தது. அது ஆச்சரியமல்ல, எல்லோரும் எதிர் பார்த்ததுதான்.

பாத்திமாவில் கழித்த இரண்டு இரவிலும் ஒரு நிமிஷமும் கண் மூடக் கிடைக்கவில்லை. அத்தோடு அவள் அநுபவித்த அவஸ்தைக்கும் வேதனைக்கும் முடிவில்லாதிருந்தது. 13-ம் உ அதிகாலையில் அவளை வியாதிக்காரரின் மண்டபத்துக்குக் கொண்டுபோனார்கள். அங்கே வியாதியஸ்தருக்காகச் செய்யப்படும் பூசை ஆசீர்வாதத்துக்காக அநேக மணி நேரம் காத்துக்கொண்டிருந்தாள். அத்தருணத்தில் அவளை அங்கே கவனித்துக்கொண்டிருந்த மாதாவின் தாசி "அவள் மரணித்துவிட்டதுபோலத் தோன்றுதே" யென்றாள். மத்தியான வேளையில் மாதாவின் அற்புத சுரூபம் சுற்றுப்பிரகாரமாய் அந்த மண்டபத்துக்குக் கொண்டுவரப்பட்டபோது, மரண படுக்கையில் கிடந்த இந்த பெண்பிள்ளைக்கு ஏதோ ஓர்வித உணர்ச்சி உண்டாயிற்று. அது இப்படி அப்படியென்று இவள் சொல்லவும், விவரிக்கவும் அவளுக்குக் கூடாத காரியமாயிற்று. அவளுடைய நோவும், வருத்தமும் நீங்கிப்போச்சுது. இவளுடைய சரீரத்தின் இடது பாகம் இதுவரையும் முழுதும் முடங்கி உயிரற்றுக் கிடந்தது, திடீரென இத்தருணத்தில் அப்பாக முழுவதிலும், ஏதோ உயிர் ஓட்டம் உட்பிரவேசித்ததுபோல உணர்ந்தாள். உடனே தான் நடக்கக்கூடிய சக்தியுண்டாகிவிட்டதாய் அவளுக்கு காணப்பட்டது. கடைசி சுற்றுப்பிரகாரம் ஆனபின்பு தானாகவே இவள் எழும்பி அங்குள்ள வைத்தியர் ஆபீசுக்குப் போனாள்.

அங்கே வைத்தியர்கள்—டாக்டர் மெந்திஸ் தெ கர்வால்யுவும், இவர்களில் ஒருவர்—இவள் விஷயத்தைப் பற்றி ஆராய்ச்சிசெய்துகொண்டிருக்கையில், இரண்டு பெண்பிள்ளைகள் அந்த அறையினுள்ளே பிரவேசித்தார்கள். சில மாசங்களாக அங்கே சம்பவித்த அற்புதாதிசயங்களுக்குள் இவர்களுடையதே மிகப் பெரிய புதுமை. இவர்கள் இருவரின் பெயர் தோனா மரிய தெஷேயிரா லோப்பிஸ், தோனா மரியதுஸ் சாந்துஸ் நூனேஸ், இருவரும் லிஸ்போனில் உள்ளவர்கள். இவர்கள் உள்ளே பிரவேசித்தவுடனே சம்பவித்த காக்ஷி மிகவே வியப்புக்குரிய

தாயிருந்தது: இவர்கள் ஒருவர் ஒருவரைக் கட்டி மினவி மகா ஆனந்த சந்தோஷத்தோடு ஒருவர் ஒருவருக்கு சுப மங்களம் கூறி வாழ்த்தினுர்கள். அங்கிருந்த எல்லோரும் இதைக்கண்டு அகமகிழ்ந்தார்கள்.

1931-ஆம் மார்ச்-மீ 25-ம் உ ஏறக்குறைய இரண்டு வருஷத்துக்குப்பின் ('Broteria') புரோத்தேரியாவென்னும் பத்திரிகையின் பத்திராதிபராகிய புரோபெஸர் ஜுவக்கீம் தெ சில்வா தவாரிஸ் என்பவர் இதைப்பற்றி எழுதி விசாரித்தபோது மெந்திஸ் தெ கர்வாலியு டாக்டர் எழுதிய பதில் கடிதமாவது:

"1929-ஆம் மே-மீ 13-ம் உ பாத்திமாவில் சொஸ்தமடைந்த தோனு எமிலியா ஜேசூஸ் மார்கசிஸ் இதுபரியந்தம் பூரண சுகத்தோடிருக்கின்றுள். இதையுமக் கறிவிப்பது எனக்கு மிக்கச் சந்தோஷம்."

## 6. கட்டிகளும், புளவைகளும்

மற்ற இரண்டு பெண்பிள்ளைகளும், ஆரோக்கியமடைந்ததைப்பற்றியும் நீங்கள் அறிய விரும்புவீர்கள். ஆதலால் அதைப்பற்றியும் சுருக்கமாய்ச் சொல்லுகிறேும் கேளுங்கள்.

தோனு மரிய தெ கேஷயிரா லோப்பிஸ், என்பவள் கீர்த்திபெற்ற ஓர் குடும்பத்தில் உள்ளவள். லொசாதாவுக்கு சமீபமாய்ச் சீவித்துவந்தவள். இவள் 10 வருஷ காலமாகப் பட்டநுபவித்த ஓர் பெரிய வியாதியினல் 500-க்கு அதிகமான கட்டிகள் அவள் தேகத்தில் உண்டாகி உபத்திரவப்பட்டாள். உச்சிமுதல் உள்ளங்கால் பரியந்தம் (Cork) கோர்க் என்னும் மரப்பட்டையினல் மூடி ஒட்டப்பட்டவள்போல் ஆனுள். இவளுடைய டாக்டர் இவளுடைய ரோகத்தைப்பற்றி விவரித்த விதம் இதுவே. இதுவுமன்றி இவள் வயிற்றில் ஓர் புளவையும் புறப்பட்டது. போர்த்து* (Oporto) நகரில் உள்ள கீர்த்தி

* O Porto = கப்பல் துறைமுகம் என்றர்த்தம். = இங்கிலீஷில் Oporto இது லிஸ்போனுக்குப்பின் இரண்டாவது முக்கிய பட்டணம்.

பெற்ற டாக்டர்களில் ஒருவரென்கிலும் இவளைச் சொஸ்தப்படுத்தக்கூடாதுபோயிற்று. 1928-ஆம் ஒக்டோபர்-மீ 13-ம் உ இவள் பாத்திமாவுக்குப் போனாள். அங்கே **தேவநற்கருணை ஆசீர்வாதத்தை** இவள் பெறுகிற அந்த நேரத்திலேயே திடீரென **ஆரோக்கியத்தையடைந்தாள்.** நவம்பர்-மீ 20-ம் உ டாக்டர் மெந்திஸ் தெ கர்வால்யு இவளைப் பார்த்து இவள் இதன்முன் அநுபவித்த வியாதியின் அற்ப கறை முதலாய் இப்போது இல்லையென்று அறிவித்தார்.

## 7. மூளையில் கட்டி

### பாத்திமாவின் தண்ணீர்

மற்ற பெண்பிள்ளை, தோனா மரிய ஜுசேதுஸ் சாங்துஸ் நூனெஸ், வயது இருபத்தெட்டு. அல்க்கோசேத்தில் பிறந்தவள். சிலகாலம் லிஸ்போன் நகரத்திலும், வசித்திருந்தாள். 1914-ம் ஆண்டில் (Pulmonary Tuberculosis) காச வியாதியின் முதல் அடையாளம் தோன்றின. செய்யக்கூடிய சிகிச்சையெல்லாம் செய்தார்கள். ஆயினும் வியாதி நாளுக்குநாள் விர்த்தியாகிக்கொண்டேயிருந்தது. 1925 ஆம் முதல், குடல்களில் நோயுண்டாகி வேறு நூதன சிக்கல்கள் உண்டாயின. 1929 ஜனவரியில் அவள் மூளையில் ஓர் வியாதியின் கொடிய அடையாளங்களும் தோன்றின. உடனே, இவ்வித ரோகங்களில் விசேஷ திறமையுள்ள டாக்டர் ஏகஸ் மொனிஸ் என்பவரை அழைத்துக் காண்பித்தார்கள். அவர் வந்து பார்த்து அந்த வியாதிக்காரி மிக்க ஆபத்தான நிலைமையில் இருப்பதால் அவர் அவளுக்குச் செய்யக்கூடியது ஒன்றுமில்லையென்றும் சொல்லிவிட்டார். வீட்டை விட்டு வெளியே வந்தவுடனே அவர் ஓர் சிநேகிதனுடன் திட்டமாய் உரைத்ததாவது “மூளையில் ஓர் கட்டி இருக்கிறது. சில நாளைக்குள் நோயாளி மகா பயங்கரமான மரணத்தை அடைவாள். ஓர் புதுமையினால்தான், அவள் சுகமடையக்கூடும்” என்றார்.

அப்படியே இரண்டு நாளைக்குப்பின்பு, திங்கட்கிழமை யன்று இரு முறை அவளுக்கு கடின ஆபத்துகள் நேரிட்டது. இரண்டாம் முறை அவளுக்குண்டான அந்த உபத்திரவம் 2 மணிநேரமட்டும் நீடித்திருந்தது. பயங்கரத் துக்குரிய வேதனைகளும் வலியும் உண்டாச்சுது. இந்த பரிதாப நிலைமையை அவள் படுக்கையண்டையில் நின்று பார்த்துக்கொண்டிருந்த டாக்டர் கஸ்தியோடு அவ ளுடைய பந்துக்களை நோக்கி இவளுடைய நிலைமையில் எவ்வித மாற்றமும் காணுதிருந்தால் ஆண்டவர் அவளைச் சீக்கிரம் இவ்வுலகினின்று எடுத்துக்கொள்ளும்படி எல் லோரும் வேண்டிக்கொள்ளும்படி சொன்னார்.

இதைக்கேட்ட பந்துக்கள் உடனே பாத்திமா ஜெப மாலை மாதாவை நோக்கி வேண்டிக்கொண்டார்கள். சிறு கட்டுத் துணிகளை புதுமையுள்ள பாத்திமா தண்ணீரில் நனைத்து வியாதிக்காரியின் தலைமேல் வைத்தார்கள். அப் போது அவளுக்கு உணர்வு உண்டாயிற்று. சில நாட் களாக அவள் அதே ஸ்திதியில் இருந்துகொண்டிருந்தாள். வியாழக்கிழமை, அவள், பாத்திமா இராக்கினி தன்மேல் இரங்கி தன் விண்ணப்பத்துக்கு செவிகொடுத்தால் பாத்தி மாவுக்குத் திருயாத்திரை போவதாக நேர்ச்சை நேர்ந்தாள். அதன்பின் சம்பவித்ததை அவளே விவரிப்பதாவது: "சாயங்காலம் $6\frac{1}{2}$ மணிக்கு என் ஜீவிய காலத்தில் ஒரு போதும் இருந்ததைவிட அதிக விசுவாசம் எனக்குண்டா யிற்று. அப்போது என் பக்கத்தில் நின்று இரவும் பக லும், அயராது எனக்குப் பணிசெய்துகொண்டுவந்த என் சகோதரியைக் கூப்பிட்டு என்னேடுகூட பாத்திமா மாதா வுக்கு ஜெபமாலையைச் செபிக்கும்படி சொன்னேன். ஜெப மாலையை நாங்கள் ஆரம்பிக்கு முன்னமே என் விசுவாசம் இன்னும் அதிகமாய் கிளம்பி, என்னைச் சூழ்ந்தாற்போல் தோன்றியது. அப்போது ஏங்கி ஏங்கி கண்ணீர் சிந்திக் கொண்டு மறுபடியும் ஓர் முறை 'மகா பரிசுத்த மாதாவே, எனக்குதவிசெய்யத் தீவிரியும்! எனக்கு ஆரோக்யம் அளித்தருளும்!' என்றேன். அப்படி சொல்லிக்கொண்டு பாத்திமாவின் ஜலத்தையும் கொஞ்சம் குடித்தேன்:

அக்ஷணத்தில் எனக்கு என்ன நேர்ந்ததென்பதை நான் விவரித்துச்சொல்லக் கூடியதேயல்ல! நெடுநேரம் நான் கூவி அழுதேன். குடும்பத்தோர் எல்லோரும் ஓடிவந்தார்கள். நான் புன்னகையோடு அவர்களை ஏறிட்டுப்பார்த்து, 'அழாதேயுங்கள். மாதா என் மன்ருட்டுக்குச் செவி சாய்த்தாள். என் நோவு பறந்துபோய்விட்டது. என் ஆறுதலுக்காகவே அப்படி நான் உறக்கக் கூவினேன்' என்ருள். அப்போது அவள் படுக்கைமேலே முழங்காலில் நின்று மகா பக்தி உருக்கத்தோடு நன்றியறிந்த தோத்திர ஜெபம் செய்தாள்.

அவளைப்பார்த்துவந்த டாக்டர் ஏப்ரல்-மீ 8-ம் உ இவளைப்பற்றி எழுதியதாவது, "அந்த வியாதிக்காரிக்கு இரண்டாவது முறை உண்டான கடின வலி உபத்திரவத்துக்குப்பின், அவள் அதிக நேரம் உயிரோடிருக்கமாட்டாளென்று எனக்கு நிச்சயமாய் தோன்றியதுமன்றி, அவள் வேதனையை தணிக்க நான் செய்யக்கூடியது ஒன்றுமேயில்லையென்றும் எனக்கு நிச்சயமாய் விளங்கிற்று. ஆதலால் ஒரு வாரத்துக்குமேல் நான் அவளைப்பார்க்க போகவுமில்லை. மேலே குறிப்பிட்டிருக்கும் சம்பவங்கள் நேரிடுமுன், அவள் மரணத்தறுவாயையடுத்திருந்தனள். ஆனல் தற்காலம் அவள் நிலைமை மிக்க நன்ருயிருக்கிறது. அவளுடைய சகல அவயவங்களும் சொஸ்தமடைந்து திடப்பட்டுவிட்டன. சம்பூரண சுகநிலையை காண்பிக்கின்றன. அவளுடைய சுவாஸப்பைகளும், கருவிகளும் அதேபிரகாரம் ஆரோக்கிய நிலையையடைந்திருக்கின்றன."

## 8. அவள் மரித்துவிட்டாள்!

தோனு எமிலியா மர்த்தீன்ஸ் பப்தீஸ்தா, வயசு 40. (பர்சேலுஸ்) சந்தியாகு தெ அல்திரேவில் பிறந்தவள். ஆறு வருஷகாலம் வியாதியாய் ஆஸ்பத்திரியில் இருந்தவள். தன் படுக்கையைவிட்டு இறங்கக்கூடாமலும், அதினின்று அசையவுமே சக்தியற்றவளாயுமிருந்தாள். அவள் சுகமடையக் கூடுமென்னும் நம்பிக்கையற்றுப் போச்சுது.

அவள் அன்னபானம் அற்பமேனும் அருந்தவோ, சில துளி பாலாவது உள்ளேயிறங்கவோ, வயிற்றில் தங்கவோ, கூடாமல் போயிற்று. இதெல்லாம் இப்படியிருந்தும், இவளுடைய விசுவாசம் மிகப்பெரிது. ஆகையால் இவள் பாத்திமாவுக்குப் போகவேண்டுமென வெகுவாய் விரும்பினாள். ஆயினும் இவள் மிக்க ஏழையாயிருந்தமையால் அங்கு போவது கூடாத காரியமாயிருந்தது. இதையறிந்த சில புண்ணியவான்கள் ஒன்றாய்க்கூடி அவளையொரு மோட்டர்கார் வண்டியில் வைத்துக்கொண்டு போவதற்கு வேண்டிய பணத்தைத் தண்டிச் சேர்த்து 1928-ஆம் ஒக்டோபர்-மீ அவளை அவள் படுக்கையிலிருந்து தூக்கி வண்டியில் வைத்து இரு கன்னியாஸ்திரிகளும் ஓர் நர்சுமாக பாத்திமாவுக்குப் போனார்கள். வழியில் உபோர்த்து என்னும் நகர் போய்ச் சேர்ந்தவுடனே அவள் நிலைமை மிகவே ஆபத்தாய்த் தோன்றினமையால் அங்கே தங்கி அவளுக்கு அவஸ்தைபூசுதல் முதலிய கடைசி தேவதிரவிய அநுமானங்களைக் கொடுப்பது நலமென எண்ணினார்கள். அப்படியே அவள் மகா பத்தி வணக்கத்தோடு அந்த தேவதிரவிய அனுமானங்களையும் பெற்றாள். அதன் பின் அவள் அவர்களைப் பார்த்து ஆண்டவரைக் குறித்து நீங்கள் திரும்பிப் போகாதேயுங்கள், என்று கெஞ்சிக் கேட்டாள். இப்படி ஒரு முறை மாத்திரமல்ல. யாத்திரையில் பலமுறை இவளுடைய வியாதியின் ஆபத்தான குறிகளும், அடையாளங்களும் பலவிதமாய்க் காணப்பட்டபோதெல்லாம் இவள் இப்படியே கெஞ்சுவாள். இவ்வித ஆபத்தான அடையாளங்கள் காணப்பட்ட ஒவ்வொரு தடவையும் இதோ, அதோ அவள் உயிர் பிரிந்துவிடும் என்பது போலவே தோன்றியது. கடைசியாய்த் திரு ஸ்தலம் போய்ச் சேர்ந்தாள். அங்கே ஒரு கட்டிலின்மேல் கிடத்தி தூக்கிக்கொண்டு ஆஸ்பத்திரிக்குப்போய்ச் சேர்ந்தார்கள். அங்கிருந்த அடுத்த நாள் கோவிலின் முன்பாக இருக்கும் வியாதிக்காரர் மண்டபத்திற்குக் கொண்டுபோனார்கள். அங்கே, பலமுறை இவளுக்கு உணர்வற்றுப் போயிற்று.

இத்தருணத்தில் ஓர் முறை இவளை ஆத்திரத்தோடு உற்றுப்பார்த்த ஒரு வைத்தியர் இவள் மரித்துவிட்டாள் என்றார். அப்போது அவளண்டையில் நின்றவள் தோனு பிரான்ஞ்சீஸ்கா பித்திப்பால்தா மாதாவின் ஊழியரின் சபையைச் சேர்ந்தவள். ஜாதியில் இத்தாலியக்காரி. நோயாளிக்குக் காவலாய் நின்று அங்கு உதவிபுரிந்தவள். இவள் வைத்தியரை நோக்கி “ஐயா என்னை மன்னியுங்கள்: அவளுக்கு இன்னம் உயிரிருக்கின்றது” என்றாள். “அது உனக்கெப்படித் தெரியும்? தயவுசெய்து சொல்லம்மா!”

“இருந்திருந்து அவள் நாடியடிப்பது எனக்குக் கேட்கிறது. அதுவும் மிக்க பலவீனமாய்த்தான்.”

அப்போது அவளுக்கு இன்ஜெக்ஷன்செய்து, அதனால் உயிரும் தெளிவும் உண்டாகும் என்றெண்ணினார்கள். சற்றும் பிரயோசனப்படவில்லை. ஒரு அணுவளவெங்கிலும் தெளிவும் உயிரும் தோன்றவில்லை. இச்சமயத்தில் வியாதிக்காரர் ஒவ்வொருவருக்கும் கொடுக்கும் தேவநற்கருணை ஆசீர்வாதம், இவளுக்கும் கொடுக்கும் சமயம் வந்து, இவள் அதைப் பெற்றவுடனே, இவள் ஏதோ ஆழ்ந்த நித்திரையினின்று விழிப்பவள்போல் கண் திறந்தாள். அதுமுதல் கொஞ்சம் கொஞ்சமாய்த் தெளிவுண்டாகி, பூரண உணர்ச்சியும், அறிவும் உண்டாயிற்று. அப்போது அவள் ஒருவரும் விவரிக்கக்கூடாத சுகத்தோடு, உரத்த சத்தமாய்க் கூவி, “எனக்குச் சுகமாய் விட்டது,” என்று சொன்னதோடு தன் கைகளை பரமண்டலங்களுக்கு நேரே நீட்டி “பாத்திமா மாதாவுக்கு ஸ்துதியும், தோத்திரமும் உண்டாகக்கடவது” என்றாள்.

உடனே இவள் எழும்பி நிற்க எத்தனித்தாள். ஆயினும், மாதாவின் ஊழியரில் அங்கு நின்ற சில ஆண்பிள்ளைகள் அப்படி அவள் செய்வதினால், உடனே திரளான ஜனங்கள் பிரமிப்போடு அவளைச் சுற்றி சூழ்வதினால் உண்டாகக்கூடிய உபத்திரவத்தை விலக்கும் பொருட்டு, அவளை அங்கேயே நிறுத்தி, கடைசி சுற்றுப் பிரகாரம் திரும்பிப்போய் முடியுமட்டும் அங்கேயே வைத்



தேவநற்கருணை ஆசீர்வாதம் பெற்றவுடன் திடீரென காசவியாதியினின்று
சுகமடைந்த ஓர் வியாதிக்காரி.

துக்கொண்டிருந்தார்கள். அதன்பின் வைத்தியரின் விசாரணைச்சாலைக்குக் கொண்டுபோனார்கள். அங்கே வழக்கமாய் நடக்கும் பரிசோதனை நடந்தது.

## 9. சிறு பிள்ளைகளின் சங்கீதம்

கன்னிமரியாயி நமது தாய். சகல தாய்மாரிலும் உத்தம தாயார். தாய்மார் தங்கள் பெற்ற பிள்ளைகள் உயிர் பிரியும் காக்ஷியைக் கண்ணுற்று மனம் பதைத்துத் துடிப்பதையும், படும் தாங்கொணு மனோவேதனையையும், உலகில் உள்ள மற்றெல்லோரையும்விட தேவமாதா நன்றாய் அறிவாள். ஆகையால் இரக்க உருக்கமுள்ள இருதயமுடைத்தான இந்த ஆண்டவள் இவ்வாறு அவஸ்தைப் படும் தாய்மாருடைய வேண்டுதல்களுக்கு மனமிரங்கி மிகவும் நம்பிக்கையற்ற தருணங்களிலுமே அடிக்கடி அவர்களுக்குச் சகாயம் புரிந்து புதுமைகளைச் செய்வதுண்டு.

1928 ஒக்டோபர்-மீ 13-ம் உ ஓர் ஏழைப் பெண்பிள்ளை, தான் பெற்றெடுத்த ஊமையும் குருடுமான ஓர் சிறு பெண் குழந்தையைக் கையில் ஏந்திக்கொண்டு அற்புத ஜல ஊற்றின் அண்டையில் நின்றாள். திடீரென அந்த சிறு குழந்தை வாய் திறந்து அம்மா என்று கூவினதோடு, தனது கழுத்தில் தொங்கிக் கிடந்த பாத்திமா மாதாவின் சிறு சுரூபத்தையும் (Medal) தன் சிறு விரல்களால் பிடித்து அதை அதிசயத்தோடு உற்றுப்பார்த்தது. இப்படி கண் திறந்து பார்த்தது தன் ஜீவியகாலத்தில் இதுவே முதல் தடவை. அப்போது அதன் தாய் அடைந்த ஆனந்த சந்தோஷம் இத்தன்மையென்று நாவால் விவரிக்கக்கூடியதேயல்ல. அவள் சற்றே மதி மயங்கினவள்போல தன் பிள்ளையை யெடுத்து, மார்போடணைத்து, திரும்பத் திரும்ப முத்தமிட்டு ஆனந்த சந்தோஷங்கொண்டாள். இதைக் கண்ட திரளான ஜனங்களின் மகிழ்ச்சியும், சந்தோஷமும், இம்மட்டென்று கணக்கிடத்தக்கதல்ல. திரளான ஜனங்கள் தண்ணீர் ஊற்றண்டை ஓடிவந்து கூடினார்கள். ஒவ்வொருவரும் அக்குழந்தையைத் தங்கள் கண்ணால் காண விரும்பி

கிட்டே நெருங்கிப்போனார்கள். அநேகர் அதைத் தொடவும் ஆசித்தார்கள். உடனே அங்கு நின்ற ஓர் மனிதன், அந்தப் பிள்ளையைத் தன் கையில் தூக்கி, உயர்த்தி யெல்லோருக்கும் காண்பித்தான். இதனால் எல்லோரும் அதைக் கண்டு திருப்தியடைந்தார்கள். அந்தப் பிள்ளையும் அக்கூட்டத்தில் அகப்பட்டு, மூச்சுவிட இடமில்லாமல் தனக்கு மோசம் வராது தப்பிப் பிழைத்தது.

## 10. மூளையையும் முதுகெலும்பையும் சார்ந்த ரோகம் (Meningitis) ஆரோக்கியமானது

ஜீயோவெனினு, மாக்சிமியானு கொரேயா சான்ஷேஸ் தெ கோஸ்தா பெரெயிராவும், பெல்மேயிரா பெரெயிராவும் ஆகிய, இவர்கள் இருவரின் புத்திரனுக்கு 4 வயதிலேயே மகா கொடிய ஓர் வியாதி உண்டாயிற்று. 1924 நவம்பர் மாதத்தில் மகா பயங்கரத்துக்குரிய குறிகள் தோன்றின. அப்பிள்ளை அசமந்த குணமுடையதாகையால், அங்குமிங்கும் அசையவுமே சக்தியற்றவனுமானான். படுத்த படுக்கையில் செத்த பிணம்போல காணப்பட்டான். வைத்தியன் அவனைப் பார்வையிட்டு, இது மூளையையும், முதுகெலும்பையும் பற்றிய மிக்க கடினமான ரோகம் என்றும், ஆயுள் முடிவு அதிசீக்கிரம் உண்டாகும், என்றும் சொன்னான். இதே தருணத்தில் இந்த நிர்ப்பாக்கிய பெற்றோரின் சிநேகிதியான ஒரு பெண்பிள்ளை அங்கே வந்தாள். இவள் பாத்திமாவின் ஜலப்புட்டியொன்றை இவர்களுக்குக் கொடுத்தாள். பெற்றோர் அந்த தண்ணீரை மரணப்படுக்கையில் கிடக்கும் தங்கள் பிள்ளைக்குக் கொடுத்தார்கள்.

இருபத்துநாலு மணி நேரத்துக்குப்பின் அவனுக்கு உயிரின் அறிகுறிகள் காணப்பட்டன. பிள்ளை செத்தே போமென்று கைவிட்டுப்போன வைத்தியனைக் கூப்பிட்டார்கள். அவர் பிள்ளையைப் பார்த்து, மிகவே ஆச்சரியமடைந்து அது சுகமாயிருக்கிறதென்றும், ரோகம் நீங்கிவிட்டதென்றும் சொன்னார்.

மிக்கேல் வியெயிரா தெ சொவுஸா பாஸ்து ஐந்து பிராயமுடைய ஓர் சிறந்த பிள்ளை, பிராகா (Braga) என்னும் அதிமேற்றிராசனத்தைச் சேர்ந்த பார்ஸலோனு (Barcelona) நகரில் பிறந்தவன். அந்த பாலிய வயதிலிருந்தே பாத்திமா மாதாவின்மேல் மகா பக்தியும், விசேஷ வணக்கமும் உடையவனுய் காணப்பட்டான். பெற்றதாயின் மடியிலிருந்தே தேவமாதாவின்மேல் பக்தியையும் பாலைப்போல் குடித்து கற்றுக்கொண்டான். மே மாசத்தில் நன்ருய் வெயிலடித்த ஓர் தினத்தில் இந்த சிறுவன் மகா பரிதாபத்துக்குரிய விதமாய் கதறி அழுது கொண்டு தனக்கு நேர்ந்த தாங்கொணு தலைநோயை நீக்கும்படி பாத்திமா மாதாவைக் கெஞ்சி மன்ருடினுன். இந்த சப்தத்தைக் கேட்ட தாயானவள் அஞ்சி, தாமதமில்லாமல் வைத்தியரை அழைத்தாள். இவர் பார்த்து மிகவே ஆராய்வுக்குள்ளாகி வேறு மூன்று வைத்தியருடனும் கூடி ஆலோசித்தார். அந்த நோய் மிக்க கடினமானதென்றும் மூளை சம்பந்தமானதென்றும், அதுவுமன்றி சுவாஸப்பைகளுடனும் ஈரல் குடல்களுடன் பலவாறு தொற்றி சிக்கலுண்டாயிருப்பதாயும், ஒரே வாக்காய் நிச்சயித்தார்கள். உபோர்த்து நகரிலுள்ள இவ்வித வியாதியில் பெயர்பெற்ற ஓர் வைத்தியரையும் வரவழைத்தார்கள். அவரும் வந்து பார்த்து, மற்ற வைத்தியர்களின் அபிப்பிராயத்தையே உறுதிப்படுத்தினதோடு, பிள்ளையின் தாயை அழைத்து "அம்மா, நீங்கள் மனங் கலங்காதீர்கள். வியாதிக்காரன் எந்த அர்ச்.-வர் மேல் அதிக பக்தி வைத்திருப்பானே அந்த அர்ச்.-வரிடம் அவன் வேண்டிக் கொள்ளவேண்டும்" என்று சொல்லிப்போனுர். வைத்தியர் தனக்குச் சொல்லும் ஆறுதலின் அர்த்தம் இன்னதென்று தாய்க்குத் தெரித்தது.

அந்த வைத்தியர் வீட்டைவிட்டு வெளியேறினவுடனே அவள் தன் ஜெபக்கூடத்தின்முன்பாக ஓடிப்போய் அங்கிருந்த பாத்திமா ஜெபமாலைமாதாவின் சுரூபத்தின் பாதத்தில் விழுந்து தன் புத்திரன் பிழைக்கும்படி பிரார்த்தித்தாள். அப்படியிருந்தும் அந்த பிள்ளைக்கு

வருத்தம் அதிக உரமாயிருந்தது. அவன் "என் மாதாவே, பாத்திமா மாதாவே, எனக்கு உதவி புரியும்" என்று கூவிக்கொண்டிருந்தான். இப்படியிருக்கையில் இவனுக்கு எந்த மருந்தைக் கொடுத்தாலும் அதில் பாத்திமாவிலுள்ள அற்புத ஜலத்தின் சில துளிகளாவது விட்டுக் கலக்காமல் அவன் அதைச் சாப்பிடுவதில்லை. ஏன் என்பது ஆண்டவருக்குத்தான் தெரியும். சில நாளைக்குப்பின் அவன் படுக்கையினின்று துள்ளி எழும்பி நல்ல சுகத்தோடே ஓடியாடி விளையாட ஆரம்பித்தான். நல்ல சொஸ்தமும் அடைந்தான். மேற்சொன்னபடி இவனை வந்து பார்த்த அந்த கெட்டிக்கார வைத்தியர் இவன் ஆரோக்கியம் அடைந்ததைப்பற்றி அறிய நேரிட்டது. இவர் வியாதியின் பற்பல நிலைமைகளையும் குறிகளையும் ஆழ்ந்து ஆராய்ந்து முன் குறித்திருந்தார். சொஸ்தப்படுத்த மனுஷ சக்தியால் கூடியதல்லவென்றும் அபிப்பிராயப்பட்டிருந்தார். ஆகையால் இதைப்பற்றி சகல விபாத்தோடும் ஓர் வியாசத்தை எழுதி பரீஸ் நகருக்கு அனுப்பினர். வைத்திய ஆராய்ச்சி (Revue de Médecine) என்னும் பத்திரிகையில் இது பிரசுரமாகி இது ஓர் நவமான சம்பவம் என்றும் குறிப்பிடப்பட்டது.

## 11. சேத்துப்பிழைத்தது

குமர்சிந்து என்ரீக்ஸ் தெசில்வா பதினெட்டு மாசக் குழந்தை. அவேயுறு என்னும் ஊரில் பிறந்தது. 1928 மார்ச் மாதம் நெஞ்சில் சளி முதலிய (Entero colitis) முதலிய வியாதியில் விழுந்தது. வைத்தியர்கள், தங்களால் கூடிய ஔஷதமெல்லாம் செய்தும் வியாதி அதிகப்பட்டுக்கொண்டே வந்தது. இரண்டு வாரங்களானபின் மார்ச்சு மாதம் 27-ந் தேதி நியுமோனியா என்னும் ஜுரம் ஆரம்பித்து திடீரென மும்முரமாகிவிட்டபடியால் அவள் பிழைப்பது அரிதென்று வைத்தியர் எண்ணினர். ஆயினும் அவர் பிள்ளையின் படுக்கையண்டையிலேயே நாள் முழுதும் நின்று, அதன் உயிரை இரட்சிக்க தன்னால் இயன்றதெல்லாம் செய்துகொண்டிருந்தார். இரவு 7 மணி

கழிந்ததற்கு சற்று பிறகு இனிமேல் செய்யக்கூடியது ஒன்றுமேயில்லையென்று பிள்ளையின் பந்துக்களிடம் சொல்லிவிட்டுப் போய்விட்டார். பிள்ளை மரண அவஸ்தைப்பட்டது. பின்பு உயிருக்கு அடையாளமாகிய அனலும், உஷ்ணமும் அறவே அற்றுப்போயிற்று. மாலை 7 மணிக்கு கோவிலில் அஸ்தகால மணியடித்த சத்தங்கேட்டது. கோவிலில் அடித்த மணி அந்த ஏழைத் தாயின் காதில் விழவே அது அவளுக்குச் சாவுமணி போல் இருந்தது. அவள் திடுக்கிட்டு முழங்காலிலிருந்து, "ஆண்டவரே, என் மகனை எப்படியாவது எனக்குத் திரும்பத் தந்தருள்வீராக" என்று அழுது கதறினாள். உடனே "அவளுடைய பிரார்த்தனைக்கு பரலோகத்திலிருந்து வந்த பதிலோ என்னமோ" பாத்திமாவின் அற்புத ஜலத்தைப்பற்றிய நினைவு அவள் மனதிலுதித்தது! இதற்குச் சிலமணி நேரத்துக்குமுன் பிள்ளையின் ஞானத்தாய் பாத்திமா ஜலத்தின் ஓர் புட்டியைக் கொண்டுவந்து பிள்ளையின் படுக்கை ஓரமாய் வைத்துவிட்டுப்போனாள். ஆயினும் அங்குண்டாயிருந்த ஓட்டவாட்டத்தின் சச்சரவினிடையில் இதை ஒருவரும் கவனியாமல் விட்டுவிட்டார்கள்.

இப்போது தாய் மிக கை நடுக்கத்தோடு அப்புட்டியை யெடுத்து, தன் இரு விரல்களை தண்ணீர்க்குள்விட்டு துவைத்து, தன் அருமை மகனின் குளிர்ந்த உதடுகளை நனைத்தாள். உடனே எல்லோரும் அதிசயிக்கத்தக்க விதமாய் அவன் கண்களைத் திறந்தான். அவன் தாய் மீண்டும் அதிக விசுவாசப் பெருக்கத்தோடு பிள்ளை நெற்றியையும், முக முழுவதையும் நனைத்தாள். தண்ணீர் சரீரத்தில் பட்டவுடனே உஷ்ணம் மெதுவாய் தோன்ற ஆரம்பித்தது. அதற்கு சில நிமிஷங்களுக்குப்பின் குழந்தை தன் அவயவங்களெல்லாவற்றையும் உபயோகிக்க ஆரம்பித்ததோடு அதுவரையும் யாதொன்றும் சம்பவியாதது போல சும்மா பேசிக்கொண்டிருந்தது. அப்போது வைத்தியரை வரவழைத்தார்கள். அவர் அக்காட்சியைக் கண்டவுடனே! "ஆ இதென்ன! இது அதே பிள்ளை

தானு! என்று ஆச்சரியப்பட்டுக் கூவினுர். மற்ற அநேக வைத்தியர்களும் வந்து பார்வையிட்டபோது, அதன் நெஞ்சிலிருந்த நியுமோனியா வியாதி முழுதும் நீங்கியிருந்ததையும் அறிந்து, மெய்யாகவே இது செத்துப் பிழைத்தது எவ்வாறென்று தாங்கள் கண்டுபிடிக்கக்கூடுமாயில்லையென்ருர்கள்.

## 12. தீராத வியாதி தேவசித்தத்துக்கமைதியினுல் திடீரெனத் தீர்ந்த மகா புதுமை

1931-ஷு ஜூன் மாதம் 13-ம் தேதி சுற்றுப்பிரகாரம் முடிந்தபின் புதுமையுள்ள சுரூபம் சிறு கோவிலுக்கு திரும்பி வந்து தன் சுரூப கூட்டுக்குள் வைக்கப்பட்டவுடனே "புதுமை" என்கிற ஓர் சத்தம் வெளியில் கேட்டது. திருஸ்தலத்தின் நாலா திசையிலுமிருந்து, ஜனங்கள் வியாதிக்காரரின் மண்டபத்திற்கு ஓடிப்போனுர்கள். சம்பவித்தது இது:—

பீடத்தின் இடதுபுறமாக இருந்த ஓர் கட்டிலில் ஓர் வாலிபப் பெண் இருந்தாள். பெயர் கார்மீனு தெ கொன் சேயிசம். வயது பதினேழு. அவள் அல்மோன்ஸ் தெரில் பிறந்தவள். (சன்தெரேம்) நீண்டகாலம் லிஸ்போவா நகரில் வாசஞ்செய்தவள். ஐந்து மாசக் காலமாக அசௌக்கியமாயிருந்தாள். இதில் கடைசி 4 மாசமாக படுக்கையிலேயே கிடந்து, சர்வாங்கமும், கொடூர வேதனையும், விசேஷமாய் சுவாஸப்பைகளிலும், இடுப்பிலும் நோவு அனுபவித்து வந்தாள். வியாதி மிகவே கடினமாகிவிட்டமையால் அற்ப சப்தத்தையாவது, வெளிச்சத்தின் ஓர் சிறு கதிரையாவது பார்க்கவும், சகிக்கவும் கூடாதவளாயினுள். இவளுடைய தாய் சொன்னதுபோல "அந்தகாரத்தின் உத்தரிப்பு ஸ்தலத்தில் அவள் வசித்துவந்தாள்," மூன்று வைத்தியர்கள் தங்களால் கூடிய ஔஷதமெல்லாம் செய்தார்கள். ஒரு பிரயோசனமும் கிடைக்கவில்லை. மே மாசம் இவளை வந்து ஒரு முறை பார்வையிட்டபின்பு அவளுக்கு (Gallopping

Consumption) நுரையீரல் துடிக்கும் காசரோகம் இருப்ப தாய்க் கண்டுபிடித்தார்கள். இனிமேல் நம்பிக்கை கிடையாதென்று வைத்தியர் சொல்லிவிட்டார். அப் போது அவள் குடும்பத்தார் பங்குசுவாமியாரைக் கூப் பிட்டு அவளுக்குக் கடைசி தேவத்திரவிய அநுமானங்கள் கொடுக்கத் தீர்மானித்தார்கள். கர்மீனு ஞானஸ்நான முதலாய் இன்னம் பெறவில்லையென்று அறிந்து, அவளுக்கு ஞானஸ்நானமும், கடைசி தேவத்திரவிய அநுமானமும் அவஸ்தைப்பூசுதலும் கொடுத்தார்கள். அப்போது பாத் திமா மாதாவின்மேல் உயிருள்ள பக்தி அவள் உள்ளத்தில் உற்பத்தியாகி எழுந்தது. ஆதலால் அவள் தன் குடும்பத் தார் தன்னைத் திருஸ்தலத்துக்குக் கொண்டுபோக தான் ஆசிப்பதாயும், அதினிமித்தம் உண்டாகக்கூடிய பணச் செலவைப்பற்றி அவர்கள் கவலைப்படலாகாதென்றும் தான் எப்படியாவது ஆரோக்யமடைந்து திரும்பிவருவது நிச்சயமென்றும் சொன்னாள்.

ஆதலால் ஜூன் மாசம் 12-ந் தேதி ஓர் யாத்திரை நாற்காலியில் அவளை வைத்து, மோட்டோர் வண்டியினுள் அதைக் கயிறுகளினால் கட்டித் தூக்கி வைத்து, அவளு டைய தாயும், சகோதரிகளில் ஒருத்தியுமாக அதைத் தாங்கிப் பிடித்துக்கொண்டு பாத்திமாவுக்குக் கொண்டு போனார்கள். பத்து மணி நேரமாக செய்த யாத்திரை யில் அவள் அநுபவித்த வேதனை இத்தன்மை இவ்வள வென்று விவரித்துரைக்கக் கூடியதேயல்ல. அடிக்கடி இரத்தம் கக்கினாள். அடுத்த நாள் அவளைத் திருஸ்தலத் தில் மாதாவின் ஊழியராகிய சில புருடர்கள் ஓர் கட்டிலில் வைத்து ஆஸ்பத்திரியினின்று நோயாளிகளுக்குக் குறிக் கப்பட்டுள்ள மண்டபத்தினுள்ளே தூக்கிக்கொண்டு போனார்கள். அங்கே அவள் திவ்ய பூசை கண்டாள். தேவநற்கருணை ஆசீர்வாதமும் பெற்றாள். அங்கே ஆரா தனை சகலமும் முடியும்பரியந்தமும் இருந்தாள். அவள் நிலைமையில் மாற்றமொன்றும் உண்டாகவில்லை. புதுமை யுள்ள சுரூபமும் திரும்பி சுற்றுப்பிரகாரமாய் போய்விட் டது. அத்தோடு இவளுடைய கடைசி நம்பிக்கையும்

போய்விட்டது. அப்போது அங்கு நின்ற ஓர் குருவான வர் அவளிருந்த இடத்திலிருந்து கொஞ்சத் தூரத்தி லிருந்து அவளைக் கவனித்துப் பார்த்து அவளுடையும் ஆழ்ந்த துக்கத்தையும் கவனித்து அவளுக்கு ஆறுதல் சொல்லும்படியாக அவள் கிட்டே போனார்.

"நீ மெய்யாகவே ஆரோக்யமடைய விரும்புகிறாயா?"

"ஆம், ஆசையாய்த்தானிருக்கிறேன்."

"நீ அப்படிப்பட்ட ஆசையைத் தள்ளிவிடவேண் டும். உத்தமமான பங்கு* உன் கையிலிருக்கிறதே! கவனித்துச் சற்றே கேள். சேசுநாதர் நமது தலை. கிறீஸ்து வர்களனைவரும் அவரது அங்க உறுப்புகள்! அவருக்கு இரு கரங்களுண்டு—ஒன்று வியாதியாயும், மற்றது சுகமாயு மிருக்கிறது. இவ்விரண்டில் எதை அவர் அதிகமாய் நேசிப்பார்?"

"வியாதியாய் இருப்பதைத்தான்!......என்றெண்ணு கிறேன்."

"அப்படியானால்......உனக்கு எல்லாம் தெரிகிறதே."

அந்தப் பெண் தலையைக் கீழே கவிழ்ந்துகொண்டு, சர்வேசுரனுடையவும், அவருடைய மாதாவுடையவும் சித்தத்துக்கு அமைந்து இருப்பதே உத்தம பங்கென்று அறிந்து அப்படி நடக்கத் தீர்மானித்தாள். உடனே சடுதியாய் அவளுக்குச் சுகம் காணப்பட்டது. உடனே உட்கார்ந்து, பின்பு எழுந்து நின்றாள். ஜனங்கள் அவள் சமீபமாய் ஓடிவந்தார்கள். அவள் பக்கத்தில் நின்ற மாதா வின் ஊழியக்காரிகள் அவர்களைத் தடுத்து விலக்கிக் கொண்டு அவளை வைத்தியசாலைக்குக் கூட்டிக்கொண்டு போனார்கள்.

பெரேயிரா ஜென்ஸ் என்னும் வைத்தியர் சில மணி நேரங்களுக்கு முன்னே அவளைப் பரிசோதித்து இவள் நிலைமை மிகவும் கடினமானதென்றும் சொல்லியிருந்தார்.

---

* மரி மார்த்தாவின் சரித்திரம்.

இப்போது கண்ட காட்சியினால் அவள் திடுக்கிட்டு முகம் வெளுத்து தமதருகில் நின்ற மற்றும் வைத்தியர்களை நோக்கி “ஆ! இது கூடிய காரியமா? இவளைக் கட்டிலில் கிடத்திக்கொண்டு வந்தார்களே! இப்போது தானே நடந்துபோகிறாளே” என்றார். மறுபடியும் அவளை நன்றாய் பரிசோதனை செய்தார்கள். விசாரித்து வாக்கு மூலங்களும் எழுதி பதியப்பட்டது. அதன்பின் அவள் கொஞ்ச நேரம் ஆஸ்பத்திரிக்குள்ளேயே நடந்தபின்பு, காக்ஷி ஸ்தலத்திலுள்ள சிறு கோவிலுக்குப் போனாள். அங்கே ஓர் நாற்காலியின்மேல் நின்றுகொண்டு பக்தி ஊக்கத்தோடு ஜெபம் செய்தாள். அவளைச் சுற்றியிருந்து பார்த்தவர்கள் பரம ஆனந்தக் கண்ணீர் சிந்தினார்கள்.

அவள் வீட்டுக்குத் திரும்பி யாத்திரை செய்தபோது, மோட்டொர்காரில் செவ்வையாய் உட்கார்ந்துகொண்டிருந்தாள். அவள் முன் வரும்போது உட்கார்ந்துவந்த யாத்திரை நாற்காலி இப்போது பிரயோசனப்படாததால் அதை மடக்கி மோட்டொர் வண்டிமேலே வைத்தார்கள். அவளுடைய வீட்டுக்குத் திரும்பி வந்து சேர்ந்தபோது, பந்துக்களும், சிநேகிதரும் ஊராரும் அடைந்த வியப்பும், ஆனந்த சந்தோஷமும், எவ்வளவாயிருக்குமென்று நாமே உத்தேசித்துக்கொள்ளலாம். ஆனால் நடந்த விநோதமாவது: வருகையை அறிந்த இவளுடைய பாட்டி அவள் வரும் வழி நோக்கி வீட்டு ஜன்னல் வழியாய்ப் பார்த்துக் கொண்டிருந்தாள். யாத்திரை நாற்காலி மடித்து வண்டி மேலே போடப்பட்டிருப்பதை அவள் கண்டவுடனே, அவள் உரத்த சத்தமாய் ஐயோ பாவம்! கர்மீனா செத்துப்போனாளே! என்று கூவினாள். இப்படி சொல்லிக் கொண்டு வீட்டுக்குள்ளே போய் கதறி அழுதாள். அதற்கு சில நிமிஷத்துக்குப்பின், அவள் உயிரோடிருப்பதையும், சந்தோஷமாய்ப் பூரண தேக சுகத்தோடு வந்திருப்பதையும் கண்டு அத்தியந்த சந்தோஷமடைந்தாள்.

தம்மை நோக்கிக் கூப்பிடும் சகல மக்களுக்கும் மாதா எவ்வளவோ இரக்க உருக்கத்தைக் காண்பிக்கின்றாள்,

என்றறிவதற்கு, இந்த அற்புதாதிசயங்களும் புதுமைகளும் போதுமானவை. ஓ! மாதாவின் கருணையும், இரக்க உருக்கமும் எவ்வளவோ கரையற்றது! அவளுடைய மன்றாட்டும் வேண்டுதலும் எவ்வளவோ சர்வ வல்லபமுள்ளது? அந்த பரம ஆண்டவளின் சகாயத்தை நாம் அடைவதற்காக நாம் செய்யவேண்டியது செபம்! ஓ! செபத்தின் வல்லமையையும், நன்மையையும் நாம் நன்றாய் கண்டுபிடித்தால் எவ்வளவோ நலம்! தாழ்மையோடும் நம்பிக்கையோடும் செய்யப்படும் செபம் தக்க காலத்தில், கடவுளுக்கு சித்தமான வேளையிலும் விதத்திலும் கட்டாயம் கேட்கப்படுவது சத்தியம். அந்த பரம இஷ்டப்பிரசாத ஊக்கத்தோடும் விசுவாசத்தோடும் நாம் செபிக்கவேண்டும். இப்படி எல்லோரும் செய்வாரில்லை. தன் மகளுடைய ஆரோக்கியத்துக்காக ஒரு தாய் லூர்துமாதாவுக்கு இப்போர்ப்பட்ட ஊக்கத்தோடு நவநாள் செய்துவந்தாள். கேட்டதையடையவில்லை யென்று அவளும் மனம் சோரவில்லை. கடைசியாய் 70-வது நவநாளை செய்துமுடித்து அந்த தாய் கேட்டதை யடைந்தாள். மாதாவின் வல்லமையின்மேல் உயிருள்ள விசுவாசம் சகலத்தையும் பெறுவிக்கும். இவ்வற்புதங்களைப்பற்றி இன்னும் அதிக விரிவாய் அறிய விரும்புவோர், Voz da Fatima "பாத்திமாவின் குரலொலி" என்னும் பத்திரிகையில் வாசித்தறியலாம்.

அங்கே அதன் ஒவ்வொரு பிரசுரத்திலுமே இவைகளை ஏராளமாய்க் காணலாம். மாதா அளித்துவரும் வரப்பிரசாதங்களையெல்லாம் விவரமாய் இங்கே எடுத்து வரைவதினால் வாசிப்போருக்குக் களைப்புண்டாகாமல், இம்மட்டில் இதை நிறுத்தி, இவ்வற்புத சகாயங்களை அடைகிறவர்கள் அவற்றைப்பற்றி திருஸ்தலத்துக்கு அறிவிக்கும் விதத்தைக் குறித்து, பாத்திமாவின் ஞானதிகாரிகள் ஏற்படுத்தியிருக்கும், சட்டங்களையும் ஏற்பாடுகளையும், இதனடியில் வரைந்து வைக்கின்றோம்.

அவரவர் அடையும் அற்புத வரங்கள், சகாயங்கள் விஷயமாய் அநுசரிக்க வேண்டிய விதிகள் :—

"பாத்திமா ஜெபமாலை மாதாவின் மன்றாட்டினால் யாதொரு விசேஷ சகாயங்களை ஆச்சரியத்துக்குரிய விதமாய் ஜனங்கள் அடைந்ததாக விசுவசிக்கும்போது அவைகளைப் பற்றிய தெளிவான விபரங்களை "Voz da Fatima" என்னும் பத்திரிகையை நடத்துபவருக்கு எழுதி அறிவிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். அவர் விலாசம் The Manager, "Voz da Fatima", Diocesan Seminary, Lerria, Portugal.

அப்படிப்பட்ட சம்பவங்கள் அதை யடைந்தவர்களின் அநுமதியுடன், தேவ தோத்திரத்துக்காகவும், அவருடைய மாதாவின் மகிமைக்காகவும், விசுவாசிகளின் நலத்துக்காகவும், "Voz da Fatima" என்னும் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்.

இப்படி நமக்கனுப்பப்படும் சமாச்சாரங்களில் கூடியமட்டில் இதனடியில் காணப்படும் விஷயங்கள் குறிப்பிடவேண்டும்.

(1) ஆரோக்கியமடைந்தவர்களின் பெயர். குடும்ப பெயர். வயசு, பிறந்த இடம். தெளிவான மேல் விலாசம். நடத்தை, நடபடி, தேவபக்தி; குணுகுணம், தற்கால தேக சுகத்தின் நிலைமை.

(2) வியாதியைக் குறித்து:—வியாதியின் பெயர். அதின் ஆரம்பம். அதிகப்பட்டதின் வரலாறு (இவற்றைப்பற்றி சுருக்கமாய்) கூடுமானால் வைத்தியருடைய சாக்ஷிப் பத்திரம் அல்லது இப்படிப்பட்ட தஸ்தாவேஜுகள். வியாதியின் இலட்சணங்கள், உபயோகித்த மருந்துகள், சிகிச்சைகள், இவற்றினால் அடைந்த பலாபலன்களை தெளிவாக்கத்தக்கவை.

(3) அடைந்த ஆரோக்கிய சம்பந்தமாய் நடந்த சம்பவங்களைப்பற்றிய வரலாற்றின் நுணுக்கமான விபரம், அநுசரித்த ஞான ஆயுதங்கள். அதாவது ஜெபம், தவம், திவ்யபலி பூசைகள், செய்த நவநாட்கள், காக்ஷி ஸ்தலத்திலிருந்து கொண்டுபோன அற்புத ஜலம். இவைபோன்ற

வைகள் கூடியபோதெல்லாம் இந்த ஆரோக்கியத்தைப் பற்றி வைத்தியர் பரிசோதனை செய்தபின், அவருடைய அபிப்பிராயம், விசாரணைக்குரு சுவாமியாரின் சாட்சிப் பத்திரம், ஆத்தும குருவானவரின் அல்லது வேறு நம்பிக்கைக்குரிய மனிதரின் அத்தாட்சிப் பத்திரம்.

(4) பின் வரலாறு :—ஆரோக்கியமடைந்த பின்பு, சுக நிலைமை, தற்கால ஸ்திதி, இவ்வாரோக்கியத்தினால் அதை அடைந்த மனிதனுக்கும், குடும்பத்துக்குமுண்டான ஞான நன்மைகள்.

*N.B.*—இதேபிரகாரமே "Voz da Fatima" பத்திராதிபருக்கும் நீங்கள் அடைந்த சகல ஞான வரப்பிரசாதங்களையும், பாத்திமா ஜெபமாலை மாதாவின் சரிதைக்கு உதவியாகக்கூடிய சகல வரலாறுகளையும், அறிவிக்கக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

Lerria,
May 31, 1928.

✠ **Jose,**
லெயிரியா மேற்றிராணியார்.

## 13. மனந்திரும்புதல்

சரீர ஆரோக்கிய சம்பந்தமான புதுமைகளைவிட, ஆத்தும ஆரோக்கிய சம்பந்தமான புதுமைகள் அதாவது ஒருவரும் ஒருவிதத்திலும் எதிர்பாராததும் எண்ணாததுமான விதமாய் ஆச்சரியத்துக்குரிய மனந்திரும்புதல்கள், ஏராளமாயும் அடிக்கடி சம்பவிக்கின்றனவென்று, பாத்திமா விஷயமாய் மிக்க பத்தியோடும், ஊக்கத்தோடும் உழைத்துவரும் பலருள் ஒருவர், வரைந்திருக்கின்றார். ஒவ்வொரு திருயாத்திரைக் கூட்டத்தாருள்ளும், ஒன்று அல்லது பல அற்புத மனந்திரும்புதல்கள் இல்லாமல் போவதரிது. ஆ! பாவசங்கீர்த்தனத் தொட்டிகளுக்குப் பேச சக்தியிருந்தால், அவை எவ்வளவோ எண்ணிறந்த சம்பவங்களை அறிக்கையிடும்! என்கிறார்.*

* **P. A. M.** சேசுசபைக் குருவானவர் இப்புத்தகத்தை யெழுதி நமக்கு எழுதிய ஓர் கடிதத்தில் காண்க. இவற்றில் இரண்டொன்று :—

1928-ஆம் அக்டோபர்-மீ 13-ம் உ லெயிரியாவின் வந்திக்கத்தக்க மேற்றிராணியாண்டவர், பாத்திமாவில் வியாதிக்காரரின் மண்டபத்துக்குள் சேர்க்கப்பட்டிருந்த நோயாளி ஒவ்வொருவருக்கும் அங்குள்ள வழக்கப்பிரகாரம் தேவநற்கருணை ஆசீர்வாதங் கொடுத்துக்கொண்டு, கடைசியாளுக்கும் அப்படி கொடுத்து முடிந்தவுடனே ஓர் வாலிபன், சிறந்த உடையை யணிந்திருந்தவன் எழும்பி நடந்து வந்து, முழங்காலிலிருந்து, விம்மி அவன் இருதயம் பிளந்துபோகுமாப்போல அழுது பெருமூச்செறிந்தான். Dr. பெரேயிரா ஜென்ஸ் என்னும் வைத்தியரும், வேறு சில வைத்தியரும், இவ்வித தேவநற்கருணை ஆசீர்வாதம் நடக்கும்போது, வியாதிக்காரருக்கு இதனால் உண்டாகும் பலாபலன்களின் அறிகுறிகளை நன்றாய்க் கவனிக்கத்தக்கதாக கூடவே எப்போதும் போவது வழக்கம். ஆதலால், இந்த Dr. ஜென்ஸ் அவனைப்பார்த்து உனக்கென்ன தேவை என்று கேட்டார்.

"என் ஆத்துமம் வியாதிப்பட்டிருக்கின்றது. எனக்கும் தேவநற்கருணை ஆசீர்வாதத்தைத் தரவேண்டும்" என்றான்.

மேற்றிராணியாண்டவர் மன உருக்கத்தோடு தேவநற்கருணையினால் அவனையும் ஆசீர்வதித்தார்.

அந்த மனிதன் எழுந்து நின்று Dr. ஜென்ஸ் வைத்தியரை ஆவிக் கட்டிக்கொண்டு, "நான் இப்போதல்ல, ஏலவே இதற்கு முன்னமே நான் வந்திருக்கவேண்டும்" என்று வசனித்தான்.

"சிநேகிதா, எப்படியானாலும் இப்போது நாள் தாமதமாய்விட்டதென்று, தள்ளப்படுவதில்லை" யென்றார் வைத்தியர்.

வேறொரு திருயாத்திரையின்போது, இரவில் தீபவர்த்திச் சுற்றுப்பிரகாரம், மகா சிங்கார அலங்காரத்தோடு நடை பெறுகையில், சற்று தூரத்தில் சில நல்ல புருடர்கள் கூடிநின்று கண்குளிர இவ்வினிய காக்ஷியைக் கண்டு

ஆனந்த சந்தோஷமடைந்துகொண்டு நின்றார்கள். இவர்கள் சும்மா இதைப் பார்க்க வந்தவர்கள் தான். ஆதலால் இவர்கள் தங்கள் தலையிலுள்ள தொப்பிகளை முதலாய் எடுக்காமல் தாங்கள் காணும் காக்ஷியைப்பற்றி சற்றே நகைப்பவர் போல, புன்னகையோடு காணப்பட்டனர். இப்படியிருக்கையில், திடீரென இவர்களில் ஒருவன் மனதில் தான் தடுக்கக் கூடாத ஓர்வித உணர்ச்சி உண்டாகவே தன் தொப்பியை எடுத்துவிட்டு, முழாங்காலில் நின்று செபஞ்செய்ய ஆரம்பித்தான். இதைக் கண்ணுற்ற மற்றொருவன் பரிகாசமாக, ஓ! உனக்கு செபம் செய்யவும் தெரியுமா" என்றான்.

"என் நல்ல சிநேகிதா! செபஞ் செய்யக் கற்றுக் கொள்ளும் ஸ்தலம் இதுவே," என்று பதில் உரைத்தான்.

அப்படிச் சொல்லிக்கொண்டு, அவன் வேறெதுவையும் கவனியாமல், மனந்திரும்பி மனஸ்தாபப்படும் ஓர் ஆத்துமாவைப்போல ஜெபத்தைச் செய்துகொண்டேயிருந்தான்.

இன்னும் ஓர் சரிதையையும் இங்கே குறிப்பிடுகிறேன். 1930-ஆம் மே-மீ 13-ம் உ ஓர் குருவானவர் அநேகமணி நேரம் அங்கிருந்து பாவசங்கீர்த்தனம் கொடுத்துக்கொண்டிருந்தார். அப்போது அங்கு நின்ற ஓர் மனிதன் அவரண்டையில் வருவதைப் பார்த்தார். இவன் பார்த்த பார்வையிலே, இவன் பாவசங்கீர்த்தனத் தொட்டியை அதிகமாய் அடுத்துப்பழகினவனல்லவென்று குருவானவருக்குத் தோன்றிற்று.

"உனக்கென்ன வேண்டும்" என்றார் குருவானவர். சுவாமி தயவுசெய்து எனக்கும் நீர் பாவசங்கீர்த்தனம் கொடுத்து, அதன்பின் நன்மையும், ஞானஸ்நானமும் தந்தருளும் என்றான். இதே பிரகாரம், இதே வரிசையாய்த்தான் அவன் வசனித்தான்.

இதன்பின் அவன் குருவானவரைப் பார்த்து, தான் லிஸ்போவா நகரிலுள்ள ஓர் வர்த்தகன் என்றும், பாத்திமா

வைப்பற்றி கேள்விப்பட்டு, போய், ஒரு நாள் பார்த்து வருவோமென புறப்பட்டதாயும், வந்தவன் இங்கே தேவ நற்கருணையின்பேரிலும், தேவமாதாவின்பேரிலும், இவ்வளவு திரளான ஜனங்கள் காண்பிக்கும் விசுவாசத்தின் வெளிப்படையான அத்தாட்சியையும், பக்தியையும், கண்ட பின்பு, தானும் மற்றவர்களைப்போல இனிமேல் நல்ல கத்தோலிக்கனாய் சீவிக்கவேண்டுமென்னும் மகா அவாவும் ஆவலும் தனக்கு இங்கே உண்டாய்விட்டது என்றான்.

## 14. வேறு இரண்டுபேர் மனந்திரும்பியது

இந்த இருவர் விஷயத்தில் அதில் ஒவ்வொன்றிலும் சம்பந்தப்பட்டிருந்த மிக்க தேவசிநேகமும், பக்தியும் உடைய ஓர் குருவானவர் * தாமே என்னிடம் நேரே இவற்றை விவரித்துச் சொன்னார்.

ஓர் வாலிபன், மிக்க தாரித்திரப்பட்டவன், வயது 27. மாசு அலந்தேஜூ மாகாணத்தில் வசித்திருந்தவன். வெகு காலமாய் வியாதியஸ்தனாயிருந்தான். அவன் இருந்த இடத்தில் குருவானவர் இருக்கவில்லை. வேத சத்தியங்களைப்பற்றி ஒருவரும் அவனுக்கு படிப்பித்தது மில்லை. தனக்கு ஞானஸ்நானம் கொடுத்திருக்கிறது என்பது மாத்திரம்தான் இவனுக்குத் தெரியும்.

பாத்திமாவில் புதுமைகளைச் செய்யும் ஓர் அர்ச்சிய சிஷ்டவளைப்பற்றி மற்றவர்கள் பேசுவதை இவன் ஓர் நாள் கேட்டான், ஆகையால் புதுமையாய்த் தனக்கு அங்கே ஆரோக்கியம் கிடைக்கக்கூடும் என்கிற நம்பிக்கையோடு அங்கே போனான். வியாதியஸ்தருக்குக் குறிக்கப்பட்ட மண்டபத்துக்குள் சேர்க்கப்பட இவனுடைய வியாதியினிமித்தம் பாத்திரவானாயிருந்தவனாதலால் உள்ளேயும் போய்ச்சேர்ந்தான். திவ்விய நன்மை கொடுக்கிற நேரத்

---

* P. A. M., S. J. சேசுசபை சுவாமியார், இப்புத்தகத்தை போர்த்துக்கேசிய பாஷையில் எழுதிய, சேசுசபை பொன்சேக்கா (Fonseca) சுவாமியாருக்கு 1931 டிசம்பர் 21-உ எழுதிய கடிதத்தில் காண்க.

தில், அந்த் திவ்வியநற்கருணை ஏதோ ஓர் மாந்திரிய வல்லபமுடைய குளிகையென்று எண்ணிக்கொண்டு, மற்றவர்களைப்போல் இவனும் நன்மை வாங்கினான். இதைக் கண்ட ஒருவன் இதைக் குறித்து இவனைக் கண்டித்துச் சொன்னதாவது :—

"ஆ! நீ என்ன செய்தாய்? நீ பாவசங்கீர்த்தனம் பண்ணாமல் திவ்விய நன்மை வாங்கக்கூடாதென்று உனக்குத் தெரியாதா? நீ கட்டிக்கொண்டது பெரிய தேவ துரோகம்" என்றான். என்ன பதில் சொல்வது என்று அறியாமல், இவன் ஏங்கி ஏங்கி அழுதான். அவனை ஆறுதல் செய்ய யாராலும் முடியாத காரியமாய்விட்டது. ஓர் குருவானவருமே தம்மாலானமட்டும் அவனைத் திடப் படுத்த முயன்றும், கூடாதெனக் கண்டு, அத்தருணத்தில் அப்பக்கமாய்ப் போன ஓர் சேசுசபைக் குருவானவரை நிறுத்தி அவரண்டையில் அழைத்து அவனை அவர் கையில் ஒப்பித்தார். இந்தக் குருவானவரும் தம்மாலான மட்டும் முயன்று கடைசியாய் அவன் கட்டிக்கொண்ட பாவம் முழு அறிவோடும், முழுமனதோடும் கட்டினதாயிராததால், கனமான பாவதோஷமாகக்கூடாதென்று அவன் கண்டுபிடிக்கும்படியாக செய்தார். வெளித்தோற்றத்தில் அது கனமாய்த் தோன்றினபோதிலும் உள்ளபடி அப்படியல்லவென்றும், ஆயினும் அவன் கட்டிக்கொண்ட அந்தக் குற்றத்தை நன்மையாக மாற்றி அவனுக்கவசியமான வேத அறிவும், ஞானோபதேசமும் அதன் வழியாய் அவனுக்குக் கிடைக்கும்படி ஆண்டவர் கிருபைசெய்தருளினார் என்று படிப்பித்தார்.

வாலிபன் உடனே மனந்தெளிந்து, தனக்கு அவசியமான ஞானோபதேசத்தை அத்தலத்திலேயே அந்நேரத்தில் படித்தறிந்துகொண்டு, பாவசங்கீர்த்தனம் பண்ணினான். அதன்பின் விவரிக்கக்கூடாத மன ஆறுதலடைந்து, தன் சரீர ஆரோக்கியம் அடையும் கருத்தோடு மாத்திரம் அங்கே வந்திருக்கையில் தன் **ஆத்தும**த்துக்கும் **ஆரோக்கிய**த்தையடையும்படி தன்னை அங்கே அழைத்து

வந்த மாதாவுக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்தான். அவன் திரும்பிப்போகையில் தனக்கு இன்னும் அவசியமாயிருக்கும் வேத போதகத்தை பூரணமாய்ப் படித்து முடிக்கத்தக்கதாய் ஓர் குருவானவர் வசிக்கும் ஓர் இடத்தில் போய் வசிக்கும்படி நல்ல பிரதிக்கினைசெய்துகொண்டு போனான்.

## 15. முப்பது வருஷத்துக்குப்பின் பாவசங்கீர்த்தனம்

மற்றொன்றும் இதைப்போன்றதே. நெடுங்காலத்துக்கு முன்னல்ல. 1931-ஆ அக்டோபர்-மீ 13-வயன்றுதான் இது நடந்தது. மேலே சொல்லப்பட்ட சேசுசபைக் குருவானவரே அங்கே பாவசங்கீர்த்தனம் கொடுத்துக்கொண்டிருக்கையில் யாரோ ஓர் ஆள் பாவசங்கீர்த்தனத் தொட்டியைத் திரும்ப திரும்பத் தட்டிக்கொண்டிருப்பதைக் கேட்டார். பார்க்கும்போது அது ஒரு ஸ்திரீ. அவள் கண்ணீர் சிந்தி அழுதுகொண்டிருந்ததோடு தன் பக்கமாய் நின்ற ஓர் மனிதனைத் தூண்டிக் காண்பித்தாள். அவனுமே கண்ணீர் சிந்திக்கொண்டிருந்தான். அவனைப் பார்த்து இவள் சொன்னதாவது:

"சுவாமி, என் புருஷன் மகா பயங்கரமான ஒரு பாவத்தைக் கட்டிக்கொண்டான். ஆண்டவரைக் குறித்து அவனுக்குப் பாவசங்கீர்த்தனம் கொடும்" என்றாள்.

அது சம்பவித்தது எப்படியென்றால்: இந்த நல்ல மனுஷன், தன்னைச்சுற்றி நாலா பக்கத்திலும் நின்ற அநேகர் திவ்விய நன்மை வாங்கப்போவதை இவன் கண்டான். இதைக் கண்டபோது அவர்களைப்போலவே தானும் செய்யலாமென்று எண்ணி செய்துவிட்டான். இப்படி இவன் செய்வதை இவனுடைய பெண்சாதி கண்டவுடனே இது குற்றமல்லவா என்கிற சந்தேகம் இவளுக்கு உண்டானது. அதைப்பற்றி தன் பக்கத்திலிருந்த வேறொரு பெண்பிள்ளையிடம் விசாரித்தாள். நன்மை வாங்குவதற்கு ஆயத்தமாக பாவசங்கீர்த்தனம் செய்வது அவசிய

மென்றும் மற்றப்படி தேவ துரோகமாகக்கூடுமென்றும் அறிந்தவுடனே, இதையெல்லாம் தன் புருஷனிடம் சொன்னாள். சொன்னதுமன்றி, இவர்கள் இருவரும் இடைவிடாமல் ஆருத்துயரோடு அழுதுகொண்டிருந்தார்கள். இவ்வாறு இவர்கள் அந்த சேசுசபை சுவாமியாரிடம் வந்தபோது அந்த பெண்பிள்ளை குருவானவரைப் பார்த்து தாங்கள் கடந்த 39 வருஷகாலமாக, குருவானவர் இல்லாத ஓர் இடத்தில் வாசஞ்செய்து வந்தமையால் அவ்வளவு காலமாக, அதாவது கல்யாணம் செய்த காலமுதல் இதுவரையும் பாவசங்கீர்த்தனம் செய்யவில்லையென்றாள். அதற்குக் குருவானவர் அவளை நோக்கி "நல்லது! நீ உன்னைத்தானே சரிபண்ணிக்கொள்ள நினையாமல் உன் புருஷனை மாத்திரம் சரிபண்ண எப்படி நினைத்தாய்?" "நாங்கள் இங்கே எங்கள் நேர்ச்சையை மாத்திரம் செலுத்த வந்தோம்."

"சரி தேவமாதா உங்களுக்குச் செய்யும் உபகாரத்தை முற்றும் பூரணமாய் செய்துமுடிக்க ஆசிக்கின்றாள். ஆதலால் முதலாவது உன் புருஷனும் அதன்பின் நீயும் அங்கே பாவசங்கீர்த்தனத் தொட்டியில் வந்து முழங்காலிலிருங்கள்" என்றார். பாவசங்கீர்த்தனம் செய்தானபின்பு, இவர்களுக்குண்டான பேரின்பத்தையும் சந்தோஷத்தையும் தாங்கக்கூடாதவர்களைப்போலத் தோன்றினார்கள். அதன் பிறகு புதுமையுள்ள சுரூபத்துக்கு முன்பாக போய் தங்களுக்கிடப்பட்ட அபராதத்தைச் செலுத்தி நன்றியறிந்த தோத்திரம் செய்யப்போனபோது, ஜெபத்தியானத்தில் அமிழ்ந்தினாற்போல நீண்ட நேரம் அங்கே இருந்தார்கள். தாங்கள் முன்னமே அடைந்த சிறு உபகாரத்துக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்ய வந்திருக்கையில், முன்னிலும் அதிகப்பெரிய உபகாரத்தை தாங்கள் கேளாமலுமே மாதா தங்களுக்களிக்கக் கிருபை கூர்ந்தமையால் பிரமித்து அந்த இடத்தைவிட்டு, எழுந்துபோவதெப்படியென்று திகைத்து, அங்கே நிற்பவர்களைப்போல காணப்பட்டார்கள்.

## 16. "எங்கள் மரணநேரத்திலும் வேண்டிக்கொள்ளும்"

மனஸ்தாபப்படாமலும், மனந்திரும்பாமலும் மறு லோகவாசலுக்குச் சமீபமாய் வரும் அநேகருக்கு பாத்திமா ஜெபமாலை மாதாவின் மன்ருட்டானது மெய்யாகவே மோட்சத் திறவுகோலைப்போலாகின்றது. இதற்கு இரண்டொரு உதாரணங்கள் மாத்திரம் இங்கே எடுத்துரைப்போம்.

முதலாவது, 1928-ம் வருஷம் ஜுலை மாதம் 18-ந் தேதி சேத்துபால் என்னும் ஊரிலிருந்து வந்த ஓர் கடிதமாவது :—பாத்திமாவிலிருந்த தண்ணீர் மூலமாய் எங்கள் மத்தியில் பலர் ஆரோக்கியம் அடைந்திருக்கின்றனர். இந்த அற்புத ஜலத்துக்கும் "Voz da Fatima" பாத்திமாவின் குரலொலி என்னும் பத்திரிகைக்கும் மிக்க நன்றியறிந்திருக்கின்ருேம். சரீர ஆரோக்கியமாத்திரமல்ல ஆத்தும ஆரோக்கியமும் மனந்திரும்புதலுமே உண்டாயிருக்கிறது. காச வியாதியிஞல் துன்பப்படும் ஓர் மனிதனுக்கு பாத்திமா ஜலம் நான் கொஞ்சம் அனுப்பினேன். அவன் வேதத்தைக் கைநெகிழ்ந்துவிட்டவன். சர்க்கார் கலியாண ஆபீசில் போய் வெறும் ரெஜிஸ்ற்றர் கலியாணத்தைக் கட்டிக்கொண்டவன். மரணப்படுக்கையிலும் ஆபத்திலும் கிடக்கும்போது பாவசங்கீர்த்தனம் என்பதைப்பற்றி ஒரு வார்த்தைமுதலாய் யாரும் பேச இடம் கொடுக்கவில்லை. இப்படியிருக்கையில் பாத்திமா தண்ணீரைக் குடித்தான். அடுத்தநாள் நான் பாவசங்கீர்த்தனம் செய்ய ஆசிக்கிறேன் என்ருன்.

மெய்விவாகம் என்கிற தேவதிரவிய அநுமானத்தையும் பெற்ருன். இரண்டு நாளைக்குப்பின் விசுவாசத்தோடும் பத்தியோடும் எல்லோரும் அறியத்தக்க நல்ல ஆறுதலான லக்ஷணங்கள் அடையாளங்களோடும் மரித்தான்.

மரிய துஸ் சாந்துஸ் வயசு 35. உபோர்த்துவில் வசித்தவன். காச வியாதியால் மரணபடுக்கையாஞன்.

இவன் பாவசங்கீர்த்தனம் வேண்டாம் வேண்டாம் என்ருன். பாவசங்கீர்த்தனம் கொடுக்கும் சுவாமியாருடைய ரூபமும், சாயலுமே என் கண்முன் வேண்டாமென்ருன். இந்த ஆத்துமத்தை எப்படியாவது இரட்சிக்கவேண்டுமென்று ஒரு புண்ணியவதி தீர்மானித்து முயற்சி செய்தாள். 1930-ம் ஹூ பெப்ரவரி-மீ 13-ந உ மிக்க விசுவாசத்தோடு பாத்திமா ஜெபமாலே மாதாவை வேண்டிக்கொண்டதுமல்லாமல், இந்தப் பாவி தாளுக வலிய தனக்கு தேவதிரவிய அநுமானம் வேண்டுமென்று கேட்பாளுகில் அதைப் பத்திரிகையில் பிரசுரிப்பதாயும் பொருத்தனை செய்தாள். 20-ந் தேதி காலே ஒருவருமே இவனிடம் இதைப்பற்றி பேசாதிருக்க, ஒரு குருவானவரை அழைக்கும்படிச் சொன்ஞன். பாவசங்கீர்த்தனமும் செய்தான். நல்ல மனஸ்தாபத்தோடும், கண்ணீரோடும் திவ்ய நன்மை வாங்கிஞன். இவ்வித பக்திக்குரிய அடையாளங்களுடன் மூன்று நாளேக்குப்பின் மரித்தான்.

பிரசில் (Brazil) ராஜ்யத்தில் பஹியா என்னும் நகரில் அந்தோணியு வியேரா என்னும் கலாசாலேயின் வைஸ்ரெக்டராகிய சிரேஷ்ட சுவாமியார் 1930-ம் வருஷம் செப்டெம்பர் மாதம் 13-ந் தேதி எழுதிய கடிதத்தில் அங்கு ஜனங்கள் பெற்ற அநேக அற்புத வரங்களேப்பற்றி எழுதி அறிவித்தார். அவைகளில் சிலது:—

"1920-ம் ஆண்டு அக்டோபர் மாசத்தில் ஓர் விருத்தாப்பியன் அங்குள்ள "Portuguese Hospital" நோயாளியின் ஆரோக்யசாலேக்குக் கொண்டுவரப்பட்டான். எங்கள் கலாசாலேயில் படித்துக்கொண்டிருந்த மூன்று பிள்ளேகளுக்கு இவன் பாட்டன். அன்று ஓர் ஞாயிற்றுக்கிழமை. நாங்கள் அன்று அங்குள்ள சிறு கோவிலில் பாத்திமா மாதாவுக்கு ஒரு நவநாள் செய்துகொண்டிருந்தோம். மரணத்தறுவாயில் கடைசி தேவதிரவிய அநுமானங்கள் யாதொன்றும் வேண்டாமென்று மறுத்துத்தள்ளும் வியாதிக்காரர் மனம் இளகி, அவைகளேப் பெறும்படி எத்தனேயோ விசை இந்தப் பரமநாயகி செய்துவருகின்ரு

ளென்றும், இந்த வல்லமை அவளுக்கு உண்டு எனபதைப் பற்றி ஓர் குருவானவர் அப்போது அங்கே பிரசங்கம் பண்ணிக்கொண்டிருந்தார். இப்பிரசங்கத்தின் மத்தியில், அந்த விருத்தாப்பியனின் பேரப்பிள்ளைகள் மூவரில் மூத்தவன் என்னிடம் ஓடிவந்து தன் பாட்டன் ஆபத்தான கடின மரண அவஸ்தையில் கிடப்பதாயும், கடைசி தேவதிரவிய அநுமானங்களை வாங்காமல் மறுத்துத் தள்ளிவிடுவதாயும், ஆதலால் அவனிடம் கொண்டுபோவதற்காக புதுமையுள்ள பாத்திமா மாதாவின் சிறு சுரூபம் (Medal) ஒன்று தர வேண்டுமென்றும் கெஞ்சினன். கேட்டபடி கொடுத்தேன். உடனே அதைக்கொண்டு ஓடிப்போய்விட்டான். பிரசங்கம் முடிந்தவுடன் அங்கிருந்தவர்களைப் பார்த்து, இப்போது குருவானவர் சொன்ன சங்கதி, இப்போது சாகக் கிடக்கும் அந்தக் கிழவன்மட்டில் மெய்யாக விளங்கும்படி எல்லோரும் மாதாவை வேண்டிக்கொள்ளும்படி கேட்டேன். இதன் பலன் மிக அதிசயத்துக்குரியதாய் காணப்பட்டது. எப்படியெனில் அரைமணி நேரத்துக்குப்பின் ஆஸ்பத்திரியிலிருந்து டெலிபோன் வழியாய் எனக்கொரு சமாச்சாரம் வந்தது. அதாவது அந்தக் கிழவன் வெகு காலமாக தனக்குப் பழக்கமான ஒரு குருவானவரை அங்கே அவன் கண்டபோது அவனே வலிய அந்தக் குருவானவரைக் கூப்பிட்டு தனக்குக் கடைசி தேவதிரவிய அநுமானங்களைத் தரும்படிக்கேட்டான். கேட்டபடியே அவைகளைப்பெற்று, கர்த்தருடைய சமாதானத்தில் சற்று நேரத்துக்குப்பின் மரித்தான்.

இங்கே இடம் கிடைக்குமானால் இப்படி இன்னும் பல உதாரணங்களை எடுத்து வரையக்கூடும். ஆயினும் சுருக்கமாய் சொல்லுவதென்னவென்றால், இந்த பாத்திமா ஜெபமாலை மாதாவின் விசேஷித்த லக்ஷணம் என்னவெனில், இந்தப் பரமநாயகி எங்கெங்கே போகின்றாளோ அங்கேயெல்லாம் அவள் செய்யும் முதலாவது வேலை வேதபோதகரின் (Missionary) **ஆத்தும ஆரோக்கியத் தொழிலே.**

எங்கும் கீர்த்திபெற்ற லோப்பீஸ் வியெயிரா என்னும் வைத்தியர் தாம் பெற்ற ஓர் விசேஷ வரப்பிரசாதத்துக்கு நன்றியறிதலுக்காக பாத்திமாவின் திருஸ்தலத்தின் வியாதிக்காரருக்கு ஊழியம் செய்யும் ஆண்பிள்ளைகளின் சபையில் பேர் எழுதி சேர்ந்துகொண்டார். அது மாத்திரமல்ல. வியாதிக்காரருக்காக மிகவே கஷ்டப்பட்டு இடைவிடாது ஊழியம் செய்பவர்களில் இவரும் ஒருவர். இதுவும் தவிர வடசமுத்திரத்துக்கு நேரே சம்பேதுருநொயேல் என்றழைக்கப்படும் இவருடைய அரண்மனையில் ஓர் சிறந்த சிறு கோவிலையும் மாதாவுக்குத் தோத்திரமாக கட்டிவைத்திருக்கின்றார்.

சிறு கோவிலைத் திறந்து பிரதிஷ்டை செய்யும் தினத்துக்கு முந்தின நாள் இவரைக் காண்பதற்காக ஒரு துரை அதன் சமீபமான ஊரிலிருந்து வந்தார். அவர் டாக்டரைப் பார்த்து, "டாக்டர்! நாளைக்கு மாதாவின் திருநாள். நாளைக்கு மேற்றிராணியாண்டவர், இங்கே தேவநற்கருணை ஆசிர்வாதம் கொடுப்பதற்காக வரப்போகிறாராமே? அப்படி ஜனங்கள் சொல்லக் கேட்டேன்" என்றார்.

"ஆம் மெய்தான். அவர் ஏலவே இங்கே வந்து கொஞ்ச நேரமாச்சுது."

"டாக்டர், நான் ஒரு உபகாரம் உம்மிடம் கேட்க வேண்டும். அதைப்பற்றிக் கோபித்துக்கொள்ளாதேயுங்கள்."

"இல்லை, இல்லை, அது என்னவென்று சொல்லும்."

"நானும் என் பெண்சாதியும் கோவில் கலியாணம் செய்யவில்லை. சிவில் சர்க்கார் ஆபீசில் செய்து கொண்டோம். நீர் தயவுசெய்து மேற்றிராணியாண்டவரிடம் பேசி, இங்கே உமமுடைய சிறு கோவிலிலே எங்களுடைய கலியாணத்தை அவர் முடித்து விடும்படிச் செய்தால் உமக்கு மிக்க நன்றியறிந்திருப்போம்."

டாக்டர் தாமதமின்றி, இதைச் செய்தார் என்று நாம் இங்கே சொல்லவும் வேண்டுமா? அதற்கு வேண்டிய

சகலத்தையும் செய்து முடித்ததோடு தேவதாயாரின் மேல் தாம் வைத்த பக்தி வணக்கத்தின் மட்டில் அவள் சந்தோஷப்படுவதாக இந்த விதமாக அவள் தனக்கு காண்பிக்க சித்தமானுளென்றறிந்து, பேரானந்தம் அடைந் தார்.

இந்த சந்தோஷம் இம்மட்டோடு நின்று விடவில்லை. அன்று சாயங்காலமாகு முன்னமே, அப்பகுதிகளி லுள்ள இரு பிரபுக்கள், இவரண்டையில் வந்து, இதே விதமான உபகாரத்தையும், நன்மையையும், தங்களுக்கும் செய்யும்படி கேட்டபோது இவரடைந்த சந்தோஷம் மட்டுக்கடங்காதது போலாச்சுது.

## மாதாவும், அஞ்ஞான இராச்சியங்களும்

பாவிகளையும், பதிதர் அஞ்ஞானிகளையும் மனந்திருப் புவது வேத போதகரின் வேலை. மேலே சொன்னபடி அந்த இடத்தில் பாத்திமா மாதா இந்த இரக்ஷணிய வேலை யை ஆரம்பித்து, மூன்று குடும்பங்களுக்கு தேவ வரப் பிரசாதங்களைக் கொண்டுவந்து கொடுத்தாள். பெற் றோருக்கு மெய்விவாக மென்னும் தேவதிரவியானுமானத் தையும், பிள்ளைகளுக்கு ஞானஸ்நானத்தையும் : அவ ளுடைய இந்த வேலையை எங்கெங்கும் செய்து வருகின் றுள். ஏராளமான பலனும் எங்கும் விளைகின்றது. ஆகை யால் அஞ்ஞான தேசங்களினிடையில் பாத்திமா ஆண்ட வளின் நாமத்தின் கீழும் அடைக்கலத்தின் கீழும், பற்பல பங்கு விசாரணைகளிருப்பது ஆச்சரியமல்ல. நமக்கு நிச்சய மாய்த் தெரிந்த ஸ்தலங்கள் மூன்று.

முதலாவது போர்த்துக்கேஸிய ஆப்ரிக்காவில் அங் கோலாவைச் சேர்ந்த குபாங்குவிலுள்ள அப்போஸ்தொ லிக்க சிரேஷ்டர் ஞான அதிகாரத்துக்குட்பட்ட காந்தா (Ganda). இஸ்பிரீத்துசாந்து சபை குருக்கள் அங்கே வேதத்தை போதித்து வேலை செய்கிருர்கள். அங்குள்ள மாதாவின் ஆலயம் அந்தப் புது கிறீஸ்தவர்களுக்கு திரு யாத்திரை ஸ்தலமாய் விளங்கி வருகிறது. பாத்திமாவில்

நாம் செய்யுமாப்போலவே மாதந்தோறும் அந்தப் புது கிறீஸ்தவர்களும் அங்கே மிக்க சந்தோஷத்தோடு மாதாவை வணங்கி ஸ்துதித்து கொண்டாடுகிறார்கள்.

இரண்டாவது ஸ்தலம் சீனு தேசத்தில் உள்ள மக்காவுக்குச் சமீபமாயுள்ள இடம். 3000-த்துக்கதிகமான அஞ்ஞானிகள் வசிக்கும் ஸ்தலம். இது 1930-வரு மே-மீ 13-உ பிரதிஷ்டை செய்யப்பட்டது.

மூன்றாவது (Zululand) ஆப்ரிக்காவில் சூலு இராச்சியத்தில் 1931-வரு ஆகஸ்ட்-மீ 13-உ பிரதிஷ்டை செய்யப்பட்டது. ஆசீர்வாதப்பர் சபை குருக்களுக்குச் சேர்ந்தது. ஆசீர்வாதப்பர் சபையைச் சேர்ந்த விக்காரியுஸ் அப்போஸ்தலராகிய தோமாஸ் ஸப்ரேயிற்றர் ஆண்டவர் இதை பிரதிஷ்டை. செய்தார்.

மாதா நடத்தும் ஆத்தும இரக்ஷண்ணிய வேத போதக அலுவல்கள் சகலத்திலும் அவள் செய்த சகல அற்புதங்களிலும் மிகவே பெரிய புதுமை யெதுவென்றால்:

## புதுமையிலும் புதுமை, சகலத்திலும் பெரிய புதுமை இது!

1911-ம் வரு மே-மீ 26-உ போர்த்துக்கால் இராச்சியத்தில் (Revolution) ரெவலூஷன் என்னும் குடிஅரசாக்ஷிக் குழப்பமும், புரளியுமுண்டாகி (Republica) குடியரசு என்னும் அரசாட்சியை நாட்டி ஸ்தாபித்து, 6½ மாசத்திற்குப் பின்பு, (Freemasons) என்னும் இரகசிய வேதக்காரர் கூடிப் பேசிய பொது சங்கத்தில் பிரான்சு தேசத்திலிருந்து அனுப்பப்பட்ட பிரிமேசன்ஸ் பிரதிநிதிகளின் முன்பாக திருச்சபைக்கும், அரசாங்கத்தாருக்கும் அன்றுவரையும் இருந்துவந்த சம்பந்தத்தை அறுத்தெறிந்துவிடும் சட்டம் (Lei da Separacao) என்கிற கொடிய தேவதுரோகச் செயலுக்கு மூலகாரணமும், கர்த்தாவுமான அந்த நிர்ப்பாக்கிய தோஷி தன் ஆத்துமாவின் ஆழ்ந்த அந்தகார இருளினின்று எரிந்து தூஷித்து

கக்கிய தேவதூஷணமும், வெறிப்பிடித்ததும், புத்தியற்றதும், கர்த்தரோடு யுத்தம்செய்ய எத்தனித்ததுமான எக்காளமாவது :—

"இந்த சட்டத்தின் மூலமாய் போர்த்துக்கால் தேசத்தில் இரண்டு தலைமுறைக்குள்ளாக கத்தோலிக்க வேதம் அழிந்து, ஒழிந்துபோய்விடும். இந்த வேதம்தான் இந்த இராச்சியத்தின் தற்கால நீச பரிதாப நிலைமைக்கு ஏக காரணம்."

இந்த தேவதூஷண யுத்த அழைப்புக்குப் பரலோக இராச்சியம் செவி கொடுத்து, அதை ஏற்றுக்கொண்டது. பரலோக இராச்சியம் இந்த யுத்த எக்காளத்துக்குக் கொடுக்கும் பதில் இதுவே. அதாவது :—இரண்டு தலைமுறையல்ல. இன்னம் ஒரு தலைமுறை முதலாய்க் கடந்து போகாமுன் வேத விரோதிகள் இங்கே செய்த நானாவித கொடுமைகள் நாலா திசைகளிலும் சொல்லொண்ணா விதமாயும், வேளைகளிலும், நடத்தும் அநீதத்துக்குமேல் அநீதம், கொடுமைக்குமேல் கொடுமை, துன்பத்துக்கு மேல் துன்பம், இவைகளைக் கண்காக்ஷியாய்க் கண்ட 'கேற ஜங்கேயுபரு' என்பவன்—இவன் தானே குடியரசு கட்சியைச் சேர்ந்த ஓர் பழைய ஆளான நாஸ்திகன்—இப்போது சற்றே சன்மார்க்கத்தை நாடி நடப்பவனாய்க் காணப்படுகிறான்—இந்த மனிதன் இந்த நிர்ப்பாக்கிய நூதன சட்டத்தை உண்டாக்கியவனைப்பற்றி "நமது ஜாதியாரின் நாமத்தைக் கெடுத்த சண்டாளத் துரோகி" யென்றழைத்தான். "என்னென்னதான் நடந்தபோதிலும் கத்தோலிக்கு வேதம் உயிரோடு ஜீவித்துவருகிறது. இதற்கு முந்தியே இரண்டு நூற்றாண்டுகளிலிருந்ததைவிட போர்த்துக்கால் தேசத்தில் அதிக விர்த்தியோடும் பலத்தோடும் வேதம் செழித்தோங்கிவருகின்றது."

கடைசியாய் குடியரசின் தலைவர் (Presidente da Republica) ஜோசப் ஓஸ்கார் கர்மோனா தாமும், சங்கத்தின் தலைவரும், தேசாதிபதிகளும், மற்றவர்களும் ஒன்றுகூடி 1929-ம் வருஷம் மே-மாசம் 29-ந் தேதி பாத்திமா

வைத் தரிசிக்க வந்தார்கள். இத்தருணத்தில் மேற் சொன்ன தலைவராகிய ஒஸ்கார் என்பவர் தெளிவாய் உரைத்ததாவது: "போர்த்துக்காலில், வேத விசுவாசம், இவ்வளவு உயிருள்ளதாயிருக்கிறதென்று நான் எண்ண வில்லை" என்றார். இதற்கெல்லாம் காரணம் யார்? "மாதாவின் நாடு" என்னும் நாமமுடைய இவ்விராஜ் ஜியத்தைக் கண்ணோக்கிப் பார்க்கும்படி பரலோகத்தி னின்று இறங்கி, ஆசீர்வதிக்கப்பட்ட பாத்திமாவென்னும் மலைகளின்மேல் பாதம் வைத்த பரிசுத்த ஜெபமாலை மாதாவே இந்த நன்மைக்கெல்லாம் காரணம். இங்கிருந்து இப்பரமநாயகி, ஆண்டவருடைய தெய்வீக ஆத்தும இரட்சண்ய வேலையைச் செய்யத்தக்கதாய் இந்நாட்டின் நாலா திக்குகளிலும் போய், ஒவ்வொருவரின் வீட்டு வாசலைத் தட்டி எல்லோரையும் நோக்கிப் பார்த்து எல்லோருக்கும் வேதபோதக உன்னத ஆத்தும நன்மை யைச் செய்துவருகின்றாள். அவள், கதவைத் தட்டிய இடங்களில் ஏறக்குறைய எல்லோரும் அவளுக்கு இடம் கொடுக்கின்றார்கள். தேவதாயார் எங்கே போகிறாளோ அவளோடு அவள் திருக்குமாரனும் போவது மெய் யென்று நாம் நன்றாய் அறிவோம். ஆகையால் தற் காலத்தின் போர்த்துக்கால் ராஜ்ய முழுவதிலும் உள்ள சகல பங்கு விசாரணைக் கோவில்களிலும் சிறிய ஆலயங் களிலும், ஜெபக்கூடங்களிலும், பாத்திமா ஜெபமாலை மாதாவுக்கு ஓர் பீடமாவது அல்லது சுரூபமாவது இல்லாத கோவில் மிக அரிது என்னலாம். அநேக இடங்களில் மாசத்தின் 13-ந் தேதியில் திவ்வியபூசையும் அதில் அநே கம் பேர் திவ்வியநன்மை வாங்குதலுமன்றி ஜெபமாலை, தேவநற்கருணை எழுந்தேற்றம் ஆசீர்வாதமும் நடக்கின் றது. இதைத் தவிர வருஷத்தில் இரண்டொரு முறை மே மாதம், அக்டோபர் மாதங்களில் மகா பெரிய திரு நாளும் கொண்டாடுகிறார்கள். போர்த்துக்காலுக்கு வெளியே ஐரோப்பாவின் பற்பல ராஜ்யங்களில் பெல்ஜியம், பிரான்ஸ், ஸ்பாஞ்ஞா, இத்தாலியா, சுவிட்ஸர்லாந்திலும் வெகு விரைவில் இப்பக்தி எங்கும் பரவுகின்றது. ஜெர்மானி

யில் ஜெர்மன் பாஷை பேசும் ஜனங்களினிடையில் பாத்திமா மாதாவின் பக்தியை முறையே எங்கும் பரப்பும்படி Fatima-verlog பாத்திமா அச்சாபீஸ் என்று ஒன்று Bamburg பாம்பர்க் நகரில் லாங்ஸ்ட்கஸே என்னும் வீதியில் 221-ம் நெம்பர் வீட்டில் திறந்திருக்கின்றது. அவ்வாறே அந்த ஆண்டவளுக்குத் தோத்திரமாக அசோரிஸ், மதேயிரா, கேப்வேர்தி, மொசெம்பிக், இந்தியா, சீனு, அமெரிக்கா, பிரசில் முதலிய இராஜ்யங்களிலும், இன்னும் அநேக இடங்களிலும் கோவில்கள், பலிபீடங்கள் முதலியவை ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. இப்பரமநாயகி போய் கால் வைக்கும் ஒவ்வொரு ஸ்தலத்திலும், பரலோக வரப்பிரசாதங்களை ஏராளமாய் பொழிந்தருளுவதினுல் எங்கெங்கும் எல்லோரும் மெய்யான நன்றியறிதலையும், ஸ்திரமான பக்தியையும், காண்பிக்கின்ருர்கள். 1930-ம் வருஷம் நவம்பர் மாசம் 13-ந் தேதி ரோமாபுரிக்கு எழுந்தருளி வந்தாள். அன்று திருச்சபைத் தலைவராகிய XI-ம் பத்திநாதர் கிருபைகூர்ந்து அவளுடைய ஓர் சுரூபத்தைத் தாமே மந்திரித்து, ரோமாபுரியில் போர்த்துக்கேஸ் காலேஜில் பாத்திமா மாதாவுக்கு பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கும் புதிய சிறு கோவிலில் வைக்கும்படி அனுப்பினுர். இந்த அழகான சுரூபம் மரத்தினுல் செய்யப்பட்டது. இதைச் செய்தவர் போர்த்துக்கால் ராஜ்யமுழுவதிலும் சித்திர வேலையில் கீர்த்திபெற்ற சிற்பராகிய ஜூஸெபெரெயிரா-தெதிம் என்பவரே. இதைப்போன்ற வேருெரு சுரூபம் ரோமையில் சந்த அந்தோனியு தெ போர்த்துக்கேஸி என்னும் நாமமுடைய ஆலயத்தில் பூஜிதமாய் வணங்கப்படுகின்றது. இப்படியே வேறநேக சிறு கோவில்களிலும், வீடுகளிலும் பக்தியோடு வணங்கப்படுகின்றது.

பாத்திமா மாதா பரலோகத்தினின்று வந்து அறிவித்த தேவ இரக்கத்தின் சுபசேதி போர்த்துக்கால் ராஜ்யத்துக்கு மாத்திரமல்ல, அவ்வாறே லூர்துநகரில் அவள் அறிவித்ததும் பிராஞ்சுக்கு மாத்திரமல்ல, ஐரோப்பாவின் ஆக கடைசி கீழ்த்திசையில் அந்திக்கிறீஸ்து இதுவரையும்

சரித்திரத்தில் வரையப்பட்டிருக்கும் மகா கொடிய வேத கலகங்களுக்கொத்த விதமான, நெருக்கிடைகளையும், கொடுமைகளையும், செய்ய ஆரம்பித்து வேதத்தையும், விசுவாசத்தையும் மாத்திரமல்ல கடவுள் என்னும் நாமத்தையும், பெயரையுமே அடியோடு அழித்து, ஜனசமூகத்தை அறவே ஒழித்துவிட முயன்றபோது, அத்தருணத்தில்தான் ஐரோப்பாவின் ஆக கடைசி மேல்திசையில் நரக சர்ப்பமாகிய மகா கொடிய நித்திய சத்துருவும் தோன்ற ஆரம்பித்தது. இத்தருணத்தில் பரம தாயார் இரட்சண்ய பாதையை நமக்குக் காண்பிக்கச் சித்தமானாள். எப்படி? நாம் தபசு செய்யவேண்டுமென்றும், பாவத்தை விட்டு ஓடவேணுமென்றும், எல்லாத்திலும் விசேஷமாய் மோக பாவங்களையும், அசுத்த அடக்கவொடுக்கத்துக்கு விரோதமான தோஷங்களைவிட்டு ஒழிக்கவேண்டுமென்றும் நமக்குப் போதிக்கக் கிருபைகூர்ந்தாள். இது தவிர, நாம் ஜெபமாலையை நாள்தோறும் பத்தியோடு ஜெபிக்க வேண்டுமென்று திரும்பத் திரும்ப அந்த ஆண்டவள் நமக்குப் புத்தி சொல்லியதினால் தேவ பொக்கிஷங்களின் திறவுகோல் இந்த ஜெபமாலையென்றும் நமக்குப் படிப்பிக்கச் சித்தமானாள்.

**பாத்திமா ஜெபமாலை மாதாவே,**
**எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.**

---

## அறிக்கை

திருச்சபைத் தலைவராகிய எட்டாம் ஊர்பானுஸ் என்னும் பாப்பானவரின் கட்டளைப்பிரகாரம் இப்புத்தகத்தில், புதுமை, அற்புதம் என்று சொல்லப்பட்டிருப்பதையெல்லாம் சத்திய திருச்சபையின் கடைசி தீர்மானத்துக்கு, தாழ்மையோடு சமர்ப்பிக்கிறோம்.

---

# பாத்திமா ஜெபமாலை மாதாவுக்கு நவநாள் ஜெபம்

### ஆயத்தச் சேபம்

மிகவும் பரிசுத்த கன்னிமரியாயே! பரிசுத்த ஜெப மாலையைப் பத்தியோடு செபிப்பதினால் பெறக்கூடிய வரப் பிரசாதப் பொக்கிஷங்களை பாத்திமா மலையடியோரத்தில் ஆடுகளை மேய்த்துக்கொண்டிருந்த மூன்று சிறு ஏழைப் பிள்ளைகளுக்கு அறிவிக்கத் தயவுகூர்ந்தருளினீரே! உமக்கு மிகவும் பிரியமான இந்த செபமாலையின்மேல் பத்தியும் பற்றுதலும் எங்கள் இருதயத்தில் ஆழமாய்ப் பதியச்செய் தருளுவதோடு, இத்திரு செபமாலை அடியோருக்கு நினைப்பூட்டும் எங்கள் இரட்சண்ணியத்தின் தேவ இரகசி யங்களை நாங்கள் சிந்தித்துத் தியானிக்கவும், அதுகளின் ஞானப்பலன்களை அடையவும், இந்த நவநாளில் நாங்கள் கேட்கும் விசேஷ மன்றாட்டு......கடவுளின் அதிமிக தோத்திரத்துக்கும், உமது மகிமைக்கும், எங்கள் ஆத்தும நன்மைக்குமே ஏற்றதாயிருக்குமாகில், அதையடையவும் தயைபுரிவீராக. ஆமென்சேசு.

1 பர. பிரி. திரி.

## சேபம்

### முதலாவது

மிகவும் பரிசுத்த கன்னிமரியாயே! உமது அதி பரி சுத்த உதரத்தில் வார்த்தையானவர் மாம்சமாகி அவத ரித்தவுடனே அளவிறந்த பரிசுத்த சந்தோஷமடைந்தீரே!

சம்மனசானவர் உமக்கு மங்கள வார்த்தை சொன்ன இரகசியத்தில் உம்மிடத்தில் பிரகாசித்து சொலித்த பரிசுத்ததனத்தையும், நீர் அர்ச். எலிசபெத்தம்மாளை மின வப்போனதில் உமது பிறசிநேகத்தையும், தொட்டிலில் பிறந்து கிடத்தப்பட்ட திவ்ய பாலன்மேல் உமக்குண்டா

யிருந்த உருக்கமான நேசத்தையும், எருசலேம் தேவால யத்தில் அவரைக் காணிக்கையாக ஒப்புக்கொடுக்கும் போது, நியாயப்பிரமாணத்தின் சகல சட்டதிட்டங்களை யும் பூரணமாய்ச் சகலருக்குமுன்பாக நிறைவேற்றினதில் காண்பித்த கீழ்ப்படிதலையும், தாழ்மையையும் இப்பூலோ கத்தில் நாங்கள் கண்டுபாவித்து நடக்கவும் இவ்வாறு நாங் கள் எப்போதும் எல்லாவற்றிலும், இம்மையில் சேசு நாதரை இடைவிடாது ஊக்கத்தோடு தேடுவதின் சம்பா வனையாக, உம்மைப்போலவே நாங்களும் அவரை மறுமை யில் மகிமையின் ஆலயத்தில் கண்டு, ஒருபோதும் அவரை விட்டுப் பிரியாமல் சதாகாலத்துக்கும் சீவிக்கும் படி செய்வீராக. ஆமென்சேசு.

5 விசை பிரியதத்தம். அதன்பின் 1 விசை, "அர்ச். பாத்திமா செபமாலை மாதாவே, எங்களுக்காக வேண்டிக் கொள்ளும்."

## இரண்டாவது

துக்க சாகரத்தில் அமிழ்ந்தி உமது திருக்குமாரனின் சிலுவையடியில் நின்ற அர்ச். வியாகுல மரியாயே! அவர் ஜெத்சேமனி தோட்டத்தில் இரத்த வேர்வை வேர்த்து மட்டற்ற மனோவேதனை அநுபவித்தபின், கற்றூணில் கட்டியடிபட்டு, முண்முடி சூட்டப்பட்டதின் பின்னும், உம்மோடுகூடவே, கல்வாரிமேல் ஏறிப்போய் உமது கண் முன்பாகவே, சிலுவையில் அறையுண்டு மரிக்க சித்த மானாரே! நீர் இப்படி சேசுக்கிறீஸ்துநாதருடைய பாடு களுக்குப் பங்காளியாகவும், மனுக்குல இரட்சண்ணியத் துக்கு துணைவியாகவும், செய்த உமது திவ்ய பொறு மையை அடியோரும் கண்டுபிடிக்கச் செய்வதோடு நாங் களும் உம்மைப் பின்பற்றி, கல்வாரி மலையிலேறவும், இப் பிரபஞ்சத்தில் எங்களுக்கு நேரிடும் துன்ப துரிதங்களைக் கிறீஸ்துவர்களுக்குரிய பொறுமையோடு சகிக்கவும் உமது திருக்குமாரனின் சிலுவையை நேசிக்கவும் செய்தருள் வீராக. ஆமென்சேசு.

5-பிரியதத்தமும்,... மற்றதும்.

### மூன்றாவது

மகிமை நிறைந்த அர்ச். கன்னிமரியாயே! உமது திருக்குமாரனாகிய சேசுக்கிறீஸ்துநாதர் ஒட்டோலகராய் உயிர்த்தெழுந்து, பரலோகத்துக்கு ஆரோகணமானதினால் மனுமக்கள் எல்லோரையும்விட அதிகமாய் மட்டற்ற சந்தோஷத்துக்கும் பங்காளியானதுமன்றி, எருசலேமில் செனாக்குலு என்னும் அறையில் எல்லோர் கண்முன்பாக இஸ்பிரீத்துசாந்து சர்வேசுரன் உமதுமேல் வந்திறங்கி தமது வரப்பிரசாதங்களினால் உம்மை ஏராளமாய் நிரப்பவும் பாத்திரமானீர், அதன் பின்பு இவ்வுலகில் பரிசுத்தமாயும், சகல புண்ணியங்களுக்கு மாதிரிகையாகவும் சாங்கோபாங்கமாய் சீவித்து, ஆத்தும சரீரத்தோடு பரலோகத்துக்குக்கொண்டுபோகப்பட்டு பரலோக பூலோக இராக்கினியாக முடி சூட்டப்பட்டீரே. இப்படிப்பட்ட உமது ஜெயசீல இரகசியங்களை சிந்தித்து தியானிக்கும் நாங்கள் உமக்கு உண்மையாயும், பிரமாணிக்கமாயும், ஊழியஞ் செய்யும் எண்ணிறந்த தாசர்களில் நாங்களும் ஒருவராக எண்ணப்படும் பாக்கியத்தையடையவும், எங்கள் முழு இருதயத்தோடு முடிவில்லாத அநவாதகாலம் அவர்களோடு நாங்களும் உம்மை வாழ்த்தி துதித்து வணங்கவும் பாத்திரவான்களாகச் செய்வீராக. ஆமென்சேசு.

5-பிரியதத்தமும்,...மற்றதும்.

முதல் :—சேசுக்கிறீஸ்துநாதருடைய திருவாக்குத்தத்தங்களுக்கு நாங்கள் பாத்திரவான்களாயிருக்கத்தக்கதாக.

துணை :—பாத்திமாவின் செபமாலைக் கன்னிகையே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

### பிரார்த்திக்கக்கடவோம்

தமது ஜீவியத்தாலும், உத்தானத்தாலும் எங்களுக்கு நித்திய இரட்சண்ணிய சம்பாவனையைச் சம்பாதித்தருளிய ஏக புத்திரனின் பிதாவாகிய சர்வேசுரா சுவாமி! அந்த

தேவ இரகசியங்களை முத்திப்பேறு பெற்ற அர்ச். கன்னி மரியாயின் மகா பரிசுத்த செபமாலை வழியாய் நினைவு கூறும் அடியோர் அவைகளுக்கொப்ப நடந்து, அதிலுள்ள வாக்குத்தத்தங்களின் பேறடையத்தக்கதாக உதவிபுரிந் தருளும்.

இவைகளையெல்லாம் எங்கள் ஆண்டவராகிய சேசுக் கிறீஸ்துநாதருடைய திருமுகத்தைப் பார்த்து எங்க ளுக்குத் தந்தருளும் சுவாமி. ஆமென்சேசு.

[குறிப்பு:—யாதொரு விசேஷ கருத்துக்காக, அல்லது யாதொரு நன்மையை யடையத்தக்கதாக இந்த நவநாள் செபத் தைச் செய்யும்போது எப்போதும் இந்த நவநாள் செபத் தோடு, செபமாலையையும், மகா பத்தி உருக்கத்தோடு செபிக்க வேண்டும். இதுவும் தவிர தாழ்ச்சி, பிறர்சிநேகம், ஒறுத்தல், கீழ்ப்படிதல் முதலிய யாதொரு புண்ணிய முயற்சிகளையும் சேர்த்து செய்யவேண்டும். அப்போது உன் செபம் தப்பாது பலனைத்தரும்].

---

## மனவல்லயச் சேபங்கள்

(இவை பாத்திமாவில் வியாதியஸ்தரை தேவநற்கருணையினல் ஆசீர்வதிக்கும்போது சொல்லப்படுகின்றன.)

ஆண்டவரே, உம்மை ஆராதிக்கிறோம்!

ஆண்டவரே, உம்மை நம்புகிறோம்!

ஆண்டவரே, உம்மை நேசிக்கிறோம்!

தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா! ஓசன்னா! கர்த்த ரின் நாமத்தால் வருபவர் ஸ்துதிக்கப்படுவாராக. நீர் ஜீவிய கர்த்தாவின் குமாரனாகிய சேசுக்கிறீஸ்துநாதர்!

பாட்டுக்காரர் மூன்று விசை பாடுவதாவது.







ஆண்டவரே! உம்மை விசுவசிக்கிறோம். ஆயினும் இன்னும் அதிகமதிகமாய் விசுவசிக்கச் செய்தருளும்.

நீரே ஜீவியமும் உயிர்த்தெழுதலும்!

ஆண்டவரே, எங்களை இரட்சியும். அல்லது நாங்கள் அழிந்துபோவோம்.

ஆண்டவரே, உமக்குச் சித்தமானால் எங்களை சொஸ்தமாக்க உம்மால் ஆகும்.

ஆண்டவரே, ஒரு வார்த்தை மாத்திரம் சொல்லியருளும். நான் ஆரோக்கியம் அடைவேன்.

கஸ்திப்படுகிறவர்களின் ஆண்டவரே, அடியோருக்கு உதவிபுரிந்தருளும்.

மரியாயின் குமாரனாகிய சேசுவே! எங்கள்மேல் இரக்கமாயிரும்.

சேசுவின் திரு இருதயமே, உம்மை நம்புகிறோம்.

பாட்டுக்காரர் மறுபடியும் 3 விசை பாடுகிறது.







என் ஆண்டவரே! வந்து எங்களுக்குதவிபுரியும். சீக்கிரமாய் வந்து உதவிபுரியும்.

ஆண்டவரே! நீர் நேசிக்கிறவன் வியாதியாயிருக்கிறான்.

ஆண்டவரே! நான் பார்க்கச் செய்யும்.

ஆண்டவரே! நான் நடக்கச் செய்யும்.

ஆண்டவரே! நான் கேட்கச் செய்யும்.

இரட்சகரின் மாதாவே! எங்களுக்காக வேண்டிக்கொள்ளும். அர்ச். மரியாயே! சர்வேசுரனுடைய மாதாவே, பாவிகளாயிருக்கிற எங்களுக்காக வேண்டிக்கொள்ளும். வியாதிக்காரரின் ஆரோக்கியமே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

பாட்டுக்காரர் பாடுவது

Monstra te esse matrem
Sumat per te preces
Qui pro nobis natus
Tulit esse tuus.

மிகவும் பரிசுத்த ஜெபமாலே இராக்கினியே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

கஸ்திப்படுகிறவர்களின் ஆறுதலே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

அர்ச். மரியாயே! எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

அர்ச். மரியாயே! என் தாயாரே, எங்கள்பேரில் இரக்கமாயிரும்.

பாத்திமா ஜெபமாலே மாதாவே! தேவ நேசத்தைக் குறித்தும், மிகவும் பரிசுத்த தமதிரித்துவத்தைக் குறித்தும் எங்களுக்கு ஆரோக்கியம் கட்டளையிட்டருளும்.

பாத்திமா ஜெபமாலே மாதாவே! பாவிகளை மனந்திருப்பும். வியாதிக்காரரின் ஆரோக்கியமே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

பலவீனரின் சகாயமே! எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

சென்மப்பாவமில்லாமல் உற்பவித்த அர்ச். மரியாயே! இதோ உமது அடைக்கலமாய் ஓடிவந்தோம், எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

பாத்திமா ஜெபமாலே மாதாவே, எங்களை இரட்சியும்.

இங்கிலாந்தை இரக்ஷியும், இந்தியாவை இரக்ஷியும்.

எங்கள் ஜென்ம தேசத்தை இரட்சியும்.

*N.B.*—விசேஷ கவனிப்பு. ஞான அதிகாரிகளின் கட்டளைப்படி கோவா தெ இரியாவில் இந்த மனவல்லய ஜெபங்களை மாத்திரம்தான் பிரசித்தமாய் அங்கே செய்யக்கூடும். இச்செபங்களுக்கு அர்ச். பாப்பானவர் அளித்திருக்கும் பலன்களைத் தவிர, லெயிரியா மேற்றிராணியாண்டவரும் அவைகளை ஜெபிக்கும் ஒவ்வொரு தடவைக்கும் 50 நாள் பலன் கட்டளையிட்டிருக்கிறார்.

## பாத்திமா ஜேபமாலைமாதா பிரார்த்தனை

சுவாமி கிருபையாயிரும்.

கிறீஸ்துவே கிருபையாயிரும்.

சுவாமி கிருபையாயிரும்.

கிறீஸ்துவே எங்கள் பிரார்த்தனையைக் கேட்டருளும்.

கிறீஸ்துவே எங்கள் பிரார்த்தனையை நன்றாகக் கேட்டருளும்.

பரமண்டலங்களிலேயிருக்கிற பிதாவாகிய சர்வேசுரா, எங்களுக்குத் தயைபண்ணி இரட்சியுஞ் சுவாமி.

உலகத்தை மீட்டிரட்சித்த சுதனாகிய சர்வேசுரா, எங்களுக்குத் தயைபண்ணி இரட்சியுஞ் சுவாமி.

இஸ்பிரீத்துசாந்துவாகிய சர்வேசுரா, எங்களுக்குத் தயைபண்ணி இரட்சியுஞ் சுவாமி.

அர்ச். தமதிரித்துவமாயிருக்கிற ஏக சர்வேசுரா, எங்களுக்குத் தயைபண்ணி இரட்சியுஞ் சுவாமி.

அர்ச். மரியாயே,

அர்ச். பாத்திமா செபமாலை மாதாவே,

பாத்திமாவென்னும் சிற்றூர் பக்கத்தின் மலையோரத்தில் ஆடுகளை மேய்த்துக்கொண்டிருந்த 3 சிறு ஏழைப்பிள்ளைகளுக்கு ஆறு விசை தெரிசனையான செபமாலை மாதாவே,

மத்தியான வேளையில் மணியடித்தவுடனே முழங்காலில்நின்று வழக்கப்பிரகாரம் செபமாலை செபித்து எழும்பிய உடனே அந்த பத்தியுள்ள பிள்ளைகளுக்குத் தெரிசனையான செ. மா. மா.,

செபமாலையை அவர்கள் அப்படியே எப்போதும் பத்தியோடு செபிக்கவும், ஒவ்வொரு

*எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.*

இரகசியத்தின் முடிவில் ஓர் சிறு செபத்தையும்*
சேர்த்து சொல்லும்படிப் படிப்பிக்கத் தயவுகூர்ந்த
செ. மா. மா.,

பாவமில்லை, புண்ணியமில்லை, நரகமில்லை, மோட்சமில்லையென்கிற பசாசின் துர்ப்போதனையால் மானிடர் மோசம்போகாதபடிக்கு 'சேசுவே, எங்கள் பாவங்களைப் பொறுத்தருளும்' என்று பலமுறை செபமாலையுடன் சேர்த்து செபிக்கும்படி அப்பிள்ளைகளுக்குப் படிப்பிக்க கிருபைகூர்ந்த செ. மா. மா.,

நரகம் இருக்கிறது சத்தியமென்றும், அதற்கு அஞ்சி நடக்கவேண்டுமென்றும், 'நரகாக்கினையினின்று எங்களை இரட்சித்தருளும்' என்று அடிக்கடி செபிக்கும்படி படிப்பிக்க கிருபைகூர்ந்த செ. மா. மா.,

நல்ல கிறீஸ்துவர்களுமே உத்தரிக்கிற ஸ்தலத்து ஆத்துமாக்களையும், அதன் அகோர வேதனையையும் மறவாமல், உத்தரிக்கிற ஆத்துமாக்களுக்காக வேண்டிக்கொள்ளும்படி அச்சிறு பிள்ளைகளுக்குப் படிப்பிக்கக் கிருபைகூர்ந்த செ. மா. மா.,

செபமாலை வழியாய் உலகத்துக்குச் சமாதானம் வருமென்று வாக்களித்த செ. மா. மா.,

பரிசுத்ததனம், கற்பு என்னும் உத்தம புண்ணியத்தைக் கெடுக்கும்படி பசாசு விரிக்கும் நாநாவித வலைகளிலும், மாய்கையிலும் சிக்கி அநேக ஆத்துமாக்கள் நரகத்துக்கிரையாகிறார்கள் என்று அப்பிள்ளைகளுக்கு ஞானோபதேசம் படிப்பிக்கக் கிருபைகூர்ந்த செ. மா. மா.,

எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

* "சேசுவே, எங்கள் பாவங்களைப் பொறுத்தருளும்; நரகாக்கினியினின்று எங்களை இரட்சித்தருளும்; உத்தரிக்கிற ஆத்துமாக்களுக்கு விசேஷமாய் யாரும் நினையாத ஆத்துமாக்களுக்கு ஆறுதலை யளித்தருளும்" என்று செபமாலையின் ஒவ்வொரு இரகசியத்தின் கடைசியில் திரித்துவ ஆராதனைக்குப் பின்பு சொல்லும்படி மாதா படிப்பித்தாள்.

பரிசுத்த தனத்தைக் காப்பாற்ற அடக்க ஒடுக்கம் அத்தியாவசியமென்றும் மிதமிஞ்சிய ஆடை ஆபரணம் ஆபத்துக்கேதுவென்றும் தெளிவாய்ப் படிப்பிப்பதற்காக, உச்சிமுதல் உள்ளங்கால் பரியந்தம், சர்வாங்கமும் நீண்ட உடையினாலும், அதன்மேல் ஓர் துப்பட்டியினாலும், சரீரத்தை மூடி, முக்காடிட்டு, ஆசியாவில் அல்ல, ஐரோப்பாவில் இக்காலத்தில் தெரிசனையான செ. மா. மா.,

பஞ்சத்தினாலும், பசிபட்டினியினாலும், உத்தியோகம், சம்பாத்தியமில்லாமையாலும், துன்பப்படும் இக்காலத்தில் வெள்ளையுடையே உத்தமமானதென்றும், சிறந்ததென்றும், போதுமானதென்றும், படிப்பிப்பதற்காக வெள்ளை வஸ்திரங்களை யணிந்து தெரிசனையான செ. மா. மா.,

ஆடுகளை மேய்த்துக்கொண்டிருந்த அந்தப் பிள்ளைகள் அஷ்ட தாரித்திரர்களாயும், மிக்க சாதாரண உடையை அணிந்திருந்தபோதிலும், அவர்கள் மட்டில் யாதொரு வெறுப்பும் காண்பியாது அன்போடு அழைத்து சம்பாஷிக்க கிருபை கூர்ந்த செ. மா. மா.,

அந்த ஏழைப்பிள்ளைகளிடம் எவ்வித உலக ஆபரணங்களில்லாதிருந்தபோதிலும், செபமாலையை அவர்கள் அணிந்திருந்தமையால் அகமகிழ்ந்து பத்தியோடு அடிக்கடி செபிக்கும்படி ஞானோபதேசம் படிப்பித்த செ. மா. மா.,

உமது கரங்களிலுமே ஓர் செபமாலையைப் பிடித்துக்கொண்டு தெரிசனையாகி செபமாலை பத்தியை எங்கும் இக்காலத்தில் பரப்புவது அவசியமெனக் காண்பித்த செ. மா. மா.,

நீர் எங்கிருந்து வருகிறீர் அம்மா என்று லூசியா வினவியபோது மோக்ஷத்திலிருந்து வந்ததாக பதிலுரைக்கக் கிருபை கூர்ந்த செ. மா. மா.,

எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

அப்படியானால் என்னையும் மோக்ஷத்துக்குக் கொண்டுபோவீரா அம்மா என்று அந்தப் பிள்ளை கேட்டபோது ஆம் என்று அன்போடு பதிலுரைக்கக் கிருபை கூர்ந்த செ. மா. மா.,

என் சிறு சகோதரி ஜசிந்தாவையும் கொண்டு போவீரா என வினவ, ஆம் என்று பதிலுரைக்கக் கிருபை கூர்ந்த செ. மா. மா.,

என் சிறு சகோதரன் பிராஞ்சீஸ்குவையும் கொண்டுபோவீரா என்க; ஆ! அவன் செபமாலையை பத்தியோடு செபிக்கவில்லை. அநேகவிசை அவன் செபமாலையைப் பத்தியோடு செபிக்கவேண்டும். அதன் பிறகு அவனையும் கொண்டுபோவேன் என்று திருவாய் மலர்ந்தருளிய செ. மா. மா.,

இம்மூவரில் மூத்தவளாகிய லூசியாவைப் பார்த்து "நீ எழுத வாசிக்கப் படிக்கும்படி நான் விரும்புகிறேன்" என்று கற்பிக்கக் கிருபை கூர்ந்த செ. மா. மா.,

அப்படியே அவள் படித்து இப்போது தேவ அழைப்பை யடைந்து கன்னியாஸ்திரியாயிருக்க உதவிபுரிந்த செ. மா. மா.,

அப்பிள்ளைகள் ஆடுகளை மேய்த்துக்கொண்டிருந்த அந்த மலையடியோரத்தில் உமக்குத் தோத்திரமாக ஒரு சிறு கோவிலைக் கட்ட நீர் விரும்புவதாய்த் தெரிவித்த செ. மா. மா.,

நீர் காணப்பட்ட கருவாலி மரத்தண்டையில் விசுவாசிகள் கொண்டுவந்து போடும் காணிக்கை நேர்ச்சைப் பணத்தை வாரியெடுத்து பாத்திமா பங்கு சுவாமியாரிடம் கொண்டுபோய்க் கொடுங்கள் என்று கற்பிக்கக் கிருபை கூர்ந்த செ. மா. மா.,

அதற்காக இரு சிறு மடக்குத் தட்டுகளை வாங்குங்கள். அதிலே காணிக்கைகளை வாரிப் போடுங்கள். ஒன்றை லூசியா, ஜசிந்தா இரு சிறுமி

எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

களும், வேறு சிறுமிகள் இருவருமாகத் தூக்கிக் கொண்டு போகவேண்டுமென்றும் மற்றதை சிறுவன் பிராஞ்சிஸ்குவும், வேறு சிறு பையன்கள் மூவரும் சேர்ந்து தூக்கிக்கொண்டு போகவேண்டுமென கற்பித்த செ. மா. மா.,

தேர் திருநாட்கள் கொண்டாட்டங்களில் தேவாலயங்களிலும் உள்ளும் புறமும் ஆண் பெண்கள் எவ்வித அடக்க ஒடுக்கமாய் விலகி நடக்கவேண்டுமென்று இவ்வாறு தெளிவாய் படிப்பிக்கச் சித்தமான செ. மா. மா.,

கோவில் காணிக்கை சொத்துக்கள்மட்டில் இக்காலத்தில் எங்கும் பசாசு படிப்பித்திருக்கும் கள்ளப்போதனையையும், வீண் கட்சி வாக்கு வாதங்களையும், இவ்வாறு அடியோடு அறுத்தெரியும்படி 'பங்கு சுவாமியிடம் கொண்டுபோய்க் கொடுங்கள்' என்று கற்பித்த செ. மா. மா.,

காணிக்கையில் கொஞ்சம் வாங்கி அந்த அத்துவானக் காட்டில் ஓர் சிறு கோவிலைக் கட்டவேண்டுமென்றும், மற்றதை பங்கு சுவாமியார் கோவிலில் செபதவமும், திருவிழாக் கொண்டாட்ட முதலியதுக்கு உபயோகிக்கவேண்டுமென்று படிப்பித்த செ. மா. மா.,

அங்கே ஆயிரம் ஆயிரமாய் அநேக லட்சக் கணக்கான ஜனங்கள் திருயாத்திரையாய் வரும்போது அவர்களை அன்புள்ள அன்னையைப்போல் பக்ஷத்தோடு அரவணைத்துப் பராமரிக்கும் செ. மா. மா.,

அந்த பாத்திமா மலையில் வந்து கூடும் திரளான ஜனங்களுக்கு அங்கே குடிக்கத் தண்ணீர் இல்லாமல் படும் கஷ்டத்தைக்கண்டு மனம் நொந்த மேற்றிராணியாண்டவர் நீர் தெரிசனையான மரத்துக்குச் சற்று தூரமாய் வெட்டிப்பார்த்தபோது அற்புத

எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

மாய் அங்கு ஜல ஊற்று உண்டாகும்படியும், அந்த ஜலத்தினால் அநேகருக்கு அநேக ஆத்தும சரீர ஆரோக்கியங்களை யளிக்கும் செ. மா. மா.,

திருயாத்திரிகளைத் தடுக்கவும் விலக்கவும், கட்டப்பட்ட சிறு கோவிலை யழிக்கவும், வேத விரோதிகள், கக்ஷிகள், பசாசின் பட்டாளக்காரர் பட்ட சகல பிரையாசைகளையும் ஜெயித்து வெற்றியடையும்படி விசுவாசிகளுக்கு உதவி செய்த செ. மா. மா.,

சமீபத்திலும் தூரத்திலுமிருந்து அங்குவரும் வியாதியஸ்தருக்கு ஆறுதலையும், தீராத வியாதியென்று வைத்தியர் திட்டமாய்ப் பரிசோதித்துக் கூறிய நோயாளிகளுக்கும் ஆரோக்கியம் கொடுத்தனுப்பும் செ. மா. மா.,

சரீர வியாதியை மாத்திரமல்ல அநேக வருஷ காலமாய் ஆத்துமத்தில் அவிசுவாச நோய் பிடித்து, கோவில், குரு, வேண்டாமென்று திரிந்த அநேகர் வந்து மனந்திரும்பி ஞானஸ்நானம், பாவசங்கீர்த்தனம், நன்மை பெற்று ஆத்தும ஆரோக்கியமடையும்படிச் செய்தருளும் செ. மா. மா.,

உலகெங்கும் பரவிய பிரிமேசன் இரகசிய வேதமென்னும் பசாசின் பிணி போர்த்துக்காலிலும் நுழைந்து வேதகலகம் செய்யும்போது போர்த்துக்கால்மேல் உமது திருக்கண் நோக்கியருளிய செ. மா. மா.,

போர்த்துக்கேசிய வாசியாகிய வாஸ்கோடிகாமா தினந்தோறும் உம்மை நோக்கி, கரையிலும், கப்பலிலும், நம்பிக்கையோடு செய்த செபமாலை முதலிய செபத்துக்குச் சம்பாவனையாக சிந்து தேசத்தைக் கண்டுபிடிக்கச் செய்த செ. மா. மா.,

அதன்பின், அஞ்ஞானத்தில் அமிழ்ந்தியிருந்த சிந்து தேசத்தில் சத்திய வேதத்தைப்

எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

போதிக்க எத்தனமாக போர்த்துக்கால் இராச்சியத்தையே தேவசித்தப்படி தெரிந்துகொண்டு பிராஞ்சீஸ்கு சவேரியாரை அனுப்பவும், அவர் வேலையை ஆசீர்வதிக்கவும் கிருபை கூர்ந்த செ. மா. மா., எங்களுக்காக வேண்டிக்...

அவிசுவாசம், அனாச்சாரம், அலங்கோலை யென்னும் கொள்ளை நோய்களில் நாங்கள் அகப்பட்டு மடியாமல் எங்களைக் காப்பாற்றவேண்டுமென்று செபமாலைமாதாவே உம்மை மன்றாடுகிறோம்.

செபமாலைப் பத்தி ஆபத்தான இக்காலத்தில் எங்கும் எங்கள் மத்தியிலும், எங்கள் குடும்பங்களிலும், பரவி ஊன்றி நிலைக்கச் செய்யவேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

திருச்சபைத் தலைவராகிய அர்ச். பாப்பானவர், மேற்றிராணிமார், குருப்பிரசாதிகள், துறவற சந்நியாசிகள் கன்னியாஸ்திரிகள் அவர்கள் அந்தஸ்தில் வழுவாது நிலைக்க உதவிசெய்து காப்பாற்றும்படி. உம்மை மன்றாடுகிறோம்.

பதிதர், அஞ்ஞானிகள், புறமதஸ்தர் சத்திய வேதத்தை யறிந்து மனந்திரும்பும்படி. உம்மை மன்றாடுகிறோம்.

இராச்சியங்களை யாண்டு நடத்தும் அரசர், தேசாதிபதிகள் நீதியைப் பின்சென்று வழுவாது தங்கள் பிரசைகளை நடத்த உதவி செய்யும்படி உம்மை மன்றாடுகிறோம்.

குடும்பங்களிலும், தேசங்களிலும் சண்டை, சச்சரவு, யுத்தம் முதலிய தீமைகளை விலக்கும்படி உம்மை மன்றாடுகிறோம்.

தக்க காலத்தில் நல்ல மழையின்றி வரண்டு வாடும் பூமியைக் கண்ணோக்கிப் பார்க்கும்படி உம்மை நோக்கி மன்றாடுகிறோம்.

எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

கீழ்ப்படிதல் பொறுமை பிறர்சிநேகம் என்னும் புண்ணியங்களை, எல்லோரும் கண்டறியவும், குடும்பங்களில் அநுசரிக்கவும் செய்யும்படி உம்மை மன்றாடுகிறோம்.

எங்கள் இல்லங்களிலும், தேவாலயங்களிலும், தேவ சிநேகத்துக்கும், பிறர்சிநேகத்துக்கும் விரோதமாயும், சத்திய வேதம் எங்கும் பரம்புதற்கு மகா இடையூறாயும் எங்கள் மத்தியில் குடிகொண்டிருக்கும் ஜாதிபேத முதலிய பல துர்வழக்கங்கள் ஒழிந்து போகும்படி உதவிபுரிய, மாதாவே, உம்மை மன்றாடுகிறோம்.

ஆங்காங்கு உமது தோத்திரத்துக்காக தேவாலயங்களைக் கட்ட நீர் கற்பிப்பதினால் அங்கே தேவ பலிப்பூசை நடைபெறவும், தேவநற்கருணையை அடிக்கடி எல்லோரும் பத்தியோடு உட்கொள்ளவும் வேண்டுமென்கிற உமது விருப்பம் எங்கள் மத்தியிலும் நிறைவேறும்படி உம்மை மன்றாடுகிறோம்.

சத்திய வேதம் பரம்புவதற்கு அந்தந்த இராச்சியங்களில் அநேகர் தேவ அழைப்பை அடையவும், தேவ ஊழியர் அதிகரிக்கவும், இதற்கு உதவி புரிவோரை நீர் ஆசீர்வதிக்கவும் உம்மை மன்றாடுகிறோம்.

கற்பென்னும் புண்ணியத்தின் உன்னத அலங்காரத்தைக் காண்பிக்கத்தக்கதாக உமது தூய சரீரம் சூரியகாந்தியாக அதிசோதி மகிமையாய்ச் சொலித்து, பிரகாசித்ததை பார்க்கக்கூடாமல் அந்த பிள்ளைகள் கண் கூசியதால், பரிசுத்த கற்பின் மகிமை அலங்காரத்தை எங்கள் மத்தியில் உள்ள பாலிய பிள்ளைகள் கண்டுணரவும், கற்பைச் சிநேகிக்கவும் உதவிபுரியும்படி உம்மை மன்றாடுகிறோம்.

குடும்பங்களில் அநுசரிக்கவேண்டிய பரிசுத்த கற்பென்னும் புண்ணியத்துக்கு விரோதமாய் இக்

எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.